72

TAMIL

MOHAMMADAN FOURTH READER

4 JAN 1922

முஹம்மதிய நான்காம் வாசக புஸ்தகம்

BY

M. A. SHAHUL HAMEED LEBBAI

Proprietor, Shahul Hameedia Press

M. A. SHAHUL HAMEED LEBBAI & SONS

No. 10, HAMEEDIA BUILDINGS,

HIGH ROAD, TRIPLICANE, MADRAS.

1921

Registered Copy-right [விலை அணா 12.

TB
031,4(M)
M21
171019

TAMIL

MOHAMMADAN FOURTH READER.

முஹம்மதிய

நான்காம் வாசக புஸ்தகம்.

BY

M. A. SHAHUL HAMEED LEBBAI

Proprietor, Shahul Hameedia Press

M. A. SHAHUL HAMEED LEBBAI & SONS

No. 10, HAMEEDIA BUILDINGS,

HIGH ROAD, TRIPLICANE, MADRAS.

1921

Registered Copy-right] [Price: 12 As.

முகவுரை.

எல்லாப் பெருமைகட்கும் உரியவன் அருள் நிறைந்த அல்லாஹுத் தஆலா என்னும் ஆண்டவனே.

சலாத்தும், சலாமும் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் அவர்களது உறவினர்கள், தோழர்கள் முதலியோர்கள் மீதும் நிலைக்க.

அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றும் பெருது முள்ள முஹம்மதிய பாடசாலைகள் தமிழ் நாட்டிலே பல இருக்கின்றன. அவைகளில் தமிழ் பயில விருப்பமுடைய முஹம்மதிய சிறுவர்கள் தங்களுக்கேற்ற வாசக பாடங்கள் இன்மையை கருதித் தமிழின்மீது வைத்த ஆர்வத்தைக் குறைத்து விடுகிறார்கள்.

இதுகாறும் வெளிவந்துள்ள தமிழ் வாசகங்கள் ஒன்றிலேனும் முஹம்மதிய வழக்க ஒழுக்கங்களும் அவர்களுடைய முன்னோர் வரலாறு, தேசவரலாறு முதலியனவும் எழுதப்பட்டில்லை. இதுபற்றி முஹம்மதிய பள்ளிக்கூடத் தலைவர்கள் பலர், தமிழ் பயிலும் சிறுவர்கள் நமது மரபு முறை ஒழுக்கங்களைச் செவ்வனே அறிந்துகொள்ளுமாறு தமிழ் வாசக புத்தகங்கள் எழுதும்படி என்னைப் பன்முறையுங்கேட்டுக்கொண்டமையால் மிக எளிய நடையில் 1-வதும் 2-வதும் 3-வதும் எழுதி அச்சிட்டும் இராஜாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டும் எல்லா முஹம்மதியபாடசாலைகளிலும் பாடம்வைத்து கற்பித்து வருகிறார்கள். அதற்கேற்றவாறு, இன்நான்காவது வாசகத்தையும் எழுதலானேன்.

இதனையும் கருணையும் நீதியும் கலந்தோங்கும் இராஜாங்கத்தார் அங்கீகரிப்பாரென பெருநம்பிக்கை யுடையேன்.

இங்ஙனம்,

M. A. ஷாஹுல் ஹமீத்.

முஹம்மதிய்யா நான்காவது வாசக

விஷய அட்டவணை.

பக்கம்.	விஷயம்.
1.	(வஹ்தானியத்து) ஏகத்துவம்.
2.	(தன்ஸியா) பரிசுத்தம்.
3.	ஜீவிப்பும் சக்தியும்.
4	(இல்மு) அறிவு.
,,	(இராதா) நாட்டம்.
5.	கேள்வியும் பார்வையும்.
,,	(கலாம்) வாக்கியம்
6.	(அப்ஆல்) செயல்.
8.	முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களுடைய சரித்திரம்.
17.	ஹிஜ்ரி முதல் வருடம் குபாமஸ்ஜிது கட்டப்பட்டது.
21.	ஹஸரத் அவர்கள் தமது குடும்பத்தை மதீனாவிற்கு வரவழைத்தல்.
22.	மஸ்ஜிதே நபவீ கட்டப்பட்டது.
27.	ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா ஹஸரத்தவர்கள் வீட்டிற்கு வந்தது.
29.	முஹாஜிரீன்களுக்குள் வியாதி பரவியது.
31.	பாங்கு கூறுவதின் ஆரம்பம்.
32.	ஸல்மானே பாரிஸீ இஸ்லாமானது
33.	முஹாஜிரீன்களின் சகோதரத்வம்
37.	வாஸஸ்தலத்திலும் பிரயாணத்திலும் தொழ வேண்டிய முறைமைகள்.
38.	ஹிஜ்ரி 2-வது வருடம் கிப்லாவை நோக்கித் தொழுதல்.
40.	பீபி பாத்திமா நாயகியின் திருமணம்.
44.	இரம்ஸானையும், ஸகாத்து கொடுப்பதையும் பற்றிய கட்டளைகள்.
45.	யுத்த கட்டளை.
53	ஸைபுல் பஹ்ரின் யுத்த நடவடிக்கைகள்.
56.	தர்க்காபும் நற்போதனையும்.
,,	பத்ருக்கு முதல் முதல் சென்றது.

பக்கம்.
57. நக்லாவில் நடந்த செய்திகள்.
59. பத்ருவில் நடந்த பெரிய சண்டை.
64. யுத்த ஆரம்பம்.
69. பனீகைனுகாவில் நடந்த சண்டை.
71. சுவேக் யுத்தம்.
72. பனீஸலீமில் நடந்த யுத்தம்.
73. ஹிஜ்ரீ 3-வது வருடம் ஸிஅம் என்னும் விடத்தில் நடந்த யுத்தம்.
75. குருவாவில் நடந்த சம்பவம்.
76. பிறப்பு கலியாண முதலிய சம்பவங்கள்.
77. உஹதில் நடந்த யுத்தம்.
89. ஹம்றுவுல் அஸதென்னும் விடத்தில் நடந்த சம்பவம்.
91. ஹிஜ்ரீ 4-வருடம் கதன்என்னும்தலத்தின் செய்தி
92. ரஜீஉ என்னும் தலத்தில் நடந்த செய்திகள்.
96. பீரே மஊனுவில் நடந்த செய்தி.
100. உஸ்வயே பனீநவீரென்னும் தலத்தில் நடந்த செய்திகள்.
103. மரணம் கலியாணம் ஜனனமுதலிய சம்பவங்கள்.
105. தௌருத்து வேதத்தை கற்றுக்கொள்ள கட்டளை.
106. போதைவஸ்துகளை விலக்கப்பட்டது.
108. ஹிஜ்ரீ 5-வது வருடம் பீபி ஸைனபு றலியல்லாஹு அன்ஹாவின் திருமணம்.
109. பனீமுஸ்தலிக் கூட்டத்தாரோடு நடந்த சம்பவம்.
112. அகளி (கந்தக்) தோண்டிய சம்பவம்.
118. பனீகுரைஸாவோடு நடந்த சம்பவம்.
124. ஹஸரத் அவர்களைகொல்ல முயன்றது.
125. ஒருகூட்டத்தார் இஸ்லாமானது.
126. தௌமதுல் ஜந்தல் என்றவிடத்தில் நடந்த சம்பவம்.
127. ஹிஜ்ரீ 6-வது வருடம் பனீலிஹ்பானில் நடந்த சம்பவம்.
128. குர்தாவில் நடந்த யுத்தம்.
129. ஸில்குஸ்ஸா சண்டை.

பக்கம்.
,, ஜீகுரத்யா காபாவில் நடந்த சண்டை.
132. ஜஸ்என்ற விடத்தில் நடந்த சண்டை.
133. தரப்என்ற விடத்தில் நேர்ந்த சம்பவம்.
134. ஹிஸ்மியில் நடந்த சண்டை.
135. வாதில் குருவில் நடந்த சச்சரவு.
,, தௌமதுல் ஜந்துல்என்ற விடத்தில் நடந்த விஷயங்கள்.
137. பதக்என்ற விடத்தில் நடந்த சண்டை.
138. குருஸ்என்ற ஸ்த்தலத்தில் நடந்த சம்பவம்.
139. மழைக்காக தொழுதல்.
,, ஹுதைபியாவில் நடந்த சண்டை.
154. அரசர்களுக்கெல்லாம் அறிவிப்பு அனுப்பப்படல்.
166. கொலாவின் பிராது.
168. குதிரை பந்தயம்.
,, உம்மேரூமான் ரலியல்லாஹு அன்ஹாவின் மரணம்.
169. ஹிஜ்ரீ 7-வது வருடம் கைபரில் நடந்த யுத்தம்.
180. காலை (ஸுப்ஹு) தொழுகைதவறிய விஷயம்.
,, சில விலக்குகள்.
185. புத்தி மதிகள், தாய் தந்தையரைப் போற்றல்.
190. ஆழ்ந்த ஆலோசனையின் பயன்.
,, யானையை நிறுக்குதல்.
193. உயிருள்ள பாலம்.
198. வினைக்குத் தக்கபயன்.
201. உள்ளதில் திருப்தியடை.
203. புத்திமானே பலவான்.
206. குள்ளநரியும் மத்தளமும்.
208. தொண்டானும் நாரையும்.
,, ஆண்டவன் இயற்கையில் நமக்களிக்காத தத்துவத்தை பெற்றதாலுண்டான கெடுதி.
213. பொறுமை.
219. மாணவர் கவனிக்கவேண்டிய புத்திமதிகள்.

முற்றிற்று

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமுஅலா றசூலிஹி ஸய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

நான்காவது வாசகம்.

அல்லாஹுத் தஆலா பரிசுத்தமானவன்.—பூமியையும் வானத்தையும் இவைகளுக்கிடையிலுள்ள சகல வஸ்துக்களையும் பரிசுத்தமான ஆண்டவன் படைத்தான். அவனை அடைவதற்காகக் கீழ்க்கூறப்படும் எட்டு வார்த்தைகளையும் சத்தியமென்று உறுதிகொள்ள வேண்டியது ஒவ்வொரு முஸ்லீமானவனுடையவும் கடமையாயிருக்கிறது.

1-வது (வஹ்தானியத்) ஏகத்வம்.

ஆண்டவன் ஒருவனே. அவன் தனக்குத்தானே நிகரானவன். அவனுக்குச் சமானம் ஒன்றுமில்லை. அவன் நிராசையுடையவன். அவனுக்குப் பசிதாகமில்லை. அவனுக்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை. அவன் முற்காலத்திலுமிருந்தவன். இந்த நிகழ்காலத்திலும் இருப்பவன். இனி வருங்காலத்திலும் எப்போதும் இருப்பவன். அவனுக்குக் குறைவாவது, அழிவாவது இல்லை. எவ்வளவு புகழக்கூடுமோ அவ்வளவு பெருமையும் அவனுக்குண்டு. அவன் எவ்வளவுகாலங் கடந்தாலும் காலத்தினால் சற்றும் மாறுதலடையாதவன். அவன் ஆதியந்தம் மத்தியம் அற்றவன்.

2-வது (தன்ஸியா) பரிசுத்தம்.

ஆண்டவன் பரிசுத்தமானவன். நமக்கு அவசியமாய் வேண்டிய கால், கை, கண், செவி, வாய், மூக்கு முதலிய எந்த அவயவமும் அவனுக்கில்லை. அவனுடைய பரிசுத்தத்தன்மையை யுணர்வதற்காக கீழ்குறித்த ஆறு வாக்கியங்களையும் உறுதி கொள்ளவேண்டும்:—

(1) ஆண்டவன் அரூபி. அதாவது அவன் உருவமில்லாதவன். முகம், கை, கால் முதலிய அவயவங்களாவது, உயரம், அகலம், பருமன் முதலிய அளவாவது அவனுக்கில்லை.

(2) அவன் இருப்பது இன்னவிடமென்ற ஒரு நிர்ணயமில்லை. அரஷின்மேல் இருக்கிறனென்றால், அரஸ் என்ற ஒரு குறித்தவிடத்தில்தான் இருக்கிறன் என்று அர்த்தமல்ல. அதன்பொருளைக் கீழ்க்கண்டபடி ஆண்டவனே திருவுளமாயிருக்கிறன். எவ்வாறெனில்,

"ஆண்டவன் அரஸோடு சம்பந்தப்பட்டு மில்லை. அதன்மேல் பொருந்தி உட்கார்ந்திருக்கவுமில்லை. அரஸுக்குள்ளாகவுமில்லை. அவன் சாதாரணமான ஒரு வஸ்துவைப்போல் ஒரு காலத்தில் ஒரு இடத்திலும், மற்றொரு காலத்தில் மற்றொரு விடத்திலுமாக இடம் மாறுவதுமில்லை. அரஸு அவனைச் சுமந்துகொண்டிருக்கவுமில்லை. ஆனால், அரஸையும் அதைத் தாங்கிக்கொண்டிருக்கும் வஸ்துவையும் சகல அண்டங்களையும் ஆண்டவன் தன் வல்லமையால் அந்தரத்தில் நிலைநிறுத்தியிருக்கிறன். அவன் வானம், பூமி, அரஸ் இவற்றிற் கிடையிலுள்ள வஸ்துக்கள், இவை யாவற்றிற்கும் மேலாயிருக்கிறன். அவனுக்குத் தூரம் சமீபம் என்பதில்லை. ஆயினும் எல்லாவற்றிற்கும் அருகிலேயே யிருக்கிறன்.

(3) அவனுக்கு இன்னகாலம், இன்னவிடம், இன்ன உருவம் என்பதில்லை. அவன் இவைகளைக் கடந்தவன். எப்போதும் ஒரேவிதமானவன்.

(4) ஆண்டவன் தன் இலக்ஷணங்களில் அவனால் படைக்கப்பட்ட எல்லா வஸ்துக்களில் நின்றும் வேறான வனா யிருக்கிறான். அவன் ஒன்றோடும் சம்பந்தப்படாத வன். அவனோடு சம்பந்தப்பட்டதும் ஒன்றுமில்லை. ஆயி னும் அவனையன்றி வேறொன்றும் வேறாயில்லை.

(5) யாவற்றையும் சிருஷ்டிப்பதால் அவன் எவ்வித மாறுதலு மடைவதில்லை. சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் எதுவும் அவனிலில்லை. ஆனால், அவன் எல்லாவற்றிலும் எங்கும் மயிர்முனைக்கு மிடமற நிறைந்து விளங்குகிறான்.

(6) அவனுடைய உண்மைநிலையைத் தரிசிக்க ஞானக் கண் வேண்டும். அவன் தன் நல்லடியார்களின் கோரிக் கையைப் பூர்த்திசெய்வதற்காகத் தன்னைத் தரிசிக்கும்படி அவர்களுக்கு அந்த ஞான நேத்திரத்தை யளிப்பான்.

3-வது (ஜிந்தகியும் குதரத்தும்)
ஜீவிப்பும் சக்தியும்.

அவன் ஆன்ம சொரூபி. அவனுக்கு விழிப்பு நித் திரையில்லை, களைப்பில்லை, மாயை இல்லை, பிறப்பு இறப்பு இல்லை.

அவன் சர்வ சக்தியுள்ளவனென்று உறுதிகொள்ள வேண்டும். வானம், பூமிமுதல் எல்லாப் படைப்புகளும் அவன் சக்தியால் நிலைத்திருக்கின்றன. முன்பின் இருந் திராத எந்தவஸ்துவையும் சிருஷ்டிக்குஞ் சக்தி அவனுக் கிருக்கிறது. இரட்சிக்கிறதும், அழிக்கிறதும் அவன்

கருத்தின்படி நடக்கின்றன. அவன் சக்திக்கு ஓர் அளவில்லை. அவன் சக்தியை யறிந்துகொள்வதற்கு ஒருவராலும் முடியாது.

4-வது (இல்ம்) அறிவு.

ஆண்டவன் யாவற்றையும் அறிகிறான். பூமியின் அடிப்பக்கமிருந்து வானமுகடு வரையிலுள்ள சகல விஷயங்களையும் அவனறிகிறான். பூமியின் ஒவ்வொரு அணுவின் செய்கையையும், வானத்தில் பறக்கும் ஒவ்வொரு அணுவின் அசைவையும் அவனறிகிறான். காரிருளில் பாதாளத்தில் கல்லின்கீழ் நகரும் ஒரு எறும்பின் செய்கையையும் அவனறிகிறான். அவனறிவிற்குப் புலப்படாதது ஒன்றுமேயில்லை. ஒவ்வொருவர் மனதின் சிந்திப்புகளையும் அவனறிந்துகொண்டே யிருக்கிறான். அவன் அறிவே சொரூபமா யுடையவன்.

5-வது (இராதா) நாட்டம்.

அவனுடைய நாட்டப்படித்தான் யாவும் நடைபெறுகின்றனவென்றும், அவனையன்றி ஒரு அணுவும் அசையாதென்றும் உறுதி கொள்ளவேண்டும்.

உலகில் எவ்வளவு பொருள்கள் இருக்கின்றனவோ, அவ்வளவும் அவன் நாட்டத்தாலேயே சிருஷ்டிக்கப் படுகின்றன, அவன் நாட்டத்தாலேயே இரட்சிக்கப் படுகின்றன. உலகத்தில் உண்டாகும் நன்மை தீமை, வளர்தல் குறைதல், இலாபம் நஷ்டம், மெய் பொய், சந்தோஷம் துக்கம், பாபம் புண்ணியம், வியாதி சுகம், செல்வம் தரித்திரம், உண்டாதல் அழிதல், அதிகம் கொஞ்சம் யாவும் அவன் நாட்டப்படியே யுண்டாகின்றன. அவன்

விரும்புவதே நடைபெறும். அவன் விரும்பாதது ஒரு போதும் நடைபெறாது. அவன் கட்டளையைத் தடுக்க ஒருவராலும் முடியாது. அவன் காலநிர்ணயத்தை மாற்ற ஒருவராலும் முடியாது. அவன் கட்டளைகளுக்கு மாறாக நடந்து தப்பித்துக்கொள்ள ஒருவராலும் முடியாது. இவ்வுலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் ஒன்றுகூடி ஒரு துரும்பை யசைக்கவேண்டுமாயினும் அவன் அருளின்றி அசைக்க முடியாது. அப்படியே அவன் அருளின்றி ஒரு அணுவைக்கூட நிலைநிறுத்தவும் முடியாது. அவ்வாறே அவனருளின்றி ஒன்றை அதிகமாக்கவும் குறைக்கவும் முடியாது.

6-வது கேள்வியும், பார்வையும்.

ஆண்டவன் எப்படி எல்லாவற்றையும் அறிகிறானோ, அப்படியே காதின்றியே எல்லா சத்தங்களையும் கேட்கிறான். கண்ணின்றியே யெல்லாவற்றையும் காண்கிறான். அவனுக்குக் கேட்பதில் தூரம் சமீபமென்றும், பார்ப்பதில் வெளிச்சம் இருளென்றும் பேதமில்லை. காரிருளில் ஊர்ந்து செல்லும் எறும்பின் காலடிச் சத்தத்தையும் அவன் கேட்கிறான். பாதாளத்தின்கீழ் மண்ணில் மறைந்திருக்கும் சிறு புழுவின் உருவத்தையுங்கூட அவன் பார்க்கிறான்.

7-வது (கலாம்) வாக்கியம்.

ஆண்டவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது எல்லோருக்கும் கடமை. அவன் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் சத்தியமானது. நன்மை செய்கிறவர்களுக்கு அவன் அருள் புரிவானென்பதும், தீமை செய்வோர்களுக்குத் தக்க தண்டனை யளிப்பானென்பதும் உண்மை. புர்கான், தௌராத், இஞ்சீல்,

ஸபூர் என்ற வேதங்களும் இன்னும் நபிமார்களுடைய கிதாபுகளும் ஆண்டவனுடைய வாக்கியங்களே யாகும். அவைகளில் கடைசியானவேதம் புர்கான் அதே குறுஆன் ஷரீப் என்பது, அதன் கட்டளைகளின்படி நடக்கவேண்டியது எல்லா மனிதர்களுக்கும் கடமையா யிருக்கிறது.

3-வது (அப்ஆல்) செயல்.

உலகமும் உலகிலுள்ள எல்லா வஸ்துக்களும் ஆண்டவனாலேயே,படைக்கப்பட்டன. அவ்விதம் படைக்கக் கூடும் என்று ஒருவரும் நினைக்கவே முடியாது. உலகிலுள்ள புத்திமான்களெல்லாம் ஒன்றுகூடிச் சிந்தித்தாலும், அவனுடைய சிருஷ்டிப் பொருள்களில் ஒன்றிலேனும் ஒரு குற்றங்குறை கூறமுடியாது. அப்படிக் கூறப்புகின், அது அவர்களின் புத்திக் குறைவாகவே முடியும். எதுபோலென்றால், ஒரு வீடு மிக்க அழகாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அவ்வீட்டின் அமைப்புகளில் எள்ளளவும் குறைவே கிடையாது. எங்கெங்கே எந்தெந்த சாமான்கள் இருக்கவேண்டுமோ, அந்தந்த ஒழுங்கின்படியே அவைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு குருடன் வழிதெரியாது அவ்வீட்டிற்குள் நுழைந்து தடுமாறி இடறிவிழுந்து "அடடா! யார் இப்படி வரன்முறையின்றி வழியில் சாமான்களைப் போட்டுவைத் திருக்கிறார்களே இதென்ன அநியாயம்" என்று முறையிட்டுக்கொள்கிறான். சாமான்களோ அததன் இடத்தில்தான் வைக்கப்பட்டிருக்கின்றன, அந்த ஏற்பாட்டில் உண்மையாய் ஒரு குற்றங் குறையில்லை. அப்படியிருக்க அவன் அப்படிக் கூறுவது கண்தெரியாத அவன் குற்றமேயாகும்.

அதுபோல் ஆண்டவன் செயல்கள் யாவும், தகுதியுடையவையும், குற்றமற்றவையும், பூரணமானவையும்,

ஒழுங்கானவையுமாகவே யிருக்கின்றன. அப்படியவன் செயல்களில் குறைவிருக்குமேல் அவன் சர்வ வல்லமையுடையவனாகவும் ஞான சொரூபியாகவும் இருக்க மாட்டான். இன்னும் அவனால் உண்டாக்கப்படும் துயரம், துன்பம், தரித்திரம் முதலியவைகளும் அவன் நமது நன்மைக்காகவே உண்டாகும் கருணையான தந்திரங்களாயிருக்கின்றன.

ஆண்டவன் செயல்கள் முழுமையும் நன்மைக்கேயன்றி ஒன்றேனும் தீமைக்கல்ல, சீவர்களுக்காக அவன் செய்யும் காரியங்களால் அவனுக்கு ஒரு நன்மை தீமையுமில்லை. அவன் தனக்கொரு பயனைக்கருதி யெதையும் செய்வதில்லை. அவனுக்கொன்றுமே தேவையில்லை. அவனுக்கு எது வேண்டுமென்றும் விருப்பமில்லை. அப்படியே ஒன்றின்மேலும் அவனுக்கு வெறுப்பும் இல்லை. அவன் விருப்பு வெறுப்பற்றவன், அவன் கடாக்ஷமே யாவருக்கும் வேண்டியது. அவன் கடாக்ஷத்தாலேயே யாவும் நடப்பது.

அல்லாஹுத் தஆலா தன்மேல் ஈமான் கொண்டவர்களுக்குத் தான் வாக்களித்தபடியே அவர்கள் செய்யும் நன்மைகளுக்கு நற்பயனையும், தீமைகளுக்குத் தண்டனையையும் அளிக்கிறான். அவன் நமக்கு நன்மை, தீமையை உணரும் அறிவை யளித்திருப்பதால், அவன் சொல்லவேண்டுமென்ற அவசியமேயில்லை. ஆயினும் அவன் நபிமார்களுக்கு வேதங்களைக்கொடுத்து அவர்கள் மூலமாய்த் தன் கட்டளைகளை நமக்கு அறிவித்திருக்கிறான். அது நமக்குத் தெரியாதென்று நாம் கூறமுடியாது. ஆகையால் ஆண்டவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஜனாபே ஸர்வரே அன்பியா.

முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சரித்திரம்.

முஹம்மதிய மூன்றாவது வாசகத்தில் ஹஸரத் அவர்கள் மக்காவைவிட்டு மதினாவிற்கு (ஹிஜரத்) சென்றவரையில் கூறப்பட்டிருக்கிறது. அதற்குப்பின் நடந்த சங்கதிகளை யிப்போது கூறுகிறோம். அதாவது ஹஸரத் அவர்கள் மதினமாநகரம் சேர்ந்தபிறகு ஏழுவருடங்கள் வரையில் நிகழ்ந்த விஷயங்களைமட்டும் இங்கு கூறுகிறோம். மற்றவைகள் பின்வரும் வாசகத்தில் கூறப்படும். இப்போது கூறப்படும் சங்கதிகளைப் பக்தியோடு கவனமாய் வாசித்துப் பத்திரமாய் மனதில் வையுங்கள்.

மக்காவாசிகள் ஹஸரத் அவர்களுக்கும் அவருடைய உயிருக்குயிரான தோழர்களுக்கும் சொல்லொணா யிடையூறுகளையும், துன்பங்களையும் உண்டாக்கிக்கொண்டிருந்தார்கள். ஹஸரத் அவர்கள் அத்துன்பங்களுக்குத் தப்பி க்ஷேமமாய் மதினா நகரம்போய்ச் சேர்ந்துவிட்டதால், மக்காவிலிருந்த அவர் விரோதிகளுக்கு மிக்க மன எரிச்சலும் கோபமும் உண்டாய்விட்டது. அதனால் அவர்கள் ஹஸரத் அவர்கள்மேல் முன்னிலும் அதிக விரோதங்கொண்டு, யாராவது அவர்களைக் கொலைசெய்தேனும் அல்லது உயிரோடு பிடித்துவந்தேனும் கொடுத்தால், அவர்களுக்கு நூறு ஒட்டகங்கள் பரிசளிக்கப்படுமென்று நாடெங்கும் பறைசாற்றித் தெரிவித்தார்கள்.

அக்காலத்தில் பாபத்திற்கஞ்சாமல் கொலை, களவு முதலியன செய்து பொருள் சம்பாதிக்கும் அராபியர் அனேகர் இருந்தார்கள். அவர்கள் நூறு ஒட்டகத்திற்கு

ஆசைவைத்து ஹஸரத் அவர்களைக் கொலைசெய்ய எத்தனித்தார்கள். ஆனால், பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கம் ஹஸரத் அவர்களால் உலகில் நிலைநாட்டப்பட வேண்டுமென்றும், ஹஸரத் அவர்களது முயற்சிகள் யாவும் ஜெயம் பெற வேண்டுமென்றும் ஆண்டவன் திருவுளங் கொண்டபடியால், விரோதிகளின் எண்ணம் ஜெயம்பெறவில்லை.

ஒரு சமயத்தில் இரண்டு விரோதிகள் ஹஸரத் அவர்களைச் சந்தித்து எதிர்த்தார்கள். அவர்களில் ஒருவன் நாமதேயம் ஸுராகா-பின்மாலிக். இவன் மிக்க வீரதத்துவம் பொருந்தியவன். இவன் ஹஸரத் அவர்களைக் கண்டதே பிடித்துக்கொள்ள நாடித் தன் புரவியைத் துரிதப்படுத்தினான். அவன் வருவதைக்கண்ட ஹஸரத் அபூபக்கர் ஸித்தீஃ றலியல்லாஹு அன்ஹு என்பவர் ஹஸரத் அவர்களை நோக்கி, "இவன் நம்மைப் பிடிக்கவே வருகிறான்போல் தோன்றுகிறது. இது ஒரு பெரிய ஆபத்தாயிருக்கிறது. இதினின்று தப்பித்துக்கொள்வது கஷ்டம் போல் இருக்கிறது" என்றார்.

அதற்கு ஹஸரத் அவர்கள் "நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நம்மைக் காப்பாற்ற ஆண்டவனிருக்கிறான்" என்றார்.

ஸுராகா என்பவன் ஹஸரத் அவர்களைப் பிடிக்க நெருங்கியபோது அவனேறியிருந்த குதிரை தன்முன்னங் கால்களை யுயரத்தூக்கி அவனைக் கீழேவிழும்படி செய்தது. கீழேவிழுந்த அவன் ஹஸரத் அவர்களைப் பிடிக்கவேண்டுமென்ற எண்ணத்தை மறந்து, தன் உயிருக்கெங்கே ஆபத்தாய் முடியுமோவென்று மிக்க பீதிகொண்டு, ஹஸரத் அவர்களை நோக்கி, "என் தப்பிதத்தைத் தயவுசெய்து

மன்னித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். ஹஸ்ரத் அவர்கள் அவ்வாறே மன்னித்து விட்டார்கள். தன் பெரிய குற்றத்தை யவர் மன்னித்து விடுவாரென்று அவன் நினைக்கவேயில்லை. ஆகையால் அவன் மிக்க ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து, ஹஸரத் அவர்களின் உதார குணத்தை மிக்க மதித்து, அவர்களை நோக்கி, "நான் தங்களைக் கண்டதாய் ஒருவரிடமும் கூறமாட்டேன். இன்னும் தங்களைப் பிடிக்க வேண்டுமென்று வருகிறவர்களுக்கும் புத்திகூறி யவர்களையும் திரும்பிப் போகும்படி செய்வேன்" என்று கூறி ஹஸரத் அவர்களுக்குவந்தனமளித்துச் சென்றான். அவன் அப்போது இஸ்லாம்மார்க்கத்தைச் சேர்ந்திருக்கவில்லை. ஆனால் பின்னால் ஹஸரத் அவர்கள் மக்காவைக் கைப்பற்றியபோது அவன் தன் குடும்பத்தோடு இஸ்லாமாய்விட்டான்.

ஸுராகாபின் மாலிக் என்றவன் சென்றபின்பு ஹஸரத் அவர்கள் மதீனா நகரின் ஓரத்திற் செல்லும்போது, அவரைப் பிடிக்கவேண்டுமென்று தேடிக்கொண்டிருந்த அபூபுரீதா அஸ்லமி என்பவன் எழுபது வீரரோடு ஹஸரத் அவர்கள் முன்வருவதைக்கண்டு, அவன் நாட்டத்தை யறிந்த ஹஸரத் அவர்கள் தாமே முன்சென்று தாம் இன்னாரென்று அவனுக்குத் தெரிவித்தார்கள். அபூபுரீதா என்பவன் ஹஸரத் அவர்களின் குணத்தையும் மதுரம் பொருந்திய வசனங்களையுங்கேட்டு மனங்கனிந்து, அவர்களை வணங்கி உடனே இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து கொண்டதோடு, ஹஸரத் அவர்களின் ஆட்களுக்கு நானே தலைவனா யிருக்கிறேன் என்று அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

மதிணவிலுள்ள ஜனங்கள் ஹஸரத் அவர்களின் வருகைக்காக மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தினந்தோறும் காலையில் தங்கள் வீடுகளின் மேல்மாடிகளிலேறி, அவர்வரும் திக்கைநோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஹஸரத் அவர்கள் தங்கள் நகருக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்கள் என்ற சங்கதியை மதிணவாசிகள் அறிந்ததே, மிக்க சந்தோஷங்கொண்டார்கள். அங்குள்ள பெரியோர் சிறியோர் அனைவரும் மிக்க பக்தி விசுவாசத்தோடு, ஹஸரத் அவர்களை எதிர்சென்று அழைத்துவரப் புறப்பட்டார்கள். அவர்கள் மதிணவிற் கருகில் இரண்டுமைல் தூரத்திலுள்ள குபா என்ற ஸ்தலத்தில் ஹஸரத் அவர்களைச் சந்தித்து தரிசனஞ்செய்து நேத்திரானந்த மடைந்தார்கள்.

பனி உம்ரு பின்ஔப் என்ற ஒருவர் குபா என்றவிடத்தில் வசித்துக்கொண்டிருந்தார். அவர் ஹஸரத் அவர்களைத் தரிசித்து குபாவிலேயே கொஞ்சகாலம் தங்கியிருக்கும்படி அவரை மிக்க அன்போடு பிரார்த்தித்தார். ஆகையால் ஹஸரத் அவர்கள் அன்று மதிணவிற்குச் செல்லாமல் அங்கேயே தங்கியிருந்தார்கள்.

குபா என்ற இடம் மிக்க அழகானதாகவும் மனோரம்மியமானதாகவும் இருந்தபடியால், ஹஸரத் அவர்கள் இரண்டுவாரங்கள் அவ்விடமே யிருந்தார்கள். அதற்குள் அங்கு ஒரு மஜீத்கட்ட ஏற்பாடாய்விட்டது. அதற்குமஸ்ஜிதே குபாஎன்று பெயர். அதுதான் இஸ்லாமானவர்கள் தொழுவதற்காக முதல் முதல் கட்டப்பட்ட மஜீதாகும். அந்த மகிமைபொருந்திய மஜீத் கட்டப்பட்டபோது ஹஸரத் அவர்கள் தமது தோழன்மார்களோடு கல், மண் முதலியவைகள் எடுத்துக்கொடுத்தார்கள். அவரால் கட்

டப்பட்ட மஜ்திில்தொழுது நற்பயனையடைந்தவர்கள் எவ்வளவு மகிமை பெற்றவர்களா யிருக்கவேண்டும்! ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு தமது காலத்தில் அம்மஜிதைச் சுத்திசெய்வது பெரும் புண்ணியச் செயலென்று கருதி அந்தத் திருப்பணியைச் செய்துவந்தார். இலாஹி! நாமும் அப்படிச் செய்யும்படி ஆண்டவன் மதியளித்து அருள்புரிவானாகவும். ஆமீன்.

மக்காவாசிகள் ஒரு நாள் இரவு கட்டாயமாய் ஹஸரத் அவர்களைக் கொன்றுவிடவேண்டுமென்று தீர்மானித்ததைப்பற்றி மூன்றாவது வாசகத்தில் வாசித்திருக்கிறீர்கள். அப்போது அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தமது படுக்கையில் படுக்கவைத்துவிட்டு ஹஸரத் அவர்கள் தமது தோழரோடு மக்காவைவிட்டுப் புறப்பட்டுவிட்டார்கள். அலி றலியல்லாஹு அன்ஹு தமது குருவாகிய சிறிய தந்தை பிரிந்துபோன துயரத்தையும், எதிரிகளால் ஏற்படும் துன்பங்களையும் சகிக்காது, தாமும் தமது ஜன்ம ஸ்தலமாகிய மக்காவைவிட்டு வெளிப்பட நேர்ந்தது. அவர் சமயம் பார்த்துக்கொண்டேயிருந்து எதிரிக ளறியாதபடி ஒருநாள் தனியே மக்காவைவிட்டுப் புறப்பட்டு, கடுநெஞ்சமுடைய கொலையாளிகளைப்போன்ற எதிரிகள் பின்தொடர்ந்து வருவார்களென்ற யோசனையில் இரவு முழுமையும் நடப்பதும் பகலில் தலைமறைந்திருப்பதுமாக பிரயாணம் செய்து, ஹஸரத் அவர்கள் குபாவில் இருக்கும்போதே அவர் திருவடிகளில் வந்து சேர்ந்தார். கல்லும் முள்ளுமான வழிகளில் நெடுந்தூரம் கால் நடையாய்ப் பிரயாணம் செய்ததால், அவர் மிக்க ஆயாச முற்றதோடு, கால்களில் முட்கள்தைத்து கொப்புளங்களுண்டாகி வேதனைப்பட நேர்ந்தது. அதைக்

கண்ட ஹஸரத் அவர்கள் அவருடைய பாதங்களைத் தமது திருக்கரங்களால் தடவ அவர் பூரண சுகமடைந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் இரண்டொருவர் ஹஸரத் அவர்கள் தம்உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் கருதி இன்னொருவரைத் தமக்குப்பதிலாக ஆபத்தான விடத்தில் விட்டுச் செல்லலாமா என்று கருதலாகும். உண்மையப்படியல்லவென்பது பின்பாகத்தில் ஹஸரத் அவர்கள் திடீலென்று எதிரிகள்முன் சிக்கிக்கொண்டபோது தம் தோழர்களைப் பின்நிற்கச்செய்து தாம் எதிரிகள்முன் சென்று 'நானே மகம்மத் என்னை யென்னசெய்யப் பிரியமோ அப்படிச் செய்துகொள்ளுங்கள் என்று கூறினார்'' வரையப்பட்டுள்ள சம்பவங்களால் நன்கு விளங்கும். மற்றப்படி ஏன் அப்படிச்செய்தாரெனின், அவர் செய்கையொவ்வொன்றும் தன் பிரியப்படி நடந்ததல்ல. ஆண்டவனுடைய திருவுளக்கட்டளைப்படியே நடந்தார் என்பதே சத்தியம்.

பனி உம்ரு.பின் ஹஸரத் அவர்களைக் குபாவில் கொஞ்சகாலம் இருக்கும்படி வேண்டியும், மதினா வாசிகளின் அன்பான வேண்டுகோள்களால் அங்கு நெடுநாளிருப்பதற்கில்லை. ஆகவே ஹஸரத் அவர்கள், இஸ்லாமான அடியார் குழாங்கள் தம்மைத் துதித்துப் புடைசூழ, றபீயுல் அவ்வல்மீ 17உ வெள்ளிக்கிழமையன்று க்ஷேமமாய் மதினமா நகரத்திற்குள் பிரவேசித்தார்.

ஹஸரத் அவர்கள் நகரத்திற்குள் வருவதைக்கண்ட மதினா வாசிகள் சந்தோஷத்தால் மனம்பூரித்து, ''ஹஸரத் அவர்கள் நமது வீட்டில்தான் தங்குவார்'' ''ஹஸரத் அவர்கள் நமது வீட்டில்தான் தங்குவார்'' என்று அன்பு

மிகுதியால் ஒவ்வொருவரும் தமது வீட்டிலேயே தங்குவார் என்று தீர்மானித்துக்கொண்டார்கள். அதையறிந்த ஹஸரத் அவர்கள், ஏககாலத்தில் எல்லோர் விருப்பத்தின்படிக்கும் நடப்பது கூடாதகாரிய மாதலாலும், ஒருவர் வீட்டில் தங்கினால் மற்றவர்களுக்கு வியாகூலமுண்டாகுமாதலாலும், தாம் ஊர்ந்துசெல்லும் ஒட்டகம் எந்த ஸ்தலத்தில் உட்காரும்படி ஆண்டவன் விதிக்கிறானோ அந்த விடத்தில் தாம் தங்குவதாய் வெளியிட்டார். இதைக்கேட்ட ஜனங்கள் மிக்க வியப்போடும் மனப் பதைப்போடும், ஒட்டகம் எங்கு அமருமோவென்று ஆவலோடு, தங்கள் பார்வை முழுமையும் அதன் மேலேயே நாட்டியிருந்தார்கள். அல்லாஹுத் தஆலாவின் திருவுளப் பாங்கின்படி, ஒட்டகம் ஹஸரத் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் மஜீத் எந்த ஸ்தலத்தில் கட்டப்பட்டிருக்கிறதோ, அதே ஸ்தலத்தில் உட்கார்ந்தது. அச்சமயம் ஹஸரத் அவர்கள் முகத்தில் குருவியர்வை துளித்து, முகம் ஒருவித மாறுதலடைந்தது. வஹீ இறங்கும் காலத்தில் அவ்வாறு முகம் மாறுவதுண்டு. அதன்பிறகு ஒட்டகம் எழுந்து நான்கடி முன்சென்று மறுபடி பின்வந்து அதேவிடத்தில் உட்கார்ந்துகொண்டது. பிறகு அதை யெழுப்ப யார்என்ன முயற்சி செய்தாலும் முடியவில்லை.

அந்தவிடத்திற்கு அருகிலிருந்த உயரமான ஒருவீட்டில் ஹஸரத் அபூ ஐயூப் அன்சாரி றலியல்லாஹு அன்ஹு என்பவர் வசித்துக்கொண்டிருந்தார். அவர் ஹஸரத்தைத் தரிசித்து, "நாங்கள் உயரத்தில் வசித்துக்கொண்டிருக்கத் தாங்கள் கீழேயிருப்பது எங்கள் மனதிற்கு மிக்க அச்சத்தையும் வியாகூலத்தையும் உண்டாக்குகிறது.

ஆகையால் தாங்கள் வீட்டின் மேல்பாகத்திற்கு வந்திருக்க வேண்டுகிறோம். நாங்கள் கீழ்ப்பாகத்தில் வசித்து வருகிறோம்'' என்று தம்மால் கூடியவரையில் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். ஹஸரத் அவர்கள் அவரை நோக்கி, "அதனால் ஒரு குற்றமுமில்லை. நம்மிடம் என்னேரமும் அனேக ஜனங்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருப்பார்கள். அதனால் கீழ்ப்பாகத்தில் வசிக்கும் உங்களுடைய பெண்டுபிள்ளைகளுக்கு அசௌகரியம் நேரிடும். ஆகையால் நாம் இங்கேயே யிருக்கிறோம். அதைப்பற்றித் தாங்கள் மனத்தாங்க லடையவேண்டாம்'' என்று அருளினார்கள்.

இந்த விஷயத்தால் அபூ ஐயூப் அன்சாரி என்பவர் ஹஸரத் அவர்களிடம் எத்தகைய வணக்க ஒழுக்கத்தோடும் பக்தியோடும் நடந்துகொண்டார் என்பதும், ஹஸரத் அவர்கள் பிறருக்குத் தம்மால் ஒருவித இடைஞ்சலும் நேரிடலாகாதென்பதில் நாட்டம் வைத்திருந்தார்களென்பதும் நன்கு விளங்குகிறது. ஆகையால் சிறியோர் பெரியோரிடம் வணக்கவொழுக்கத்தோடும் பக்தியோடும் நடந்துகொள்ளவேண்டும். பெரியோர் சிறியோர்களுக்குத் தம்மால் கஷ்டம் நேரிடாதபடி கவனிக்கவேண்டும், என்ற இந்த இரண்டு கொள்கைகளும் இஸ்லாம் மார்க்கத்தின் பிரதானமான கொள்கைகளென்று நீங்கள் கவனத்தில்வைத்து அதன்படி நடக்கவேண்டும். அவ்வாறு நடந்துகொண்டால்தான் நீங்கள் மனுஷத்தன்மையைப் பெற்றவர்களாவீர்கள். இவற்றைப்பற்றி நமக்கு அறிவிக்க வேண்டியே எல்லா நபிமார்களும் இரசூலேகுதா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் பூலோகத்தில் அவதரித்தார்கள்.

ஓ நமது பிரியமுள்ள மாணுக்கர்களே! இப்போதனைகளின்படி நீங்கள் நடந்துகொண்டால்தான் இவ்வுலகிலும் பரலோகத்திலும் மேன்மைபெறுவீர்கள். ஆகையால் இந்த உபதேசங்களை மனதில்வைத்து அதன்படி நடக்கவேண்டும். அப்படிக்கின்றேல் நீங்கள் இவ்வுலகத்திலுள்ள புத்தகங்களையெல்லாம் படித்துவிட்டு ப். ஏ; யம், ஏ; யல். யல்., டி, டி. டி., முதலிய பட்டங்களையெல்லாம் எவ்வளவு பெற்ருலும், ஒரு பயனையு மடையமாட்டீர்கள். கடைசிநாளில் ஆண்டவன் சந்நதியில் நிற்கும்போது இவற்ருல் எள்ளளவு உதவியும் பெறமாட்டீர்கள். ஆகையால் ஆண்டவன் கட்டளைகளை யுணர்ந்து அவற்றின்படி நடக்கத் தவிராதீர்கள்.

ஓ! அருமையான ஆண்டவனே! உலகிலுள்ள எல்லா இஸ்லாமானவர்களும் மற்றபேரும், இந்த மாணுக்கர்களும், நாங்களும் உமது உன்னதமான கட்டளைகளை யுணர்ந்து அவற்றின்படி ஒழுகி உமது அருளையும் பெறுமாறு கிருபாநோக்கம் செய்வீராக.

நாம் முன்புகூறிய ஹஸரத் அபூஐயூப் என்பவர் மறுபடி மறுபடி ஹஸரத் அவர்களை வீட்டின் மேல்பாகத்தில் வந்திருக்கும்படி வினயமாய் வேண்டிக்கொண்டார். ஹஸரத் அவர்கள் பலவிதமான சமாதானங்கள் கூறியும் அவர் மனத்திருப்தி யடையாமல் என்னேரமும் இதைப்பற்றியே மனக்கலக்கமுடையவராய், ஹஸரத் அவர்களை மிக்க மன உருக்கத்தோடு வேண்டிக்கொண்டே யிருந்தார். கடைசியில் ஹஸரத் அவர்கள் அவருடைய வணக்கமான வேண்டுகோளுக்கிரங்கி, அவருக்கு மனத்திருப்தி யுண்டாக்குவதற்காக, அவர்கோரியபடியே அவர் வீட்டின் மேல்பாகத்தில்சென்று தங்கினர்கள்.

ஆண்டவனே அந்த அபூஐயூப் அவர்களுடைய அன்பையொத்த அன்பும் பக்தியும் எங்களுக்குண்டாகும் வண்ணம் கிருபை புரிவீராக.

இனிமேல் ஹஸரத் அவர்களுடைய சரித்திரத்தை வருஷவாரியாய்க் கூறத்தொடங்குகிறோம். இதுதான் ஹிஜ்ரி பிறந்த வருடமாகையால் இதுமுதல்தான் தேதி குறிப்பிடப்பட்டு வருகிறது.

ஹிஜ்ரி முதல் வருடம்.

1-வது குபாமஸ்ஜிது கட்டப்பட்டது.

ஹிஜ்ரி முதல்வருட ஆரம்பத்தில் குபா மஸ்ஜித் கட்டப்பட்டது. பின்பு நடந்த சங்கதிகள் கீழ்வருமாறு.

2-வது அப்துல்லா பின்ஸலாம் றலியல்லாஹு அன்ஹு இஸ்லாமானது.

அப்துல்லா பின்ஸலாம் அவர்கள் யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கோத்திரத்தில் பிறந்தவர். ஆண்டவன் அவரை உயர்ந்த குலத்தில் பிறக்கச் செய்ததோடு அவருக்கு நல்ல கல்விச்செல்வதனதயும் பக்தியையும் அளித்திருந்தான். அதனால் மதினாவிலிருந்த யூதர்களெல்லாம் அவரிடத்தில் மிக்க மரியாதையோடும் வணக்க ஒழுக்கத்தோடும் பணிவாய் நடந்துவந்தார்கள்.

ஹஸரத் அவர்கள் மதினாவிற்கு வந்திருப்பதையும் ஜனங்கள் கூட்டங்கூட்டமாய்ச் சென்று அவரைத் தரிசித்து வருவதையும் அப்துல்லா பின்ஸலாம் என்பவர் அறிந்தார். அவர், ஹஸரத் அவர்களைத் தாமும் காண வேண்டுமென்றும் அவருடைய போதனைகளைக் கேட்டு

அதன் உண்மையை அறியவேண்டுமென்றும் விருப்பங் கொண்டு, ஹஸரத் அவர்கள் இருக்குமிடத்திற்குச் சென்றார். அவர் ஹஸரத் அவர்களைக் கண்டதே அவருடைய மகிமைபொருந்திய திருமுகத்தின் இலக்ஷணங்களையும் பிரகாசத்தையும் கண்டு "இவர் உண்மையானவரே, பொய்கூறுபவரல்ல. உலகிலுள்ள பொய்யர்களுடைய குறிகள் இவருடைய முகத்தில் இல்லை" யென்று மனதில் நிச்சயித்துக்கொண்டார். அச்சமயம் ஹஸரத் அவர்கள் பின்வருமாறு யாவர்க்கும் உபதேசித்துக்கொண்டிருந்தார்கள்:—

"ஓ ஜனங்களே! உங்கள் சுற்றத்தாரை சிநேகிதரைச் சந்திக்கும்போது "ஸலாமுன் அலைகும்" என்று கூறுங்கள். அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் ஆகாரம் கொடுங்கள். உங்கள் சுற்றத்தாருடனும், குடும்பத்திலுள்ளவர்களுடனும் ஒற்றுமையா யிருங்கள். அவர்களோடு பிரிவினையுண்டாக்கிக் கொள்ளாதீர்கள். இரவில் யாவரும் நித்திரை செய்யும்போது நீங்கள் ஆண்டவனைத் தொழுது அவனுடைய அருளைப்பெற்றுக்கொள்ளுங்கள்."

மதினாவில் ஹஸரத் அவர்கள் செய்த முதல் பிரசங்கம் இதுவேயாகும். மேற்படி பிரசங்கத்தைக்கேட்ட அப்துல்லா பின்ஸலாம் தமது வீட்டிற்குத்திரும்பிச் சென்றார். பிறகு ஒரு சமயத்தில் அவர் ஹஸரத் அவர்களைத் தனியாயிருக்கையில் சந்தித்து சில விஷயங்களைப்பற்றி கேட்டார். அவற்றிற்கு ஹஸரத் அவர்கள்கூறிய விடைகளைக் கேட்டதே "இவரே சந்தேகமின்றி கடைசி நபியாயிருக்கவேண்டும்" என்று மனதில் நிச்சயித்துக்கொண்டார். ஏனெனில், நபிமார்களல்லாத வேறு ஒருவராலும் அக்கேள்விகளுக்கு விடையளிக்கமுடியாது. ஆகையால்,

உண்மையை அறிந்துகொள்ள வேறொன்றைப்பற்றியும் விசாரிக்கவேண்டிய அவசியமில்லையென்று தீர்மானித்துக்கொண்டார். உண்மையையுணர்ந்த அப்துல்லா பின் ஸலாம் தன் கூட்டத்தார் தன்னை விரோதித்துக் கொள்வார்களென்பதைப்பற்றி சற்றும் அஞ்சாது, தன் செல்வத்திற்கு ஊனம் நேரிடுமென்பதையும் இலட்சியஞ் செய்யாது, உடனே ஹஸரத் அவர்களிடம் ஈமான் கொண்டு கலிமா ஓதி இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக் கொண்டார்.

பிறகு அவர் ஹஸரத் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:—

"நான் உயர்குடியிற் பிறந்தவனென்றும் கல்வியில் சிறப்புற்றவனென்றும் கருதி இந்த யூதர்கள் என்னைத் தங்கள் தலைவனாகமதித்து வருகிறார்கள். ஆனால், இவ்வித விஷயங்களில் அவர்கள் மிக்க மூடத்தனமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இப்போது நான் இஸ்லாமாய் விட்டதை யவர்களறிந்தால், முதலாவது என்மேல் பூரண சந்தேகங்கொண்டு, நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், தங்களையும் தங்கள் மார்க்கத்தையும் பொய்யென்று தூஷிப்பார்களேயன்றி யொப்புக்கொள்ள மாட்டார்கள். என்னை இழிவானவனென்றும், கெட்டவனென்றும், முட்டாளென்றும் கூறுவதோடு தங்களுக்குக் கொடிய விரோதிகளாய் விடுவார்கள். ஆகையால், நான் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொண்ட உண்மையை ஜனங்களுக்குத் தெரிவிப்பதன் முன்னர், தாங்கள் அவர்களுடைய யோக்கியதையை அறிந்துகொள்வது நலமென்று விரும்புகிறேன்" என்றார்.

இவர் கூறிய மொழிகளைச் செவியுற்ற ஹஸரத் அவர்கள் அப்துல்லா பின் ஸலாம் அவர்களை மறைவி லிருக்கச் செய்து, யூதர்களை வரவழைத்து அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறலுற்றார்கள்:—

"ஆண்டவன் ஒருவனேயென்றும், அவனைத்தவிர வேறொன்றில்லை யென்றும், நான் அவனால் அனுப்பப் பட்ட ரசூல் என்றும் உங்களுடைய தெளராத்து வேதத்தில் நீங்கள் வாசித்திருக்கிறீர்கள். உண்மையின்பேரில் நம்பிக்கைவைத்து இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக் கொள்ளுங்கள்."

ஹஸரத் அவ்வாறு கூறியதற்கு யூதர்கள் "நீங்கள் ஆண்டவனுடைய ரசூல் என்பதை நாங்கள் அறியமாட்டோம்" என்றார்கள்.

ஹஸரத் அவர்கள் யூதரை நோக்கி,

"உங்கள் கூட்டத்திலுள்ள அப்துல்லா பின்ஸலாம் என்பவர் எப்படிப்பட்ட மனிதர்?" என்று வினவினார்.

அதற்கு அவர்கள், "அவர் எங்கள் தலைவர், எங்கள் தலைவரின் புத்திரர். எங்களனைவரிலும் சிறந்த வித்வான், வித்வானுடைய புத்திரர். எங்களுக்கதிகாரி, நல்ல அறிவாளி, அறிவாளியின் மகன்" என்று மொழிந்தார்கள்.

ஹஸரத் அவர்கள், "நீங்கள் இவ்வாறு கூறுகிறீர்களே, அப்படிப்பட்டவரே இஸ்லாமாய்விட்டால்......" என்றார்.

அதற்கவர்கள் "அதினின்றும் ஆண்டவன் அவரைக் காப்பாற்றுவானாக" என்றார்கள்.

அதன் பிறகு, ஹஸரத் அவர்கள் அப்துல்லா பின் ஸலாமை மறைவிடத்தி லிருந்துவரும்படி யழைக்க, அவர்

கலிமா கூறிக்கொண்டே ஹஸரத் அவர்கள் முன்புவந்து நின்று, யூதர்களை விளித்து,

"ஓ என் சகோதரர்களாகிய யூதர்களே! ஆண்டவனுக்குப் பயந்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்மேல் ஈமான் கொள்ளுங்கள். இவர்கள் அல்லாவின் றசூல் என்பதை நீங்கள் அறிகிறீர்கள்" என்று கூறினர்.

யூதர்கள்;—"நீர் பொய்யர், நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம். நீ பெரிய துஷ்டன், பெரிய துஷ்டனுக்குப் பிறந்தவன். நம்மெல்லோரிலும் நீ பெரிய மூடன், முழு மூடனுடைய மகன். மிக்க கொடியவன், மகா கொடியவனுடைய மகன்" என்று மொழிந்தார்கள்.

அதன்பிறகு அப்துல்லா பின்ஸலாம் உண்மையானவரென்றும், அறிவாளியென்றும், உறுதியுடைவரென்றும், யூதர்கள் உண்மையை மறுக்கிறவர்களென்றும் ஹஸரத் அவர்கள் நன்கு யறிந்துகொண்டார்கள்.

3-வது ஹஸரத்தவர்கள் தமது குடும்பத்தை மக்காவிலிருந்து மதினாவிற்கு வரவழைத்தல்.

நாம் முன்கூறியபடி ஹஸரத்தவர்கள் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹுவைமட்டும் தம்முடன் மதினாவிற்கு அழைத்துவந்திருந்தார்கள். ஹஸரத்தவர்களுடைய புத்திரிகளாகிய ஹஸரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா, உம்மு குல்ஸூம் இவர்களும் ஹஸரத்தவர்களின் மனைவியாராகிய ஸௌதா றலியல்லாஹு அன்ஹா அவர்களும் மக்காவிலேயே தங்கியிருந்தார்கள். மதினாவில் யாதொரு இக்கட்டுமின்றி யிருக்கலாகுமென்ற நம்பிக்கை யிருந்த

தால் இவர்களையெல்லாம் ஹஸரத்தவர்கள் மதினாவிற்கு வரவழைத்துக்கொண்டார்கள். அவ்வாறே அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் தங்கள் குடும்பத்தாரை மதினாவிற்கு வரவழைத்துக்கொண்டார்.

4-வது மஸ்ஜிதே நபவி கட்டப்பட்டது.

ஆண்டவன் அருளால் ஹஸரத்தவர்கள் தங்கள் கொள்கையின்படி நடந்துகொள்வதற்கும், தமது சத்தியமான பரிசுத்த மார்க்கத்தை யாவர்க்கும் போதிப்பதற்கும் மதினாவில் எவ்வித இடைஞ்சலு மில்லாமலிருந்தது. ஆனால், அவர்கள் விருப்பம் பூர்த்திபெற யாவரும் தொழுவதற்குத் தகுதியான ஒரு மஸ்ஜிதில்லாததே ஒரு குறையாயிருந்தது. ஆகையால், எல்லாவற்றிற்கும் முதலில் குபாவில் கட்டப்பட்ட மஸ்ஜிதைப்போலவே மதினாவிலும் முதல்முதல் ஒரு மஸ்ஜிது கட்டும்படி ஏற்பாடு செய்தார்கள். அந்த மஸ்ஜிது கட்டப்பட்டவிடம் முன்பு ஒட்டகம் படுத்துக்கொண்டது என்று கூறினோமே அதேயிடந்தான். மஸ்ஜிது கட்டுவதற்காக அந்த நிலத்தை விலைக்கு வாங்கினார்கள். முஹாஜிரீன்கள் * அன்ஸாரீன்கள் † றலியல்லாஹு அன்ஹும் இவர்களோடு ஹஸரத்தவர்களும்சேர்ந்து மஸ்ஜிதைக்கட்டத்தொடங்கினார்கள். அந்த மஸ்ஜிதுகட்டுவதற்காக அறுக்கப்பட்ட கற்கள் மதினாவில் இன்னும் இருக்கின்றன. அப்போது கட்டப்பட்ட மஸ்ஜிதின் கட்டிடம் சாமானியமானதே. அது பச்சைக் கற்களால் கட்டப்பட்டது. சுவர்களெல்லாம் பலமானவையல்ல. மேல்பரப்பு பேரீச்சமரக்கழிகளால் போடப்பட்

---

* மக்காவி லிருக்கும்போதே ஹஸரத்தவர்களை வழிப்பட்ட தோழர்கள்.

† மதினாவிற்கு வந்தபிறகு வழிப்பட்ட தோழர்கள்.

ட்டது. ஆகையால், அப்பரப்பு வெயில் மழைகளைத் தடுக்கச் சக்தியற்றதாய் மழைகாலத்தில் ஒழுக்கலெடுத்து உள்ளே சேருகியும், வெயில் துவாரங்களின் வழியாய் உட்சென்றும் தொழுபவர்களுக்கு அசௌகரியத்தை யுண்டாக்கிக்கொண்டிருந்தன. அதே மஸ்ஜிதில் மகிமை பொருந்திய நமது ரசூலேகுதா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மழைபெய்தாலும், புசலடித்தாலும், கொடியவெயில் காய்ந்தாலும் தங்கள் சகாக்களோடு ஐந்துவேளையும் தொழுதுகொண்டிருந்தார்கள். ஹஸரத்தவர்கள் அந்த மஸ்ஜிதில் மேடைக்குப் பதிலாய் உடைந்த ஒரு சிறுகம்பத் துண்டின்மேல் நின்று பிரசங்கம் செய்து வந்தார்கள்.

அக்காலத்தில் அவரை வழிப்பட்டவர்களாகிய முஹாஜரீன்களும் அன்ஸாரீன்களும் பெருங்கூட்டமாயிருந்தார்கள். அவர்களில் சிலர் மிக்க செல்வந்தராகவு மிருந்தார்கள். ஹஸரத்தவர்கள் விரும்பியிருந்தால் அவர்கள் உதவியால் மஸ்ஜிதை ஒரு கெம்பீரம்பொருந்திய கட்டடமாகக் கட்டிக்கொண் டிருக்கலாம். ஆனால், அத்தகைய கட்டடத்தால் உலகத்தில் உண்டாகக்கூடிய பெருமையையும் புகழையும் ஹஸரத்தவர்கள் இலட்சியஞ் செய்தவர்களல்ல. அவர்கள் பரிசுத்தமான உள்ளத்தையும் பக்தியாலடையும் பயனையுமட்டுமே விரும்பினார்கள். ஆகையால், ஆண்டவனிடத்தில் வைத்த நாட்டத்தை மறக்கத் தக்க பகட்டும் சிங்காரிப்புமான வேலைகளை அதில்செய்ய அவர்கள் அனுமதி யளிக்கவில்லை. சாமானியமானதும் அலங்காரமற்றதுமான ஸ்தலத்தையே ஏற்றுக்கொண்டார்கள். அகங்காரத்தை யுண்டாக்கி வணக்கத்தைக் குறைத்து ஆண்டவன் முன்னிலையில் தன் சிறுமையை

மறக்கச்செய்யும் செய்கைகளை அவர்கள் விரும்புவதில்லை. ஆகையால், அந்த மஸ்ஜிதைப்போலவே தாம் வசிக்கும் வீட்டையும், கெம்பீரமின்றி மிக்க சாமானியமானதாகவே யமைத்துக்கொண்டார்கள்.

அந்த மஸ்ஜிதில் காலக்கிரமப்படி ஆண்டவனைத்தொழுவதற்காக, அவனுடைய நல்லருள்பெற்ற மகானும், பூலோகத்தில் தனக்கிணையற்றவரும், நமக்கெல்லாம் நேர் வழிகாட்ட ஆண்டவனால் அனுப்பப்பட்ட அவனுடைய ரசூலுமாகிய நாயகம் அவர்களும் ஆண்டவனைத் தொழும் வேளை நெருங்கிவிட்டதென்று யாவர்க்கும் தெரிவிக்கும் பாங்குசத்தம் எப்போது நமது செவிக்குப் புலப்படுமோவென்று யாவரும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்து பிரதிதினமும் வேளை தவராதுபோய் தொழுதுகொண்டிருந்தார்கள்.

ஆகா! என்ன ஆச்சரியம்! நாமோ பெருந்தொகைகளைச் செலவிட்டு சலவைக்கற்கள், பச்சைக்கற்கள், கிளிஞ்சல் சுண்ணும்பு முதலியவற்ருல் மிக்க கெம்பீரம் பொருந்தியவையும், சித்திரவேலைப்பாடுள்ளவையும் வானத்தையளாவிய கோபுரங்களும் ஸ்தூபிகளுமுடையவைகளுமான மஸ்ஜிதுகளைக்கட்டி, விலையுயர்ந்த திரைச்சீலைகளாலும், குளோப் லஸ்தர் முதலிய தீபங்களாலும், உயர்தர இரத்தின ஜமக்காளங்களின் விரிப்புகளாலும், அவற்றையலங்கரித்து வைத்திருக்கிறோம். ஆனால், அத்தகைய மஸ்ஜிதுகளில் தொழவேண்டுமென்ற ஆவலும், பாங்கு சத்தம் எப்போது கேட்குமோ என்ற நாட்டமும், ஆவலும் ஆண்டவன் தொழுகைமேல் சிந்தனையும் உடையவர்களாயிருப்பதுமட்டும் மிக்க அருமையாகவேயிருக்கிறது.

ஆனால், வேடிக்கை, நாடகம், உல்லாசவிருந்து, தோட்டவிருந்து, ஸர்கஸ், கஸரத், குத்துச்சண்டை இப்படிப்பட்டவை யெங்காவது நடக்கப்போகிறதாய்த் தெரிந்துவிட்டாலோ, அவற்றிற்கு நீமுன் நான்முன் என்று ஓடிப் பணச்செலவு செய்தேனும் டிக்கட்டுகள் சம்பாதித்துக்கொண்டு, ஆடம்பரத்தோடு உடுத்தி வாசனையணிந்து யாவருக்கும் முன்னேபோய் முதல்வரிசை யாசனத்தில் உட்காரவேண்டுமென்று மிக்க ஜாக்கிறதையெடுத்துக்கொள்ளுகிறோம். அழியாத பேரின்பத்தைப் பெறும் பொருட்டு நமது உயிரினும் அருமையான பரமாத்மாவாகிய ஆண்டவனைத்தொழ அவ்வளவு பராமுகமா யிருக்கிறோம். மிக்க அற்பமானவையும், க்ஷணபங்கமானவையும் ஆண்டவன் நண்பர்களால் வெறுக்கப்பட்டவையுமான அற்ப விஷயங்களை யனுபவிக்கவோ பெருமுயற்சி யெடுத்துக்கொள்கிறோம். பாங்சத்தம் காதில் கேட்டாலும் சிலர் மஸ்ஜிதுக்குச்செல்ல சோம்பற்பட்டு வீட்டிலேயேதொழுகிறார்கள். சிலர் தொழுவதுபோல் அபிநயித்து விடுவதுமுண்டு. சிலர் முழுச்சோம்பேரிகள் "ஆண்டவன்மஸ்ஜிதில் மட்டுந்தான் இருக்கிறானோ எங்குமே யிருக்கிறான்" என்று யாராவது மஸ்ஜிதுக்குக் கூப்பிடும்போது கூறிவிட்டு அந்த நிமிசமே ஆண்டவனையும் தொழுகையையும் மஸ்ஜிதையும் அடியோடே மறந்து, அழியும் போகத்திற்கு அலைந்து பொருள்தேடுவதே வேலையாயிருக்கிறார்கள். அந்தோ கியாமநாள் வருமே என்ற எண்ணமே இவர்கள் மனதில் உதிப்பதில்லைபோலும். பரிதாபம்! பரிதாபம்!! ஓ! என் அன்புள்ள மாணுக்கர்களே, இப்போது உங்களுடைய நன்மைக்காக நாம் கூறும் விஷயங்களைக் கவனித்து மனதில் வையுங்கள். உலகப் புகழ்சிக்குச் செய்

யும் தொழுகையாலும், அசட்டையாச் செய்யும் தொழு கையாலும் ஒருபயனும் உண்டாகாது. தெய்ந்துபோன செல்லாத காசைக்கொண்டுபோய்க் கடையில் கொடுத் தால் நாம் கேட்கும் பண்டங்களைக் கொடுப்பானா? ஒருக் காலும் கொடான். மேற்கூறிய தொழுகைகளால் நாம் ரசூலுல்லா அவர்களின்மேல் நம்பிக்கை கொண்டவர்க ளாகவும் அவரைப் பின்பற்றி அவர் காட்டிய நேர்வழியில் நடப்பவர்களாகவும் கருதப்படுவோமா? ஒருபோதுமில்லை.

ஆகையால், நீங்கள் உண்மையான அன்போடு ஆண்ட வனுக்குக் கஞ்சி, அவன் கட்டளைகளின்படி நடந்து, முழு இருதயத்தோடும் அவனுக்கு வணக்கஞ்செய்தால்தான் அவனுடைய அருளைப் பெறுவீர்கள். அப்போதுதான் ஆண்டவனுக்கும் அவனுடைய றசூலுக்கும் உகந்தவர்க ளாவீர்கள். இதை யொருபோதும் மரவாதீர்கள்.

மதியினாவில் கட்டப்பட்ட மேற்கூறிய மஸ்ஜிதில், ஒரு மூலை ரசூலவர்களை வழிப்பட்ட அவருடைய தோழர் களில் மிக்க பக்திமான்களான சிலருக்காக விடப்பட் டது. ஏனெனில், அவர்கள் அநித்தியமான இவ்வுலக போகங்களையெல்லாம் வெறுத்து, பிரபஞ்ச சம்மந்தத்தி லிருந்து முழுதும் நீங்கி, சதா ஆண்டவன் வழிப்பாட்டி லேயே யிருக்கும் உத்தமர்கள். இவர்களுக்குப் பசிப் பிணியை நீக்கிக்கொள்ள ஏதேனும் ஆகாரமும், மான த்தை மறைத்துக்கொள்ள வஸ்திரமு மட்டுமேயன்றி வேறொன்றும் வேண்டியதாயில்லை. ஹஸரத்தவர்கள் மேற்கண்ட இரண்டு விஷயங்களைப்பற்றியும் அவர்களுக்கு சற்றும் கவலையில்லாதபடி கவனித்து வந்தார்கள். தினந் தோறும் தமது மனையிலுள்ள ஆகாரத்தைக்கொண்டு சில ரையும், தமது தோழர்களைக்கொண்டு மற்றவர்களையு

மாகப் போஷித்து, ஆண்டவன் வழிபாட்டில் அவர்களு க்கு எவ்வித இடைஞ்சலும் நேராதபடி பாதுகாத்து வந்தார்கள். இந்தப் பெரியோர்களுக்குத்தான் அஸ்ஹா பேஸுப்பா என்று பெயர்.

5-வது ஹஸரத் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா ஹஸறத்தவர்கள் வீட்டிற்கு வந்தது.

ஹஸரத் கதீஜா றலியல்லாஹு அன்ஹா காலஞ் சென்ற பின்பு ஹஸரத்தவர்கள் ஹஸரத் ஆயிஷா றழியல் லாஹு அன்ஹாவை மக்காவில் நிகாஹ் செய்துக் கொண்டதைப்பற்றி முஹம்மதிய மூன்ருவது வாசகத்தில் வாசித்திருக்கிறீர்கள். நிகாஹ் நடந்தகாலத்தில் அந்தம் மாள் சிறுகன்னியா யிருந்தார்கள். ஆகையால், இது வரையில் தன் தந்தைவீட்டிலேயே யிருந்தார்கள். மதினு வில் மஸ்ஜித் கட்டப்பட்டபின் ஹஸரத்தவர்கள் அங்கேயே வாசஞ்செய்யத் தொடங்கியதால் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவை அவர்களின் தாயார் அவ்விடத்திற்கே யழை த்துவந்து விட்டார்கள்.

ஹஸரத்தவர்கள் ஆயிஷாபீவியை நிகாஹ் செய்து கொண்டதர்காக நடத்தவேண்டிய வலீமா தாவத் என்ற விருந்தை நடத்த நேர்ந்தபோது, ஹஸரத்தவர்கள் அதை ஆளுக்கொரு கிண்ணம் பாலேக்கொண்டே நடத்தி விட் டார்கள். அவர்கள் தமது தோழர்களிடம் பொருளேக் கடன்வாங்கி மிக்க ஆடம்பரமாக நடத்த விரும்பியிருந் தால் அப்படியே செய்திருக்கலாம். ஆனுல்' அப்படி இல் லாத பொருளேக் கடன்வாங்கி பெருமையாய் விருந்தை நடத்துவதில் ஒரு புண்ணியமு மில்லேயென்று அவ்வாறு செய்யவில்லே. அவர்களுடைய பொருளும் அவர்களு டைய தோழர்களின் பொருள்களும் எப்போதும் ஆண்

டவனுக்குப் பிரீதியான வழியிலேயே செலவுசெய்யப் பட்டன.

அவர்கள் செய்த செலவையும் நாம் செய்யும் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எது நல்ல மேலான பயனை யளிக்கத்தக்கதென்று நன்குவிளங்கும். கையில் பொருளில்லாதபோது கலியாணம முதலிய விஷயங்களுக்காக வட்டிக்கேனும் கடன்வாங்கி வருவாய்க்கு அதிகமாய்ச் செலவுசெய்யும் ஜனங்களின் நடக்கை மிக்கஆச்சரியமானதே. ஹஸரத்தவர்களின் செய்கையைச் சிந்தித்துப் பாருங்கள். அவ்வாறு வெறும் பாலைக்கொண்டே விருந்து நடத்தியதால் ஜனங்கள் தம்மை யேழையென்று அவமதிப்பார்களென் பதையாவது, அதனுல் அகௌரவமென்பதையாவது அவர் கருதவில்லை. அவர் ஆண்டவனுடைய பிரீதியொன்றைமட்டும் நாட்டத்தில் வைத்தவரேயன்றி, இந்தப் பொய்யுலகின் கௌரவ அகௌரவங்களை யெள்ளளவேனும் ஒரு பொருளாய் மதித்தவரல்ல. அவரை வழிபட்ட நாமோ வாயால்மட்டும் வழிபடுகிறேமேயன்றி, செய்கையில் அவர்களுக்கு மாருய் நடக்கிறேம். அப்படிக்கின்றேல் ஊரார் கேலி செய்வார்களென்றும், நமது கௌரவம் குறைந்துவிடு மென்றும், கருதி ஊரார் சபாஷ் என்று மெய்சிக்கொள்ள வேண்டுமென்ற நாட்டத்தொடு நடந்துகொண்டு, நமக்கு நாமே தீங்கை யுண்டாக்கிக்கொள்ளுகிறேம். இவ்வாறு நாம் அவருக்கு வழிபட்டும் அவருக்குமாருய் நடந்துகொண்டு கியாமநாளையில் அவர் நம்மைக் காப்பாற்றுவார் என்றும் எண்ணிக்கொள்ளுகிறேம்.

ஆண்டவனே! அப்படிப்பட்ட செய்கைகளினின்றும் எங்களைக் காப்பாற்றுவாயாக.

6-வது முஹாஜரீன்களுக்குள் வியாதி பரவியது.

ஹஸரத் அவர்கள் மதிஞவிற்குச் செல்லும்முன்பே கெட்ட காற்றினல் அங்கு விஷபேதி முதலிய வியாதிகள் பரவியிருந்தன, அந்த வியாதியில் முஹாஜரீன்களில் பலர் மிக்க வேதனையடைந்தார்கள். அப்போது ஹஸரத் அவர்கள் ஆண்டவனைச் சிந்தித்து.

"கிருபாகரணகிய ஆண்டவனே! மக்காவைப் போலவே இந்த மதிஞ நகரையும் பரிசுத்தமானதாய்ச் செய்தருளும் இங்குள்ள காற்றையும் ஜலத்தையும் இங்குள்ளவர்கள் தேகாரோக்கியத்திற்கு ஒத்ததாகச் செய்தருளும்'' என்று வேண்டிக்கொண்டார்கள். ஹஸரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் மக்காவில் பிரார்த்தித்தது போலவே ஹஸரத் அவர்களும் மதிஞவில் பிரார்த்தித்தார்கள். ஹஸரத் இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் மக்காவிலுள்ள கஃபாவில் எவ்வாறு தொழுதாரோ அவ்வண்ணமே ஹஸரத் அவர்களும் தொழுதார்கள். அவர்கள் பிரார்த்தித்த வண்ணமாவது:—

"ஓ! என் ஆண்டவனே! எனக்காகவும் என் சந்ததியாருக்கும் இந்த நாட்டைப் பயங்கரமற்றதாகச் செய்யும் எங்களை விக்கிரக ஆராதனையினிறும் காப்பாற்றியருளும். அவர்கள் அனேகர்களைத் துர்வழியில் பிரவேசிக்கச் செய்தார்கள். எவன் என் கொள்கைகளைப் பின் தொடர்ந்தானே அவன் என்னைச் சேர்ந்தவனுவான். எவன் என்கொள்கைகளை நிராகரித்தானே அவன் என்னினின்றும் புறம்பானவனுவான். ஓ! என் இரக்ஷகனே! நான் புல் பூண்டில்லாத இப்பாலைவனம்போன்ற வெட்ட

வெளியில் என் பிச்சளத்தை வைத்திருக்கிறேன். சதா உன் பிரார்த்தனையிலேயே என் வாழ்நாளைகழிக்க விரும்பி இதை யுன் இல்லமாகப் பாவித்தே இவ்வாறு செய்திருக்கிறேன். அவர்களுடைய மனதை யுன் வழியில் திருப்பிக்கொள். உன் கருணையிலளிக்கப்படும் காய்கனி வர்க்கங்களைப் புசித்து அவர்கள் உன்னையே இதை விடாது தியானம் செய்துக்கொண்டிருக்கும்படி செய்ய

இவ்வாறு இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிராத்தனை செய்தாகள். ஆண்டவன் எவ்வாறு அவ்ரது பிராத்தனையை யங்கீகரித்துக் கொண்டாரோ அவ்வாரே ரசூலேகுதா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது பிரார்த்தனையையும் ஆண்டவன் ஏற்றுக் கொண்டான். அவர்கள் எவ்வாறு கோரிக்கொண்டார்களோ அவ்வாறே யளித்தான். அதற்குப்பின் மதினாவில் அப்பேர்க்கொத்த வியாதிகள் உண்டாவதில்லை.

“ஹஸரத்இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், இரஸூலே குதா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் இவர்களுக்குகந்த ஆண்டவனே நம்மையும் நம்மைச் சேர்த்திருப்போரையும் இனி வருவோரையும் விக்கிரகாராதனையினின்றும் காப்பாற்றி அவர்கள் உன்னுடைய தியானத்திலேயே யிருக்கும்படி கடாட்சித்தருளும். அவர்கள் பொய், சூது, மோசம் இவைகளன்றி கஷ்டார்ச்சிதமாய்த் தேடியபொருளைக்கொண்டு சீவிக்கும்படி அருள்செய்யும். மேற்கூறப்பட்ட உம்முடைய நல்லடியார்களின் மார்கத்தையே பின்பற்றி நடக்கும்வண்ணம் கிருபைசெய்யும், இன்னும் இக்காலத்தில் பரவியிருக்கும் எவ்வித துன்பங்களினின்றும் பாதுகாத்தருளும்.”

7-வது பாங்கூறுவதன் ஆரம்பம்.

மதினவில் இஸ்லாமானவர்கள் மிக்க திரளாகவிருந்தார்கள். அவர்கள் ஒருவரிடம் ஊழியம் செய்யாமல் சுயாதீனமாகவே ஜீவித்துக்கொண் டிருந்தவர்களாதலால் தொழும் வேலைகளில் பெருங்கூட்டமாய் வந்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் இன்னவேளைகளில் தான் தொழவேண்டும் என்பதைப்பற்றிய ஏர்பாடுகள் ஒன்றுங்கிடையாது. இதனல் இஸ்லாமானவர்களுக்கு மிக்க கஷ்டம் நேரிட்டதால் அதை நிவர்த்தி செய்துக் கொள்ள ஆலோஜனை செய்தார்கள். அப்போது சிலர் தொழும்வேளையை அறிவிப்பதற்காகக் கொம்பு ஊதலாமென்றார்கள். சிலர் மணியடிக்கலா மென்றார்கள். சிலர் வெளிச்சம் காட்டலாமென்றார்கள். இவ்வாறு அவரவர்கட்குத் தோன்றியபடி பலவாருகத் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். ஆனல் இவற்றில் ஒன்ருவது பொதுவாய் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

கடைசியில் ஆண்டவன் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கனவில்தோன்றி இப்போது நடக்கிறபடி ஐந்துவேளை தொழுகைக்கு முன்னும் பாங்கு சொல்லும்படியாகக் கட்டளையிட்டான். முதல் முதல் மஸ்ஜிதெ நபவியில் ஹஸரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மோதினுக ஏற்பட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் பின்கண்ட விஷயம் கவனிக்கத் தக்கது. அதாவது:—

முன் கூறியது போல் கொம்பூதுதல் மணியடித்தல் வெளிச்சங்காட்டுதல் முதலியவற்ருலும் நாட்டம் அனுகூலமாகும் சில மதங்களில் அவ்வழக்கமே யனுசரிக்கப்

படுகிறது. ஆனால், அல்லாஹுத் தஆலா முஸ்லிமான்வர்களுக்குக் கட்டளையிட்டான் அவற்றிலும் மேலானது. எவ்வாறெனின்:—

முன் கூறப்பட்டவைகளால் வணக்கத்திற்கு அழைக்கிறதென்று விளங்கவில்லை. பாங்கு சொல்லுவதால் வணக்கத்திற்கு அழைக்கப்படுகிறதென்று விளங்குவதோடு, இதில் இன்னும் என்ன தெய்வீகமகிமை யிருக்கிறதென்றால், ஆண்டவனுடைய பெருமை, வல்லமை, ஏகத்வம், பரிசுத்த நிலைமை முதலியவைகளும் ரசூலே கரீம் ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்களுடைய நபித்தன்மையும் மிக்க புகழோடு கூறப்படுகிறது. பாங்கு சொல்வதும் அப்படிச் சொல்வதைப் பக்தியோடு கேட்பதுங்கூட ஆண்டவனுடைய வணக்கமாகும்.

8-வது ஸல்மானே பார்ஸீ இஸ்லாமானது.

ஹஸரத் ஸல்மானே பார்ஸி ரலி..பாரிஸிதேசத்தவர். அவர் அபலக் குதிரைகளைப் பூஜிக்கும் கூட்டத்தைச்சேர்ந்தவரா யிருந்தார். அவர் ஒரு ராகீபி இடம் (கிரகங்களைப் பூசிக்கும் வானசாஸ்த்திரி) மிக்க நேசமுடையவரா யிருந்தார். அவர் அந்த வானசாஸ்திரியின் கொள்கைகளை யதிகமாய் மதித்திருந்தார் அதனால் அவருடைய கூட்டத்தார் அந்த சாஸ்திரியைத் தங்கள் ஊரிலிருந்தும் அப்புறப்படுத்திவிட்டார்கள். அதனாலவர் பைதுல் முகத்திஸ் (ஜெருஸலம்) தேசத்திற்குப் போய்விட்டார். ஹஸரத் ஸல்மானே பார்ஸி..யவர்களுக்கு ராகீம்மேல் அதிக விசுவாசமிருந்ததால் அவரும் தன் வீடுவாசல் யாவற்றையும் விற்றுவிட்டு அவர்கூடவே போய்விட்டார்.

அவ்வாறு சென்றுகொண்டிருக்கையில் அவர் வழி தவறி வானசாஸ்திரியைவிட்டுப் பிரிந்துவிட்டார். அப்போது மதீனுவிலிருந்த கிருஸ்தவர்கள் இஜிப்டுக்கு வந்திருந்தார்கள் அவர்கள் ஸல்மான் ரலி...வை யேமாற்றி மதீனுவிற்கு அழைத்துக்கொண்டுபோய் அடிமையாக்கிக் கொண்டார்கள். அவ்விடத்தில் அவர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களை ஆண்டவனுடைய தூதர் என்று கூறிக்கொள்கிறுர் என்பதைக் கேட்டு அவர்களிடம் சென்றுர். அவர் ரசூலவர்களுடைய போதனைகளைக்கேட்டு அவர்களிடம் நம்பிக்கை வைத்து உடனே இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார்.

அந்த வானஸாஸ்திரி கடைசியில் ஒருநபி அவதரிப்பாரென்றும் அவருடைய அடையாளங்கள் இன்னின்ன விதமாக விருக்குமென்றும் முன்னமே தன்னிடம் கூறியிருப்பதாகவும், தாம்நேரில் ரசூல் அவர்களைக்கண்டபோது யாவும் உண்மையாகவே யிருக்கக்கண்டு தாம் இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிக்கொண்டதாகவும் ஸல்மானே பார்ஸியவர்கள் கூறுகிறுர்கள். ஹஸரத் அவர்கள் ஸல்மானே பார்ஸியை விலைக்கு அடிமைகொண்டிருந்தவனிடமிருந்து அவரை விலைக்குவாங்கி அடிமைத்தனத்தினின்றும் விடுதலை செய்துவிட்டார்கள். இவர் அஸ்ஹாபே ஸுப்பாஎன்ற கூட்டத்தில் சேர்ந்தவர். இன்னும் ஹஸரத் அவர்களுடைய பிரசித்திபெற்ற சஹாபாக்களில் இவரும் ஒருவராகக் கருதப்படுகிறுர். இவர்மேல் சுவர்க்கம் பிரீதியுடையதாக விருக்கிறதென்று, ஹதீதில் வந்திருக்கிறது.

9-வது முஹாஜரீன்களின் சகோதரத்வம்.

வீரத்தன்மையுடைய முஹாஜரீன்கள் தங்கள் நாட்டைவிட்டு மதீனுவிற்குச் சென்றபோது, மக்கா வாசிகள்

செய்த கொடுமையால் தங்கள் சொத்து சுதந்தரம் யாவையும் அங்கேயே விட்டுவிட்டு மிக்க பரிதாபமான நிலைமையில் சென்றூர்கள். ஆகையால் அவர்களில் பெரும்பாலார் வீடுவாசல் சாமான்கள் ஒன்றுமின்றி பரதவித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனல் அன்ஸாரீன்களோ சொந்த வூரிலிருப்பவர்களாதலால் வீடுவாசல் சொத்துமுதலிய சகல சௌகரியங்களும் உடையவர்களாக விருந்தார்கள். அச்சமயத்தில் ஹஸரத் அவர்கள் ஆண்டவன் கட்டளைப்படி மேன்மை தங்கிய இரண்டுகூட்டத்தாரும் ஒருவருக் கொருவர் சகோதரபாவமுற்று வாழும்படி ஏற்பாடுசெய்து விட்டார்கள். இதனல் அவர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய சுற்றத்தார் போலாகிவிட்டார்கள். அன்ஸாரீன்கள் காட்டிய தைரியமும் அன்பும் வேறு எம்மதத்தினராலும் காட்டப்படவில்லை அவர்கள் தங்கள் சொத்து சுதந்தரம்யாவற்றையும் இரண்டு பாகமாகப்பிரித்து ஒருபாகத்தை முஹாஜரீன்களுக்களித்து விட்டார்கள். முஹாஜரீன்கள் உண்மையான மார்க்கத்திற்காக அனுபவித்த கஷ்டங்கள் இவ்வளவென்று அளவிட்டுக்கூறமுடியாது. அவர்கள் தங்கள் சொத்துமுதலிய யாவையும் இழந்தாலும், அடிமுதலிய இம்சைகளை யடைந்தாலும் தங்கள் சுற்றத்தார் சகோதரர்களைப் பிரிந்தாலும் தங்கள் கைப்பற்றிய இஸ்லாம் மார்க்கத்தைமட்டும் விடவில்லை. மனச்சோர்வடையவுமில்லை.

அன்ஸாரீன்கள் தைரியமும், அன்பும் மனஉறுதியுமுடையவர்கள். அவர்கள் இஸ்லாம்மார்க்கத்தில் கொண்ட உறுதிவியக்கத்தக்கது அவர்கள்குறைஷியர். அராபியாவில் குருமார்போல் மதிக்கப்பட்டிருப்பதற்காவது, அவர்கள் விரோதிகளாய்க்கிளம்பி விடுவார்களே! அப்படிக்கிளம்பி

ஞல் அராபியா முழுமையும் அவர்களுக்கு உதவியாக நிற்குமே என்ற ஒரு விஷயத்திற்கும் எள்ளளவும் அஞ்சாமல், இஸ்லாம்மார்க்கத்தின் பொருட்டு தங்கள் சொத்து சுதந்தரம் உடல் ஆவி யாவற்றையும் தத்தம்செய்து தங்கள் இரத்தத்தை நீர்போற்சிந்தி இஸ்லாம்மார்க்கத்தை யுலகில் உறுதியாய் நிலைநாட்டினர்கள்.

இவ்வாறு நம் இஸ்லாம் மார்க்கத்தை நிலைநிறுத்திய முஹாஜரீன்கள்பேரிலும் அன்ஸாரீன்களின்பேரிலும் அல்லாகுத் தஆலாவின் கிருபை மென்மேலுமுண்டாவதாக.

பாருங்கள் முஸ்லிம்களாகிய அவர்களுக்கும் இஸ்லாம் மார்க்கத்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நமக்கும் உள்ள வித்தியாசத்தை நோக்கினல் பகலுக்கும் இருட்டிற்கும். வெண்மைக்கும், கறுமைக்கும், மெய்க்கும் பொய்க்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறதோ அவ்வாறு இருக்கிறது. நான் முஸ்லிமானவன் என்று கூறிக்கொள்ளவே நமக்கு வெட்கமாயிருக்கிறது.

அன்ஸாரீன்கள், முஹாஜரீன்களுக்குத்தங்கள்சொத்து சுதந்திரங்களில் சரிபாதி பங்கிட்டுக்கொடுத்து அவர்களை யாதரித்தார்கள். நாமோ நமது ஆஸ்தியைச் சொந்த சகோதரர்களுக்குள் பாகித்துக்கொள்ளும்போது, ஒருவர்க்கு எள்ளத்தனை குறைந்தால் ஒருவரை யொருவர் கொலைசெய்து கொள்ளுகிறோம். இன்னும் பரிதாபமான விஷயமாவது, நமது குலத்தில் தாய்தந்தையற்றுப் பரிதபிக்கும் அனுதைப்பிள்ளைகளை நாம் கவனிப்பதேயில்லை. அப்படிப்பட்டவர்கள் தங்கள் பிள்ளைகளை யெப்படிப் பாதுகாத்து நல்வழிக்குக் கொண்டுவருவார்கள்? அப்படிக் கொண்டுவந்தாலும், மதபோதனை யடையும்

படியான வழியில் சற்றும் இல்லாதவிடத்தில் விடுவார்கள். அதாவது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய உண்மையையும் பரிசுத்தத் தன்மையையும் அறியாதவர்களும் அவரை அவமதிப்பவர்களும். இகழ்ந்து கூறுபவர்களும் அவருடைய பரிசுத்தமான கட்டளைகளுக்கு நேர்மாறாக நடப்பவர்களுமாகிய கூட்டத்தாரிடம் தங்கள் மக்களை யனுப்புவார்கள். இது மட்டுமல்ல, இன்னும் இவர்களிற் சிலர் பணஆசையால் இஸ்லாம் மார்க்கத்திற்கு முற்றும் மாறாய் நடக்கும் ஸ்திரிகளைத் தங்கள் வீட்டிற்கழைத்து இஸ்லாம் மார்க்கத்தின் பரிசுத்தத்திற்கும் மகிமைக்கும் இகழ்ச்சியாக அவர்கள் கூறும் வார்த்தைகளைத் தாங்கள் காதாரக்கேட்பதோடு இன்னும் தங்கள் சுற்றத்தாரையும் கேட்கும்படிச் செய்கிறார்கள் இதனால் பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கத்தில் எவ்வளவு துர்எண்ணங்களும் துர்நடக்கைகளும் கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவும் அவர்கள் மக்களுக்குக் குழந்தைகளுக்குப் பால் புகட்டுவதுபோல் பிறந்தது முதலே ஊட்டப்பட்டு அவர்கள் தேகத்தோடு வளர்ந்துகொண்டே வருகின்றன.

அந்தோ! நாம் எவ்வளவுநேரம் நம்முடைய குறைகளை நாமே கூறிக்கொண்டிருக்கலாம். கிருபையாளனாகிய அல்லாகுத் தஆலாவே நம்மேல் இரக்கம் வைத்தால் நம்மை அத்தகைய தீயவழிகளிலிருந்தும் விலகும்படிச் செய்வான். ஆதலால், நம்மேல் கிருபைவைத்து நம்மை நேர்வழியில் செலனும்படி அருள்புரிய வேண்டுமாய் அவனுடைய பரிசுத்தமான சந்நிதானத்தில் பிரார்த்தித்துக்கொள்ளுவோமாக:—

"கிருபையாளனுகிய றஹ்மானே! பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கத்திற்கு மாறுன வழியில் நடந்து உன்னுடைய கோபத்திற்கு ஆளாகாவண்ணம் எங்களை நேர்வழிக்குத் திருப்பி இஸ்லாம் மார்க்கத்தில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கையும் பக்தியும் உண்டாக அருள்புரிந்து, எங்கள் முன்னோர்களும் தைரியசாலிகளுமாகிய அன்ஸாரீன்கள் முஹாஜிரீன்களைப்போல் எங்கள் மனதில் இருள் நீங்கி உன்னுடைய ஞானஒளிப் பிரகாசிக்கும்படி கிருபாநோக்கம் வைத்தருள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்."

10-வது வாசஸ்தலத்திலும், பிரயாணத்திலும் தொழவேண்டிய முறைமைகள்.

வாசஸ்தலத்திலும், பிரயாணத்திலும் முதல் முதல் மாலைத் (மக்ரிபு) தொழுகை மூன்று ரகஆத்து தொழவேண்டுமென்றும், மற்ற நான்கு வேளை தொழுகைகளிலும் இரண்டு இரண்டு ரகஆத்து தொழவேண்டுமென்றுமிருந்தது.

பிறகு பிரயாணத்தில் (ஸபரில்) மட்டுமே மேற்கண்டபடி தொழவேண்டுமென்றும் வாசஸ்தலத்தில் காலை (சுபுகு) மாலைத் (மக்ரிபு) தொழுகைகளில் முன்னிருந்தபடியே அதாவது காலையில் இரண்டு ரகஆத்தும், மாலையில் மூன்று ரகஆத்தும் தொழவேண்டுமென்றும், மற்றத் தொழுகைகளிலெல்லாம் இரண்டிரண்டு ரகஆத்துகள் அதிகமாகவும் அதாவது காலையில் இரண்டு ரகஆத்தும், மாலையில் மூன்று ரகஆத்தும் மற்றத் தொழுகைகளிலெல்லாம் நான்கு நான்கு ரகஆத்தும் தொழவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது.

ஹிஜ்ரீ 2-வது வருடம்.

1-வது கிப்லாவை நோக்குதல்.

ஷாம் தேசத்தில் பைதுல்முகத்தஸ் (ஜருஸலம்) ஒரு பிரசித்தி பெற்ற ஸ்தலமா யிருக்கிறது. முன்னிருந்த நபிமார்களைப் போலவே ஹஸரத்தவர்களும் அதை நோக்கியே தொழுதுக்கொண்டிருந்தார்கள். இந்த வருஷம் இனிமேல் கஃபாவை நோக்கித் தொழவேண்டிய தென்று பரிசுத்தமான ஆண்டவனிட மிருந்து ஹஸரத்தவர்களுக்குக் கட்டளைவந்தது அச்சமயம் ஹஸரத்தவர்கள் பகல் இரண்டுமணிக்குத் தொழுதுக்கொண்டிருந்தார்கள். ஆதலால், அவர்களும் அவர்களுடைய அஸ்ஹாபிகளும் உடனே கஃபாவை நோக்கித் தொழ திரும்பிக்கொண்டார்கள். தொழுகை முடிந்தவுடன் ஹஸரத்தவர்கள் கஃபாவை நோக்கித் தொழவேண்டுமென்ற ஆண்டவன் கட்டளையை யாவர்க்கும் போதித்தார்கள். அதுமுதல் இஸ்லாமானவர்கள் கஃபாவை நோக்கித் தொழ ஆரம்பித்தார்கள்.

எனதரிய மாணவர்களே! இந்த சமாசாரத்தை வாசித்து யோசித்துபாருங்கள், ஹஸரத்தவர்கள் தங்கள் எஜமானனுக்கு எப்படி வழிப்பட்டவர்களா யிருந்தார்கள்? கட்டளைவந்த அந்தக்ஷணமே அதன்படி நடந்து கொண்டார்கள். இன்னும் அஸ்ஹாபுகளுடைய உண்மையான நிர்ணயத்தையும் எண்ணத்தையும் நோட்டமிடுங்கள் அவர்களும் ஹஸரத்தவர்களைப் பின்பற்றுவதில் கொஞ்சமும் தாமதிக்கவில்லை தங்களோடு கூடவே பைத்துல் முகத்தசின் திசையைவிட்டு முகத்தைத் திருப்பி கஃபாவின் பக்கம் ஆக்கிக்கொண்டார்கள், இதுவே அவர்களுடைய பூரண

ஈமானுடையவும் ஹஸரத்தவர்களை உண்மையுள்ள ரசூல் என்றும் குறுஆனை அல்லாவுடைய சத்திய வேதமென்றும் அவர்கள் விசுவாசித்ததினுடையவுமான பலனாயிருக்கிறது. இல்லாவிட்டால் நீங்களே யோசித்துப்பாருங்கள் பைத்துல்முகத்தசானது மதீனாவுக்குவடக்கே யிருக்கிறது. மக்காவோ தென்புறமிருக்கிறது. இப்படியிருப்பதில் ஹஸரத்தவர்களும் அஸ்ஹாபுகளான உடன் வாசிகளும் வடதிசையினின்று முகத்தைத்திருப்பித் தென்திசையிலாக்கிக் கொண்டார்கள் அதாவது எந்ததிசையில் முதுகிருந்ததோ அந்தத்திசையில் முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். இதர மார்க்கத்துக்கு எதிரில் இது பெரிய ஓர் மாறுதலாயிருந்தது.

அவர்கள் எதிரிகளின் விரோதச் சொற்களை யெள்ளளவாவது இலக்ஷியம் செய்தவர்களல்ல. ஆனால், அவர்கள் ஆண்டவனுடைய ரசூல். அவர்களின் வழிபாட்டில் அசட்டையாவது, சந்தேகமாவது கொள்ளாதவர்களாய் நம்பிக்கை யுடையவர்களா யிருந்தார்கள். நாமும் அப்படிக்கில்லாமல் ரசூல் அவர்களின் வழிபாட்டில் கொஞ்சமேனும் அவநம்பிக்கையாவது கொள்வோமானால், இம்மையிலும் மறுமையிலும் பயனற்றுப் போவோம். மரணமடைந்தபின் எப்படியும் ஆண்டவன் சந்நிதானத்தில் நிற்கவேண்டும். நாம் இவ்வுலகில் இருக்கும்போது ஆண்டவன் கட்டளைகளை யலட்சியஞ் செய்து அவனுடைய ரசூலினிடம் நம்பிக்கை வைக்காமலும் அவரைப் பின்பற்றி நடவாமலும் இருப்போமானால் பிறகு ஆண்டவன் சந்நிதானத்தில் எப்படி முகங்கொண்டு செல்வது.

“ஆகையால் ஓ பிரியமான மாணாக்கர்களே! நீங்களும் அல்லாகுத் தஆலாவினுடைய கட்டளைகளின்

படி நடப்பதிலும, அவனுடைய ரசூலிடம் முழுநம் பிக்கை வைத்து அவரைப் பின்பற்றி நடப்பதிலும், சற்றேனும் சளையாமல், வீரத்தோடும் மன உறுதியோ டும், சந்தோஷத்தோடும் நடந்துகொள்ளுங்கள். அப் படிச் செய்வீர்களாகில் ஆண்டவன் நம்முன்னோராகிய முஹாஜரீன் அன்ஸாரீன்களுக்கு எவ்வாறு அருள்புரிந் தானே அவ்வாறே யருள்புரிவதோடு உங்களை இருலோ கத்திலும் மேன்மையான நிலமையில் வைப்பான்.

2-வது ஹஸரத் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய திருமணம்.

இச்சமயம் ஹஸரத் பாத்திமாறலியல்லாஹு அன் ஹாவிற்கு வயது சுமார் பதிமூன்று நடக்கிறது ஹஸரத் அபூபக்கர், ஹஸரத் உமர் இருவர்களும் தனித்தனியாய் ஹஸரத் அவர்களிடஞ்சென்று அக்கன்னிகையை தமக்கு விவாகஞ்செய்து தரும்படி வேண்டிக்கொண்டார்கள். ஹஸரத் அவர்கள் இருவரில் எவருக்கும் மறுமொழியளிக் காமல் மௌனமா யிருந்துவிட்டார்கள்.

அதுகாறும் ஹஸரத் அலிறலியல்லாஹு அன்ஹு விற்குத் திருமணமுடியவில்லை அதனால், அவர்களுடைய சுற்றத்தார் அவரை நோக்கி, "உமக்கு இன்னும் மணமுடி யாதிருப்பதால் ஹஸரத் அவர்களிடஞ்சென்று பீபி பாத் திமா றலியல்லாஹு அன்ஹாவை மணமுடித்துக் கொடுக் கும்படி கேளும்" என்று கூறினார்கள். அதற்கு ஹஸரத் அலிறலியல்லாகு அன்கு எனக்கு அவ்வாறுகேட்க வெட்க மாயிருக்கிறதென்றார் அவருடைய சுற்றத்தார் "அப் படியல்ல, நீர் அபூதாலிப் அவர்கள் புத்திரராயிருக்கிறீர். உமது தந்தையின் சகோதரருடைய் புத்திரியை மணம்

புரிய உம்மிலும் நெறுங்கிய சுற்றத்தார் யாரிருக்கிறார்கள்? ஆகையால், நீர் கூச்சப்படாமல் போய் கேளும் என்று அவரைச் சமாதானப் படுத்தினார்கள்.

அதன்மேல் அவர், அவர்கள் கூறியபடி ஹஸரத் அவர்களிடஞ்சென்று வணக்கஞ்செய்துநின்றார் ஹஸரத் அவர்கள் என்ன விசேஷம்? என்று கேட்டபோது அலிறலியல்லாகு அன்கு தமது கருத்தை வெளியிட்டார் அதைக்கேட்டதே ஹஸரத் அவர்கள் உள்ளத்தில் சந்தோஷமடைந்து (மற்ஹபன் வஅஹ்லா) சரி மிக்க நலமாயிற்று என்றார்கள்."

அதற்குள் அல்லாஹு தஆலாஉடைய கட்டளைபடி வஹீயும் வந்தது அச்சமயம் அனஸ்றலியல்லாகு அன்கு அவர்கள் ஹஸரத்திடம் இருந்தார்கள் ஹஸரத் உடனே யவரைநோக்கி அலிறலியல்லாஹு அன்ஹுவிற்கும் பாத்திமா றலியல்லாகு அன்ஹாவிற்கும் திருக்கலியாணஞ் செய்யும்படி ஆண்டவன் கட்டளையிட்டிருக்கிறான். ஆதலால் முஹாஜரீன் அன்ஸாரீன்களை யழைத்துவாருங்களென்று திருவுளம்பற்றினார்கள்.

அவ்வாறே யாவரும் ஒன்றாய் கூடியபின் ஹஸரத் அவர்கள் ஆண்டவனுடைய பரிசுத்தத் தன்மையையும், புகழையும், மகிமையையும்பற்றி ஒரு குத்பா ஓதி தோத்திரஞ் செய்ததோடு, மணம்முடித்துக்கொண்டு இல்லறத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைமைகளைப்பற்றியும் பிரசங்கித்தார்கள்.

அதன்பிறகு சுற்றத்தார் நண்பர்கள் முதலியவர் முன்னும் விதிப்படி திருமணம் (நிக்காஹ்) நிறைவேற்றப்பட்டதில் அலி றலியலலாகு அன்கு மஹர் 400-மிஸ்கால் (1-மிஸ்கால் என்பது சற்றேறக்குறைய 6-அணு பெறும்படியான

ஒரு வெள்ளிநாணயம் 400-மிஸ்கால் சற்றேறக்குறைய 150-ரூபாயாகிறது) மகர் கொடுக்கவேண்டியதென்று ஏற்பாடா யிற்று. பிறகு ஒரு பெரியதட்டில் பேரீச்சம்பழங் கொண்டு வந்து யாவர்க்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இக்காரணத்தால் தான் இப்போதும் கலியாணம் முடிந்ததே பேரிச்சம்பழம் பங்கிடும் ஏற்பாடு நடைபெற் றுக்கொண்டிருக்கிறது.

விவாகம் முடிந்தபின் ஹஸரத் அவர்கள் பாத்திமா றலியல்லாகு அன்ஹாவை நோக்கி, ஒரு பாத்திரத்தில் சுத்தஜலம் கொண்டுவரச்செய்து அதில் ஏதோ ஓதி ஊதிய பின் அச்சலத்தைப் பாத்திமா றலியல்லாகு அன்ஹாவின் சிரசின்மேலும் மார்பு முதுகின்மேலும் தெளித்தார்கள். அதன்பின் ஆண்டவனை நோக்கிப் பின்வருமாறு துஆவிரந் தார்கள்:—

"ஆண்டவனே! பாத்திமாவையும் அவளுடைய சந்த தியாரையும் அஞ்ஞானமென்னும் ஷைதான்வசத்தில் சிக்கா வண்ணம் தண்ணருள்கொண்டு காப்பாற்றி யருளவேண்டு மாய்ப் பிராத்திக்கிறேன்."

அதன் பின் ஹஸரத் அவர்கள் மறுபடி ஜலங்கொண்டு வரும்படி கூற, அது தமக்காகத்தான் கேட்கப்படுகிற தென் றெண்ணிக்கொண்ட அலிறலியல்லாஹு அன்ஹு உடனே சென்று ஜலங்கொண்டுவந்தார். ஹஸரத் அவர் கள் பாத்திமாவுக்குச் செய்ததுபோலவே அலிறலியல் லாஹு அன்ஹுவிற்கும் ஜலம் ஓதித்தெளித்து.

"ஆண்டவன் நீங்களிருவரும் ஒற்றுமையோடும், அன்போடும், க்ஷேமமாய் வாழும்படிக்கும், உங்களுக்குப்

பரிசுத்தமான சந்ததிகளுண்டாகிப் பெருகும்படிக்கும் அருள்புரிவாஞக" என்றுவாழ்த்திஞர்கள்.

ஹஸரத் பாத்தியா றலியல்லாஹு அன்ஹா விற்கும் ஹஸரத் அலிறலியல்லாஹு அன்ஹுவிற்கும் மேற்கண்டபடி சுலபமான பரியம்அளிக்க ஏற்பாடாகி ஒருவருக்கும் வருத்தமாவது கஷ்டமாவதுயின்றி இலேசாகவே திருமண விஷயம் நடந்தேறிவிட்டது. இக்காலத்தில் நாம்செய்யும் கலியாண ஏற்பாடுகளை யதோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாஞல், வானத்திற்கும், பூமிக்குமுள்ளதுபோன்ற தாரதம்மியம் இருக்கக் காணலாம். இச்சம்வதத்தில் ஈஜாப் கபூல் என்ற (அதாவது காஜியின் முன்னும் சாக்ஷிகளின் முன்னும் ஆணும்பெண்ணும் ஒருவரை யொருவர் மணம் புரிந்து கொள்வதாய் ஒப்புக்கொள்வதாகிய ஒரு விஷயத்தில் தவிர, வேறெதிலும் நாம், அவர்கள் நடந்துகொண்ட ஏற்பாட்டின்படி நடப்பதில்லை. பரியம் போட்டது முதல் கலியாணச்சடங்கு முடிகிறவரையில் நமது செயல்கள் யாவும் ஹஸரத் அவர்கள் செய்கைகளுக்கு மாருகவே யிருக்கின்றன.

இக்காலத்தில் நடக்கிற விஷயங்களோ:—கையில் கங்கணங்கட்டல், சிரசில் புஷ்பஞ் சூட்டுதல், கைகால்களில் அழவணம் பூசுதல், பலவர்ண உடைகளையுடுத்தல் வாசனைத் திரவியங்களைப் பூசுதல், ஆகியஇவைகளைச் செய்வதால் பேய் பிசாசு நெருங்குமென்றஞ்சி இடையில் ஒரு கத்தியைச் சொருகிக்கொள்ளுதல், இன்னும் இத்தகைய பல விஷயங்களைச் செய்கிருர்கள். இவையாயும் ஷரீஅத்தென்னும் மார்க்கம் ஏற்றுக்கொள்ளாத செயலாயிருக்கின்றன.

இன்னும நாம் கலியாண காலங்களில்செய்யும் வீண் செலவோ அந்தோ! சொல்லவேண்டியதில்லை. ஆண்டவன் நமக்குத் திரண்ட செல்வத்தை யளித்திருந்தாலும் அதை யெல்லாம் இவ்வாறு வீண்செலவில் அழிக்கவேண்டுமோ? சிலர் தாசிக் கச்சேரிகளிலும், பாணவேடிக்கைகளிலும் வீணாய்ப் பணத்தைச் செலவழிக்கிறார்கள். இச்செய்கைகள் புத்திக்கும் மதக் கொள்கைகளுக்கும் ஒவ்வாதவைகளா யிருப்பதால் நாம் இம்மையிலும் மறுமையிலும் துன்புற நேர்கிறது. வீடு வாசல் ரொக்கம் முதலியவைகளை யடகு வைத்து இவ்விதம் பணத்தை செலவழித்துவிட்டு அவை களைத் தீர்க்கும் பாரத்தைத் புத்திரன் தலைமேல் போட்டு விடுகிறான். பிறகு மதக்கட்டளைக்கு விரோதமாய் நடந்த தற்காக ஆண்டவன் தண்டனைக்குள்ளாகிறான். அந்தோ, பிறகு இத்தகையோர் கதியென்னாகும்மா அல்லாஹுத் தஆலாவே நமக்கு நல்லறிவுதந்து இத்தகைய மாறான வழிகளினின்றும் நம்மைத்திருப்பி நேர்வழிகாட்டிக் காப் பாற்றும்வண்ணம் பிரார்த்தனை செய்கிறோம்.

3-வது இரம்ஸானையும்ஸகாத்கொடுப்பதையும் பற்றிய கட்டளைகள்.

உலகில் தீமைகள் அதிகரித்து, மானிடர் அக்கிரமச் செயல்களில் மிகுந்துவிட்டதால் அவர்களைச் சீர்திருத்தி அவர்களுக்கு நேர்வழிகாட்டுவதற்காகக் கருணைநிறைந்த ஆண்டவன் தன் அன்பரான ஹஸரத் நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைத் தமது தூதராக இவ்வுலகிற் கனுப்பினான். மனிதர்கள் மனஉறுதியும் புத்திதிடனும் குறைந்தவர்களானதால், தன்கட்டளைகளை யெல்லாம் ஏக காலத்தில் அனுப்பினால் மனஉற்சாகம் குறைந்து கஷ்ட

மடைவார்களென்று கருதி, ஆண்டவன் தன் கட்டளைகளை ஒன்றின்பின் ஒன்ருய் அனுப்பினுன். அதனுல், அவர்கள் நாளுக்குநாள் மனஉற்சாகமும் அன்பும் அதிகரித்து அவன் கட்டளைகளை யாவலோடு ஏற்றுக்கொண்டு கஷ்டந்தெரியாமலே யவற்றை நிறைவேற்றுகிருர்கள். முதல்முதல் தொழும்படி கட்டளையிட்டான். தொழுகை ஆன்மாவிற்குள்ள அஞ்ஞானமாகிய பிணிக்கு முக்கியமான ஔடதமாயிருக்கிறது. அதுமனதின் கலவரங்களையொழித்து, அதைப் பரிசுத்தப்படுத்தி, நிம்மதியையும், சந்தோஷத்தையும் அளித்து, ஆண்டவனிடம் நமக்குள்ள அன்பை விர்த்திசெய்து, அவனுடைய அருள் நமக்குக் கிடைக்கச்செய்ய இன்றியமையாத உதவியாயிருக்கிறது.

பிறகு மற்ற கட்டளைகளும் வெளியிடப்பட்டன எவையெனில், வருடத்திற் கொருமுறை இரம்ஸான் மாதத்தில் நோன்பு அனுசரிப்பது. தருமஞ்செய்தல் (சதகாபிதர்) பெருநாட்களில் தொழுகை முதலியன.

4-வது யுத்தக் கட்டளை.

மக்காவிலிருந்து மதீனுவிற்கு வந்தபின் ஹஸரத் அவர்கள் மக்கா வாசிகளின் கொடுமைகளிலும், துன்பங்களிலுமிருந்து விடுபட்டவர்களாய் நிம்மதியோடிருந்தார்கள். ஆனுல், மக்காவில் அநேகம் இஸ்லாமானவர்கள் சிக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் ஏழைகளாயும் பலமற்றவர்களாயும் வயது முதிர்ந்தவர்களாயு மிருந்தார்கள் அங்கிருந்து வெளிதாண்டவாவது ஹஸரத் அவர்கள் சமூகத்திற்குச்சென்று எதிரிகளால் தாங்கள் படும் சொல்லொண்ணுத் துன்பங்களை முறையிட்டுக்கொள்

ளவாவது சக்தியற்றவர்களாயிருந்தார்கள். எதிரிகள் செய்யும் கொடுமைகள் சகிக்கொணுதவைகளா யிருந்தாலும், அவர்கள் மிக்க தைரியத்தோடு தாங்கள் கைக் கொண்ட சத்தியமார்க்கத்திலும், ஹஸரத் நபிநாயகம் அவர்களிடத்திலும் தங்களுக்குள்ள பக்தியிலிருந்தும் பூரண நம்பிக்கையிலிருந்தும் எள்ளளவுகூட நழுவாத வர்களாய் ஒ எங்கள் நாயகனே! இந்த எதிரிகள்செய்யும் கொடுமைகளினின்றும் எங்களைக்கருணையோடு காப்பாற்றி யருளென்று துஆவிரந்துக்கொண்டிருந்தார்கள். சிற்சிலர் மிக்க கஷ்டத்தோடு எப்படியோ மக்காவைவிட்டுக் கிளம்பி மதினுவந்து சேர்ந்துவிட்டார்கள் ஆயினும் எதிரிகள் பலவிதத்தந்திரங்களாலும் பொய்வார்த்தைகளாலும் அவர்களை மறுபடி மக்காவிற்குத் திரும்பிவரும்படிசெய்துகொண்டிருந்தார்கள். திருஷ்டாந்தமாய் அபூ ஜெஹல் என்பவன் இன்னெரு மனிதனை மதீனுவிற்கனுப்பி அயாஷ் இப்னுரபீஉ ரலியல்லாஹு அன்ஹு என்பவரிடம் மிக்க தந்திரமாய் "உங்கள் தாயார் அதிக தேக அசௌக்கியமா யிருக்கிருர்கள். உம்மைக் காண வேண்டுமென்று தணியாத ஆவலுள்ளவர்களா யிருக்கிருர்கள். தங்களைக் காணுமட்டும் தலையில் சீப்பிடுவதில்லையென்று சத்தியம் செய்துக்கொண்டிருக்கிருர்கள்" என்பதாய், அவர் நம்பும்படி கூறச்செய்து அவரை மக்காவிற்கு வரும்படிசெய்தான்.

அவர் மக்காவிற்கு வந்தபிறகு, கேட்போர் மனம் திடுக்கிட்டு உரோமம் சிலிர்த்து நெஞ்சுதுடிக்கும்படியான துன்பங்களை அவருக் குண்டாக்கினுர்கள்.

இவ்வாறு கொடுமைகள் நடப்பதைக்கேட்ட முஹேறப் றலியல்லாகு அன்கு என்பவர்கள் மக்காவைவிட்டு மதினு

விற்குப் போய்விடவெண்ணி, தன் பொருள்களையெல்லாம் சேகரஞ்செய்தார்கள் இதைக்கண்ட எதிரிகள் அவரைச் செல்லவொட்டாது தடுத்து பலவந்தத்தால் அவருடைய சொத்துகள் யாவற்றையும் கைபற்றிக்கொண்டார்கள்.

மக்காவில் எதிரிகளின் மத்தியில் சிக்கிக்கொண்டிருந்த இஸ்லாமானவர்கள் கொஞ்சமேனும் சந்தோஷமாவது, சுகமாவது இல்லாதவர்களாய், பலவிதமான துன்பங்களை யனுபவித்துக்கொண் டிருந்தார்கள். ஆனால் மதீனாவிலுள்ளவர்களோ, எதிரிகளின் அச்சமின்றி நிம்மதியோடு தங்கள் மேன்மையான சத்திய மார்க்கத்தை யெங்கும் பரவச்செய்துகொண் டிருந்தார்கள். தூரத்திலுள்ள அவர்களை மக்காவிலுள்ள எதிரிகள் ஒன்றும் செய்யக்கூடவில்லை. மதீனாவாசிகள் இவ்வாறு தங்கள்கைக்கு எட்டாமல் சுகமாயிருப்பதையும், அவர்கள் இஸ்லாம் மார்க்கம் வரவர அதிகப் பிரகாசமடைந்து விர்த்தியாய் வருவதையும் கண்டு எதிரிகள் மனக்கொதிப்படைந்து இவர்களை யெப்படி யொத்திப்பது என்ற ஒரே ஏக்கங் கொண்டவர்களானார்கள், ஆனால் இவர்கள் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தகுதியான வழி ஒன்றும் தோன்றவில்லை. பொறுத்துப் பொறுத்து பார்த்தும் ஒன்றும் தோன்றாதவர்களாய்க் கடைசியில் சண்டையிட்டேனும் இஸ்லாம் பூண்டே இவ்வுலகிலில்லாமல் அவர்களையும் அவர்கள் மதத்தையும் அடியோடழித்து விடவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

நாம் மேலே கூறியபடி இஸ்லாமானவர்கள் தங்கள் சொத்து சுதந்திரம், முதலியவற்றையும், அரிய சுற்றத்தார்கள் சினேகிதர்கள் முதலிய யாவற்றையும் விட்டு விட்டுத் மிக்ககஷ்டங்களை அனுபவித்துப் பிறந்தவூரை

வீட்டுத் தூரமான விடத்திற் சென்றிருந்தபோதிலும், மக்காவிலுள்ள எதிரிகளுக்குஅவர்மேலுள்ளகுரோதம் சற்றும் குறையவில்லை. அவர்கள் விஷயத்தில் கொண்ட இதக்கமின்மையும், குரூரத்தன்மையும், தீய எண்ணமும் சற்றேனும் குறையாமல் விர்த்தியடைந்துக் கொண்டேயிருந்ததால், எவ்விதத்திலேனும் அவர்களுக்குத் துன்பம் செய்யவும், "உங்களை விடமாட்டோம், இப்படிச்செய்வோம் அப்படிச்செய்வோம்" என்று பயமுறுத்தும் சொற்கள் அவர்கள் செவிகளுக்கு எட்டும்படி செய்யவும் தொடங்கினார்கள்.

இவைகளையெல்லாம் மதீனாவிலுள்ள இஸ்லாமானவர்கள் கேள்விப்பட்டபோதிலும், பொறுமையாகவேயிருந்தார்கள். ஆனால் மனிதன் மனிதனுகுச்செய்யும் தீங்குகளைப்பொறுப்பதற்கும் ஒரு அளவுண்டு அதற்குமேல் எவனும் பொறுமையைவிட்டுத் தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ளவேணும் எதிரியின்மேல் வஞ்சம தீர்த்துக் கொள்ளவேணுமென்று முயலாது செயலற்றிருக்கமாட்டான்.

ஆகையால் மக்காவாசிகளின் துர்ச்செய்கைகள் அதிகரித்து அவர்கள் நமக்குத் தீங்கிழைக்க துசங்கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று மதினாவிலுள்ள இஸ்லாமானவர்கள் அறிந்து கொண்டார்கள் ஆதலால் அவர்களுக்கு மனக்கொதிப்புண்டாய் விட்டது. இனி நாம் எச்சரிக்கை யோடிருந்து எதிரிகளை யடக்கவேண்டும் என்று எண்ணங்கொண்டார்கள்.

ஆனால் அரசர்களுக்கெல்லாம் அரசராகிய ஹஸரத் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் கட்டளையன்றி இவர்கள் ஒன்றும் செய்வதற்கில்லை ஹஸரத் அவர்

கள் எல்லாமறிந்தும், "பொறுமையாயிருங்கள் ஆண்டவன் கட்டளையின்றி யொன்றும் நடவாது ஆண்டவன் கட்டளை யெப்படியோ அப்படியே நாமும் நடப்போம் என்று கட்டளையிட்டதால் அவர்கள் இன்னும் பொருத்துக்கொண்டிருக்கவேண்டியதாயிற்று.

கடைசியில் மக்காவாசிகள் எப்படியும் தங்களை யெதிர்ப்பது நிச்சயம் என்று இஸ்லாமானவர்கள் உணர வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது மக்கவாசிகள் யுத்தத்திற்குச் சர்வாய்த்தமாய் விட்டார்கள் அச்சமயத்தில் துன்பப்படுத்தப்பட்ட இஸ்லாமானவர்கள் ஈவிதக்கமற்ற மக்காவாசிகளோடு போர்புரியும்படி ஆண்டவனுடைய கட்டளை (வஹீ) கிடைத்தது, அதாவது அச்சமயம் கீழ்க்கண்ட வேதவாக்கியம் பிறந்தது:—

"துன்பப்படுத்தப்பட்டவர்கள் யுத்தஞ்செய்யும்படி அனுமதியளிக்கப்பட்டது அவர்கள் ஜெயமடைவதற்கு ஆண்டவன் பொறுப்பாளியாயிருக்கிறான் யாதொரு காரணமுமின்றி தங்கள் சொத்து சுதந்திரம்முதலிய யாவற்றையும்விட்டு மக்காவிலிருந்து அக்ரமமாய்த்துறத்தப்பட்ட இந்த ஜனங்கள் "உங்களைப்பிறப்பித்த ஆண்டவன் எங்களுக்குத் துணையிருக்கிறான்" என்று நம்பினார்கள்."

இக்கட்டளையின்மேல் இஸ்லாமானவர்கள் மக்காவாசிகளுடைய துஷ்டத்தனத்தையும் அகங்காரத்தையும் தடுப்பதற்காக ஆயுதங்களையணிந்து யுத்தம் புரிந்தார்கள். அந்த விஷயங்களைப்பின்னால் ஆங்காங்கு விவரிப்போம்.

நாகரீகமும் அறிவு விளக்கமும் உண்டாயிருக்கும் இக்காலத்திலும் கீழ்க்கண்ட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஒரு இராஜாங்கத்திலுள்ள குடிகள் அவரவர்

களுடைய தொழில்களைச்செய்துகொண்டு நிம்மதியோ டிருக்கிறார்கள். இன்னொரு இராஜாங்கத்தைச் சேந்த குடிகள் அவர்களுக்கு ஏதாவது தீங்குசெய்தால் தீங்கிழைக் கப்பட்ட குடிகளின் அரசன் தீங்குசெய்த குடிகளின் அரசனுக்குச் சங்கதிதெரிவித்து அதற்கு ஈடுசெய்யும்படி கேட்கிறான். அதற்கு அந்த அரசன் ஒப்புக்கொண்டு தீங்குசெய்த தன்குடிகளை விசாரித்து நீதிசெலுத்தாமல் அலட்சியமாயிருந்து விட்டால் உடனே இரண்டு இராஜாங் கங்களுக்கும் யுத்தமுண்டாய் விடுகிறது.

இன்னும் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்வதும் தன்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்ற வேண்டுமென் பதும் மனிதர்களுக்கு மட்டுமல்ல, மிருகஜாதி பிராணி களுக்கும் உள்ள சுபாவகுணமாயிருக்கிறது. ஒரு மிருகம் மற்றொரு மிருகத்திற்கு ஏதேகினும் இடையூறு செய்யும் பட்சத்தில், அப்படிசெய்யப்பட்டமிருகம் எவ்வளவுபல கீனமானதாயினும், தன் எதிரியைத் தாக்கச்சக்தியற்ற தாயினும், எப்படியாவது சமாளித்துக்கொண்டு அதோடு யுத்தம்புரிய ஆயத்தமாய் விடுவதைத்தினந்தோறும் நாம் காண்கிறோம்.

இஸ்லாமானவர்களுக்கு மக்காவாசிகள் எவ்வளவு கெடுதிகள்செய்த போதிலும் அவர்கள் பதிலுக் கொன்றும் செய்யாமல் பொறுமையாகவே ஆண்ட வனை நம்பியிருந்தார்கள். கடைசியில் மக்காவாசிகள் சதா அவர்களுக்கு தீங்கிழைக்கத் தொடங்கியபோதும் தங்கள் சொத்துசுதந்தரம் சுற்றத்தார் சினேகர் முத லிய யாவும்விட்டு மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஓடி விட்டார்களேயன்றி தங்கள் எதிரிகளுக்கு ஒருகெடுதியும் செய்யநினைக்கவில்லை அவர்கள் மதீனாவிற்குச் சென்ற

பிறகாவது, மக்காவாசிகள் சும்மாவிருக்கவில்லை. அங்கும் அவர்களுக்குத் தந்திரமாய்ப் பலவித இடுக்கண்களைச் செய்துகொண்டேயிருந்தார்கள். இஸ்லாமானவர்கள் அப்போதும் பொறுமையாகவே யிருந்தார்கள். அவர்கள் பொறுத்துக்கொண்டிருக்கவிருக்க மக்காவாசிகளின் உபத்திரவம் வரவர விர்த்தியாய்க்கொண்டிருந்தது. கடைசியில் அவர்கள் பொறுமையையும், அவர்கள்மார்க்கம் நாளுக்கு நாள் உலகில் பிரகாசித்து விர்த்தியடைந்து வருவதையும் கண்டு மக்காவாசிகள் மனஞ்சகிக்காது, உலகத்தில் இஸ்லாமானவர்களையும் அவர்கள் மதத்தையும் பூண்டில்லாமல் அடியோடழித்து விடவேண்டுமென்று தீர்மானித்து யுத்த சன்னத்தராய்விட்டார்கள். இஸ்லாமானவர்கள் இனியும் பொறுமையாயிருக்க நியாயமில்லை, அளவுக்கு மீறினல் அமிர்தமும் நஞ்சாம் என்ற பழமொழிப்படி இன்னும் பொறுமைகாட்டுவது நியாயவிரோதமாகவும், ஆபத்தாகவும் முடியுமாதலால், இவர்கள் தங்கள் உயிர்களையும், தங்களைச் சார்ந்தவர்கள் உயிர்களையும் பாதுகாத்துக்கொள்ள ஆயத்தப்படவேண்டியது கடமையாய்விட்டது.

உலக வழக்கமாவது:—

இரண்டு அரசர்களுக்கு யுத்தம் நேர்ந்தபோது முதலாவதாக இருவரும் தன் தன் எதிரியின்நோக்கத்தையும், அவனுடைய சேனையின் அளவையும், நிலைமையையும், தளவாடங்களின் அளவையும் இன்னும் எதிரியின் மற்ற விஷயங்களையும் அறிந்துகொள்ள முயல்வார்கள்.

அவ்வாறே இஸ்லாமானவர்களும் இச்சமயம் தங்கள் எதிரிகளின் விஷயங்களை யறிந்துகொள்ள வேண்டியதாயிற்று அவ்வாறே ஹஸரத்தவர்கள் சிலவேவுகாரர்களை யனுப்பி எதிரிகள் மதினவைத்தாக்குவதற்கு சர்வாயத்த

மாயிருக்கிறார்களென்று உணர்ந்து, தமது படைகளை ஆயத்தப்படுத்தியதோடு, மதீனாவாசிகள் தங்கள் பட்சத்திலிருந்து உதவிபுரிவதாய் அளித்த பிரமாணவாக்குறுதியையும் பெற்றுக்கொண்டார்கள்.

இங்கு ஒருவிஷயத்தைப்பற்றி சற்றுவிவரித்துக் கூறவேண்டியிருக்கிறது. அதாவது யுத்தகாலத்தில், அதிற் சம்பந்தப்பட பலவிஷயங்களையும் நடைபெறச் செய்வதற்காக அந்தரங்கமான பல ஏற்பாடுகளைச் செய்யவேண்டியதிருக்கின்றன. அதற்காக ஒரு இரகசிய ஆலோசனைச் சபை ஏற்படவேண்டியது.

ஆகையால் ஹஸரத் அவர்கள் தமது சினேகிதர்களில் சிலரோடு ஒரு சபைகூடி கீழ்க்கண்ட ஏற்பாடுகளைச் செய்தார்கள்:—

தமது கட்சியில் சேரக்கூடியவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களிடம் சத்தியவாக்குப் பெற்றுகொள்ளுதல். சத்தியமான இஸ்லாம்மார்க்கத்தைப் பரவச்செய்தல், வெளிதேசங்களுக்குப் போதகர்களையனுப்பி இஸ்லாம் மார்க்கத்தைப்போதித்தல், வியாபாரத்தைவிர்த்தி செய்யக் கூட்டங்களை அனுப்புதல், ஹஜ்ஜுக்குச்செல்லும் யாத்திரைவாசிகளுக்கு வேண்டிய சௌகர்யங்களைச்செய்தல், எதிரிகளைச் சின்னபின்னப்படுத்த வேண்டிதற்குத்தக்கஏற்பாடுகளைச்செய்தல், அவர்களோடு போர்புரிய வேண்டியதற்காகச் சமயோசிதப்படி சேனைகளை யனுப்பிக்கொண்டிருத்தல், எதிரிகளின் செயல்களை யப்போதைக்கப்போது அறிந்துவர வேவுகாரரை யேர்ப்படுத்தல் முதலியன.

5-வது 6-வது (ஸரியையே ஸைபுல் பஹர்) யுத்த நடவடிக்கைகள்.

மக்காவாசிகள் இஜிப்ட்தேசத்தோடு வர்த்தகம் செய்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மதீனவிற்கு மேற்கிலுள்ள செங்கடற்கரை யோரமாய் செல்லவேண்டியிருந்தது. இச்சங்கதி ஜனப்ரஸூலேகுதா சல்லல்லாஹு அலைகிவசல்லம் அவர்களுக்குத் தெரியும் அச்சமயம் ஈஜிப்டுக்குச் சென்றிருக்கும் மக்காவாசிகள் திரும்பி வரும்போது, மக்காவிலிருந்து ஒருசேனையை யவர்களுடன் போய்கலந்து கொள்ளச் செய்வதென்றும் ஒன்ருய்ச் சேரும் இக்கூட்டம் மதீனவைத் தாக்குவதென்றும் எதிரிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இதைக்கேட்டதே மதினவாசிகளாகிய இஸ்லாமானவர்கள் மிக்க திகிலடைந்தார்கள். ஹஸரத்அவர்கள் இதைக் கேட்டு இதனுண்மையை யறிந்து வரும்படி தன் சிறிய தந்தையும் மிக்க தைரியசாலியும் சுத்தவீரருமாகிய ஹஸரத் ஹம்ஜாரலியல்லாஹு அன்ஹு அவர்களை 30-குதிரை வீரரோடு கடற்கரையோரத்திற்கு அனுப்பினார்கள்.

அதோடு தன் சிறியதந்தையின் புத்திரராகிய உபைதாபின் ஹாரிஸ்ாரலியல்லாஹு அன்ஹுவை எண்பது குதிரை வீரரோடு மக்காவிலிருந்து மதீனவிற்குவரும் பாதைக்கு அனுப்பிவைத்தார்கள்.

கடற்கரையோரம் சென்ற ஹசரத் ஹம்ஸாரலியல்லாகு அன்கு அவர்கள் ஸைபுல்பஹர் என்ற ஸ்தலத்தை யடைந்த போது எதிரிகளில் அபூஜெஹெல் என்பவன் முந்நூறு குதிரை வீரரோடு சமீபத்தில் இருக்கிருனென்று அறியலானர்கள்.

இஸ்லாமானவர்களுடைய இரத்தத்தைச் சிந்தமிக்க ஆவல் கொண்டிருந்த அந்த அபூஜெஹெல் என்பவன் கொஞ்சம் பேராகிய இஸ்லாமானவர்களைச் சுலபமாயழித்துவிட நமக்கு நல்லசமயம் வாய்ந்ததென்று, மிக்க சந்தோஷத்தோடு அவர்களைத்தாக்க ஆயத்தமானுன். ஆனல் நற்காலமாய் அங்கிருந்த செல்வாக்குடைய அந்நாட்டதிகாரி இருவர்மத்தியிலும் பிரவேசித்து அவர்களைச் சண்டையிடவொட்டாது தடுத்து, இருவரும் அவரவர் நாட்டிற்குச் செல்லும்படிசெய்து விட்டான். ஆகையால் கடற்கரையோரமாய்ச் சென்றவர்கள் மதினவிற்குத்திரும்பிவர வேண்டியதாயிற்று.

மக்காவிற்குச் செல்லும் மார்க்கத்திற்குச் சென்ற ஹசரத் உபைதாரலியல்லாஹு அன்கு ராபிகு என்றமைதானத்தைச் சேர்ந்த போது, அங்கு எதிரிகளில் அபூஜெஹலுடைய புத்திரனுகிய அக்ரிமா என்பவன் இருநூறுகுதிரைப் படையுடன் பாளையமிறங்கியிருக்கக் கண்டார்கள். சண்டை அய்யமின்றி நேரிடும்போலவே தோன்றியது.

ஹம்ஸாரலியல்லாஹு அன்குவும், முன்னே உபைதாரலியல்லாஹு அன்குவும், அக்ரிமாவினுடைய கூட்டத்தைச்சேர்ந்தவர்களாக விருந்தே பிறகு அவர்களைவிட்டு இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிக்கொண்டவர்களாதலால், அக்ரிமா அவர்களைப்பற்றி நன்கறிவான். ஆகையால் நம்மிடம் அதிக வீரர்கள் இருந்தாலும் உபைதாரலியல்லாஹு அன்குவை நாம் ஜெயிப்பது கஷ்டம் என்று அவன் மனதில் அய்யம் உண்டாய்விட்டது.

பிறகு மனதைத்தைரியப்படுத்திக்கொண்டு தாக்குவதென்று தீர்மானித்தான். ஆனல் வேறு இரண்டுவித பயங்கள் அவன் மனதில் உதித்துவிட்டன. எப்படியெனில்

அந்த விடத்திற்குச் சுற்றுப்பக்கங்களிலுள்ள அரபிகள் உபைதாரலியல்லாகு அன்கு அவர்களிடம் அன்புடையவர்கள் ஆகையால் நாம் உபைதாரலியல்லாகு அன்குவை எதிர்த்துச் ஜெயித்து விட்டாலும் இந்த அரபிஜனங்கள் நம்மை யிதைவிட்டுச் செல்லவொட்டாது அழித்துவிடுவார்கள் மேலும் உபைதாரலியல்லாகு அன்குவிற்கு உதவியாய்ப் பின்னுல் பெரிய சைனியம் இருக்கும் இன்றேல் அவன் இவ்வளவு தைரியமாய் முன்வரமாட்டான். இப்போது நாம் தாக்க ஆரம்பித்தால் அவன் தோற்றுவிடநேரும் சமயத்தில் பின்னுல் இருக்கும் சேனையவனுக்கு உதவிவந்துவிடும் அப்போது நமக்கு மோசமே நேரிடும் என்று சிந்தித்துக் கடைசியில் ஏதோ சண்டைக்கு ஆரம்பிப்பவனைப்போல் பாசாங்கு செய்து சில அம்புகளை யெய்து கொண்டே பின்னடைந்துபோய்விட்டான் அதனுல் இஸ்லாமானவர்களும் மதீனுவிற்குத் திரும்பிவிட நேர்ந்தது.

இவ்விரு விஷயங்களால் மக்காவாசிகள் மதினுவைத் தாக்குவதற்கு சர்வாயத்தமாயிருந்தார்களென்று நன்ருய்த்தெரிந்துவிட்டது. இச்சமயம் இஸ்லாமானவர்கள் முன் ஜாக்ரதையோடு எச்சரிக்கையாயிராமல் அசிரத்தையாயிருந்திருந்தால் அந்த இரண்டு எதிரிப்படைகளும் மதினுவைத் தாக்கியிருக்கும். அப்போது இஸ்லாமானவர்களுக்கு எவ்வளவு கெடுதிநேர்ந்திருக்குமென்பதை நாமே சிந்தித்துக் கொள்ளலாம்.

ஆயினும் இஸ்லாமானவர்களுக்குத் தங்களைக்காத்துக் கொள்வதிலேயே யின்னும் நாட்டமாயிருந்ததன்றி, யெதிரிகளைத்தாக்கி யுத்தம்புரியவேண்டுமென்ற நாட்டமில்லையென்று இவ்விஷயங்களாலேயே விளங்குகிறது. அப்படி

யுத்தம்புரிய நாடியிருந்தால் மேற்கண்டவாறு சிறு சிறு படைகளை யேவியிருக்கமாட்டார்கள்.

7-வது தற்காப்பு ஏற்பாடுகளும், நற்போதனைகளும்.

ஹஸரத் அவர்களுக்கு மக்காவாசிகளின் எண்ணங்கள் நன்ருய்த் தெரியுமாதலால் இது வரையில் இஸ்லாமானவர்களுக்கு ஒன்றும் சேதம்நேரிடாவிடினும் எதிரிகள் சமயம் பார்த்துத் தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வார்கள் என்று உணர்ந்து அதற்குத்தக்க பாதுகாப்புகளைச்செய்தார்கள். அதாவதுமதிஞவிலுள்ளயூதர்கள், மக்காவாசிகள் சண்டைக்குவரின் அவர்களோடு சேர்ந்துகொள்ளாமலும் அவர்களுக்கு எவ்விதஉதவியும் செய்யாமலும் இருக்கும் வண்ணம் யூதர்களிடம் வாக்குத்தத்தம் பெற்றுக் கொண்டார்கள். அதுவுமன்றி மதீனுவிற்குச் சுற்றுப்பக்கங்களிலுள்ள ஸ்தலங்களுக்குச் சென்று இரண்டிடங்களிலுள்ள ஜனங்களிடம் மக்காவாசிகள் வரின் அவர்களோடு கலந்து கொள்ளாமலும் எவ்வித உதவியும் செய்யாமலும் விலகிநிற்கும்படி வாக்குதத்தம் பெற்றுக் கொண்டார்கள் பிறகு சிலவிடங்களிலுள்ள ஜனங்களுக்கு பிரசங்க வாயிலாய்நல்லுபதேசம் செய்துவிட்டு மதீனுவிற்கு திரும்பினுர்கள்.

8-வது பதருக்கு முதல்முதல் சென்றது.

குருஸ்பின்ஜாபிர்கஹ்ரி என்ற ஒருவன் மதீனுவில் ஒட்டகங்கள் மேய்ந்து கொண்டிருந்த விடத்திற்கு வந்து மதீனு வாசிகளின் ஒட்டகங்களை யோட்டிக்கொண்டுபோய் விட்டான். ஹஸரத் அவர்கள் இவ்விஷயத்தைக் கேள்விப்

பட்டதே யவனைப் பின்தொடர்ந்து புறப்பட்டார்கள். மக்காவிற்கும் மதீனாவிற்குமிடையில் பதர்என்ற ஒருஸ்தல மூண்டு ஹஸரத் அந்த ஸ்தலத்தை யடைந்தபோது ஒட்டகங்களை யோட்டிக்கொண்டு போன மனிதன் நெடுந்தூரம் சென்றிருப்பானென்று தெரிந்தபடியால் ஹஸரத் அவர்கள் மதீனாவிற்குத் திரும்பிவிட்டார்கள்.

9-ம் 10-ம். ஸரிய்யே நக்லா.

மக்காவாசிகள் இஜிப்டிலிருந்து திரும்பிவரும் போது ஏதாவது குழப்பம் நடக்கும் என்ற நிச்சயத்தால் அவர்களுடைய நோக்கங்களையும் நடவடிக்கைகளையும் இஸ்லாமானவர்கள் மிக்க எச்சரிக்கையோடு கவனித்துக் கொண்டிருக்கவேண்டியது அவசியமாயிருந்தது.

இதற்காக ஹஸரத் அவர்கள் ஸஅத்பின் அபீவக்காஸ் அவர்களோடு 80-பேரைக்கூட்டி உளவறியும்படி யனுப்பினார்கள். இவர்கள் மக்காவிற்கு வடக்கு 82-மைல் தூரத்திலுள்ள ஹஜ்பாவென்ற விடத்திற்கருகிலிருக்கும் ஒருமைதானம்வரையில் சென்று, அதுவரையில் எதிரிகளின் நடமாட்டத்தைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் கிடைக்காத்ததால் மதீனாவிற்கே திரும்பிவந்து விட்டார்கள்.

அதற்குப்பிறகு ஹஸரத் அவர்கள், தன் அத்தை குமாரனாகிய அப்துல்லா பின் ஜஹஷ் என்பவரோடு பத்து பனிரெண்டுபேரைக்கூட்டி அவரிடம் சீல்செய்த ஒரு கடிதத்தைக்கொடுத்து "நீயுன் ஆட்களோடு மக்காவை நோக்கிச்செல் மூன்றுநாட்கள்வரையில் இக்கடிதத்தைப் பறிக்காதே. அதன்பின் பிறித்துப்பார்த்து இதில் என்ன கட்டளைகளிருக்கின்றனவோ! அவற்றின்படிநடந்துக்கொள் என்றார்கள். அவர் அவ்வாறே மூன்றுநாட்களுக்குப்பின்

அக்கடிதத்தைப் பிரித்துப்பார்த்தபோது, அதில் பின் வரும் கட்டளைகளிருந்தன அதாவது:—

"நக்லாவரையில் செல்லுங்கள். அங்குசென்றபின் எதிரிகளின் நடவடிக்கைகளை உளவறிந்து அவர்நோக்கங்களை நமக்குத்தெரிவியுங்கள்."

இக்கட்டளைகளின்படி அவர்கள் நக்லாவிற்குச்சென்றுதங்கினார்கள். இரண்டுநாட்கள் கழிந்தபின், தாயத் என்ற ஸ்தலத்திற்கு வர்த்தகவிஷயமாய்ச் சென்றிருந்து திரும்பிவரும் மக்காவாசிகளின் ஓர்கூட்டத்தார் நக்லாவில் தங்கினார்கள். இச்சந்தர்ப்பத்தில் எதிரிகளைத் தாக்கலாமென்றும் தாக்கக்கூடாதென்றும் அப்துல்லா பின்ஹஜஷ் அவர்களுக்குக் கட்டளையில்லை. சமயம் அனுகூலமானதாயிருக்கும் பக்ஷத்தில் தாக்கு அல்லது தாக்கவேண்டாமென்று அக்கட்டளையில் குறிப்பாய்க்கூட கூறப்படவில்லை ஆனால் மக்காவாசிகள் செய்த சொல்ல முடியாத கொடுமைகளைப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்கும் இஸ்லாமானவர்கள், அச்சமயம் மக்காவாசிகளைத்தாக்கி என்ன கொடுமையாய் நடத்தியிருந்தபோதிலும் ஒருவரேனும் அதைத் தகாதகாரியமாகவாவது குற்றமாகவாவது கருதவே மாட்டார்கள். இந்த அபிப்பிராயத்தைக் கொண்டே இஸ்லாமானவர்கள் அந்த மக்காவாசிகளைத் தாக்கி அவர்களில் ஒருவனைக்கொன்றுமற்றபேர்களைச்சிறையாக்கிக்கொண்டு அவர்களின் சொத்து முழுமையும் கைப்பற்றிக்கொண்டு மதீனாவிற்குத் திரும்பினார்கள்.

இச்சங்கதியை யறிந்த ஹஸரத் அவர்களுக்கு இந்த நடக்கை யெள்ளளவேனும் மனதிற்கு ஒப்பவில்லை. ஆகையால் அப்துல்லா பின்ஹஜஷையும் அவர் ஆட்களையும் மிகவும் கடிந்து கொண்டதோடு, சிறைகளை யவரவர்கள்

சாமான்களோடுவிடுதலைசெய்துவிட்டதுமன்றி அவர்களில் ஒருவன் கொல்லப்பட்டதற்காக தங்கள் ஆட்களில் ஒருவனை ஈடாக அவர்களிடம் ஒப்பித்து விட்டார்கள்.

தமது மதத்திற்கு விரோதிகளாகிய பகையாளிகள் செய்திருக்கும் கொடுமைகளுக்குத்தாம் எவ்வளவு வஞ்சகம் தீர்த்துக்கொள்ளவும் நியாயமிருக்கும்போது ஹஸரத் அவர்கள் இம்மாதிரி நடந்து கொண்டிருந்தால், அன்னிய மதஸ்தரை இம்சை செய்யவும், கொலை செய்யவும், சண்டை தொடங்கவும் இஸ்லாம்மார்க்கம் இடந்தருகிறதென்ற வதந்தியில் எள்ளளவாவது உண்மையுண்டென்று யார்த்தான் கருதக்கூடும். இதற்கு மாறாக இந்த அத்தாட்சியாலும் இன்னும் இத்தகைய பல அத்தாக்ஷிகளாலும் மேல் கண்ட வதந்தி அடியோடு பொய்யென்று ஐயமற விளங்குகிறது.

11-வது பத்ருவில்நடந்த பெரியசண்டை.

ஹஸரத் அவர்களுடைய மேற்கண்ட நடக்கை எவ்வளவோ நீதியும் கருணையுமான தென்று மக்காவாசிகளின் புத்தியிற்பட்டிருந்தால் அவர்கள் உடனே அவரிடம் நட்பு பராட்டிக்கொண்டிருப்பார்கள். அல்லது அது முதல் இஸ்லாமானவர்கள் மேல் கொண்டிருந்த பகைமையை மறந்துவிட்டு அவர்களுக்குத் தீங்குசெய்வதினின்றும் விலகியிருப்பார்கள். ஆனல் அவர்களோ வஞ்சகமும் கன்னெஞ்சமும், துவேஷமும், கொடுமையுமே நிறைந்த மனமுடையவர்களாயிருந்ததால், துரிதமாகவே மிக்க உக்கிரத்தோடு இஸ்லாமானவர்கள்மேல் யுத்தம்தொடுக்கத் தயாராய் விட்டார்கள்.

இச்சமயத்தில் இஜிப்டுக்குச் சென்றிருந்த மக்காவாசிகளில் ஒருவனுன அபூஸுபியான்பின்ஹரப் யென்பவன்

நாற்பது பேருள்ள தன் கூட்டத்தாரோடும் திரளான வியாபாரச்சரக்குகளோடும் மக்காவிற்குத் திரும்பிவருகிறுன் என்ற சங்கதி மக்காவாசிகளுக்கு எட்டியது அவர்கள் முன்பு தாய்ப்பிலிருந்து வந்த தங்கள் கூட்டத்தை நக்லாவில் இஸ்லாமியர் சிறைபிடித்துக் கொண்டு போனது போல், இப்போது இஜிப்டிலிருந்து வருகிறவர்களேயும் பிடித்துக் கொள்வார்களென் றஞ்சிவிட்டார்கள். ஆகையால் ஒரு கூட்டத்தார் மக்காவிலிருந்து புறப்பட்டு வழியிலிருந்த ஜனங்களில் அநேகர்களேத் தூண்டி எங்கும் குழப்பமுண்டாக்கிப் பெருங்கூட்டமாய் ஆயுதங்களோடு வெளிப்பட்டு, வெளிக்கு இஜிப்டிலிருந்து வருபவர்க்கு உதவியாயிருக்கச் செல்வதாய்க்காட்டி, உள்ளுக்குள் மதீனுவைத் தாக்கவெண்ணி அபூஸுபியான்பின்ஹரப் என்பவன் கூட்டத்தோடுபோய் சேர்ந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் இரத்தப்பிரியரான ஆயிரம் சுத்த வீரர்களிருந்தார்கள் இவர்களில் 100-பேர் குதிரைவீரர்கள் இவையன்றி தளவாடம் முதலியவற்றைச் சுமந்து செல்ல 700-ஒட்டகங்கள் இவர்கள் மதீனுவைத் தாக்க வரும் சங்கதி மதீனுவாசிகளுக்குத் தெரிந்தது. அதன் மேல் ஹஸரத் அவர்கள் எதிரிகள் மதீனுவைத் தாக்குவதைத் தடுக்க நகரைவிட்டுப் புறப்பட்டார்கள். அவரோடு 313 முன்னூற்றிப் பதின்மூன்று வீரர்கள்மட்டுமே சென்றுர்கள். இவர்களிடம் இருவருக்குமட்டுமே குதிரைகள் இருந்தன. மற்றபேர் மூவர் நால்வர் ஒவ்வொரு ஒட்டகத்தின் மேல் ஏறிச்சென்றுர்கள். ஹஸரத் அவர்களோடு, 'அலிரலியல்லாஹு அன்குவும். ஹஸரத் ஸைத்பின்ஹாரிஸ் அவர்களும் ஆக மூவரும் ஒரு ஒட்டகத்தின் மேல் மாறி மாறி ஏறிச்சென்றுர்கள்.

மாணவர்களே இஸ்லாம் சகோதரர்களாகிய கண்வான்களே! இச்சந்தர்ப்பத்தில் ஹஸரத் அவர்களுடைய நடக்கையைச் சற்று ஊன்றிக்கவனியுங்கள். ஆண்டவனுக்கு இரண்டாவதாய் உலகில் யாவர்க்கும் தலைமைவகித்த பதவியில் அவர்களிருந்தும் தமதுவாழ்நாளைச் சற்றேனும் டம்பம், அதிகாரம், பெருமையொன்றுமின்றி சாமானியமனிதனைப்போலவே அவர்கள் கழித்தது கவனிக்கத்தக்கது. உலகோர் தம்மைக் கௌரவப்படுத்தவேண்டுமென்று அவர்கள் ஒருபோதும் கருதியதில்லை தம்மோடுகூட இருப்பவர்கள் எப்படி ஒருஒட்டகத்தின்மேல் மூவர் நால்வராய் மாறிமாறி யேறிச்சென்றார்களோ அப்படியே தமது ஒட்டகத்தின்மேலும் தம்மோடு இருவரை யேற்றிக்கொண்டார்கள்.

எதிரிகளின் கூட்டத்தை நோக்க ஹஸரத்தவர்களின் கூட்டத்தில் நாலில் ஒரு பாகத்திற்கும் குறைவான ஆட்களேயிருந்தார்கள். இவர்கள் பத்ருவைச்சமீபித்தபோது மக்காவாசிகளும் அருகிலேயே யிருக்கிறார்களென்று தெரிந்தது. அப்போது ஹஸரத் அவர்கள் தமது தோழர்களைச் சபைகூட்டி ஆலோசனை செய்தார்கள். அச்சமயம் அவரவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டதில், சிலர் "குரேய்ஷிகூட்டத்தார் செல்வம பொருந்திய கௌரவமான கூட்ட்த்தார் அவர்கள் இதுகாறும் ஒருவரால் தோற்கடிக்கப்பட்டவர்களுமல்ல, அவமானமடைந்தவர்களுமல்ல, அவர்களோடு நாம் யுத்தஞ்செய்யத்தொடங்கினல் மிக்க கஷ்டங்கள் சம்பவிக்கும்" என்றார்கள் அப்போது மிக்தாத் ரலியல்லாஹு அன்கு ஹஸரத் அவர்களை நோக்கி,

"ஒ! அல்லாவுடைய ரசூலே, பனி இஸ்ராயில்கூட்டத்தார் ஹஸரத்மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்களுக்கு

முதலில் வாக்குத்தத்தமளித்து பிறகு நீரும் உமதுகடவுளும் உமது எதிரிகளோடு சண்டைசெய்யுங்கள் என்று கூறி விட்டார்களே, அப்படிப் பட்டவர்களல்ல நாங்கள் கொடுத்த வாக்குத்தத்தத்தினின்றும் ஒருபோதும் தவறமாட்டோம் தாங்கள் முன்னேறுங்கள். இன்னும் எவ்வளவு தூரம் செல்வதாயினும் நாங்கள் தங்கள் கூடவர ஆயுத்தமாயிருக்கிறோம். தங்கள் கூடவரும்போது எங்களுக்கு எப்படிப்பட்ட கஷ்டங்களும் ஆபத்துகளும் நேரிடினும் நாங்கள் அவைகளைப் பொருட் படுத்தமாட்டோம். ஒருபோதும் பின்னடையமாட்டோம்.'' என்றார்.

இம்மொழிகளைக் கேட்ட நபிநாயகம் அவர்கள் மிக்க சந்தோஷமடைந்து அவருக்காக ஆண்டவனைப்பிரார்த்தித்தார்கள்.

இரம்ஸான்மாதம் 17-ம் தேதி வெள்ளிக்கிழமை ஹஸரத்தவர்களும் அவர்கள் கூட்டத்தாரும் பத்ரில் பிரவேசித்து பாளையமிறங்கினர்கள். ஹஸரத்தவர்கள் உடனே எதிரிகளின் நிலைமையையறிந்து வருவதற்காகத்தக்க வேவுகாரர்களை யனுப்பினர்கள். அவர்கள்சென்று எதிரிகளின் வேவுகாரர் சிலரைப்பிடித்து வந்தார்கள். அந்த வேவுகாரர் மூலமாய் எதிரிகளின் அளவும் அவர்களின் பிரதான தளக்கத்தர்களுடைய பெயர்கள், அவர்கள் தங்கியிருக்கும் இடங்கள் முதலியயாவும் தெரியவந்தன.

அதன்மேல் ஹஸரத்தவர்கள் நிலையாய் எங்கு தங்கலாம் என்பதைப்பற்றி தமது நண்பர்களிடம் ஆலோசனை செய்தபோது, அபுல்ஹுபாப் அவர்கள் ஹஸ்ரத்தை நோக்கி

"யாரஸூலெல்லா! நாம் இப்போதிருக்குமிடம் ஆண்டவன் கட்டளையிட்ட விடமாயின் இங்கிருப்பதில்பயமில்லை

அப்படியில்லாவிட்டால் நாம் இங்கிருப்பது தகுதியல்ல ஏனெனில் யுத்தம் ஆரம்பமாய்விட்டால் இங்கு குடிக்கச் சலம்கூட கிடைக்காது. கிணறு குட்டைகள் ஏரிகள் இருக்குமிடம் எனக்குத்தெரியும் அவைகட்குச் சமீபத்தில்போய் இறங்கினல் யுத்தம் தொடங்கிவிட்டாலும் நமக்கு அசௌகரியங்கள் நேரிடா, ஆகாரம் கிடைக்காவிட்டாலும் நீரைக் குடித்துக் கொண்டாவது யுத்தம் செய்யலாம்'' என்ருர். அச்சமயம் ஆண்டவனருளால் அபுல்ஹுபாப் கூறியபடி நடப்பதே தகுதியென்று வஹியுமிரங்கியது.

அதேப்படியவர்கள் கிணறு குட்டைகள் இருக்குமிடங்களில் சென்று பாளையமிறங்கினர்கள். ஆண்டவனருளால் அன்று மழைபெய்தது. அதனுல் இவர்களுக்கு மிக்க அனுகூலம் முண்டாயிற்று ஏனெனில் பூமி கெட்டிப்பட்டு இவர்களுடைய போக்குவரத்திற்கு மிக்க சுலபமாய்விட்டது. இதேமழை யெதிரிகளுக்கு மிக்க கெடுதியாய்விட்டது. ஏனெனில் அவர்கள் தங்கியிருந்தவிடம் மணப்பாங்கானதல்ல களிமண்பூமியானபடியால் மிக்க சேருகி நடந்து செல்வதற்கு கஷ்டமாய்விட்டது.

ஹசரத்தவர்கள் பிறகு தமது தோழர்களை யழைத்துக்கொண்டு சுற்றுப்பக்கங்களிலுள்ள இடங்களைப்பார்வையிட்டபோது, குரைஷியராகிய எதிரிகளில் இன்னின்னவர்கள் இன்னின்னவிடத்தில் கொல்லப்பட்டு மடிவார்கள் என்று கூறினர்கள். யுத்தம் முடிந்தபிறகு அவர்கள் அவ்வாறே அந்தந்தவிடங்களில் மடிந்திருக்கக் காணப்பட்டார்கள்.

சண்டை சமாசாரத்தைக் கூறத்தொடங்குமுன் ஒரு விஷயத்தைப்பற்றி கூறவேண்டியது அவசியம். அதாவ:—து, இஜிப்படுக்கு வர்த்தகம் செய்யச்சென்றிருந்த மக்

காவாசிகளின் கூட்டம் அங்கிருந்து திரும்பி மக்காசேர்ந் தார்கள். அவர்கள் தாங்களெல்லாம் மடிவதாயினும் சரி இஸ்லாமானவர்களை யடியோடு கருவறுத்துவிடவேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்தார்கள். அவர்கள் வழியில் ஒரு இடுக்கணுமின்றி க்ஷேமமாய் மக்காசேர்ந்தார்கள். இஸ்லாமானவர்கள் அவர்களை யேரெடுத்துப் பார்க்கவேயி ல்லை. ஏனெனில் பிரயாணிகளுக்கு ஒருகெடுதியும் செய்யலா காதென்பது அவர்கள் எண்ணம், அவ்வாறு க்ஷேமமாய் மக்காசேர்ந்த அக்கூட்டத்தின் தலைவராகிய ஸர்த்தா அபூ ஸுபியான் இஸ்லாமானவர்கள் எங்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. ஆகையால் நீங்கள் அவர்களோடு சண்டை செய்யாமல் திரும்பிவந்து விடுங்கள்" என்று யுத்தத்திற் குச்சென்றிருந்த மக்காவாசிகளுக்குக் கடிதம் எழுதினான்.

ஆனால் யுத்தத்திற்குச் சென்றிருந்த சேனாதிபதியா கிய அபூஜகல் என்பவன் இஸ்லாமானவர்கள் மேல் எங் கள் வீரத்தைக்காட்டாமல் திரும்பமாட்டோம்என்று பதி லளித்துவிட்டான். மக்காவாசிகள் சமீபத்தில் வந்துவிட் டசங்கதி இஸ்லாமானவர்கள் அறிந்து கொண்டார்கள் மக்காவாசிகளில் பெரும்பாலருக்கு இஸ்லாமானவர்கள் விஷயத்தில் அச்சமே யாகையால் சண்டை செய்யாமல் திரும்பிவிடவே பிரியமுடையவர்களாகவே யிருந்தார்கள் ஆனால் அபூஜகல் அவர்களுக்கு ரோஷமூட்டி பயமுறுத்தி யுத்தம்செய்ய ஆயத்தப்படுத்தினான்.

12-யுத்த ஆரம்பம்.

கடைசியில் இருகட்சியாரும் தங்கள் தங்கள் சேனைக ளைப் பிரித்து அணியணிகளாய்வகுத்து யுத்தத்திற்கு ஆய த்தமாய் நின்றார்கள்.

ஆரம்பத்தில் மக்காவாசிகளின் கூட்டத்தைச்சேர்ந்த உத்துபா தன் மகனுகிய வலியைக்கூட்டிக்கொண்டு முன் அணியில் சென்று தங்கள் குதிரைகளைத் தட்டிக்கொடுத்து தங்கள் பெருமையையும் வீரத்தன்மையையும் காட்டுபவர்கள்போல கர்ச்சித்து அட்டகாசம் செய்துக்கொண்டு உலவினர்கள்.

அதைக்கண்ட ஹஸரத் ஆண்டவனைக்கருதி "ஓ எனது ஆண்டவனே உனது பரிசுத்தமான வேதத்தை யுலகத்தார்க்குப்போதிக்கும்படி யென்னை யுனது தூதனுக அனுப்பினுய் இஸ்லாம்மார்க்கத்திற்கு விரோதமாய் நடப்பவர்களோடுபோர்புரியும்படி கட்டளையுமிட்டாய் எனக்குச் ஜெயமளிப்பதாய் அருள்செய்தாய். இந்தக் குரைஷியர்கள் உன்னுடைய வேதத்தையும், நான் உன்னுடைய ரசூல் என்பதையும் நம்பமாட்டோமென்று மறுதலிக்கிறுர்கள். இவர்கள் மிக்க அகங்காரத்திலும் பெருமையிலும் ஆழ்ந்து இஸ்லாமானவர்களை யுத்தத்திற்கழைக்கிறுர். உன்னையும் உனது பரிசுத்த வேதத்தையும் நம்பி உனதுகட்டளைப்படி நடப்பவர்களுக்குத் நீயே ஜெயமளிக்கவேண்டும். உன்னையும் உனது வேதத்தையும் நிந்திக்கும் எதிரிகளுக்கு அபஜெயத்தையும் அவமானத்தையும் அளித்தருளவேண்டுமென்று பிரார்த்தனை செய்தார்கள்.

இதற்கிடையில் உத்பா என்பவன் தன் குதிரையைத் தட்டி இஸ்லாமானவர்களின் எதிரில் சென்று நின்று "என்னுேடு யுத்தம்புரியத்தீரமுடைய சூரன் வெளிப்பட்டு வரலாம்" என்று அவர்களைப் போருக்கழைத்தான். ஆனுல் அவனுேடு யுத்தம் செய்ய ஒருவரும் புறப்படவில்லை ஏனெனில் தாம் அனுமதியளிக்குமவரையில் ஒருவரும் யுத்தம்செய்யத் தொடங்கலாகாது என்று நாயகம் றசூலவர்கள் முன்னமே கட்டளையிட்டிருந்தார்கள்.

அதன்பிறகு ஹஸரத்அவர்கள் யுத்தம்செய்யக்கட்டளையிட்டார்கள். இஸ்லாமானவர்களோ, எப்போது இக்கட்டளை பிறக்குமோவென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள் ஆகையால் இக்கட்டளை பிறந்தவுடனே, அன்ஸாரீன்கள் முன் அணியிற்பாய்ந்து செல்லத்தொடங்கினார்கள். ஹஸரத்அவர்கள் முஹாஜிரீன்கள் முதலில் சண்டைக்குப்பிரவேசிக்கவேண்டுமென்றும், பிறகு இரண்டு கூட்டத்தார்களும் கலந்து யுத்தம்செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள்.

சற்று நேரத்திற்குள் யுத்தம்மிக்க மும்முரமாய் நடக்கத் தொடங்கியது. அப்போது குரைஷியராகிய எதிரிகளின்கூட்டத்தைச்சேர்ந்த அஸ்வத்மக்ரூமி என்பவன் முன்வந்து வீராவேசத்தோடு இஸ்லாமானவர்களை நோக்கி "நீங்கள் குடிக்கப்பதனம் செய்திருக்கும் ஜலத்தில் என்தாகவிடாயைத்தீர்த்துக்கொண்டு மற்றஜலம் உங்களுக்குப்பயன்படாதபடி கெடுத்துவிடாமல் நான் யுத்தகளத்தைவிட்டுத் திரும்புவதில்லை" என்று பிரதிக்கினை செய்துக்கொண்டிருக்கிறேன். என் பிராணன் போவதாயினும் என் பிரதிக்கினையை நிறைவேற்றியே தீருவேன்" என்று ஆரவாரம் செய்துக்கொண்டே இஸ்லாமானவர்களையெதிர்த்து, அவர்கள் பாதுகாத்து வந்த குளத்தருகு நெருங்கிவிட்டான்.

இதைக்கண்டதே, ஹஸரத்அமீர் ஹம்ஸாரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது வாளையோங்கிக்கொண்டுபோய் அவனை யெதிர்த்துத்தாக்கி ஒரேவீச்சினால் அவன் கால்களிலொன்றைத் துண்டித்துவிட்டார்கள். அஸ்வத்மக்ரூமி இனி தனக்கு முடிவுநேர்வது நிச்சயமென்றுணர்ந்து உடனேயயர்ந்து குளத்தில் குதித்து கொஞ்சஜலமருந்திப் பழுதுபடாதிருந்த ஒத்தைக்காலால் குளத்தின் அடியிலிருந்த சேற்

ன்றக்கிளரி ஜலத்தைக்கெடுக்க முயன்றான். ஆனால் இவனை விடாது பின்பற்றிச்சென்ற ஹஸரத் அமீர் ஹம்ஸாரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அக்குளத்திலேயே அவன் சிரசைத்துண்டித்து அவனை விண்ணுலகிற் குடியேற்றினார்கள்.

இவ்வாறு நன்றாய்க் கைகலந்து சண்டைநடக்கும் தருணத்தில், ஹஸரத் நபிநாயகம் அவர்கள் ஆண்டவனை உள்ளத்தில் துதித்து தரையிலிருந்து ஒருபிடிவிடுதிமண்ணை யெடுத்து எதிரிகளின்மேல் வீசியெறிந்தார்கள். ஆண்டவன் அருளால் அம்மண்ணிலிருந்ததுகள் மிக்க அதிகமாய்ப் பெருகி மக்கா வாசிகளாகிய எதிரிகளின்கண்களில் ஒவ்வொன்றில் ஒன்றும்செவிகளில் ஒவ்வொன்றுமாய் விழுந்தன. அதனால் அவர்கள் கண்திறந்துசரியாய்ப்பார்த்து யுத்தம்செய்யமுடியாமல் தத்தளிக்கவே, சற்றுநேரத்திற்குள் அணிகள் கலைந்து சீர் கெட்டுப்பெருங் குழப்பத்தில் விழுந்துவிட்டார்கள்.

இஸ்லாமானவர்களுக்கு அவர்கள் சற்றும் எதிர்பார்க்காத விதமாய் ஆண்டவன் உதவிகிடைத்ததால் மக்காவாசிகள் கடைசியில் பூரணத்தோல்வியடைந்தார்கள். எதிரிகளில் எழுபது பேர்வரையில் கொல்லப்பட்டசமயம் அவர்கள் தலைவனான அபூஜஹில் என்பவனும் அவர்களில் ஒருவனாய் மடிந்ததால் உடனே இஸ்லாமானவர்களுக்கு ஜெயமுண்டாய்விட்டது அதற்குள் எழுபது பேர்சிறையாக்கவும் பட்டார்கள்,

அந்த அபூஜஹல் என்பவனே இச்சண்டைக்குக்காரணமாயிருந்தவன். அவனே இஸலாமானவர்களை யழித்துவிடவேண்டுமென்று வஞ்சம் கொண்டுஎத்தகைய அக்கிரமங்களுக்கும் அஞ்சாமல் அவர்களுக்குச் சொல்லொண்ணு இடுக்கண்களை யுண்டாக்கியவன் அவனே. ஹஸரத் அவர்

களுக்கு அளவற்ற தொந்திரவுகளைக் கொடுத்தவன். சிறையானவர்களில் ஹஸரத்தவர்களின் சிறியதந்தையாகிய ஹஸரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு ஹஸரத் அவர்களின் சிறியதந்தையின் குமாரர்களாகிய அகீல்பின் அபுதாலிப் றலியல்லாகு அன்கு நௌபில்பின் ஹாரிஸ்ரலியல்லாஹு அன்ஹு இவர்களும் இருந்தார்கள். இவர்கள் இஸ்லாமானபிறகு யுத்தத்தில் ஹஸரத் அவர்கள்பிடிமண்ணையெடுத்து எதிரிகளின் மேல் எறிந்த சம்பவத்தைப்பற்றிக் கீழ்க்காணுமாறு கூறினார்கள்:—

"மண்கள் எங்கள் கண்களிலும் செவிகளிலும் விழுந்து நாங்கள் தடுமாற்றமடைந்து திகைக்கும் சமயம் அப்லேக்புரவிகளின் மேல் (வெள்ளைநிறமுன் சிகப்புநிறமும் கலந்த குதிரைகள்) வெள்ளையுடையணிந்த வீரர்கள் எங்கள் எதிரில் நின்று எங்களைத்தாக்கவருவதுபோல் தோன்றியதால் நாங்கள் திகிலடைந்து விட்டோம் எங்கள் பிராணன்கள் போய்விடும்போலிருந்தன. அந்தவீரர்கள் தேவதூதர்களே. ரஸூல்ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய பிரார்த்தனையை ஆண்டவன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு உதவி செய்வதற்காகவே அவர்களையனுப்பியிருந்தான்"

இக்காரணத்தாலேயே யிவர்கள் இஸ்லாமாய்விட்டார்கள் சிறையாக்கப்பட்ட மற்ற ஆட்களில் செல்வவந்தர்களாயிருந்தவர்கள் நஷ்டயீடுக்கென்று தக்கபணத்தொகைகளையளித்து விடுதலை பெற்றார்கள். மற்ற ஏழைகள் ஒருகஷ்டத்திற்கு முள்ளாக்கப்படாமல் விடுதலைசெய்யப்பட்டார்கள் சிறையாளரில் ஒருவன் மட்டு ஹஸரத்தவர்கள் தொழுதுக்கொண்டிருக்கையில் ஒட்டையின் குடலைக் கொண்டுவந்து அவர்கள் கழுத்தில் போட்டதால் கொல்லப்பட்டான்,

இந்த யுத்தத்தில் இஸ்லாமானவர்களில் பதினுன்கு பேர் மடிந்தார்கள். அவர்களில் முஹாஜிரீன்கள் ஆறு பெயர்கள், அன்ஸாரின்களில் எட்டுபெயர்கள். இந்த பதினுன்குபேர்களும் சொர்க்க மடைவார்களென்று ஹஸரத்தவர்கள் கூறினுர்கள். இந்தயுத்தத்தில் ஏராளமான யுத்ததளவாடங்கள் சாமான்கள் முதலியவை இஸ்லாமானவர்கள் கையில் சிக்கின. ஹஸரத்தவர்கள் அவற்றை யுத்தத்திற்கு வந்தவர்களும் வராதவர்களுமான எல்லா இஸ்லாமானவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டார்கள். ஹஸரத் அவர்கள் பத்ருவிலிருக்கும்போது, மதீனமாநகரிலிருந்த அவர்கள் புத்திரியும் ஹஸரத் உஸ்மான்ரலியல்லாகு அன்குவின் மனைவியுமாகிய பீபி ருகையா றலியல்லாகு அன்ஹா அவர்கள் மரணமடைந்தார்கள். ஹஸரத்தவர்கள் பத்ருவிலிருந்து திரும்பிவருமுன்பே மையத்தை அடக்கம் செய்யப்பட்டது.

13-வது பனி கைனுகாவில் நடக்கும் சண்டை

'பனிகைனுகா' என்பது மதீனுவிலுள்ள யூதர்களின் ஒருபெரியகுடும்பத்திற்குப் பெயர். அவர்கள் வர்த்தகம் செய்யும்கடை வீதிக்கும் 'பனிகைனுகா' என்று பெயர். அந்தயூதர்கள் இஸ்லாமானவர்களுக்கு விரோதமாய் ஒன்றும்செய்வதில்லையென்றும், அதற்குமாறுய் அவர்களுக்கு யாராவது தீங்குசெய்தால் அப்போது தாங்கள் உதவிசெய்வதென்றும் வாக்களித்திருந்தார்கள். அவ்வாறிருக்கையில் ஹஸரத் அவர்கள் பத்ருவிலிருக்கும் போது ஒரு இஸ்லாம்மாது பனிகைநுகா சடைவீதிக்கு ஏதோ வாங்கச்சென்ருள் அங்கிருந்த ஒரு யூதன் அவளை பரிகாசம் செய்ய அவள் தன் இனத்தாருக்கு அதைத்தெரிவித்தாள் அதன்மேல் ஒரு இஸ்லாமானவன் சென்று அந்தயூதனை

க்கொன்றுவிட்டான் இதையறிந்த யூதர்களில் சிலர் சேர்ந்து அந்த இஸ்லாமானவரைக் கொன்றுவிட்டார்கள், இதனால் யூதர்களுக்கும் இஸ்லாமானவர்களுக்கும் மனஸ்தாபம் நேர்ந்துவிட்டது.

ஹஸரத் அவர்கள் பத்ருவிலிருந்து திரும்பிவந்தபின் இச்சங்கதியைக் கேள்விப்பட்டு யூதர்களுக்குச் சமாதானம் கூறினார்கள். அவர்களோ கோபத்தோடேயே "தாங்கள் தங்கள் எதிரிகளைசெயித்து விட்டுவந்ததால் மிக்கபெருமையாய்ப்பேசுகிறீர்கள். உங்களோடு சண்டையிட்டவர்களுக்கு யுத்தத்தின் உளவேதெரியாது. அவர்களன்றி எங்களைப் போன்றவர்களாயின் உங்கள் சங்கதியின் உண்மைதெரிந்திருக்கும்" என்றார்கள் ஹஸரத்தவர்கள் சாந்தத்தோடும் சினேகபான்மையாகவும் எவ்வளவு கூறியும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை ஆகையால் இஸ்லாமானவர்கள் அந்த யூதர்களோடு சண்டையிட வேண்டியதாயிற்று.

பதினைந்து நாட்கள் இருகட்சிகளுக்கும் யுத்தம் நடந்தபிறகு யூதர்கள் அதிகமாய் நெறுக்கப்பட்டதால் இஸ்லாமானவர்களோடு இணங்கிவிட வேண்டியநிர்ப்பந்தம் ஏற்ப்பட்டது. அதன்மேல் இனிநாங்கள் இஸ்லாமானவர்களுக்கு ஒருவிரோதமும் செய்வதில்லை. எங்கள்சொத்து சுதந்திரங்களை வேண்டுமாயின் எடுத்துக்கொள்ளுங்கள் எங்கள் பிராணனுக்குக் கெடுதி செய்யாதீர்கள், என்றார்கள் ஹஸரத்தவர்கள் நீங்கள் கூறியபடி இனி யெங்களோடு போர் தொடங்குவதில்லை யென்பதற்காக உங்களில் தக்க கனவான்களில் சிலர் ஜாமீன்தாரர்களாயிருந்தால் சண்டையையுடனே நிருத்தி விடுகிறோமென்றார்கள். ஆனால் அவ்வாறு ஜாமீன் கொடுக்க யாரும் முன்வராதபடியால் யூதர்கள் நாட்டைவிட்டு ஈஜிப்டை நோக்கி யோடிவிட நேர்ந்தது,

அவர்களுடைய பொருள்கள்யாவும் இஸ்லாமானவர்களுக்குப்பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

14-து சுவேக் யுத்தம்.

பத்ரு யுத்தத்தில் அபூஜஹிலும் மற்றுமிருந்தபிரபல படைத்தலைவர்களும் மடிந்து விட்டபடியால், அபிஸுபியான் குரேஷி கூட்டத்தாரின் தலைவன் பதவியைப் பெற்ருன். அவனுடைய புத்திரனும் சிலசுற்றத்தாரும் அந்த யுத்தத்தில் அவனுக்கு உதவிசெய்தார்கள் அப்போது அவன் "இந்த இஸ்லாமானவர்களைப் யடியோடழிக்கும் வரையில் நான் நல்ல ஊண்உண்பதில்லை. வாசனை யணிவதில்லை மனைவியைத் தொடுவதில்லை" என்று சத்தியம் செய்துக் கொண்டான்.

பத்ருயுத்தத்தில் சிரையாக்கப்பட்ட குரைஷியர்கள் ஹஸரத்அவர்களால் விடுதலைசெய்யப்பட்டார்கள் என்று முன்பு கூறினேமல்லவா, அவர்களெல்லாம் மக்காவிலுள்ள தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்ச்சேர்ந்தார்கள். அபூஸுபியான் இருநூறு குதிரை வீரரோடு மக்காவைவிட்டுப்புறப்பட்டு, ஒரே பிரயாணத்தில் நேராய் மதினமாநகரத்தின் ஓரத்திலுள்ள ஒரு ஸ்தலத்தில் போய்ச் சேர்ந்தான்.

அங்குபோய்ச் சேர்ந்ததே முதல் முதல் அவன் செய்த காரியம் என்னவெனில்;—பகலெல்லாம் மறைந்திருந்து இரவில் மதினவிற்குள் பிரவேசித்து அங்கிருந்த, யூதர்களுக்குத்தான் உதவிசெய்வதாய் வாக்களித்துத் தைரியங்கூறிவிட்டு, இஸ்லாமானவர்களைப்பற்றிய உளவுகளையு மறிந்து கொண்டு, இரவிலேயே அங்கிருந்து திரும்பித்தன் பாளையம் போய்ச் சொந்தான். பிறகு பொழுது விடிந்ததும் தன்

வீரரை யழைத்துக்கொண்டு மதீனுவிற் கருகில் மூன்று மைல் தூரத்திலுள்ள அரிஸாஎன்ற விடம்போய்ச் சேர்ந் தான்.

அங்குசேர்ந்தபின் இன்னது செய்யத்தக்கது என்ப தைப்பற்றி அவன்மனதிற்கு ஒன்றும் சரியாய்ப் புலப்பட வில்லை. ஆகவே அங்கிருந்த பேரீச்சமரங்களை யெல் லாம் தீக்கிரையாக்கி அழித்து விட்டான். இரண்டு மனிதரைக்கொன்றுன். ஹஸரத்தவர்கள் இச்சங்கதிகளைக் கேட்டதும் அவனுல் நேரிடும் தீங்குகளைத்தடுப்பதற்க்காக உடனே புறப்பட்டார்கள் அவர்கள் வரும் சங்கதியைக் கேட்ட அபூசுபியான் அங்கிருந்து ஓட்டம்பிடித்தான். ஹஸரத் அவர்கள் மூன்று காத தூரம் வரையில் அவனைப் பின்தொடர்ந்து சென்றும் அவன் அகப்படவில்லை. ஆகை யால் ஹஸரத்தவர்கள் மதினுவிற்குத் திரும்பி விட்டார்கள்.

குரேஷியர்கள் ஓடும்போது குதிரைகளின் பாரத் தைக்குறைப்பதற்காகத் தாங்கள் ஆகாரத்திற்காகக் கொ ண்டுவந்திருந்த கோதுமைமா முதலியவற்றின் மூட்டை களை வழியில் எறிந்து விட்டுச்சென்றுர்கள். அவைகளெல் லாம் இஸ்லாமானவர்கள் கையில் சிக்கின. அந்த மாவிற்கு அரபுபாஷையில் சுவேக் என்று பெயர். அதனுலேயே இந்த யுத்தத்திற்குச் சுவேக்யுத்தம்" என்று பெயரிடப் பட்டது.

16-வது பனீஸலிமில் நடந்த யுத்தம்.

பத்ரு விலும், பனீகைனுகாவிலும் நடந்த யுத்தங்க ளில் இஸ்லாமானவர்களுக்கு ஏராளமான பொருள்கள் சிக்கின. அதனுல் அவர்களுக்கு மிக்க அனுகூலமுண்டாயின தோடு அவர்கள் மிக்க சந்தோஷமடைந்தார்கள் இதனுல்

தான் மக்காவாசிகள் மட்டு மல்ல, அரேபியாவிலுள்ள ஏழைகள் யாசகர்கள் கூட அவர்களுக்கு விரோதிகளாய் விட்டார்கள் பற்பலவிடங்களிலிருந்த சில்லறைக் கூட்டத் தார்கள், சிற்சில சமயங்களில் செய்த தீங்குகளைப்பற்றி பிறகு கூறுவாம். மதீனாவைத்தாக்கி அங்குள்ள பொருள் களைக் கொள்ளையடிக்க முதல் முதல் ஆலோசித்தவர்களில் பனீஸலீம், பனீகஸ்யான் இவர்கள் இருவரும் தாங்கள் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி திட்டமாய் ஏற்பாடு செய்து கொண்டார்கள். மதீனாவிற்கு மூன்றுகாத தூரத் தில் இருக்கும் குர் குர்றத்துல் கதிர் என்ற ஊரில் தங்கி யிருந்தார்கள். ஹஸரத் அவர்கள் இவர்களுடைய நோக் கத்தை யறிந்ததே அதைத்தடுப்பதற்காக மதினாவைவிட் டுப்புறப்பட்டார்கள். அத்துஷ்டர் ஹஸரத் வருகிறாரென் பதை யறிந்ததும் சிதறியோடி விட்டார்கள். ஆகவே ஹஸரத் அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். ஆயினும் அவர்கள் கட்டளைப்படி காலிப்பின் அப்துல்லா ரலியல் லாஹு அன்ஹு அந்த எதிரிகளைத்தாக்கி அவர்களுக் குத் தக்கதண்டனை யளித்தார்கள்.

ஹிஜ்ரி. 3-வது வருடம்

1வது-ஸிஅம். என்றவிடத்தில் நடந்த யுத்தம்.

ஸிஅம் என்றவிடத்திற்கு அரபிபாஷையில் அன்மார் என்றும் பெயர். நஜத்இலாகாவில் ஒரு ஊர் இருக்கிறது. இங்கிருந்த இரண்டு கூட்டத்தார்கள்கூட மதினாவைத்தா க்கிக்கொள்ளையடிக்க நாட்டங்கொண்டார்கள்.

அவர்களைத் தடுக்கவேண்டி ஹஸரத் அவர்கள் 450 குதிரைவீரர்களுடன் புறப்பட்டார்கள். ஆனால் பனிஸலீம்

பனிகஸ்பான் என்றகூட்டத்தாரைப்போல் இந்த இரண்டு கூட்டத்தார்களும் ஓடிவிட்டபடியால் பதினோருநாட்களுக்குப்பின் மதினாவிற்குத்திரும்பி வந்துவிட்டார்கள்.

நாம் இரண்டாவது வாசகத்தில் கூறியஹஸரத் அவர்களதுபொறுமை இப்பிரயாணத்தில் தான் வெளியாயிற்று எப்படி யெனில்;—

ஒருநாள் இவர்கள் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் மழைபெய்து யாவருடைய உடைகளும் நனைந்து விட்டன. மழைவிட்டு மேகங்கள் கலைந்து வானம் வெளுத்தபின் யாவரும் தங்கள் தங்கள் உடைகளைப்பிழிந்து உலர்த்தத் தங்கினார்கள். அச்சமயம் ஹசரத் அவர்கள் அருகிலிருந்த ஒரு மரத்தடியில் படுத்து நித்திரை போய் விட்டார்கள். அச்சமயம் எதிரிகளில் ஒருவன் அவர்களைக் கண்டு கொல்ல வெண்ணித் தன் வாளை யுருவிக்கொண்டு வெட்டப்போனவன் அருகிற்சென்று அவர்களழகிய மகிமைபொருந்திய வதனத்தையுற்று நோக்கியதும் மனங்கரைந்து கலக்கமடைந்து, தேகம் நடுங்கிவிட்டது. அதனால் அவன் கையிற்பிடித்திருந்த கத்தி நழுவிக்கீழேவீழ்ந்து விட்டது. அச்சத்தத்தால் நித்திரையிலிருந்த ஹஸரத் அவர்கள் கண்விழித்துக்கொண்டு அவ்வாளைக்கையிலெடுத்துக்கொண்டு அம்மனிதனை நோக்கி,

“ஓ மனிதனே! நீ என்னைக்கொல்லநினைத்தாய் -ஆனால் இப்போது நான் உன்னைக்கொன்றால் உன்னைநீகாப்பாற்றிக்கொள்ளமுடியாது” என்று கூறி அவனைமன்னித்தனுப்பினார்கள். அவன் உடனே இஸ்லாம்மார்க்கத்தில் சேராவிட்டாலும் அதுமுதல் ஹஸரத் அவர்களைக்காணும்போதெல்லாம் மிக்க நன்றியோடும் பக்தியோடும் வணக்கம்செய்துவந்தான்,

2-வது குருவவாவில் நடந்தசம்பவம்.

குரைஷியர் முதல் முதல் ஹெட்ஜாஸ் மார்க்கமாய் இஜிப்ட் தேசத்திற்குச்சென்று வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஹஸரத்தவர்கள் ஹெட்ஜாஸ் கூட்டத்தாரோடு உடன் படிக்கை செய்து கொண்டபடியால் குரைஷியர் அப்பாதையைவிட்டுவிட்டு இராக் தேசத்தின் மூலமாக இஜிப்டுக்குச்செல்லத்தொடங்கினார்கள்.

குரைஷியர்களின் ஒருபெரியகூட்டம் அப்புதுமார்க்கமாய் இஜிப்டிற்குச் சென்றார்கள். முன்பு மதினாவிலுள்ள முஸ்லீம்களுக்குக் மிக்கதீங்குசெய்த அபூஸுபியான் என்பவனே அக்கூட்டத்திற்குத் தலைவனாயிருந்தான். ஹஸரத் அவர்கள் இச்சங்கதியை யறிந்ததே, முன்நடந்த சம்பவங்களால் இஜிப்டிலிருந்து திரும்பிவரும்போது அவன் மதீனாவைத்தாக்கி இஸ்லாமானவர்களுக்குக் கெடுதிசெய்வானென்று உணர்ந்து, அவனை யப்படிசெய்ய வொட்டாமல் தடுப்பதற்காக ஸையத் பின்ஹாரிஸ் என்பவரைத் தக்க குதிரைவீரர்களோடு அனுப்பினார்கள். அந்தவீரர், நஜட் நாட்டைச்சேர்ந்த குருவாவென்ற ஸ்தலத்தில் ஒரு ஏறிக்கரையில் தங்கியிருந்த அக்கூட்டத்தாரைச் சூழ்ந்து கொண்டார்கள். இதைக் கண்டகுரைஷியர்களில் கௌரவமானவர்கள் தவிர மற்றபேரெல்லாம் ஓட்டம்பிடித்தார்கள். இஸ்லாமியர், மீதி அகப்பட்டவர்களைச் சிறைப்படுத்திக்கொண்டு அவர்கள் சாமான்களனைத்தையும் கைப்பற்றிக்கொண்டு மதினாவிற்குத் திரும்பிவந்து யாவும் ஹஸரத்அவர்களிடம் ஒப்புவித்தார்கள். ஹஸரத்அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தின் சட்டப்பட்டி அச்சொத்துகளில் ஐந்திலொரு பாகத்தை தருமகைங்கரியங்களுக்கு (பைத்துல் மாலுக்கு) எடுத்து வைத்துவிட்டு மற்றதைத் ஸஹாபாக்

களுக்கு பகிர்ந்துகொடுத்து விட்டார்கள். தற்காப்பின் பொருட்டு, எதிரியின் வல்லமையைக் குறைக்கவேண்டும் என்ற நீதியின்படி அவ்வாறு செய்தார்கள்.

3-வது பிறப்பு கலியாணம் முதலியசம்பவங்கள்.

இந்தவருடம் ரம்ஸான் மாதத்தில் ஹஸரத் இமாம் ஹஸன் ரலியல்லாகு அன்கு அவர்கள் பிரந்தார்கள். இதே காலத்தில் ஹஸரத் அவர்களின் புத்திரியும் உஸ்மான் றலியல்லாகு அன்கு அவர்களின் மனைவியுமாகிய ரொகையா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் காலமாய்விட்டதால், ஹஸரத் அவர்களின் இரண்டாவது புத்திரியாகிய உம்மு குல்ஸூம் ரலியல்லாகு அன்ஹாவை உஸ்மான் ரலியல்லாகு அன்கு விற்கு இரண்டாவது மனைவியாகமணம் செய்துவைத்தார்கள். அதேகாலத்தில் ஹஸரத் உமர் ரலியல்லாகு அன்கு அவர்களின் புதிரியாகிய ஹப்ஸா ரலியல்லாகு அன்ஹா அமங்கலியாய்விட்டதால் அவர்களைஇரண்டாமுறை யாருக்குமணம்செய்து வைப்பதென்றுமிக்கவியாகூலத் தோடிருந்தார்கள் அவர் வியாகூலத்தை நீக்கி மனதிற்கு நிம்மதியுண்டாக்க அம்மாதைத் தாங்களே மணம் செய்து கொண்டார்கள். இதன்றி ஹஸரத் அவர்களுடைய சிறிய தந்தையின் புத்திரராகிய உபைதாபின் ஹாரிஸ் ரலியல்லாகு அன்கு பத்ருயுத்தத்தில் ஷஹீதானதால் அவருடைய மனைவியாகிய ஸைனபபின் ஹஸீமாரலியல்லாகு அன்ஹா அவர்கள் மிக்க கவலையிற் சிக்கியிருந்தார்கள் அதனல் ஹஸரத் அவர்களே அம்மாதையும் மணம் புரிந்துக்கொண்டார்கள்.

4-வது உஹதில் நடந்தயுத்தம்.

பதர்யுத்தத்தில் குரைஷியர்கள் செய்த அக்கிரமங்களுக்குத் தக்க தண்டனையடைந்தார்கள். அதில் மடிந்த தங்கள் சுற்றத்தார்களுக்காக வஞ்சம்தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரே பிடிவாதமுடையவர்களா யிருந்தார்கள். அதனால் உலகமே அவர் கண்களுக்கு இருள் மூடியதுபோலிருந்தது. இஜிப்டிலிருந்து திரும்பி வந்த அபூஸுபியான் கூட்டத்தார் குருவாவில் தடுக்கப்பட்ட சங்கதியைக் கேட்டதே மக்காவாசிகள் மிக்க கோபாவேசங்கொண்டு கண்களால் இரத்தம் சிந்துகிறவர்கள்போல்மிக்கபதைப்போடு, இஜிப்டிலிருந்து வருகிறவர்கள் எப்போது மக்காவந்துசேர்வார்களோ வென்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் வந்த வுடனே யாவரும் சேர்ந்து மதீனாவின்மேல் படையெடுத்துச்சென்று அங்குள்ள இஸ்லாமியர்களை யெல்லாம் வாளுக்கிறையாக்கி நமது வஞ்சத்தை த்தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தார்கள். அபூஸுபியான் குருவாவிலிருந்து ஜெயத்தோடு மட்டும் வந்திருந்தால் அவர்கள் மிக்க சந்தோஷமே யடைந்திருப்பார்கள். ஆனால், நடந்த விஷயம் அவர்கள் எண்ணத்திற்கு முழுவிரோதமாய் விட்டது. ஏனெனில் அபுஸுபியான் தன் கூட்டத்தார்களில்அனேகரையும், ஏராளமான சாமான்களையும், இஸ்லாமானவர்களுக்குப் பறிகொடுத்து விட்டுத்தன் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள மக்காவிற்கு ஓடிவந்து விட்டான். அங்கு வந்தபின் நடந்தசங்கதிகள் யாவும் ஊராரிடம் கூறினான். யாவும் கேட்ட குரைஷியர்கள் யுத்தாவேசங்கொண்டு மதினாமேல் படையெடுத்துச்செல்லத் தீர்மானித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பகிரங்கப்படுத்தத் தொடங்கினார்கள். முதலில் இஜிப்டுக்குச்சென்று வர்த்

தகம் செய்துவிட்டுவந்தபோது மிக்க இலாபம் கிடைத்தது: அதில் ஆயிரம் ஒட்டகங்களும், ஐந்து மணங்கு தங்கமும் மிகுதியாய் வைத்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் யுத்தத்திற்கு மக்காவாசிகள் மட்டுமல்ல அரேபியாவிலுள்ள பலமும், செல்வமுமுடைய வேறு நான்கு கூட்டத்தாருக்கும் குரோதமுண்டாக்கி, தங்கள் தங்கள் நாடுகளின் பாதுகாப்பிற்காகத் தக்க ஏற்பாடுசெய்துவிட்டுத் தங்களோடு துணையாய் யுத்தத்திற்கு வரும்படி ஏற்பாடு செய்தார்கள். முன்பு ஜனங்களைத்தூண்டி இஸ்லாமியர் மேல் யுத்தத்திற்குச்சென்று பத்ருயுத்தத்தில் தோல்வியடைந்து அவர்களால் சிறையாக்கப்பட்டு இனி இஸ்லாமியர்மேல் யுத்தத்திற்கு வருவதில்லையென்று அவர்களுக்குச் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு விடுதலையடைந்து வந்திருக்கும் அபூஉஸ்ஸா என்பவன்தன் வாக்குத்தத்தப்படி யுத்தத்திற்குச் செல்லாதிருக்க நினைத்தும் ஜனங்கள் செய்த பலவந்தத்தால் தன் வாக்குதத்தம் தவறி யுத்தத்திற்குச்செல்ல வேண்டியதாயிற்று.

இவ்விதம் அவர்கள்செய்த ஏற்பாடுகளால் குரைஷியரும் அராபியரும் சேர்ந்த நாலாயிரம் பேருக்கதிகமான ஒருசைனியம் தயார் செய்யப்பட்டது. இவர்களில் 700 கவசமணிந்த வீரர்களும், 200-குதிரை வீரர்களும், மூவாயிரம் ஒட்டகப்படைகளும், 15-யானைகளும் ஆடவர்களுக்கு உரோஷமுண்டாக்கப் பெண் படையும் அடங்கியிருந்தார்கள். இஸ்லாமானவர்கள்மேல் தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவலோடு பாதகனுகிய அபூஸுபியான் தலைமையின் கீழே இச்சைனியம் மதீனவைநோக்கிப் புறப்பட்டது.

இவர்கள் மதீனவை நெருங்கியதும் இஸ்லாமானவர்களுடைய நாட்டிலிருந்த பயிர் பச்சை முதலியவற்றை

யழித்து, மதீனாவிற்குச் சமீபத்திலுள்ள ஒரு சிகப்பு மலை யோரம் பாளையமிறங்கித் தங்கள் தற்காப்பிற்காக வேண்டிய கொத்தளங்களைக் கட்டிக்கொண்டார்கள்.

குரைஷியர் யுத்தத்திற்கு வந்திருக்கும் சங்கதி ஹஸரத் அவர்களுக்கு எட்டியதே, அவர்களோடு யுத்தம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்யத் தொடங்கினார்கள். முதலில் தங்கள் மதீனாவி லிருந்துகொண்டே தற்காப்பினால் அவர்களைத் துரத்திவிடலாமென்று உத்தேசித்தார்கள். ஆனால் பிறகு வெளிச்சென்றே எதிரிகளைத்தாக்குவதென்று தீர்மானித்து, ஆயிரம் வீரர்களோடு மதினாவைவிட்டு எதிரிகளைநோக்கிப் புறப்பட்டார்கள்.

குரைஷியர்கள் சேனையின் தொகையைநோக்க இஸ்லாமானவர்கள் சேனைமிகச்சிறியதே. மதினாவிலிருந்த யூதர்கள், இஸ்லாமியர்களுக்கு இக்கட்டு நேரும்போது அவர்களுக்கு உதவிசெய்வதாய் வாக்களித்திருந்தபடி உதவிசெய்யாமலிருந்து விட்டதே இதற்கு முக்கியகாரணம் எனலாம். இதன்றி இன்னொரு இடையூறும் நேர்ந்தது. அதாவது அப்துல்லா பின் உப்பி என்பவன் மதீனாவில் ஒரு பெரிய அதிகாரியாயிருந்தான். அவன் வெளிக்கு இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்தவனெனினும் அந்தரங்கத்தில் மாறான கொள்கையையுடையவன். ஹஸரத் அவர்களுக்குத்துணையாய் அவர்களோடு கூடப்புறப்பட்ட அவன், தன்வசமிருந்த சுமார் முன்னூறு வீரர்களோடு மதினாவிற்குத் திரும்பிவிட்டான். இதனால் முதலில் சுமார் ஆயிரம் வீரர்களடங்கியிருந்த இஸ்லாமியர் சேனை, அதிலும் குறைந்து சுமார் எழுநூறு வீரர்களையுடையதாய்விட்டது. இவ்வீரர்களில் பதினான்கு பதினைந்து வயதேயுடைய இரண்டு வாலிபர்களும் இருந்தார்கள். இவர்கள் தங்கள் பிரி

யத்தாலேயே, வீரத்தோடு எதிரிகளைத்தாக்கி ஜெயமடைய வேண்டுமென்று உரோஷங்கொண்டு, வலியவே யுத்தத் திற்கு வந்தவர்கள். இக்கூட்டம் முழுமைக்கும் இருநூறு குதிரைகளே யிருந்தன.

ஆனல் இஸ்லாமானவர்கள், தங்கள் மதத்தின் சத் தியத்திலும்' அல்லாகு ஆலாவுடைய கட்டளையை யனுசரித் தே நாம்நடக்கிருேம்என்ற எண்ணத்திலும், பூரண நம்பகம் வைத்தவர்களாதலால், என்ன இடையூறுகள் நேர்ந்தாலும் சரி நம்வயது முழுதும் கஷ்டப்பட்டுக் கால்நடையாகவே நடந்து சென்று யுத்தம் செய்யவேண்டி நேரிட்டாலும் சரி, யுத்தத்திற்கென்று கையில் ஆயுதமேந்திப் புறப்பட்டுவந்து விட்டவரையில், இனி முன்வைத்தகாலேப் பின்வைக்கலா காது என்ற ஒரே பிடிவாதமான வீரத்தோடு தங்கள் தலே வாராகிய ஹஸரத் அவர்களேப்பின்பற்றி நடந்தார்கள்.

ஹஸரத் அவர்கள் உண்மையான விசுவாசமும் நன்றி யறித லுமுடைய தமது சிறு கூட்டத்தாரோடு நகலிஸ்தா னேக்கடந்து உஹத்மலேயின் அருகிற்சென்று தற்காபிற்காக ஏழுநாட்கள் தம்கூட்டத்தாரோடு அம்மலேப் பொதும்புக ளில் மறைந்திருந்தார்கள். இதற்கிடையில் அம்மலேயின் ஒருபக்க அடிவாரத்தில் தங்கியிருக்கும் எதிரிச்சேனேக ளின் அளவு, வல்லமை, அமைப்பு, ஏற்பாடு முதலியவற் றையும், அவர்களேத்தாக்கத் தமக்கு வசதியான இடங்கள் எங்கிருக்கின்றன என்பது முதலிய உளவுகளேயும் நேரில் கண்டும், வேவுகாரர்கள் மூலமாகவும் அறிந்துகொண் டார்கள்.

பிறகு எட்டாவதுநாட் காலேத் தொழுகையை முடித் துக்கொண்டு, யுத்தத்தில் ஜெயம்பெற்றுத் தங்கள் சத்திய மார்க்கத்தையும் புகழையும் உலகில் பரவச்செய்யும்படி

அனுக்கிரகம் புரியவேண்டுமென்று அல்லாகுத் தஆலா வுக்கு விசேஷபிரார்த்தனைசெலுத்தி எதிரிகள் தங்கியிருக் கும் மலையடிவாரத்தின் எதிரிலிருந்த ஒருவசதியான மை தானத்தில் தமது சேனையை யணிவகுத்து யுத்தசன்னந் தர்களாய் நிறுத்தினார்கள்.

இதன்றி 150 வில்வீரரை அப்துல்லாபின் ஜுபைர் என்பவர்வசம் ஒப்பித்து அவர்களை மலையோரத்தில் ஒரு மறைவானவிடத்தில் நிறுத்தி, அவர்களைநோக்கி இதோ நான் கூறுவதைகவனமாய் மனதில் வையுங்கள். இது ஒரு முக்கியமான ஸ்தலம். எதிரிகள் இம்மார்க்கமாகத் தான் திரும்பிச் செல்லவேண்டும்.

ஆகையால் வெற்றி கிடைப்பதாயினும் சரி, மடிய நேர்ந்தாலும் சரி இந்த விடத்தைவிட்டு ஒரு அடியும் பே ராமல் நின்று யுத்தம் செய்யுங்கள், பத்திரம் பத்திரம் என்று கூறினார்கள்.

மக்காவாசிகள் தங்கள் சேனைபெருக்கத்தாலும், வல் லமையாலும் செல்வத்தாலும், நாமேஜெயமடைவோமெ ன்று மிக்க அகங்காரமும் பெருமையும் கொண்டிருந்தார் கள். ஹஸரத் அவர்கள் யுத்தசன்னத்தராய் விட்டதைக் கண்டதும் மிக்க உக்கிரத்தோடு யுத்தத்திற்கு முன் வந் தார்கள். அவர்கள் தங்கள் பிரதானத் தெய்வமாகியஹுபல் என்ற விக்கிரகத்தை மிக்கடம்பத்தோடு ஒரு ஒட்டகத் தின்மேலேற்றி சேனையின் மையத்தில்கொண்டுவந்தார்கள். அதைச்சூழ்ந்துள்ள ஆண்வீரர்களோடு பெண்வீரிகளுமிரு ந்தார்கள் - குரைஷியர் சைய்னியத்தின் சேனாதிபதியாகிய அபூசுபியான மனைவியாகிய ஹிந்தாஎன்றமாதே இப்பெண் சேனைக்கு சேனாதிபதியாய் அமர்ந்திருந்தாள்.

இவர்கள் வீரா வேசத்தோடு சென்று இஸ்லாமானவர்கள்மேல் விழுந்து தாக்கத்தொடங்கினார்கள். இஸ்லாமியருக்கோ தாங்கள் ஜயமடைவதாய் நம்பிக்கையில்லை யெனினும, ஆண்டவன்மேல் வைத்தநம்பிக்கையால் உயிரைத்திரணமாய்மதித்து மிக்க வீரா வேசத்தோடும், துணிகரத்தோடும் எதிரிகள்மேல், புலிபோல் பாய்ந்து யுத்தம் புரியத்தொடங்கினார்கள். இவர்கள் எதிரிகளுக்குச் சற்றேனும்சிந்திக்கக்கூட அவகாசம் கொடாமல் நெருங்கிப்போர் செய்யவே எதிரிகளின் முன் அணிகளில் குழப்ப முண்டாயிற்று. இதைக்கண்ட இஸ்லாமானவர்கள் பின்னும் உற்சாகத்தோடு எதிரியணிகளைப் பிளந்து உள்நுழைந்து போர் செய்யவே பின் அணிகளிலும் குழப்பமும் கலவலரமும் உண்டாயிற்று - அதோடு குரைஷியா சேனையிலிருந்த பிரசித்திப்பெற்ற படைத்தலைவர்களில் பனிரண்டுபெயர் மடிந்துபோனார்கள். ஆகையால் குரைஷியர் முதுகுகாட்டி பின் னிடைந்தோடத்தொடங்கினார்கள், யாவும் கண்ட அபூசுபியானாகிய சேனாதிபதியும், ஒகோ இனி இங்குநிற்பதால் ஆபத்தேயுண்டாகுமென்றெண்ணி ஓட்டமெடுப்பதற்காகப் பின் சென்று விட்டான்.

இவையாவும் கண்ட இஸ்லாமானவர்கள் மிக்கஉற்சாகமடைந்தார்கள். ஆனால் பூரண ஜெயத்தை நமக்குச் சொந்த மாக்கிக்கொள்ளுமுன் நாம்செய்யவேண்டிய வேலைகள் இன்னும் இருக்கின்றன வென்பதைக்கருதாமலே, முன்னமேபூரண ஜெய மடைந்து விட்டதாக கருதிச் சந்தோஷமடைந்து ஒடிக்கொண் டிருக்கிறவர்கள் விட்டுச் செல்லும் சாமான்களைக் கைப்பற்ற ஆவல் கொண்டு அதிலேயே நாட்டம் வைத்து விட்டார்கள். அவர்கள்செய்த இச்செயல் மிக்க முட்டாள் தனமானது. எதிரிகள் குழப்பமடைந்து அணிசிதறியோடு வதையும், தங்கள்

ஆட்கள் எதிரிகளின் பொருட்களைக் கைப்பற்றுவதையும் அறிந்த 150 இஸ்லாம் வில்வீரர்களும் தாங்கள் காவல் கின்ற ஸ்தலத்தைவிட்டு தங்கள் படைகளில் வந்து கலந்து கொண்டார்கள்.

மக்காவாசிகளில் பிரக்யாதிபெற்ற அதிகாரியாகிய காலீத்பின்வலீத் என்ற ஒருவன் படைத்தலைவர்களில் ஒருவனுயிருந்தான். இவன் தன் சைனியத்தின் அலங்கோலத்தைக்கண்டு மிக்க வியாகூலத்தோடு இதற்கென்ன பரிகாரம் செய்யலாகுமென்று கலவரப்பட்டுக் கொண்டிருந்தான். இப்போது இஸ்லாமானவர்கள் போர்முடிந்ததாய்த் தவருன அபிப்பிராயங்கொண்டு, தங்கள் தற்காப்பை மறந்திருப்பதையும், தங்களுக்கு இடையூருய்க் காவல் வைக்கப்பட்டிருந்த இஸ்லாமிய வில்வீரர்கள் அந்த ஸ்தலத்தைவிட்டு வந்துவிட்டதையுமறிந்து, இதுதான் சமயமென்று தக்கஏற்பாடு செய்தான். அதாவது ஓடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஆளனுப்பிவிட்டு, ஒரு பகுதிசேனையோடு பலவிடங்களில் சிதறியிருக்கும் இஸ்லாமியர்களின் பின்பக்கம் வந்து சூழ்ந்து கொண்டான். ஓட யெத்தனம் செய்துகொண்டிருந்த அபூசுபியான் நிகழ்ந்த சங்கதியை யறிந்ததே தன்படைகளைத் திரட்டிக்கொண்டு இஸ்லாமானவர்களின் முன்பக்கம்வந்து தாக்கத் தொடங்கினுன். ஓடும் குரைஷிய வீரர்களும் யாவும் அறிந்ததே துரிதமாய்த்திரும்பிவந்து தங்கள் சேனைகளோடு சேர்ந்து கொண்டார்கள். இதனுல் தங்கள் சற்று யோசிக்காது செய்த அவசரக்குற்றத்தால், பூரண ஜெயமடையும் தருவாயிலிருந்த இஸ்லாமியர்கள், இருபுறங்களிலும் எதிரிகளால் நெருக்கப்பட்டு இடையில் சிக்கி மிக்க ஆபத்துக்குள்ளானுர்கள்.

அச்சமயம் அவர்களுக்கு இன்னொரு இடையூறும் நேர்ந்தது அதாவது புயல் காற்றடிக்கத்தொடங்கியதால் தம்மைச்சேர்ந்தவர்களென்றும் எதிரிகள் என்றும் வித்தியாசங் கண்டறியமுடியாததாய் விட்டது. அச்சமயம் குரைஷியருக்கு அனுகூலமானதாயிருந்தது இத்தகைய இக்கட்டுகளிலும் ஹஸரத் அவர்கள்மட்டும் தம் இடத்தைவிட்டு நகரவேயில்லை.

அச்சமயம் அன்ஸாரிகளில் ஏழுபேரும் முஹாஜரீன்களில் ஏழுபேரும் ஆக 14, பேர்கள்மட்டும் உயிரை இலட்சியம்செய்யாமல் ஹஸரத் அவர்களுக்குத் தற்காப்பாக அவரைச்சூழ்ந்து நின்றூர்கள். மற்றபேர் கலக்கமடைந்து ஓடினர்கள். இவர்களுடைய பரிதாபமான நிலையைக்கண்ட மக்காவாசிகள் மிக்க தைரியமும் சந்தோஷமும் கொண்டு ஹஸரத் அவர்களை நெருங்கித்தாக்கினர்கள். எதிரிகள் எறிந்த கற்களில் ஒன்று ஹஸரத் அவர்கள்மேல் விழுந்ததால், அவர்கள் கீழ்வரிசைப் பற்களில் நான்கு ஷஹீதாகிவிட்டன அதோடு அவருடைய திருமுகத்திலும் கற்கள் பட்டுக் காயங்களை யுண்டாக்கியதால் ஹஸரத் அவர்கள் குதிரைமேலிருக்கச் சக்தியற்றுக் கீழிரங்கிவிட நேர்ந்தது இதைத் தூரத்திலிருந்து கண்ட மக்காவாசிகள் நபிநாயகம் அவர்கள் மடிந்துவிட்டதாக பிரஸ்தாபமுண்டாக்கி விட்டார்கள்.

இதைக்கண்ட ஹஸரத் அவர்களின் அரியதோழர்கள் அடக்கமுடியாத கோபாவேசங்கொண்டு ஹஸரத் அவர்களைச்சூழ்ந்து வணங்கி, 'ஓ அல்லாவுடைய ரசூலே ஆண்டவனது அருள் தங்களிடம் பூரணமாயிருக்கிறதென்றும். அவன் தன் திருத்தூதராகிய தங்களுக்களித்திருக்கும் தெய்வீக வல்லமை யெத்தகையதென்றும் நாங்கள் அறிந்ததே. அப்படிப்பட்ட தாங்கள் சத்தியவேதத்தை

யும் ஆண்டவனால் அனுப்பப்பட்ட அவன் தூதரையும் அலட்சியம் செய்து தூஷித்து, இஸ்லாமானவர்களுக்குச் சகிக்கொணாத்துன்பங்களைச் செய்துவரும் இப்பகைவராகிய துஷ்டர்களின் செய்கைகளைப் பார்த்துக்கொண்டு பராமுகமாய் இருப்பது எதற்கு? தாங்கள்கருதினால் தங்கள் கோபத்தீயி லிவர்களை யொருவினாடியில் நீறாய் எரித்துவிடாதோ? தங்கள் சாபம் உடனேயிவர்களுக்கு நரகவேதனையை யுண்டாக்கிவிடாதோ? தாங்கள் தயைபுரிந்து இக்கொடிய பகைவரைத் தக்கபடி தண்டிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

இம்மொழிகளைக்கேட்ட நபிநாயகம் பூரண சாந்தத்தோடு " தம்தோழர்களை நோக்கி "என் அருமையான நண்பர்களே! இப்பூவுலகிலுள்ளோர்க்கு நற்புத்திபுகட்டி நன்மையாகவே அவர்களை நேர்வழியிற் திருப்பி ஆண்டவனருளுக்குப் பாத்திரமுடையவர்களாக்கவே நான் இங்கனுப்பப்பட்டதன்றி உலகில் கெடுதி செய்து துன்பத்தை யுண்டாக்கவல்ல, மேலும் சுத்தவீரர்களாகிய இஸ்லாமியர்கள் தம் எதிரிகள் முன்நின்று ஆண்டவனது உதவியில் பூரணநம்பிக்கைவைத்து, பகைவரை யஞ்சாது தாக்கிஜெயம்பெற வேண்டியதே நீதியான முறைமை. நானேஇவர்களுக்கு நல்லறிவளித்து இவர்கள் பாபங்களை மன்னித்து இவர்களைச் சத்தியமாகிய நேர்வழியில் திரும்பச்செய்ய வேண்டுமென்று ஆண்டவனிடம் மன்றாடிப்பிராத்திக்கிறேன்" என்று கூறி அவ்வாறே கிருபை யாளனாகிய அல்லாகுத் தஆலாவைத்தொழத் தொடங்கினார்கள்.

ரசூல் ஸல்லல்லாகு அலைஹிவஸல்லம் அவர்களின் உயிருக்குயிர்போன்ற தோழராகிய ஹஸ்ரத் அலீகர்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் முன்னின்று மற்றதோழர்களையும் கூட்டிக்கொண்டு ஆச்சரியமான வீரதீரத்தோடு

முன்வைத்தகாலை பின்வைக்காமல், எதிரிகளின் கூட்டத்திற்கு அஞ்சாது அவர்களை நெருங்கித்தாக்கவும், அவர்கள் சற்றும் முன்வராது தடுக்கவும் தொடங்கினார்கள். அச்சமயம் அல்லாவின் அருளால் தங்களுக்குத் தெரியாமலே எதையும் இலக்ஷியம் செய்யாது தாக்கும் அபூர் வீரதீரமும் வல்லமையும் அவர்களுக்குண்டாயிற்று.

இச்சிறு கூட்டம் இத்தகைய வல்லமையோடு தங்களைத்தாக்குவதையும் தங்கள்கோரிக்கை சற்றும் ஈடேறாவண்ணம் செய்வதையும் கண்ட மக்காவாசிகளின் முன் அணி படைகள் சற்று பிறமித்துமயக்கமடையவே, பின் அணிகளில் குழப்பமுண்டாயிற்று. அவர்கள் ஏதோ அதிசய சம்பவம் நடந்துவிட்டதாய்க்கருதிவிட்டார்கள். இவ்வாறு படைகள் முழுமையும் பெருங்கலக்க மடைந்து தோல்வியை யுண்டாக்கும் நிலைமையி லிருப்பதைக்கண்ட அபூசுபியான் பின்னிடைந்து அங்கிருந்த மைதானத்திற்கு சென்று நின்று, இஸ்லாமியரை நோக்கி,

"நாம் உங்களை யடியோடழிக்காது விடுவதில்லை அடுத்த வருடம் இதேகாலத்தில் இதேவிடத்திற்குவந்து உங்களோடு யுத்தம் தொடுப்போம்" என்று கூறிவிட்டுத் தன்சேனையை யழைத்துக்கொண்டு மக்காவை நோக்கித்திரும்பினான்.

ஹஸரத் அவர்கள் இறந்துபோனதாய் இரணகளத்திலுண்டான பொய்வதந்தி மதீனாநகருக்கு எட்டிவிட்டது. அதைக்கேட்ட ஹஸரத் அவர்கள் புத்திரியாகிய நாயகி பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் மனம் பதைத்து துக்காக்கிரந்தராய் சில தோழிகள் சகிதம் யுத்தம் நடந்த விடத்திற்கு வந்து தன் தந்தையைக் கண்டபின் மனந்தேறினார்கள். அவர்கள் தன் தந்தைக்குப்

பட்டிருக்கும் காயங்களைக் கண்டு துக்கித்து உடனே அவற்றிற்குத் தக்க சிகிச்சை செய்தார்கள்.

அதற்கிடையில் தொழுகை லுஹர் வக்து வந்து விட்டது. யாவரும் தொழத் தொடங்கினார்கள். ஹஸரத் அவர்கள் பலஹீனமான நிலைமையி லிருந்தபடியால் நிற்கமுடியாமல் உட்கார்ந்தே தொழவேண்டியதாயிருந்தது.

இந்த யுத்தத்தில் தான் ஹஸரத் அவர்களுடைய சிறியதந்தையாகிய அமீர் ஹம்ஸா ரலியல்லாகு அன்கு அவர்கள் ஷஹீதானார்கள். ஹஸரத் அவர்கள் கூட வலிய யுத்தகளத்திற்குவந்த இரண்டு வாலிபர்களும் கூட ஷஹீதானார்கள்.

அபூஸுஃப்யானுடைய மனைவியாகிய ஹிந்தா என்பவள் அமீர் ஹம்ஸா அவர்களுடைய பிரேதத்தை யவமானமாய் நடத்தினாள் அதன் நாசியையும் செவிகளையும் கொய்து, அதன் ஈரலை யெடுத்து வாயாற்கடித்து வீசியெறிந்தாள் இச்சங்கதியைக்கேட்ட ஸர்தார் மிக்கமனவருத்தமடைந்து மனித சுபாவம்போல் தமது தோழரை நோக்கி,

"நண்பர்களே! இனியுத்தத்தில் நம்மால் கொல்லப்படும் குரைஷியபடைத்தலைவர்களின் சவங்களை நீங்களும் அவ்வாறே நடத்துங்கள். அமீர் ஹம்ஸா ரலியல்லாகு அன்கு அவர்களை யிவர்கள் அவ்வாறு செய்ததற்காக என்னிடம் சிக்கும் எதிரிகளின் படைத்தலைவர்கள் பலர்மேலும் நான் வஞ்சம்தீர்த்துக் கொள்வேன்" என்றார்.

அவர் அவ்வாறு கூறி முடிக்குமுன் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானத்தினின்றும் இறங்கிவந்து ஹஸரத் அவர்களை நோக்கி,

“எதிரிகள் உங்களுக்கு என்னவிதமான தீங்கு எவ்வளவு செய்கிறார்களோ, அவ்விதமாகவே அந்த அளவேநீங்களும் செய்யுங்கள். கொஞ்சம் கூட அதிகமாய்ச் செய்யலாகாது. ஆனால் அவர்கள் செய்யும் துன்பத்திற்காக அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளாமல் பொறுத்துக்கொண்டீர் களானால் நீங்கள் பொறுமையுடைய உத்தமர் கூட்டத்தைச்சேர்த்தவர்களாய்க் கருதப்படுவீர்கள். நீங்கள் பொருத்துக் கொள்வீர்கள்தான். ஆனால் அப்படிசசெய்ய உங்களுக்கு வல்லமைபோதாது. ஆண்டவனுடைய வல்லமையைகொண்டு தான் செய்யவேண்டும்” என்றார்.

முடிவில் ஹஸரத் அவர்கள் நான் பொறுத்துக்கொள்கிறேன் என்றார்கள். மேற் கண்டதெய்வீக வாக்கியங்கள் உண்டானதே இஸ்லாமானவர்கள் அதற்கு முன்புதாங்கள் அனுசரித்து வந்த விக்கிரகாராதனைச் சம்பந்தமான சடங்குகள் முதலியவற்றை அடியோடொழித்து விட்டார்கள். பயனற்ற கொள்கைகளைக் கைவிட்டவர்கள் என்ற பெருமை முதல் முதல் அவர்களுக்குத்தான் உண்டாயிற்று.

சத்தியமார்க்கமாகிய இஸ்லாம் மார்க்கத்தை ஆண்டவன் கட்டளைப்படி உலகத்தார்க்குப் போதிக்கவந்த ஆண்டவனுடைய ரஸூலாகிய ஹஸரத் நபிநாயகம் அவர்களுக்குத்துணை நின்று, ஆண்டவனுக்காவும் சத்திய மார்க்கத்திற்காவும் பத்ருபோர் முனையில் நின்று தங்கள் பிராணனை த்தத்தம் செய்தவர்கள் எவ்வாறு ஆண்டவனுடைய அருளைப்பெற்றார்களோ, அவ்வாறே உஹத்யுத்தத்தில் ஷஹீதானவர்களும் ஆண்டவன் அருளைப்பெற்றார்கள். அவர்களுடைய பாபங்களனைத்தும், சூரிய னுடைய கிரணங்களுக்கு முன் அழிந்துபோகும் பனியைப்போல்

ஆண்டவன் அருளால் அழிந்துபோயின என்பததில் சந்தேகமே யில்லை.

நாம் மேலேகூறியபடி உஹத் சண்டைமுடிவானபின் மக்காவாசிகள் தங்கள் இருப்பிடத்தைநோக்கித் திரும்பினார்கள். ஹஸரத் அவர்களும் யுத்தத்தில் மடிந்த இஸ்லாமானவர்களுடைய பிரேதங்களை நல்லடக்கம் செய்துவிட்டுத்தம் கூட்டத்தார்களோடு மதினாவிற்கு திரும்ப ஆயத்த மானார்கள்.

ஹம்ராவுல் அஸத் விடத்தில் நடந்த சம்பவம்.

அச்சமயம் இஸ்லாமானவர்களில் சிலர் மக்காவிற்குச் செல்லும் குரைஷியர்களைத் துறத்திக்கொண்டு பின் சென்றார்கள். இவர்கள் சுமார் பத்துமைல்தூரம்வரையில் சென்றபோது, குரைஷியர் தலைவனாகிய அபூஸுபியான் என்பவன் அவர்களைக்கண்டு, "ஓகோஇப்போது நடந்தயுத்தத்தில் இஸ்லாமியர்கள் மிக்கசேத மடைந்து பலஹீனப்பட்டிருக்கிறார்கள். நாம் இப்போது திரும்பி யெதிர்த்தால் இவர்களை அடியோடழித்து விடலாம் என்று தீர்மானித்தான். அவன் கூட்டத்தாரில் மற்ற யாருக்கும்அது சம்மதமில்லை. அவர்களனைவரும்பேசாமல் மக்காவிற்கு நேராய்ச்செல்ல வேண்டும் என்றே கருதினார்கள்.

இதற்குள் இங்கு நடக்கும் சங்கதி ஹஸரத் அவர்களுக்கு எட்டியது. அதன்மேல் அவர் உஹதில் யுத்தம் செய்தவர்கள் மறுபடி எதிரிகளைத்துறத்திக் கொண்டு போயிருக்கும் இஸ்லாமியர்களுக்குத் துணை செய்யச் சொல்ல வேண்டுமென்று கட்டளை யிட்டார்கள். அவர்

களில் அனேகர் தேகங்களில் பலவிடங்களில் காயம் பட்டிருந்தும், அதையாவது தங்கள் ஆயாசத்தையாவது இலட்சியம் செய்யாது சற்றும் பின்வாங்காமல் சென்றார்கள்.

இவர்கள் அங்கிருந்து சுமார் பத்துமைல்தூரம் சென்றபின், ஹம்மராவுல் அஸரத் என்ற விடத்தில் தங்கள் கூட்டத்தாரைச்சந்தித்து அங்குதங்கினார்கள். இச்சங்கதியையறிந்த அபூசுபியான் "அடடா! இஸ்லாமானவர்கள் மிக்கசேதமடைந்து பலஹீனப்பட்டிருக்கிறார் களென்று நாம் கருதியது தவறு" என்றுணர்ந்து, அவர்களை யெதிர்க்கவேண்டுமென்ற எண்ணத்தையடியோடு விட்டு விட்டுத்துரிதமாய் மக்காவிற்குச்சென்றான்.

இந்த விடத்தில் குறைஷியரைச் சேர்ந்த அபூஉஸ்ஸா என்ற கவிராயனும், மஆவியாபின் முகீராஎன்பவனும் இஸ்லாமியரிடம் சிக்கிக்கொண்டார்கள். எதிரிகள் மக்காவை நோக்கிச்சென்று விட்டதையறிந்த ஹஸரத் அவர்கள் தம் பரிவாரத்தோடும் மேற்கண்ட இரண்டு சிறைகளோடும் மதீனாவிற்குத் திரும்பினார்கள்.

ஹஸரத் அவர்கள் திரும்பிவருவதை யறிந்த மக்கா வாசிகளனைவரும் குதுகலமடைந்து ஆண்பெண் அனைவரும் கூட்டங் கூட்டமாய் ஹஸரத் அவர்களை யழைத்துவர எதிர்கொண்டு சென்றார்கள். அக்கூட்டத்தார்களில் ஒருவருக்காவது தங்கள் சுற்றத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவராவது அந்த உஹத்யுத்தத்தில் ஷஹீதாகாமலில்லை. அப்படியிருந்தும் அவர்கள் தங்கள் சுற்றத்தார்க்ள் ஷஹீதான துயரத்தை அடியோடு மறந்து ஹஸரத் அவர்கள் ஜெயத்தோடு க்ஷேமமாய்த் திரும்பிவந்த சந்தோஷத்தையே அதிகமாகக் கொண்டு உள்ளத்தில் பூரிப்புடையவர்களானர்

கள். ஆனந்த பரவசத்தால் சிலர் ஹஸரத் அவர்கள் திரும்பி வந்ததால் தாங்களடைந்த சந்தோஷத்தைப்பாட்டுகளால் வெளியிட்டார்கள்.

இப்போது இஸ்லாமியர்களிடம் சிக்கியிருக்கும் சிரைகளில் அபூஉஸ்ஸா என்ற கவிராயன் நான் இனி இஸ்லாமியரை யெதிர்க்க ஆட்களைச் சேர்ப்பதில்லை அவர்களுக்குக் கெடுதிசெய்யவாவது கோபமூட்டவாவது முயல்வதில்லை என்று முன்பு இருமுறை வாக்குத்தத்தம் செய்து விட்டுத் தவ்றிப்போய் மறுபடி குரைஷியரோடு கூடிக்கொண்டு இஸ்லாமியரோடு யுத்தம் புரிந்தவன். இவனைக் கொலை செய்து விடும்படி கட்டளையிடப்பட்டது.

மாஆவியாபின் முகிரா என்பவன்தான் அமீர் ஹம்ஸாரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிரேதத்தின் நாசியை யறுத்து மான பங்கம் செய்தவன்: அவன் மூன்று நாட்களுக்குள் மதீனாவைவிட்டுப் போய்விட வேண்டுமென்று ஹஸரத் அவர்கள் கட்டளையிட்டார்கள் ஆனால் அவன்மயங்கி வழிதப்பித்திரும்பி மறுபடி மதீனாவிற்குள் வந்தான் ஆதலால் இஸ்லாமியர்கள் அவனைகொலைபுரிந்தார்கள்.

ஹிஜ்ரி 4—வது வருடம்

1. சரீயையே கதன்—

மதீனாவிற்கருகில் கதன் என்ற ஒரு மலையுண்டு. அங்கு பனிஸஅத் என்ற ஒரு கூட்டத்தார் வசித்துவந்தார்கள் அவர்கள் மதீனாவைத்தாக்கவேண்டுமென்று பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இச்சங்கதியை ஹஸரத்

அவர்ள் அறிந்து அபிஸல்மான் மக்ஸூத் றலியல்லாகு அன்கு என்பவரை எதிரிகளைத்தடுப்பதற்காக அனுப்பினார்கள். எதிரிகள் இதையறிந்து ஓட்டம்பிடித்தார்கள்.

---

2. சரியையே ரஜிஉ

மதினாவிலிருந்து ஹிஜ்ஜாஸூக்குச் செல்லும் பாதையில் ஹூஸைல் என்ற ஒரு கூட்டத்தார் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வாசஸ்தலத்திற்கு எதிரில் ரஜிவு என்ற ஒரு ஏரியுண்டு. குறைஷியர் யுத்தத்திலிருந்து மக்காவிற்குத் திரும்பிச்செல்லும்போது மேற்கூறப்பட்ட ஹூஸைல் கூட்டத்தைச்சேர்ந்த ஸூபியான் பின் காலித் என்பவன் அவர்கள் வெற்றியோடு திரும்பிவருகிறார்கள் என்று அவர்களைப்புகழ்ந்து கொண்டாட எதிர்நோக்கிச் சென்றான். அச்சமயம் ஸஅத் என்ற ஒருவனுடைய புத்திரியாகிய ஸூலாபா என்பவள் அடியிற்கண்டபடி பறைசாற்றி விளம்பரப் படுத்துவதை யறிந்தான். அந்த விளம்பரம் பின்வருமாறு:—

“உகத் என்றவிடத்தில் நடந்த யுத்தத்தில் இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்த ஆஸீம்பின் ஸாபித் என்பவர் என்புத்திரர் இருவரைக்கொன்று விட்டிருக்கிறார். ஆகையால் அவர் சிரசைக் கொய்து கொண்டுவந்து என்னிடம் அளிப்பவருக்கு 10 ஒட்டகங்கள் பரிசளிப்பேன்.

இப்படிக்கு.

ஸஅத் மகள் ஸூலாபா.”

இதையறிந்த ஸூபியான் பின் காலித் தானே அந்த வேலையைமுடித்து பரிசைப்பெற வேண்டுமென்று ஆவல் கொண்டான். ஆஸிம்பின் ஸாபித்தைத்தந்திரமாய்த் தன்னிடம் அழைத்து வந்துவிடும்படி அவன் யோசனை

செய்தான் அதன்படி ஹுசைல் கூட்டத்தாரில் சிலரையும் காராவாசிகள் சில்லரையும்கூட்டி அவர்களுக்குத் தக்கபடி போதனைசெய்து அவர்களை மதீனாவிற் கனுப்பினான்.

அவர்கள் அங்கு சென்று இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக்கொள்ள மிக்க பிரியமுடையவர்கள்போல் நடித்து ஹஸரத் அவர்களைக்கண்டு,

“ஹஸரத் அவர்களே! இஸ்லாம்மார்க்கம் அதிகமாய் எங்கும் பரவுவதைக்கண்டு அது சத்தியான மார்க்கமென்றும் ஆண்டவனால் உண்டாக்கப் பட்டதென்றும் இப்போது நாங்களும் எங்கள் கூட்டத்தாரில் பெரும்பாலாரும் அறிந்துகொண்டு அதில் ஈமான்கொள்ள ஆவலுடையவர் களாயிருக்கிறோம். ஆனால் எங்களுக்கு அம்மதத்தின் கொள்கைகளைப்போதித்து விளக்கிக்காட்ட ஒருவருமில்லை. ஆகையால் ஹஸரத் அவர்கள் கிருபை புரிந்து தகுதியான ஒரு போதகரை யெங்களோ டனுப்பினால் நாங்களும் நேர்வழியிற்றிரும்பி ஈடேறுவோம்” என்றுபிரார்த்தித்தார்கள்.

இவர்கள் மொழிகளைக் கேட்ட ஹஸரத் அவர்கள் ஆஸிம் பின்ஸாபித் என்றவரோடு ஒன்பதுபேரைத்துணைகூட்டி வந்தவர்களோடு கூடஅனுப்பினார்கள் இவர்கள் இரஜிஉ ஏரியரிகில் வந்து தங்கியபோது ஸுபியான் பின் காலித் அச்சமாசாரத்தையறிந்து தன்நண்பர்களில் சிலரைக்கூட்டிக்கொண்டு அங்கு வந்து ஆஸிம் பின்ஸாபித்தையும் அவர்களோடு துணைவந்தவர்களையும் கொல்ல முயன்றான். வந்திருக்கும் பத்துபேரும் யுத்தத்தில் கைதேர்ந்த சுத்தவீரர்கள். சிங்கத்தைப்போன்ற தைரியமும் வல்லமையு முடையவர்கள். ஆதலால் ஸுபியான் கருதியபடி சுலபமாய் அவர்களைக் கொன்று விடமுடியவில்லை. அவர்

களோ உக்கிரங்கொண்ட சிங்கங்கள் யானைக்கூட்டத்தில் பாய்வது போல் பாய்ந்து ஸுபியான் கூட்டத்தில் அனேகரைக்கொன்று விட்டார்கள். ஆயினும். எண்ணிக்கையில் தங்களில் மிக்க அதிகமான எதிரிகளோடு பத்துபேர் என்னேரம் போராடமுடியும். கடைசியில் அவர்களில் ஆறுபேரும் ஆஸிம் பின்ஸாபித்தும் வீராவேசத்தோடு சண்டையிட்டு ஷஹீதானார்கள். மற்ற மூவரும் எதிரிகளிடம் சிக்கிக்கொள்ள நேர்ந்தது.

ஆஸிம் பின்ஸாபித் இதற்கிடையில் எதிரிகள்தன் கழுத்தையறுக்கவே அழைத்து வந்தார்களென்று அறிந்து கொண்டார். ஆகையால் அவர் தன் பிராணன் நீங்கும் போது கீழ்க்கண்டபடி ஆண்டவனைப்பிரார்த்தித்தார்:—

“ஓ பரிசுத்தமான ஏகநாயகனே! அக்கிரமத்தை யழித்து நியாயத்தை நிலைநாட்டி யாவரையும் காப்பாற்றும் தீனதயாளுவே! உன்னால் அளிக்கப்பட்ட பரிசுத்தமான சத்தியமார்க்கத்தைப் போதித்து இக்கூட்டத்தாரை நல்வழிப்படுத்த எண்ணங்கொண்டே நான் இங்கு வந்தேனென்பதும், நான் உன்னையேநம்பி யிருப்பவனென்பதும் தங்கள் திருவுளமறிந்ததே. இவ்வஞ்சகரோ சதிசெய்து என் சிரசைக் கொய்துகொண்டு போகக்கருதி யிருக்கிறார்கள். ஓ என் அருமைத் தயாளனே! இச்சமயத்தில் நான் உன்னையே நம்பி என் ஆவியிருக்கும் போதே உன்னைப் பிரார்த்திக்கிறேன். என் ஆவி நீங்கியபின் என்தேகம் என் எதிரிகள் கையில் சிக்காதபடி காப்பாற்றி யருளவேண்டும்” என்று பிராத்தித்துக்கொண்டே ஆவியை விட்டுச் சொர்க்கத்தை யடைந்தார்.

அத்தகைய பக்தருடைய பிராத்தனையை ஆண்டவன் எப்படி ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியும். ஆகையால்

ஸுஃபியான் பின் காலித் அவரைக் கொல்ல நினைத்து அவரிடம் வந்தபோது சர்வ வல்லமையுள்ள அல்லாகுத் தஆலாவின் அருளால், ஆஸிம்பின் ஸாபித்தைச் சுற்றி மிக்க பயங்கரமான ஒனுய்க்கூட்டம்சூழ்ந்திருப்பதைக்கண் டான். அவன் என்ன பாடு பட்டும் அவர் கிட்ட நெரு ங்கக்கூட முடியவில்லை. கடைசியில் மிக்கவியப்பும் பிர மையுமடைந்து, இதற்கென்ன செய்யலாம் என்று ஆலோ சிக்கத் தீர்மானித்து தன் வாசஸ் தலத்திற்குத் திரும்பி னன். அன்றிரவு ஆண்டவன் கிருபையால் பெருமழை சொறிந்து எங்கிருந்தோ அகஸ்மாத்தாய் ஒருவெள்ளம் வந்து யுத்தத்தில் மடிந்து கிடந்த பிரேதங்களோடு ஆஸிம் பின் ஸாபித் அவர்கள் பிரேதத்தையும் அடியோடு அடித் துக்கொண்டு போய்விட்டது.

ஸுஃபியான் ஸுலாபியிடம் சென்று ஆஸிம்பின் ஸாபித் மடிந்து போனதைப் பற்றிகூரி பரிசு கேட்டான். ஸுலாபி நான் கூறியபடி அவருடைய சிரசைக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தவர்களுக் குத்தான் கொடுப் பேன் என்ருள். பண ! ஆசையால் மனிதர் எத்த கைய பாபகாரியங்களைச் செய்யவும் தூண்டப்படுகிருர்கள் பணத்திற்கு ஆசைவைத்து அத்தனையுயிர்களைமடியவைத்த ஸுஃபியான் கடைசியில் பரிசுப்பணத்தையும் இழந்தான் அதன்பிறகு அவன் சிறையாக்கப்பட்டிருந்த மூவரையும் மக்காவிற்கு அழைத்துச்சென்ருன். அவர்கள் கரங்கள் கட்டப்பட்டிருந்தன. வழியில் அம்மூவரில் ஒருவராகிய அப்துல்லாபின் தாரிக்என்பவர் தன் கட்டுகளை யறுத்துக் கொண்டு வாளை யுருவிக்கொண்டு ஸுஃபியான்மேல் பாயத் துடங்கினர் ஸுஃபியான் கூடவந்தவர்களுக்கு ஆயுத மேந் திச்சண்டையிடச் சக்தியில்லை யாதலால் அவர்கள் தூரத்தி லிருந்தபடியே அப்துல்லா பின் தாரிக்கைக் கற்களாலடித்து

க்கொன்றூர்கள். ஸுபியான் மற்ற இருவரையும் அழைத்துச்சென்று மக்காவாசிகளிடம் விற்று விட்டான். குரேஷியர்கள் அவர்களை மிக்க இம்சை செய்து கொண்று விட்டார்கள். ஸுபியான்தான் இஸ்லாமானவர் களுக்குச் செய்த இந்த அநீதங்களுக்குத்தன்னைச் சும்மாவிடமாட்டார்களென்று கருதி, அவர்களோடு சண்டையிடுவதற்காக ஒருசேனையைச் சேர்க்கத் தொடங்கினான்.

இச்சங்கதியை இஸ்லாமானவர்கள் அறிந்ததும் எதிர்த்து சண்டை செய்ய ஆயத்தம் செய்தபோது அப்துல்லாபின் அனீஸ் றலியல்லாகு அன்கு என்பவர் இதைத் தடுக்க ஆலோசித்து கடைசியில் சண்டையிட்டுப்பல ஜனங்கள் மடியும் படிக்கும் அதனால் அனேக குடும்பங்கள் துன்பமடையும் படிக்கும் செய்வதை விட இதற்கெல்லாம் காரணகர்த்தாவாயிருந்து குரைஷியரை யுத்தம் செய்யும்படி தூண்டிகொண்டயிருக்கும் அபுஸுபியான் என்பவனைத் தக்க சமயம்பார்த்துக் கொலை செய்து விடுவதே நலம் என்று தீர்மானித்தார்கள். அவ்வாறே சிலர் மக்காவிற்குச் சென்று அங்கு தங்கியிருந்து, தகுதியான சமயம்பார்த்து அபுஸுபியானைக் கொலை செய்து விட்டார்கள்.

3-வது ஸரீய்யையே பீரேமஊனு.

நஜத் என்ற பிரதேசத்தில் மஊனுவென்ற ஒரு கேணியிருந்தது. அதைச்சூழ்ந்து பனீஆமிர் என்ற கூட்டத்தார் வசித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் தலைவர் மிகச் செல்வாக்குள்ள அதிகாரியாகிய அபூபரா ஆமிர்பின் மாலிக்கென்பவர். அவர் ஈட்டிச்சண்டையில் மிக்க வல்லவராகிய வீரர். அவர் உள்ளத்தில் பரிசுத்தமாகிய இஸ்லாம் மார்க்கத்தையே நம்பி அதை விசுவசிப்பவ ராயினும், வெளிக்கு அவர் இஸ்லாம் மதத்தை விரும்பியவரென்று

சற்றும் தோன்றுது. ஏனெனில் அந்த உண்மையை யறிந்தால் தமது கூட்டத்தார் தம்மைக்கொன்று விடுவார்களென்ற அச்சத்தால் அவர் அதைத் தமது மனதிலேயே மறைத்து வைத்திருந்தார்.

அபூபரா ஆமிர்என்ற அத்தலைவர் நபிநாயகம் அவர்களிடஞ்சென்று இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றிப் பிரசங்க மூலமாய் நஜத்நாட்டி லுள்ளவர்களுக்குப் போதிப்பதற்காகத் தகுதியுடைய சிலரை யவ்விடத்திற்கு அனுப்பும்படி வேண்டிக்கொண்டார். நஜத்நாட்டார் தம் ஆட்களுக்குத் தீங்கு செய்வார்களென்று தாம் சந்தேகப்படுவதாய் நாயகம் அவர்கள் கூறியபோது, அபூபரா ஆமிர், போதிக்க வருபவர்களுக்கு ஒரு ஆபத்தும் நேராவண்ணம் பாதுகாக்கும் விஷயத்தில் தாம் பொறுப்பா யிருப்பதாய்க் கூறினர் - அதன்மேல் நாயகமவர்கள், மிக்க பக்தியுடையவர்களும், குர்ஆன் ஷரீபை மனப்பாடமாய் ஓதவல்லவர்களும், அதன்கட்டளைகளின்படி ஒழுகுபவர்களும், ஆசார சீலர்களுமாகிய காரீஎன்ற நாற்பது பெயர்களை அபூபரா ஆமிரோடு கூட்டியனுப்பினர்கள். அதோடு அந்நாட் டதிகாரிக்கும் ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தார்கள்.

இவர்க ளனைவரும் பீரேமஊனு என்ற ஸ்தலத்தைச் சேர்ந்து அங்கு தங்கியபின் அபூபரா ஆமிர் தமது தம்பியின் புத்திரராகிய கிராம்பின் மல்ஹான் ரலியல்லாஹு அன்கு என்பவர்வசம் ஹஸரத் அவர்கள்கொடுத்த கடிதத்தையளித்து, அந்நாட்டின் தலைவனிடம் கொடுக்கும்படி ஏவினர். ஆமிர்பின் துபைர்பின் மாலிக் என்பவன் அந்நாட்டுத் தலைவனுயிருந்தான். அவன் இஸ்லாமானவர்கள்மேல் கொடிய விரோதங் கொண்டிருப்பவன். ஆகையால் அவன் ஹஸரத் அவர்கள் கடிதத்தைக்கண்டதும்

அபூபரா ஆமிர்மேல் மிக்க விரோதமும் கோபமும் கொண்டு, அந்த ஆத்திரத்தால் முன் பின் ஒன்றும் யோசிக்காமல் கடிதம் கொண்டுவந்த கிராம்பின் மல்ஹான் ரலியல்லாஹு அன்ஹுவை உடனே தன் வாளால் வெட்டிக் கொன்றுவிட்டு, பெருங்கூட்டமான தன் ஆட்களைக்கூட்டிக்கொண்டு, அங்குவந்திருந்த இஸ்லாமானவர்கள் மேல் விழுந்து அவர்களைத் தாக்கினன். நாற்பது பேர்கள் ஒரு பெருங்கூட்டமான வீரரோடு போர்புரிந்து எப்படி தப்ப முடியும்? ஆகையால் ஒருவர் தவிர மற்றவர்க ளனைவரும் யுத்தம் புரிந்து ஷஹீதானர்கள். அப்படி ஷஹீதானவர்களில் புஹைரா ரலியல்லாகு அன்கு என்பவர் ஒருவர். அவர் முன் ஹஸரத் அவர்களும் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் மக்காவிலிருந்து புறப்பட்டு வழியிலுள்ள ஒருமலைக் குகையில் மறைந்திருந்தபோது அவர்களுக்கு ஆகாரம் கொண்டுபோய்க்கொடுத்தவர் இவர்தான்.

அபூபரா ஆமிர் நடந்த் மேற்கண்ட கோரசம்பவத்தால் மிக்க மனேவியாக்கூலம் கொண்டு அதேவியாதியாகிக் கொஞ்சகாலத்திற்குள் மவுதானர். அதன்பின் அவருடைய புத்திரனகிய ரபிஆ என்பவன் தன் சிறியதந்தையின் புதல்வனகிய கிராம்பின் மல்ஹான் ரலியல்லாஹு அன்கு என்பவன் கடிதம் கொண்டுபோய் அந்நாட்டு அதிகாரியிடம் கொடுத்ததாலேயே இத்தகைய சம்பவங்கள் நேர்ந்து தன் தந்தை மடிந்தாரென்று மிக்க குரோதங் கொண்டிருந்தா னதலால், அவன் தன் சிறியதந்தையைக் கொல்லக்கருதி ஈட்டியாற்குத்திவிட்டான். ஆனல் அவர் அதனல் கொடியகாய மடைந்தாரேயன்றி மடியவில்லை, ஆயினும் சில நாட்களுக்குப்பின் வாந்தி பேதியால் மவுத்தானர்,

மதினுவிலிருந்துவந்த நாற்பதுபேர் காரிகளில் ஒருவர்மட்டும் கொல்லப்படவில்லை யென்று கூறினேமல்லவா. அப்படித் தெய்வகதியாய் உயிர் தப்பியவர் உம்ரூபின் உம்மய்யா ஸம்ரீரலியல்லாஹு அன்கு என்பர். இவர் பீரேமஊனுவிலிருந்து வெளிப்பட்டு மதீனுவை நோக்கித் திரும்பிவந்துக் கொண்டிருக்கையில் பனியாமீர் கூட்டத்தைச்சேர்ந்த இரண்டுபேர் அவரோடுவந்து கலந்தார்கள். இக்கூட்டத்தார் இஸ்லாமியருக்கு விரோதிகள். இவர்களால் உம்ரூபின் உமய்யா முன்பு ஒருசமயம் தமது படைமுழுமையும் இழந்துவிட்டிருக்கிருர். ஆகையால் இந்த இருவரும் நமக்குச் சதிசெய்பவர்களென் றச்சமடைந்து சமயம்பார்த்து அவர்களைக் கொன்றுவிட்டார். ஆனுல் அந்த இருவரும் இஸ்லாமானவர்கள்மேல் விரோதம்கொண்டவர்களல்ல. அதுவரையில் அவர்கள் இஸ்லாமியருக்கு ஒரு தீங்கும் செய்தவர்களல்ல. அம்மாதிரி இஸ்லாமியர்மேல் ஒருபோதும் விரோதம் கொள்வதில்லையென்று அவர்கள் ஹஸரத் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிருர்கள். ஆனுல் அச்சங்கதி உம்ரூபின் உம்மய்யாஸம்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கொஞ்சங்கூட தெரியாது.

மெய்ப்பக்தி யுடையவர்களும் வேதநெறிபிசகாத உத்தமர்களுமாகிய தமது முப்பத்தொன்பது தோழர்களும்கோரமரண மடைந்த துக்க சமாசாரத்தை ஹஸரத் அவர்கள் கேள்விப்பட்டதும் சகிக்கொணுத் துயரமுற்றுர்கள். ஆயினும் பொறுமையோடு சகித்துக்கொண்டிருப்பதையே நலமெனக்கருதி, நாற்பது நாட்கள் வரையிலும் தினம் ஐந்து வேளைகள் தொழும்போதும் அக்கிரமமாய் கொல்லப்பட்ட தமது முப்பத்தொன்பது தோழர்களின்

ஆன்மாக்களும் நற்பதவியடையும் பொருட்டு ஆண்டவனை ப்பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள்.

4-வது உஸ-வையே பனீநஸீர்.

உம்ருபின் உம்மய்யா அவர்களால் அந்த இருவர்கொல்லப்பட்ட சங்கதியைக்கேட்ட ஹஸரத் அவர்கள் மிக்க துயரமுற்று, அவர்கள் வாரிசுகளுக்கு ஆதரவு ஏற்படுத்துவதற்காக மதீனாவிலுள்ளவர்களிடம் பணம் வசூல் செய்தார்கள். இவ்வாறு சமயம் நேரும்போது தாங்களும் உதவிபுரிவதாய் அங்குள்ள யூதர்களும் வாக்களித்திருந்ததால், ஹஸரத்தவர்கள் யூதர்களையும் உதவி கேட்டார்கள்.

யூதர்களோ இடையில் இஸ்லாம்மார்க்கம் அதிகமாய்ப் பரவுவதைக்கண்டு மனஞ்சகியாமல் உள்ளத்தில் குரோதங் கொண்டிருந்தார்கள்; இஸ்லாமானவர்களுக்குக் கெடுதிசெய்யவும் முயற்ச்சியெடுத்துக்கொண்டார்கள். ஒருநாள் ஹஸரத் அவர்கள் யூதர்கள்வசிக்கும் ஒரு வீதியில் நின்று பிரசங்கம் செய்துகொண் டிருக்கையில் யூதர்கள் அவரைக் கொல்லக்கருதி ஓர்வீட்டின் மேல்மாடியிலிருந்து ஒருபெரிய கல்லை யவர்கள்மேல் தள்ளினார்கள். தெய்வ சங்கல்பத்தால் அச்சமயம் ஹஸரத் அவர்கள் அந்த விடத்திலிருந்து விலகிக்கொண்டதால் உயிர் தப்பினார்கள். ஹஸரத் அவர்கள் கோரியபடி இச்சமயம் உதவிசெய்ய யூதர்கள் மறுத்துவிட்டார்கள்.

ஹஸரத் அவர்கள் இவர்களையடக்கி முன்போல் நடக்கச்செய்ய வேண்டுமென்று எண்ணி, இவர்கள் வசிக்கும் வீதிகளைச்சுற்றி தமது சேனைவீரர்களை வைத்து முற்றுகை போட்டுவிட்டார்கள். ஆறுநாட்கள் வரையில் யுத்தம் நடந்தபின் யூதர்கள் தளர்ச்சியடைந்து, தாங்கள் மறுபடியும்

சமர்த்தானஞ் செய்துகொள்வதாகவும், தாங்கள் கோருகிற படி யனுமதியளித்தால் தாங்கள் மதினாவைவிட்டுப் போய் விடுவதாகவும் கூறினார்கள்.

அதாவது அவர்கள் தங்கள் ஆயுதங்கள்தவிர மற்ற சொத்துகள் யாவற்றையும் ஒட்டகங்கள்மேல் எடுத்துக் கொண்டுச்செல்ல அனுமதி கேட்டார்கள். ஹஸரத் அவர் கள் அவ்வாறே யனுமதி அளித்தபின் அவர்கள் தாங்கள் வசித்துக்கொண்டிருந்த வீடுகளையும் இடித்துவிட்டு மதீனா வைவிட்டுச் சென்றார்கள்.

ஹஸரத் அவர்கள் மதீனாவிலுள்ள அன்ஸாரீன்களை நோக்கி, "யூதர்களின் மீதியுள்ள சொத்துகளையும் பூமியை யும் முஹாஜரீன்களுக் களித்துவிடக் கருதுகிறேன். அவர் கள் வந்ததுமுதல் உங்கள் வீடுகளிலேயே போஷிக்கப் பட்டு வருகிறார்கள். பிறகு அவர்கள் தனித்தனியாய் வாசஸ்தலங்களைக் கட்டிக்கொண்டு வெவ்வேறு தனித் தனி குடும்பங்களாய் வசித்துக்கொண் டிருப்பார்கள். உங்கள் கஷ்டமும் குறைந்துவிடும்" என்றார்கள். அன்ஸா ரீன்களின் தலைவர்களாகிய ஸஅத்பின்மஆஸ், ஸஅத்பின் உபாத் என்பவர்கள் ஹஸரத் அவர்களைநோக்கி,

"முஹாஜரீன்கள் மதத்திற்காகவும் தங்களுக்காகவும் வீடுவாசல், சொத்து சுதந்திரங்கள், யாவற்றையும் விட்டு விட்டு வந்து விட்டவர்கள். ஆகையால் யூதரது சொத்து கள், பூமிகள் யாவற்றையும் அவர்களுக்கே தங்கள் விருப் பத்தின்படி பகிர்ந்து கொடுத்து விடுங்கள். ஆயினும் அவர் கள் இப்போதிருப்பது போலவே எங்கள் இல்லங்களி லேயே வசித்துவரட்டும்" என்றார்கள். இம்மொழிகளைக் கேட்ட ஹஸரத் அவர்கள் மிக்க சந்தோஷமடைந்து, அவ்

17109

வாறே யூதர்களின் சொத்து முதலியவற்றை முஹாஜிரீன் களுக்கே பங்கிட்டளித்து விட்டார்கள்.

ஓ! நமது அன்பும் பிரியமுமுள்ள மாணுக்கர்களே! இச்சந்தர்ப்பத்தில் நாம் கூறும் அவசியமான நற்புத்தியைச் சற்று அக்கரையாய்க் கவனம்வைத்துக் கேளுங்கள். அக்காலத்தில் அவர்கள் பிறர்கஷ்டங்களையும் துன்பத்தையும் கவனித்து மானிடர்களுக்குள் எத்தகைய உதார குணத்தையும், கருணையையும், பிறர்கஷ்டங்களையும் நீக்கி அவர்களுக்கு உதவிசெய்யும் நற்குணத்தையும் நிலை நாட்டியிருந்தார்கள் என்பதைக் கவனியுங்கள்.

அவர்கள் இக்காலத் தவர்கள்போல் பாடசாலைகளில் வாசித்தவர்களல்ல சர்வ கலாசாலைகளில் கல்விகற்று எப். ஏ, பி. ஏ, யம். ஏ. முதலிய பட்டங்களைப் பெற்றவர்களுமல்ல. அழகிய கடிதங்களில் அச்சடித்து நேர்த்தியாய்ப் பைண்ட் செய்யப்பட்ட பலவிதநூல்களைப் பட்டங்கள் பெற்ற பண்டிதர்களாகிய பல உபாத்தியாயர்களிடம் வாசித்தவர்களுமல்ல, ஆண்டவனால் அளிக்கப்பட்ட பரிசுத்தமான குர்ஆனே ஷரீப்என்ற ஒன்றைக்கொண்டே ஜனங்களுக்குள் ஒற்றுமையையும் சகோதரத்வத்தையும், பரஸ்பர அன்பையும், பரோபகாரத்தையும், நல்லொழுக்கத்தையும், ஆண்டவனுடைய அருளைப் பெறும்மார்க்கத்தையும், உலகில் நடந்து கொள்ளவேண்டிய நன்மார்க்கத்தையும், இன்னும் இம்மானிட ஜன்மங்கட்கு அவசியமான இவ்வுலக விஷயங்களையும் யாவற்றையும் போதித்தார்கள்.

மாணுக்கர்களே! தெய்வீகத்தன்மை பொருந்திய இக்குர்ஆன் ஷரீபின் மகிமையும் பெருமையும் எப்படிப் பட்டவை யென்று இப்போது சிந்தித்துப் பாருங்கள். இதன் மகிமை யளாவிட்டுக் கூறத்தக்கதல்ல.

ஆகையால் நீங்கள் வாசிக்கக்கூடிய நூல்கள் எல்லா வற்றிலும் இப்பரிசுத்தமான குர்ஆன் ஷரீபே முதன்மை யான தென்றுணர்ந்து, இதையேமுதலில் வாசிக்கத்தொட ங்குங்கள். ஆண்டவனுக்கு இரண்டாவதாகிய அவனுடைய ரசூலுக்கு சமமாய் இதைமதியுங்கள். அப்போது தான் நீங்கள் ஆண்டவனிடத்திலும் அவன் ரசூலிடத்திலும் ஈமான் கொண்டவர்க ளாவீர்கள். இதையொரு வேடிக்கை வேலைபோல் வாசிக்காமல் இதனிடத்தில் நிறைந்த பக்தியும் பூரண அன்பும் வைத்துவாசியுங்கள். இதில் கூறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் நாயகம் அவர்கள் உங்களுக்கு நேரில் போதிக்கும் அவருடைய சம்பா ஷணை யென்று மதித்து அதன்படி ஒழுக முயலுங் கள். நீங்கள் உயிருள்ளமட்டும் இன்பததிலும் துன் பத்திலும் இதைக் கைவிடாமல் ஜாக்கிரதையோடு உங் கள் உயிர்போல் காப்பாற்றுங்கள். பகலுக்கும் இர விற்கும், வெயிலுக்கும் நிழலுக்கும் உள்ள வித்தியாசம் போல் நன்மைக்கும் தின்மைக்கு முள்ள வித்தியாசம் இதில் பூரணமாய் விளக்கப்பட்டிருக்கிறதை மறவாதீர்கள். மேற்கூறியபடி பக்திவிசுவாசத்தோடு உங்கள் மரண பரியந்தம் இவ்வுலகில் இதைக்கைவிடாதிருந்தால், உங்கள் மரணத்திற்குப்பின் இது மறுஉலகிற்கு உங்களை விடாமல் தொடர்ந்து வந்து உங்களுக்கு ஆண்டவன் அருள் கிடைக் கும்படிச் செய்யும் என்பதை சத்தியம் என்று நம்புங்கள். ஆமீன்.

ஹிஜ்ரி 6-வது, மரணம், கலியாணம்.

ஜனனம் முதலிய சம்பவங்கள்.

இதேவருடத்தில் தான் உம்முல் மூமினீன் ஸைனப் பின் ஹஸீமாரலியல்லாகு அன்ஹா அவர்கள் வபாத்தா

ஞர்கள். ஹஸரத் அவர்களின் பேரப்பிள்ளையும் உஸ்மான் ரலியல்லாகு அன்ஹுவினுடைய புத்திரருமாகிய அப் துல்லா றலியல்லாகு அன்குவினுடைய கண்ணில் கோழி கொத்தியதால் அதே வியாதியாகி வபாத்தானார்கள். ஷஃபான் மாதம் 4-ம்தேதி ஜனாப் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தார்கள். அதே வருடம் ஹஸரத் அவர்கள் பீபிஉம்முஸல்மா ரலியல்லாகு அன்ஹா அவர்களை மணம்புரிந்து கொண்டார்கள்.

இவ்வருடம் நடந்த எல்லாச்சம்பவங்களிலும் ஹஸ ரத் அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுடைய தாயா ராகிய ஹஸரத் பாத்திமா பின்தெ, அஸத்ரலியல்லாகு அன்ஹா அவர்கள் மரணமடைந்ததே பெரியதுக்க கரமா னவிஷயம். அன்றையதினம் ஹஸரத்அவர்கள் தன்தோழர் களோடு உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஒரு ஆள்வந்து நேர்ந்த மரணசங்கதியைக்கூறினர். உடனே ஹஸரத் அவர்கள் தன்தோழர்களை நோக்கி புறப்படுங்கள் நமது தாயாரைப் போய்க்காண்போம்'' என்று கூறி, அவர்களை யழைத்துக்கொண்டு மரணம் நேர்ந்த விடத்திற்குச்சென் ருர்கள், அங்கு சென்றதும் ஹஸரத் அவர்கள் மையித்தி னருகில் உட்கார்ந்து, ஓ என்னையீன்றதாய்கு இரண்டாவ தாகிய தாயே''! என்று பிரலாபித்து, அந்தம்மாளுடைய உத்தம குணங்களை யெடுத்துப் பிரசங்கித்தார்கள்.

அதன் பிறகு மையத்தைச் சுத்தி செய்து தாம் அணி ந்துகொண்டிருந்த வஸ்த்திரத்தைஅதற்கு கபன் செய்து மயானத்திற்குக் கொண்டுபோகப் பட்டபோது ஹஸ ரத் அவர்கள் தாமும் ஒருபுறம் அதைச்சுமந்து சென்ருர் கள். மையத்தையடக்கம் செய்யக்குழி தோண்டப்பட்ட தும், ஹஸரத் அவர்கள் முன்பு அதில் இறங்கி படுத்து சற்று நேரங்கழித்து எழுந்து வெளியில் வந்துவிட்டார்கள்

அதன் பிறகு மைபித்தை மதாசாரப்படி யடக்கம் செய்யப்பட்டது.

இதனால் ஹஸரத் அவர்கள் தம் சுற்றத்தார்களாகிய பெரியோர்களிடத்தில் எத்தகைய மரியாதையும் அன்பும் வைத்திருந்தார்க ளென்பதும், தமது நடக்கையால் உலகத்தாருக்கு நல்வழியில் நடக்கும் மார்க்கத்தைப் போதித்தார் களென்பதும் நன்கு விளங்குகிறது. இன்னும் அவர்கள் ஏழைகள் செல்வவந்தர் என்ற வித்தியாசம் பாராமல் யாருக்கு மரணம் நேர்ந்தாலும், யாருக்கு கஷ்டம் நேர்ந்தாலும், பொறுமையோடு உதவி புரிந்து வந்தார்கள். ஆகையால் நாமும் ஆண்டவனுடைய கட்டளைகளைப் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு யாவர்க்கும் உதவிபுரியும் நற்குணத்தையுடையவர்களா யிருக்க வேண்டும்.

7-வது தௌருத் வேதத்தைக் கற்றுக் கொள்ளக் கட்டளை.

ஹஸ்ரத் அவர்கள் பலசந்தர்ப்பங்களில் யூதர்களோடு கடிதப் போக்கு வரவுவைத்துக்கொள்ள வேண்டியதா யிருந்தது. ஆகையால் அவர்கள் ஸைத்பின் ஸாபித் ரலியல்லாகு அன்ஹுவை நோக்கி:—

"நீர் தௌராத்வேதத்தைக் கற்றுக்கொள்ளும். ஏனெனில் நாம் யூதர்களுக்குக் கடிதம் எழுதுவதற்காக அவர்களுடைய மதாசார ஒழுக்கங்களை யுணர்ந்திருப்பது சமயோசிதப்படி அனுகூலத்தை யளிக்கும். மேலும் அவர்கள் வேதத்தை யுணர்ந்திருந்தால் அவர்களிடமுள்ள குற்றங்கள் சூதுகள் முதலியவற்றில் நாம் சிக்கிக்கொள்ளாமல் எச்சரிக்கையா யிருக்க அனுகூலமாகும்" என்று கட்டளை

யிட்டார்கள். ஸைத்பின் ஸாபித் ரலியல்லாஹு அன்கு அவர்கள் ஹஸரத் அவர்கள் கட்டளைப்படி தௌராத் வேதத்தைப் பதினைந்து நாட்களில் பூரணமாய்க்கற்றுக் கொண்டார்கள்.

8-வது போதை வஸ்துக்களைக் விலக்கப்பட்டது.

நீதிப்படி மனிதர்கள் தங்கள் நாட்டிலுள்ள தீயவழக் கங்களையும் நடக்கைகளையும் நீக்க முயலவேண்டியது. அவற்றை விலக்குவது கஷ்டமாய்த் தோன்றினும், ஊக் கத்தோடும் சிரத்தையோடும் வைராக்கியங்கொண்டு அவ ற்றை விலக்கவேண்டும். ஆண்டவனருளால் சுத்தமாகிய மனமும் வாக்குச்சுத்தமுமுடைய உத்தம அறிவாளிகள் குறிப்பினால் நல்லவை தீயவைகளைப் பகுத்துணர்ந்து, நல் லவைகளைக் கைக்கொண்டு தீயவற்றை விலக்கிவிடுவார்கள். மத்திம அறிவுடையோர்க்கு நல்லவை தீயவைகளின் சுபா வங்களை விளக்கிக் காட்டிப்போதித்தால் தான் அவர்கள் வழிப்படுவார்கள். மந்த அறிவுடைய அதமர்களோ அவர்களுக்குப் போதிப்பதோடு அவர்களைக் கண்டித் துப் பலவந்தப் படுத்தியேனும் நல்வழியில் திரும்பச்செய் தால்தான் வழிப்படுவார்கள்.

ஹஸரத் அவர்களுக்குத் தெய்வீகம் பொருந்திய நபிபட்டம் கிடைத்தபோது அவர்கள் முதல் முதல் தம் நாட்டிலுள்ளோர்க ளிடத்திலேயே தமது தொழிலைச் செய்யத் தொடங்கினார்கள். அக்காலத்தில் அராபியாவில் பதுமை ஆராதனையும் ஆண்டவன் சம்மதத்திற்கு முற் றும்மாறான கொள்கைகளும் துர் ஆசாரங்களும், வீண் சடங் குகளும், மூடநம்பிக்கைகளும் அபரிமிதமாயிருந்தன. குடி

ப்பதும், சூதாடுவதும் எங்கும் பரவியிருந்தன. அக்கெட்ட குணங்களை நீக்கி அவர்களைச் சீர்திருத்துவதற்கு வேண்டிய பொறுமையையும், தைரியத்தையும், ஊக்கத்தையும் ஆண்டவன் ஹஸரத் அவர்களுக்கு அளித்திருந்ததால் அவர்கள் முதல் முதல் பதுமை யாராதனையையும், கடவுளுக்குச் சமமாய் வேறொன்றை நினைப்பதையும் நீக்கினர்கள். அக்காலத்தில் ஆண்டவன் ஹஸரத் அவர்களுக்குப் பின்வரும் வேதவாக்கியத்தை யருளினன்:- "இவர்கள் குடியையும் சூதாட்டத்தையும்பற்றி உம்மைக்கேட்பார்கள். நீர் அவர்களுக்கு' அவற்றில் மிக்க பாபமும் துன்பமும் இருப்பதோடு கொஞ்சம் பயனும் இருக்கிறதென்றும், ஆனல் அச்சொல்ப பயனைக்காட்டிலும் பாவமும், தீங்கும் அளவு கடந்த அவ்வளவு அதிகமாயிருக்கிறது' என்றும் கூறும்" அதன்பேரில் அனேக ஜனங்கள் அத்தீயசெயல்களை விட்டு விட்டார்கள்.

சில நாட்கள் கழித்து இன்னொரு வேதவாக்கியம் இறங்கியது. அதாவது "ஒ ஈமான்கொண்டவர்களே! நீங்கள் போதையா யிருக்கும்போது தொழாதீர்கள்" என்பதே.

இத்தகையகட்டளை பிறந்தபோது, அந்நாட்டில் ஆதி முதல் தீயநடக்கையுடையவர்களே போதை செய்வதாகிய துர்ப்பழக்கமுடையவர்களா யிருந்தார்கள். இக்கட்டளை பிறந்தபின் அவர்கள் சாதாரண வேளைகளில் குடிக்கவும் தொழுகைவேளை நெருங்கும்போது குளித்து முழுகிச் சுத்தம் செய்துகொண்டு தொழுகைக்குப்போய், அது முடிந்தபின் முன்போல் போதைவஸ்துக்களைக் குடிக்கவும் தொடங்கினர்கள். ஆண்டவனுடைய பிரியம் இக்கொடிய செய்கைகளை யிவர்கள் அடியோடு விட்டொழிக்க வேண்டு

மென்பதே. ஆகையால் மறுபடி கீழ்க்கண்ட வேதவாக்கியம் பிறந்தது.—

"ஓ ஈமான் கொண்டவர்களே! போதை வஸ்துக்களைப் பானம் செய்வதையும் சூதாடுவதையும் அடியோடொழித்து விடுங்கள். அவை பெரும்பாதகச் செய்கைகளாகும். மாயையாகிய பிசாசானது இத்தகைய பாபச் செய்கைகளைச் செய்யும்படி உங்களைத்தூண்டி, முடிவில் நமது அருளை நீங்கள் பெறுவண்ணம் உங்களைத்தடுத்து விடுகிறது. நீங்கள் அதற்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாயிருந்து இப்பாபச்செய்கைகளை யடியோடு விட்டொழியுங்கள். அப்போதுதான் நீங்கள் நமது கருணைக்குப் பாத்திரவான்களாகிச் சுகமடைவீர்கள்."

இச்சங்கதி மதீனாவிற்கெட்டியது உடனே அங்குள்ள ஜனங்கள் அப்பழக்கங்களை யடியோடு விட்டு விட்டார்கள். போதை யுண்டாக்கும் பானங்களை வைத்துக் கொண்டிருந்தவர்கள். அவற்றை யெறிந்து விட்டார்கள். அவற்றை விற்கும் கடைகளெல்லாம் எடுத்து விடப்பட்டன.

ஹிஜ்ரி 5-வது வருடம்.

1-வது பீபி ஸைனப்ரலியல்லாகு அன்ஹா அவர்கள் திருமணம்.

பீபி ஸைனப் ரலியல்லாகு அன்ஹா அவர்கள் ஹபஷ் ரலியல்லாகு அன்ஹாவுடைய சகோதரியும் ஹஸரத் அவர்களுடைய அத்தைபுத்திரியுமாகும். இம்மாது ஹஸரத் ஸைத்பின் ஹாரிஸ் ரலியல்லாகு அன்ஹாவுக்கு மணம்செய்யப் பட்டிருந்தார்கள். அவர் ஹஸரத் அவர்

களுக்கு நபிபட்டம் கிடைத்ததன் முன்பு அவர்களிடம் அடிமையாயிருந்தவர். ஹஸரத் அவர்களுக்கு நபிபட்டம் பெற்றபோது அவரை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து விட்டார்கள்.

ஸைத்பின் ஹாரிஸ்ரலியல்லாகு அன்குஎன்பவர் மிக்க யோக்கியமான நடக்கையுடையவர். ஆயினும் அவர் அடிமையாயிருந்தவரான படியால், இராஜவம்சத்தைச் சேர்ந்த உயர் குடியிர்பிறந்த மாதாகிய ஸைனப் ரலியல்லாகு அன்ஹா தன் கணவராகிய அவரை மதிப்பதில்லை. அதனால் இருவருக்குள் ஒற்றுமையும் பரஸ்பர அன்பு மின்றி, அடிக்கடி சச்சரவு நேர்ந்துக்கொண்டிருந்தது. பன்முறை ஹஸரத் அவர்கள் இருவருக்கும் சமாதான முண்டாக்கிவைத்தும் அவர்கள் ஒற்றுமைப்படாமல் கடைசியில் கலியாண ஒப்பந்தத்தை உடைத்துக்கொண்டார்கள்.

2-வது உஸ்வையேபனீ முஸ்தலிக்.

பனீமுஸ்தலிக்கைச்சேர்ந்த கூட்டத்தாருக்கு ஹாரிஸ்பின் ஸரூர் தலைமையாயிருந்தான். அவன் இஸ்லாமியர்கள் மேல் விரோதங் கொண்டதால் அவர்களோடு போர்புரியத்தீர்மானித்து பல கூட்டத்தார்கள் சேர்ந்த ஒரு பெருஞ்சேனையை ஆயத்தம் செய்தான். இச்சங்கதி ஹஸரத் அவர்களுக்குத் தெரிந்ததே அவர்கள் புரைதாபின் ஹஸீப் அஸ்லமி ரலியல்லாகு அன்கு அவர்களை யழைத்து எதிரிகளின் நோக்கங்களை யறிந்து வரும்படிகட்டளை யிட்டார்கள். அவர் அவ்வாறே சென்று எதிரிகளின் சேனைத் தலைவனையேசந்தித்து எதிரிகளின் நோக்கங்களை நன்றாயறிந்து கொண்டு வந்து ஹஸரத் அவர்களிடம் தெரிவித்தார். எதிரிகளைத் தாக்குவதற்காக ஹஸரத் அவர்கள்பக்கத்தில் எராளமான வீரர்கள் இருந்தார்கள். அவர்களில் சிலர்

வெளியில் மட்டும் உண்மையான இஸ்ஸ்லாமானவர்கள் போல் நடித்துக்கொண்டு உள்ளத்தில் எதிரிகள் மேல் பட்சம் வைத்தவர்களா யிருந்தார்கள். ஹசரத் அவர்கள் இப்படியான பெருஞ்சேனைகளோடுசென்று முறைவஸீ என்னும் தானத்தில் பாளயமிறங்கினர்கள்.

ஹஸரத் அவர்கள் இவ்வாறு ஏராளமான ஆட்களோடு தங்களைத்தாக்க ஆயத்தமாய் வந்திருக்கும் சங்கதியை எதிரிகளின் சேனாதிபதியாகிய ஹாரிஸ் பின்ஸரூர் என்பவனும் அவனுடைய கூட்டத்தாரும் கேள்விப்பட்டதே பனிமுஸ்தலிக் கூட்டத்தார் தவிரஅவர்களைச்சேர்ந்த மற்ற பேர் அனைவரும் ஒட்டம் பிடித்தார்கள். கடைசியில் ஹாரிஸ் பின்ஸரார் பனி முஸ்தலிக் கூடாத்தார்களோடு இஸ்லாமியர்களைத்தாக்கித் தோல்வி யடைந்தான். யுத்தத்தில் அவர்களில் 10-பேர் மாண்டனர். இஸ்லாமியர்களில் ஒருவர் ஷஹீதானர். எதிரிகளில் மடிந்தவர்கள் போக மீதியிருந்தோர் சிறையாக்கப்பட்டார்கள். அவர்களிடமிருந்து சிக்கிய ஆயுதங்கள் ஆகாரங்கள் முதலிய எல்லாப்பொருள்களும் இஸ்லாமியரால் பகிர்ந்து கொள்ளப்பட்டன

சிறையாக்கப் பட்ட எதிரிகளில் ஒருவன் இஸ்லா மார்கத்தைத் தழுவிக்கொண்டான் அவனும் மற்றைவரெல்லாரும் இஸ்லாமியர்களால் அடிமைகளாகப் பங்கிட்டுக் கொள்ளப்பட்டார்கள். இவர்களில் ஹாரிஸ் பின்ஸராரின் மகளாகிய ஜுவைரா ரலியல்லாகு அன்ஹா என்பவளும் ஒருவள் அவள் ஸாபித்பின்கைஸ் ரலியல்லாகு அன்கு என்பவருடைய பாகத்திற்கு வந்தவள். அம்மாது ஹஸரத் அவர்களிடம் வந்து இஸ்லாம் மார்க்கத்தில் நான் ஈமான்கொண்டும் என்னிடம் பணம்பெற்றுக் கொண்டு என்னை அடிமைத்தனத்தினின்றும் விடுதலை செய்ய ஸாபித் பின்கைஸ் ரலியல்லாகு அன்கு அவர்கள் பிரியமுள்ளவர்களா யிருப்பதாய்க்கூறி, தன்னிடம்

பணம் ஒருகாசுகூட இல்லையென்று ஹஸரத் அவர்கள் தனக்கு உதவி செய்தும் தன்னை அக்கஷ்டத்திலிருந்து விடுவித்துக் காப்பாற்ற வேண்டுமென்றும் பிராத்தித்தாள்.

ஹஸரத் அவர்கள்“ நான்உனக்குஇதைவிட மேலான உதவிசெய்கிறேன்'' என்றார்கள். அம்மாது மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்து அதென்ன உதவியென்று வினவினாள். ஹஸரத் அவர்கள்'' நான் உன்னை அடிமைத் தனத்தினின்றும் விடுவிப்பதோடு, நானே யுன்னை மணம் புரிந்து கொள்கிறேன்'' என்றார்கள் அம்மாது மிக்க சந்தோஷத்தோடு அதற்கு ஒப்புக்கொண்டாள்.

ஹஸரத் அவர்கள் உடனே ஸாபித்பின் கைஸ் ரலியல்லாகு அன்ஹு விற்குப் பணம் அனுப்பி அம்மாதை விடுவித்து, அவளை மணம் புரிந்து கொண்டார்கள். இச்சங்கதியை இஸ்லாமியரனைவரும் அறிந்ததே, இக்கலியாணத்தால் ஜு வைரா ரலியல்லாகு அன்ஹாவின் கூட்டத்தாரனைவரும் இப்போது ஹஸரத் அவர்களுடைய சுற்றத்தார் களாய் விட்டபடியால், அவர்களை யடிமைகளாக நாம் வைத்துக் கொண்டிருக்கலாகா தென்று தங்கள் தங்கள் பாகத்திற்கு வந்த அனை வரையும் விடுதலை செய்து விட்டார்கள். பணம் கொடுத்து யாவரையும் விடுதலை செய்வதெனின் மிக்க கஷ்டமானதால் இவ்வாறு யாவரையும் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை செய்யவேண்டுமென்று கருத்துட் கொண்டே ஹஸரத் அவர்கள் அம்மாதை மணம் செய்துக்கொண்டார்கள்.

3-வது உஹுதுவையே சந்தக்.

பனீநவீர் என்ற விடத்தில் யுத்தம் நடந்ததைப்பற்றி முன்னம் கூறியிருக்கிறோமல்லவா? அப்போது மதினவை விட்டுத் துறத்தப்பட்ட யூதர்கள் கீபர் என்ற பிரதேசத்தில் போய் குடியிருந்தார்கள். அவர்கள் அங்கு கொஞ்ச காலம் தங்கியிருந்தபின் இஸ்லாமானவர்கள் மேல் தங்களுக்கிருந்த வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்ளக்கருதி அங்கிருந்த யுதர்களுக்கு இஸ்லாமியர்கள்மேல் வெறுப்பும் துவேஷமும் உண்டாக்கத்தக்க விஷயங்களைக்கூறி இஸ்லாமியர்களோடு யுத்தம் செய்யும் நோக்கத்தோடு அந்தயூதர்களையும் அழைத்துக்கொண்டு மக்காவிற்குப் புறப்பட்டார்கள் அங்கு போய்ச் சேர்ந்த இவர்கள் குரேஷியர்களுக்கு இஸ்லாமியர்மேல் கோபமூட்டி அவர்களும் தங்களோடு சேரும்படி தூண்டினார்கள்.

இவர்கள் குரைஷியர்களை நோக்கி "உங்களுடைய மதமே அனுதியாயுள்ள மெய்ம்மதம். விக்கிரகாராதனை மிக்க நியாயமானது. அதனால் நீங்களெல்லாம் நீதிமான் களாகவும் சத்தியவான்களாகவு மிருக்கிறீர்கள் இந்த இஸ்லாம் மார்க்கம் இப்போது முஹம்மது வால் கற்பிக்கப்பட்ட பொய்ம் மதம், அவர்கள் வெளிக்கு மட்டும் "கடவுள் ஒருவரே. யாவரும அவரையே வணங்குகிறோம்" என்று வாசாஞானம் கூறிவிட்டு தங்கள் மதம் மட்டும் சத்திய மதமென்றும் தாங்கள் வணங்கும் தெய்வமே மெய்யானதென்றும், உங்கள் கடவுளும் மதமும் பொய்யென்றும் தூசிக்கிறார்கள். இது மிக்க வெட்கக் கேடான விஷயமா யிருக்கிறது. இவர்களை யிப்போதே யடக்கா விட்டால் பின்னல் யாவர்மதற்திற்கும் தீங்குசெய்வார்கள். ஆகையால் உங்களுக்கு உதவியாயிருந்து அக்கிர

மஸ்தர்களாகிய அவர்களை யடக்குவதே நீதியென்று தீர் மானித்து வந்தோம்'' என்றார்கள்.

இவர்கள் தூண்டுதலான மொழிகளைக்கேட்ட குறை ஷியர்களும் அங்கிருந்த யூதர்களும் மிக்க உச்சாகமும் சந் தோஷமுமடைந்து யாவரும் ஒன்று கூடி இஸ்லாமியர் மேல்படையெடுத்துச் செல்வதே சரியென்று தீர்மானித் தார்கள். சுமார் ஆறாயிரம் குறைஷியரும் யூதர்களும் யுத் தத்திற்கு ஆயத்தமாகி மக்காவைவிட்டுப் புறப்பட்டார்கள் இவர்கள் மதிணவை நோக்கிப்போகும் போது வழியில் இன்னும் நாலாயிரம்பேர் அவர்களோடு கூடினார்கள். பத் தாயிரம்பேர் சேர்ந்த இச்சேனை யானது பலவித ஏற்பாடு களோடு ஆண்டவன் மெய்யடியார்களாகிய இஸ்லாமியரை யெதிர்ப்பதற்காக மதிணவிற் கருகில் சென்று தங்கினார் கள். குறைஷியர் ஜலவசதியுள்ள ஒருவிடத்தில் தங்கினார் கள். யூதர் முதலியவர்கள் உகத் என்ற விடத்தில் தங்கி னார்கள்.

அங்கு இறங்கிய பிறகு யூதர்கள் குறைஷியரோடு சேர்ந்து யுத்தம் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்யத்தொடங்கினார்கள். இச்சங்கதி ஹஸரத் அவர்களுக்கு எட்டியதும் அவர்கள் ஆலோசனைக்கு, மதீ ணவைவிட்டு வெளியிற்சென்று எதிரிகளோடு யுத்தம்புரி வது தகுதியென்று புலப்படவில்லை. ஆகையால் உடனே தற்காப்பிற்காக நகரத்தைப்பந்தோபஸ்து செய்ய ஏற்பாடு செய்தார்கள் நகரத்தின் மூன்று பக்கங்களில் எதிரிகள் பிரவேசிக்கக்கூடா வண்ணம் தக்க அரண்களும் அகழி முதலியன அமைக்கப்பட்டிருந்தன. கிழக்குப்பக்கமட்டும் ஓர்பாகம் வெட்டவெளியா யிருந்தது. ஆதலின் ஸல் மானே பார்ஸி ரலியல்லாகு அன்கு அவாகள் ஆலோ சனைப்படி அங்கு ஒரு அகழி தோண்டு வதென்று ஏற்பா

டாயிற்று. அவ்வாறே ஹஸரத் அவர்களும் அவர்கள் தோழன்மார்களும் பெரிய சீமான்களும் கூட பசிதாகம் பனி வெயில் முதலியவைகளேயும் சகித்துக்கொண்டு மிக்க ஊக்கத்தோடு வேலைசெய்து எதிரிகள் யுத்தத்திற்கு தொடங்குமுன்பே அகழியைத் தோண்டிமுடித்து விட்டார்கள். அதன் பிறகு இஸ்லாமியர்களில் மூவாயிரம் வீரர்கள் ஒன்று சேர்ந்து எதிரிகளோடு யுத்தம் செய்யச் சர்வாயத்த மானுர்கள்.

மதினுவிலிருந்த யூதர்களில் பெரும் பாலார் முன்பு அங்கிருந்து வெளிப்படுத்தப் பட்டதைப்பற்றி கூறியிருக்கிறோம். முகீஸ்பின் முபஷ்ஷர், பனிகுறைஸா முதலிய சில குடும்பத்தார்மட்டும் மதீனுவிலிருந்தார்கள். இவர்கள் இனிஇஸ்லாமியரோடு தாங்கள் சண்டையிடுவதில்லை யென்றும் அவர்களுக்கு எதிரிகள் எற்பட்டால் அந்த எதிரிகளோடு தாங்கள் சேராமல் இஸ்லாமியருக்கு உதவி செய்வதாகவும் வாக்குத்தத்தம் அளித்து அந்த நிபந்தனைகளின்படி இஸ்லாமியரோடு சமாதானம் செய்துகொண்டு மதீனுவிலேயே தங்கியிருந்தவர்கள், மேலுக்கு மட்டும் இஸ்லாமியர் போல் அபினயித்துக் கொண்டு உள்ளே அவர்கள் மேல் விரோதமே கொண்டிருந்தவர்கள் சிலரும் மதீனுவிலிருந்தார்களென்று கூறியிருக்கிறோம். மேல் கூறப்பட்ட யூதர்களும் அந்தரங்கத்தில் இஸ்லாமியர்கள் மேல் வஞ்சங்கொண்டிருப்பவர்களே. அவர்களில் முகீஸ்பின் முபஷ்ஷர் என்பவன் ஹஸரத் நமது நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு நம்மை யெல்லாம் ஆளப் போவதாய்க் கூறுவதெல்லாம் ஒருபோதும் நடக்கமுடியாத வஞ்சவார்த்தைகள். அவர்கள் பேச்சைகேட்டு நாம் வீணுய்ப்பலனிழந்து ஒடுங்கி விட்டோம். நமது செல்வாக்கே யொழிந்து விட்டது. இப்போது நகரத்தைவிட்டு

வெளியில் செல்லக்கூட முடியாதவர்களாய் விலங்கிட பட்டவர்கள் போல் ஆய்விட்டோம். நமது பிரபலக்கூட்டத்தாரெல்லாம் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டார்கள் இவ்வாறெல்லாம் செய்தபடியாற்ருன் ஹஸரத் அவர்கள் அநேகம் விரோதிகளை யுண்டாக்கிக்கொண் டிருக்கிறுர்கள். என்று பலவாருகத் தன் ஜனங்களுக்குத் துர்ப்போதனை செய்து வந்தான்.

விஷயங்கள் இந்த நிலைமையிலிருக்கையில் யூதர்கள் முன்கூறிய சமாதான உடன்படிக்கையின்படி இப்போது வந்திருக்கும் எதிரிகளோடு சண்டைசெய்யத் தங்களுக்கு உதவியாய் வரவேண்டுமென்று ஹஸரத் அவர்கள் கேட்டார்கள். ஆனுல் அவர்களோ முன்கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற மனமில்லாதவர்களாய் "ஒ கோ! நீங்கள் பிரபலமான எங்கள் இனத்தாரையெல்லாம் ஊரைவிட்டுத்துரத்திவிட்டு எங்களைச்சிரகறுப்புண்ட பட்சிகள் போலாக்கிவிட்டு இப்போது சமாதானம்செய்துக்கொள்ள வேண்டு மென்கிறீர்களோ? நாங்கள் ஒரு போதும் அதற்கு உடன்படமாட்டோம் ஊரினின்றும் துரத்தப்பட்ட எங்கள் கூட்டத்தாருக்காக வஞ்சம் தீர்த்துக்கொள்வோம். "என்று ஒரே தீர்மானமாய்க் கூறிவிட்டார்கள். இம்மொழிகளைக்கேட்ட் இஸ்லாமானவர்கள் மனச்சோர்வடைந்தார்கள்.

நகருக்கு வெளியில் பாளையமிறங்கியிருந்த குறைஷியர்களில் ஒருவனுன நௌபல்பின் அப்துல்லா என்பவன் ஒரு நாள் மாலைத் தன் புரவிமேலேறிக்கொண்டு அகிழைத்தாண்டிச்சென்று இஸ்லாமியர்களைச் சங்கரித்து விடுகிறேனென்று சபதங் கூறிக்கொண்டு புறப்பட்டான். அவன் அகழியருகில் வந்ததும் தன் குதிரையைத் தட்டிக்கொடுத்து அகழிமேற்பாய்ந்தான். ஆனுல் அவன் எண்ணம்

நிறைவேருமல் குதிரையோடு அகழியில் விழுந்துமடிந் தான். அகங்காரம் எப்போதும் அதையுடையவனை யழித்து விடுமல்லவோ? அவன் சவம் இஸ்லாமியரிடம் சிக் கிக்கொண்டது. அதையறிந்த குரைஷியர் அச்சவத்தைத் தங்களிடம் அளித்துவிடவேண்டு மென்றும், அதற்கு ஈடாகப் பொருளளிப்பதாகவும் இஸ்லாமியரைக் கேட் டார்கள். அதன்மேல் ஹஸரத் அவர்கள் ஈடுஒன்றும் வேண்டாமென்று சவத்தை யவர்கள் வசம்ஒப்புவிக்கும் படி கட்டளை யிட்டுவிட்டார்கள்.

குரைஷியர்கள் சவத்தை யெடுத்துக்கொண்டு தங்கள் பாளையத்திற்குத் திரும்பியபின் ஹஸரத் அவர்கள் அன் ஸாரீன்களில் ஒருவரை யழைத்து எதிரிகளின் பாளையத் தில் நுழைந்து அங்கு நடக்கும் விஷயங்களை வேவுபார் த்து வரும்படி யனுப்பினுர்கள். அவர் அவ்வாறே சென்று திரும்பிவந்து ஹஸரத் அவர்களை நோக்கி "எதிரிகளின் வேவு ஆட்களில் ஒருவன் குரைஷியர் தலைவனிடம் கீழ்க் கண்ட சங்கதியைக் கூறியதை நான்கேட்டேன். அதாவது மதீனுவிலுள்ள பனிகுறைஸா என்பவன் தனக்கு நூறு குரைஷிய வீரரைத் துணையனுப்பினுல்தான் இஸ்லாமிய ரோடு சண்டைசெய்ய முடியு மென்று கூறியனுப்பி யிருக் கிருனும்" என்ருர்.

அதைக்கேட்ட ஹஸரத் அன்ஸாரீன்களி லொருவரை பனிகுறைஸாவிடம் அனுப்பி, அவர்கள் வாக்குத்தத்தத் தை இலட்சியம் செய்யாமல் நடக்கமுயல்வது நமக்கு அறிக்கையா யிருக்கிறதென்றும், அப்படி நடந்தால் அவர் கள் அடியோடழிக்கப் படுவார்களென்றும் கூறும்படிச் செய்தார். ஆனுல் அந்த யூதர்களோ தாங்கள் தங்கள் இனத்தாருக்காக வஞ்சம் தீர்த்துக்கொள் வதிலேயே நாட் டம் வைத்திருந்தார்க ளாதலால் ஹஸரத் அவர்கள் வார்த்

ந்தைகளை யிலட்சியம் செய்யாது ஒரே பிடிவாதமாய்ச் சமா தானத்திற்கு ஒப்பமறுத்து விட்டார்கள். இச்சங்கதிகள் இரவில் மிகச்சிலர் முன்பாகவே ஹஸரத் அவர்களிடம் கூறப்பட்டன. இதை இஸ்லாமியர்க ளனைவரும் கேட்டால் மிக்க மனச்சோர்வடையலாகு மென்பதக்காக அச்சங் கதியை ஹஸரத் அவர்கள் மறைத்துவைத்தார்கள். இவர்க ளோடுநேர்ந்த சச்சரவு சுமார் ஒருமாதம்வரையில் நடந் தது. இதற்கிடையில் எதிரிகள் கொடியயுத்தம் தொடுத்து இருமுறை தோற்கடிக்கப் பட்டார்கள்.

இதன் பிறகு குரைஷியருக்குள் பிரக்கியாதிபெற்ற ஒரு வீரனுகிய உம்ருபின் அப்து என்பவன் துணிகரமாய் அகழியைக்கடந்து வந்து, "என்னேடு யுத்தம்செய்யத் தைரியமுடைய சூரன் எவனுயினுமிருந்தால் வாருங்கள்" என்று இஸ்லாமியரைச் சண்டைக்கழைத்தான். இம்மொ ழிகளைக்கேட்ட அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு என் பவர் மிக்க உரோஷங்கொண்டு ஹஸரத் அவர்களிடம் சென்று அந்த வீரனேடு சண்டையிட உத்திரவுபெற்றுக் கொண்டுபோய், அவனேடு மும்முரமான யுத்தம்செய்து முடிவில் அவனைச் சங்காரம்செய்து வெற்றி பெற்ருர்.

தங்கள் கட்சியைச்சேர்ந்த வீரனுகிய உம்ருபின் அப்து என்பவன் மடிந்ததைக்கேட்ட குரைஷியர் இடுப் புடைந்தவர்கள் போல் சோர்வடைந்து விட்டார்கள். அதே சமயம் ஆண்டவன் செயலால் திடீலென்று பலமான புயற்காற்றும் இடியும் மின்னலும் தொடங்கின. இந்த ஆபத்து எதிரிகள் பாளையமிறங்கியிருந்த எல்லைக்குள் மட் டுமே சம்பவித்தது. இதனல் எதிரிகள் மிக்க கஷ்டப் பட்டு பலங்குன்றி விட்டார்கள். இச்சமயம்பாாத்து சில அராப்பியர் காட்டிலுள்ள கொள்ளைக்காரர்களாகிய சில

அராப்பியர்களோடு எதிரிகள் பாளையங்களில் புகுந்து கொள்ளையடிக்கத் தொடங்கினார்கள். இதோடுபோகாமல் குரைஷியர்களுக்கும், யூதர்களுக்கும், இடையில் பல சச் சரவுகளும், குழப்பங்களு முண்டாயின. இவைகளால் எதிரிகள் மிக்க துன்பங்களுக் குள்ளாகி மனச்சோர்வும் பலகீனமும், திகிலும் அடைந்தவர்களாகி இரவில் சந்தடி காட்டாமல் மக்காவைநோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

இச்சண்டையின் குழப்பத்தால் ஒருநாள் ளுஹர், அஸர், மக்ரிபு இந்த மூன்றுவேளைத் தொழுகைகளும் தவறிவிட்டன. இதுகாறும் ஒருபோதும் அப்படிப்பட்ட சம்பவம் நேர்ந்ததில்லை. அப்போது ஹஸரத் அவர்கள் பிலால் ரலியல்லாஹு அன்ஹுவுக்குப் பாங்கு சொல் லும்படி கட்டளையிட்டுத் தவறிப்போன அந்த மூன்று வேளைகளின் தொழுகைகளையும் கலாதொழுது முடித் தார்கள்.

4-வது உதுவைவயே பனீகுரைஸா.

பனீகுரைஸா என்ற யூதக்கூட்டத்தார்கள் தாங்கள் ஹஸரத் அவர்களுக்குக் கூறியிருந்த வாக்குத்தத்தத்தை நிராகரித்து இஸ்லாமியருக்கு விரோதமாய்த் திரும்பி, தங்கள் தௌராத் வேதத்திற்கு மாறாகப் பதுமை யாராதனைபுரியும் குரைஷியரோடு சேர்ந்துக்கொண்டு தங்கள் அசசங்கதியை பகிரங்கமாய் வெளியிட்ட தோடு, மதினாவிலிருந்து துரத்தப்பட்ட தங்கள் கூட் டத்தாருக்காக இஸ்லாமியர்மேல் வஞ்சம்தீர்த்துக் கொள் ளாது விடுவதில்லை யென்று சபதம் கூறிக்கொண்டார்க ளென்று முன்னமே கூறியிருந்தோம். அகழியில் அவர்க ளோடு யுத்தம் நடந்தபோது அவர்கள் மறியடிக்கப்பட் டதே "அவர்களையும் அவர்கள் தீயஎண்ணங்களையும் பூர

ணமாய் அடக்கிவிடாமல் நீங்கள் உங்கள் ஆயுதங்களை யவிழ்த்து விடலாகாது'' என்று ஆண்டவனுடைய கட்டளை பிறந்தது, அதன்படியே ஹஸரத் அவர்கள் தங்கள் சைனியத்தோடு சென்று அவர்கள் கோட்டையை முற்றுகை போட்டார்கள். இருபத்தைந்து நாட்கள் முற்றுகை நடந்தது. அபோது யூதர்கள் தங்கள் தலைவனாகிய கஃப்பின் அசத்தென்பவனோடு இதற்கென்ன செய்வதென்று ஆலோசனை செய்தார்கள்.

அதற்கு கஃப்பின் அசத் என்பவன் சற்றுநேரம் சிந்தித்து அவர்களை நோக்கி "நான் உங்களுக்கு மூன்று யோசனைகள் கூறுகிறேன் அவற்றில் ஏதேனும் ஒன்றை யொப்புக் கொண்டீர்களாயின் நலமாயிருக்கும். முதலாவது— "முஹம்மத் நபியினிடம் ஈமான் கொண்டு விடுங்கள் அவர் நபியென்று நீங்கள் அறிவீர்கள். நமது தௌராத் வேதத்தில் அவரைப்பற்றி கூறப்பட்டிருப்பதையும் அறிவீர்கள் நீங்கள் அவ்வாறு அவரிடம் நம்பிக்கை கொண்டு உண்மையாய் நடந்து கொள்வீர்களானல் உங்கள் குடும்பங்கள், காணி பூமிகள், சொத்துகள் யாவும் காப்பாற்றப்படும்'' என்றான்.

யூதர்களோ அப்படி யொருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டோமென்று பிடிவாதமாய் மறுத்து விட்டார்கள். அதன் மேல் கஃப்பின் அசத் என்பவன் ''அப்படியாயின் இரண்டாவது யோசனையைக் கூறுகிறேன். அதாவது முன்னே பெண்டு பிள்ளைகளை யெலலாம்முன்னேகொன்று விட்டுப் பிறகு கத்திகட்டிக்கொண்டு இஸ்லாமியர் மேல் யுத்தத்திற்குச் செல்வோம்'' என்றான்.

யூதர்கள் "நாம் இஸ்லாமியரைச் செயித்துத்திரும்பி வந்தால் பெண்டுபிள்ளைகள் மாண்டபின் உலகில் நமக்கென்ன வாழ்விருக்கிறது? ''என்று கூறி அதையும் ஒப்

புக்கொள்ள மறுதலித்து விட்டார்கள். அவர்கள் தலைவன் "இனி மூன்ருவது யோசனையைக்கூறுகிறேன். அதாவது இன்று சனிவாரம். இன்று நாம் சண்டைக்குப் புறப்பட மாட்டோமென்று இஸ்லாமியர் அறிவார்கள் ஆதலால் அவர்கள் எச்சரிகை யின்றிருப்பார்கள். நாம் இன்றைக்கே சென்று அவர்களோடு யுத்தம் புரிந்தால் வெற்றியடையலாம்" என்ருன்.

யூதர்கள் "என்னநீர் நமதுவேதத்தில் கூறியுள்ள சனிக்கிழமையின் பரிசுத்தத்தைச் சற்றும் சிந்திக்காமலே பேசுகிறீர். அந்த வார்த்தை யலட்சியம் செய்ததற்காக நமது முன்னோர் பட்ட கஷ்டங்களையும் பன்றியாகவும் குரங்காகவும் முகங்கள்மாரும்படி சபிக்கப்பட்டதையும் அறியீரோ? ஒருக்காலும் இன்றையதினத்தை அகௌரவப்படுத்த மாட்டோம், என்று கோபத்தோடு மொழிந்து, தங்கள் தலைவன் கூறிய மூன்ருவது யோசனையையும் ஒப்புக்கொள்ளாமல் மறுத்து விட்டார்கள். இவர்கள் இஸ்லாமியரை யெதிர்த்துச் சண்டை செய்யவும் சலிப்படைந்தவர்களா யிருந்தார்கள்.

அதன் பிறகு அவர்கள் ஹஸரத் அவர்களிடம் ஒருவரை யனுப்பி அபூலபாஞபின் முன்ஸிர் ரலியல்லாஹு அன்கு என்பவரைத்தங்களிடம் அனுப்பும் படிக்கும் தாங்கள் அவரோடு ஆலோசனை செய்து ஒரு முடிவிற்கு வருகிரேம் என்றும் சொல்லியனுப்பினர்கள். ஹஸரத் அவர்கள் அவ்வாறே யனுப்பியபோது யூதர்களின் மாதர்களும் மக்களும் அபூலபாஞபின் முன்ஸிர் ரலியல்லாகு அன்கு அவர்கள் முன்னிலையில் குய்யோவென்று முறையமிட்டுக் கொண்டார்கள். புருடர்கள் அவரை நோக்கி "தங்களுடைய அபிப்பிராயமென்ன? நாங்கள் வேண்டுமாயின் யாவும் ஹஸரத் அவர்கள் பொறுப்பாய் விட்டு விட்டுக்

கோட்டையைத்திறந்து விடுகிறோம்'' என்றார்கள். இம் மொழிகளைக்கேட்ட அபூலபாறு றலியல்லாகு அன்கு அவர்கள் 'ஆகா செய்வீர்கள் என்று கூறியபின் "அப்படிச் செய்தால் உங்களையெல்லாம் கொன்றுவிடும்படி கட்டளை பிறந்து விடும்'' என்று சமிக்கையால் காட்டினர்.

அவர் சுலபமாய் அப்படிச் செய்துவிட்டாலும் மறுவி நாடியே அவர்மனதில் பீதியையும் மிக்க துயரத்தையும் உண்டாக்கிவிட்டது. "அந்தோ நாம் ஹஸரத் அவர்களது அனுமதியின்றியே அவர் அபிப்பிராயத்திற்கு மேலான தாய் நமது அபிப்பிராயத்தை வெளியிட்டதால் பெரும் பாபத்திற்கு ஆளாய்விட்டோமே.'' என்று மிக்க துயர டைந்து, தனக்குள் சற்றுநேரம் சிந்தித்து உடனே மஜீ துக்குச்சென்று ஆண்டவனைத்தொழுது, அங்கிருந்த ஒரு கம்பத்தில் தன்னைக் கயிற்றால் சேர்த்துக் கட்டிக்கொண்டு "நான் இப்பாதகச் செயலுக்காக மன்னிக்கப்படும்வரை யில் ஒருபோதும் இக்கட்டிலிருந்து விடுபடமாட்டேன்'' என்று பிரதிக்கினை செய்துகொண்டார். இதேமாதிரி அவர் 15-நாட்கள் அக்கட்டிலேயே இருந்தார். இடையில் அவருடைய பத்தினியார் அப்போதைக் கப்போது அவ ருக்கு ஆகாரம் கொண்டுவந்து கொடுத்துக்கொண் டிருந் தார்கள். அதன்பிறகு அவர்குற்றம் மன்னிக்கப்பட்ட தென்றும் அவரை யவிழ்த்து விடும்படிக்கும் ஆண்டவனு டையகட்டளை பிறந்தபடியால் ஹஸரத் அவர்கள் சென்று அவரை விடுதலைசெய்து விட்டார்கள்.

அன்பார்ந்த மாணுக்கர்களே! மேற்கண்ட செய்கை யைப்பற்றி நன்றாய்ச் சிந்தித்துப்பாருங்கள். அக்காலத்தி லிருந்த இஸ்லாமியர்கள் ஒருகுற்றம் செய்துவிட்டால் அதற்காக மன்னிப்புப் பெற்றாலொழிய மனோநிம்மதி யடையமாட்டார்கள். அது எத்தகைய அருமையானதும்

அறிவுள்ளதுமான செய்கையென்று கவனியுங்கள். நாமோ ஒருகுற்றத்தைச் செய்துவிட்டால் உடனே அதை மறைத்துவிடப்பார்க்கிறோம். இன்னும் அதற்காகப் பொய்யும் கூறுவதோடு, அந்த ஒருகுற்றத்தினின்று தப்பித்துக் கொள்ள இன்னொரு பெரிய குற்றமும் செய்துவிடுகிறோம். அந்தோ! இதனால் பாபத்தை யதிகமாக்கிக் கொள்கிறோம் "ஆனைக்கும் அடிசறுக்கும்" என்ற முதுமொழிபோல் எத்தகைய அறிவாளியுங்கூட தவறிக்குற்றம் செய்து விடுவது சுபாவமே. ஆனால் எவன் தான் செய்த குற்றத்தைக் குற்றமென்று உடனே ஒப்புக்கொள்கிறானோ அவனே அறிவாளி. அத்தகையோன் மறுபடி குற்றம் செய்ய மாட்டான் என்று யாவரும் நம்புவார்கள். எவன் ஒருவன் தன்குற்றத்தை அது குற்றமேயென்று மனப்பூர்வமாய் உணர்ந்து, அந்தோ தவறாய் இப்படிச் செய்துவிட்டோமே யென்று மனம்நொந்து, தன்னை மன்னிக்கும்படி ஆண்டவனை வேண்டிக்கொள்கிறானோ அவன் அகத்தியம் மன்னிக்கப்படுவான். ஆகையால் நாமும் அவ்வாறு நடந்துகொள்ளும்படி நமக்கு நல்லறிவை யருளவேண்டுமாய் ஆண்டவனைப் பிரார்த்திப் போமாக.

அபுல்பானு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டதால் சில நாட்கள் கழிந்தன. யூதர்கள் அப்போதும் முற்றுகையிலிருந்து வெளிப்படாமலே யிருந்தார்கள். அவர் திரும்பிச் சென்றபின்பு யூதர்கள் ஸஅத்பின் மஆஸ்ரலியல்லாகு அன்கு அவர்களின் தீர்ப்பின்படி நடந்துகொள்கிறோம் என்று கோரிக்கொண்டபடியால் அவர் அவர்களிடம் அனுப்பப்பட்டார். அவர் ஒரு போர்வீரர். அதன்மேல் யூதர்கள் அவர் ஏற்பாட்டின்படி முற்றுகை போடப்பட்ட கோட்டையைத்திறந்து வெளிப்பட்டார்கள். இந்த யூதர்கள் ஹஸரத் அவர்க

ளுடைய கருணையையும், பொறுமையையும், உதாரகுணம் முதலியவற்றையும் நன்ருய் அறிந்திருந்தும், நேராய் அவரிடம் சரண்புகுவதைவிட்டுச் சாதாரணப் போர்வீரர்களில் ஒருவராகிய ஸஅத்பின்மஆஸ் ரலியல்லாஹு அன்ஹு வின் கட்டளைப்படி நடக்க ஒப்புக்கொண்டது மிக்க அதிசயமான செய்கையே.

யூதர்கள் இவ்வாறு கோட்டையிலிருந்து வெளிப்பட்டபின், ஹஸரத் அவர்கள் ஸஅத்பின்மஆஸ் ரலியல்லாஹு அன்ஹுவைநோக்கி "இந்த யூதர்கள் உம்முடைய தீர்மானத்தின்படிக்கு கோட்டையைத் திறந்து வெளிவந்திருக்கிருர்கள். இப்போது அவர்களை யென்ன செய்யவேண்டு மென்பது உமது அபிப்பிராயம் என்று கேட்டார். அதற்கு அவர் "இவர்கள் எப்போதும் கபடர்கள், துஷ்டர்கள், வாக்குத்தத்தத்தைக் காப்பாற்ருதவர்கள், இவர்களை நம்புவதற்கே கூடாது. ஆகையால் இக்கூட்டத்தை அடியோடொழித்து விடுவதேநலம்" என்ருர். இதைக்கேட்ட ஹஸரத் அவர்கள் ஆண்டவன் கட்டளை யிட்டபடி பின்வருமாறு கூறிஞர்கள்:—

"இவர்களில் பிடிவாதமாய் நம்மோடு யுத்தம் செய்ய வேண்டுமென்று வஞ்சகங்கொண்டு சமாதானத்திற்கு உடன் படாதவர்களெல்லாம் சங்கரிக்கப்பட வேண்டியது. மற்றபேர் சிறையாக்கப் படவேண்டும். அவர்களில் மாதர் களு ம்தாடி மீசை முளையாத சிறுவர்களும், சிறுமிகளும் பாதுகாக்கப் படவேண்டும். இதுவே ஆண்டவனுடைய க்கட்டளை" என்ருர்.

அக்கட்டளையின் படிக்கே யாவும் நிறைவேற்றப் பட்டன.

5-வது ஹஸரத் அவர்களைக் கொல்ல முயலல்.

முன்பு நடந்த அகழிச்சண்டையில் குரைஷியர் தலை வணங்கிய அபுஸுஃபியான் என்பவன் ஜெயமடையாமல் அவமானத்தோடு திரும்பிச் சென்றதைப்பற்றி கூறியிருக்கிறோம். அந்த அவமானத்தை அவன் சகிக்கமுடியாமல் மிக்க கஷ்டத்தோடு பொறுத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவ்வளவுக் கவ்வளவு அவன்மனதில் ஹஸரத் அவர்கள்மேல் கோபமும், வஞ்சந்தீர்த்துக்கொள்ள ஆவலும் அதிகமாயிருந்தன. ஆகையால் அவன் ஹஸரத் அவர்களைக் கொன்று விடவேண்டுமென்ற எண்ணங் கொண்டு தன் ஜனங்களிடம் அதைப்பற்றி ஆலோசனை செய்தான். அவன் ஏற்பாடாவது, ஹஸரத் அவர்கள் மதீனாவின் கடைவீதியில் உலவும் போதாவது, வேறு தக்க சமயம் பார்த்தாவது ஹஸரத் அவர்களைக் கொலை செய்ய வேண்டுமென்பதே. இந்த ஏற்பாட்டிற்கு ஜனங்களில் ஒருவரும் சம்மதிக்கவில்லை. ஆனால் அடவிவாசியாகிய ஒரு அரபியன்மட்டும் போதுமான பணம்கொடுத்தால் அப்படிச்செய்வதாய் ஒப்புக்கொண்டான்.

அவ்வாறே யவன் மதீனாவிற்குச்சென்று ஒருநாள் ஹஸரத் அவர்களும், மற்ற இஸ்லாமானவர்களும் தொழுகைக்காக மஜீதில் கூட்டமாய்க் கூடியிருந்தபோது தன் கொலைபாதக எண்ணத்தோடு அங்கு பிரவேசித்தான். அவன் ஹஸரத் அவர்களை யெப்போதும் பார்த்ததில்லை. ஆதலால் முன்னே ஆளைத்தெரிந்துகொள்வதற்காக அக் கூட்டத்திலிருந்த ஒருவர்செவியில் குசுகுசுவென்று "அப்துல் முத்தலீப்பின் குமாரர் யார்?" என்று கேட்டான்.

அப்மனிதன் அராபியனை யுற்றுநோக்கினர். அச்சமயம் தூரத்தில் பிரசங்கமேடையி னருகிலிருந்த ஹஸரத் அவர்கள் "அந்த அராபியனை நோக்கி ஆ! நான்தான் இங்கே வா" என்றார்கள்.

இவர் தூரத்திலிருந்தும் தான் இரகசியமாய்க் கூறியதை அறிந்துகொண்டாரென்று கண்டதே அவன் திப்பிரமையடைந்து, ஓகோ நாம் நினைத்து வந்தது பெரும் பாதகமான செய்கை யென்றுணர்ந்து, ஹஸரத் அவர்கள் எதிரில்சென்று நின்று தடுமாற்றத்தோடு வந்தனமளித்து, தான்வந்த காரியம் இன்னதென்று உண்மையைக்கூறி அவர்களிடம் ஈமான்கொண்டு அப்போதே கலிமாஓதி இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார்.

6-வது:— ஓர்கூட்டத்தார் இஸ்லாமானது.

மதீனாவிற்குக் கிழக்கில் சுமார் நான்கைந்து நாட்கள் பிரயாணத்தில் மஸீனா என்ற ஊருண்டு. அங்கு சுமார் நாலாயிரம்பேர் அடங்கிய ஒரு கூட்டத்தார் வசித்து வந்தார்கள். அவர்கள் தலைவராகிய பிலால் பின்ஹாரிஸ் ரலியல்லாஹு அன்கு என்பவர் தன் கூட்டத்தாரோடு ஹஸரத் அவர்களிடம் வந்து இஸ்லாம்மார்க்கத்தில் சேர்ந்து கொண்டார்கள். இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக்கொண்ட அக்கூட்டத்தாரை நோக்கி "இனிநீங்கள் உங்கள் வாசஸ்தலத்திற்குச் செல்லலாம். அல்லது பிரியமான எந்த விடத்திலேனும் வசிக்கலாம். இனி நீங்களும் முகாஜரீன்கள் கூட்டத்தோடு சேர்ந்தவர்களாகவே கருதப்படுவீர்கள்" என்றார்கள். அவர்கள் அவ்வாறே தங்கள்பழைய வாசஸ்தலத்திற்கே சென்று, அதுமுதல் அவர்கள் எப்போதும் ஹஸரத் அவர்களிடம் அன்புடையவர்களாக

வும் சமயங்களில் அவர்களுக்கு உதவி செய்வதில் விருப்ப் முடையவர்களாகவுமே யிருந்தார்கள். மக்கா ஜெயிக்க ப்பட்டபோது இந்தப்பிலால் பின்ஹாரிஸ் ரலி யல்லாஹு அன்கு என்பவரே ஹஸரத் அவர்களது சேனைக்குத் தலைவராயிருந்தார்.

7-வது தௌமதஹுல் ஜந்தல் என்ற விடத்தில் நேர்ந்த சம்பவங்கள்.

மேற்கண்ட தௌமதஹுல் ஜந்தல் என்றவிடம் மதீனாவிற்குப்பதினைந்துநாள் பிரயாண தூரத்திலும், டமாஸ் ஐந்து நாள் பிரயாண தூரத்திலும் இருக்கிறது. அங்குள்ள மலையின்மேல் ஒருகோட்டை யுண்டு. அங்குவசிக்கும் கூட்டத்தார் வழிப்போக்கர்களைக் கொள்ளையடித்துச் சீவிப்பவர்கள். அக்கூட்டத்தாரின் தலைவனானவன் தன் புத்திரன் தலைமையின் கீழ்ச் சில ஆட்களைகூட்டி மதீனாவைச் சூறையாடும்படி யேவினான். இக்கள்ளக்கூட்டத்தின் வருகையை யுணர்ந்த ஹஸரத் அவர்கள், அவர்களைத்தாக்கும்படி ஆயிரம் வீரர்களோடு சென்றார்கள். இவர்கள் ஒருநாள் பிரயாணதூரத்தில் வருவதையறிந்ததே எதிரிகள் மிக்க திகில்கொண்டு நாலாபக்கங்களிலும் சிதறியோடி விட்டார்கள்.

இதேகாலத்தில் ஹஸரத் அவர்களின் தோழர்களில் ஒருவராகிய சஅத்பின் ஒபாதா ரலியல்லாஹு அன்கு என்பவருடைய தாயார் மரணமடைந்தார்கள். ஹஸரத் அவர்கள் திரும்பி மதீனாவிற்கு வந்து சேர்ந்ததும் இறந்த அம்மாதிற்காகச் செய்யவேண்டியபிராத்தனைகளைச் செய்து நிறைவேற்றினார்கள். சஅத்பின் ஒபாதா ரலியல்லாஹு அன்கு என்பவர் தன் தாயார்

திடீரென்று இறந்து போகாமல் கொஞ்சகாலத்திற்குப் பின் இறந்திருந்தால் தன் சொத்தில் தன் பிரியமானபடி தான் தருமங்களைச் செய்திருப்பார்களென்று ஹஸரத் அவர்களிடம் துயரத்தோடு கூறி, "இப்போது தன் தாயார் சொத்தில் அந்தம்மாள் பேரால் தான தருமங் களைச் செய்தால் அதனாலுண்டாகும் பலன் அவர்களைச் சேருமா?" என்று கேட்டார்.

ஹஸரத் அவர்கள் சேரும் என்றபோது சஅத்பின் ஒபாதா ரலியல்லாகு அன்கு "எவ்வித தருமம்செய்வது சிறந்தது?" எனக்கேட்டார். ஹஸரத் அவர்கள் "எல்லா விதத் தருமங்களிலும், தாகவிடாயைத்தீர்க்கும் ஜலவசதியையுண்டாக்குவதே சிறந்தது" என்றார்கள் தோழர் அவ்வாறே ஒரு திருக்குளம்வெட்டி அது தன் தாயாரால் செய்யப்பட்ட தருமம் என ஒரு கல்லில் செதுக்கி வைத்தார்.

ஹிஜ்ரி 6-வது வருஷம்

1-வது பனிலிஹ்யானில் நடந்த சம்பவம்.

ஹுதைல் என்ற கூட்டத்தார் மோசச் செய்கைகளில் கைதேர்ந்தவர்களென்றும், குர்ஆனே ஷரீபை மனப்பாடமாய் ஓதத்தக்க பக்திமான்களும், சாதுக்களும், வேதத்தை நன்றாய் ஓதியவர்களும், ஞானவான்களுமாகிய இஸ்லாமியர்கள் பலரைக் குரூரமாய்க்கொன்றவர்களென்றும் ஸரியையே ரஜீயாவில் முன்னமே கூறப்பட்டிருக்கிறது. அக்கூட்டத்தாரின் தலைவனாகிய அபுசூபியான் கொல்லப்பட்ட விஷயமும் முன்பே கூறியிருக்கிறோம்.

ஆயினும் அக்கூட்டத்தைச் சேர்ந்த ஹுஸைல் என்பவன் மகன்லிகியான் என்பவனுக்கே பனிலிஹியான் என்று பெயர். முன்கூறியபடி ஸாதுக்களாகிய இஸ்லாமான வர்களைக் கொலைசெய்ததற்காக அக்கூட்டத்தாரைத் தண் டிக்க வேண்டியிருந்தது. அதுவுமன்றி இவர்கள் சமயம் பார்த்து மதீனாவைக் கொள்ளை யடிப்பார்களென்ற சந்தேகத்தால் எச்சரிக்கையாகவே யிருக்கவேண்டியு மிருந்தது. முன்பு கூறிய முஸ்லீம்கள் கொல்லப் பட்ட விடத்திற்குச்சென்று அவர்களுக்காக பிரார்த்தனை செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு ஹஸரத் அவர்கள் இருபது குதிரை வீரர்கள்சேர்ந்த இருநூறு வீரர்களோடு ஒரு நூதனமான வழியாய் அந்த ஸ்தலத்தைநோக்கிச் சென்றார்கள். எதிரிகளுக்கு இச்சங்கதி தெரியக்கூடா தென்பது ஹஸரத் அவர்கள் பிரியம். ஆயினும் எதிரி கள் எவ்வாறோ ஹஸரத் அவர்கள் வருவதை யறிந்து மலைகளில் சென்று இரண்டுநாட்கள் ஒளிந்து கொண்டி ருந்தார்கள். ஹஸரத் அவர்கள் இறந்தவர்களுக்காகப் பிரார்த்தனைசெய்து முடிந்தபின் நேராய் மதீனாவிற்குத் திரும்பினார்கள். அவருக்கு எதிரிகள் ஸ்தலத்தைக் கொள்ளை யடிக்கப்பிரியமில்லை.

2-வது குர்தாவில் நடந்த யுத்தம்.

இது முஹம்மத்பின் முஸ்லிமாவின் சண்டையென் றும் கூறப்படும். குர்தா மதீனாவிற்கு ஏழுமைல் தூரத் தில் உள்ளது. அங்கிருந்த பனீகிலாப் என்ற கூட்டத்தார் இஸ்லாமியரைத் தாக்க எண்ணங் கொண்டிருந்தார்கள். இதையறிந்த ஹஸரத் அவர்கள் முஹம்மத்பின் முஸ்லிமா என்பவரோடு கொஞ்சம் சேனையைக்கூட்டி அக்கூட்டத் தாரைத் தாக்கும்படி யேவினார்கள். அவர்சென்று எதிரி

களை யெதிர்த்து சிலரைச் சங்கரித்தபின் மற்றபேர் சிதறி யோட்டமெடுத்தார்கள்.

3-வது ஸில்குஸ்ஸா சண்டை.

ஸில் குஸ்ஸா என்ற விடத்தில் பனிஸாலுபா என்ற கூட்டத்தார் வசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் பெருங்கூட்டமானவர்கள். இவர்கள் விஷயங்களையறிந்து கொள்வதற்காக முஹம்மத்பின் முஸ்லிமா அவர்கள் பத்து பேர்களோடு அனுப்பப்பட்டார்கள். அவர் அவ்வூருக்குப் போய்ச் சேரும்போது இராக்காலம். ஆகையால்பெருங் கூட்டமாகிய எதிரிகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டு முஹம்மத்பின் முஸ்லிமாவைத் தவிர மற்றபே ரனைவரையும் கொன்றுவிட்டார்கள். முஹம்மது பின்முஸ்லிமா காயமடைந்து விழுந்துவிட்டார். அப்பாதையே சென்று கொண்டிருந்த சில இஸ்லாமானவர்கள் அச்சங்கதியைக் கேள்விப்பட்டு ஹஸரத் அவர்களிடம்சென்று தெரிவித்தார்கள்.

அதைக் கேள்விப்பட்டதே ஹஸரத் அவர்கள் அபூ உபைதாபின் ஜர்ருஹ் என்பவரை யனுப்பி அக்கூட்டத்தாரைத் தண்டிக்கும்படி யேவினார்கள். அவர் வருகையைக்கண்ட எதிரிகள் ஓட்டம்பிடித்தார்கள். அவர்களுடைய தளவாடங்கள், சாமான்கள், கால்நடைகள் யாவும் இஸ்லாமானவர்கள் வசம் சிக்கிக்கொண்டன.

4-வது ஜீகுரத் யாகாபாவில் நடந்த சண்டை.

காபா என்றால் காடு என்றுபொருள். அப்பெயர் கொண்ட ஒரு ஊருமுண்டு. அது மதீனாவுக்கு வடமேற்கு திக்கில் இருக்கிறது. அது ஹஸரத் அவர்களுடைய ஒட்டகங்கள் மேயுமிடம். அபூஸர்ருல் கப்பாரி ரலியல்லாஹு

அன்கு என்பவரும் கொஞ்சகாலம் அங்குவசித்துக்கொண் டிருந்தார்கள். அச்சமயம் உயைனுபின் ஹிஸின்என்பவன் பனீகத்பான் கூட்டத்தாரில் நாற்பது குதிரை வீரர்க ளோடுவந்து அவரைத்தாக்கினன். அங்குள்ள ஒட்டகங் களைக் கொள்ளை யடித்துக்கொண்டான். அங்கிருந்த இடையன் ஒருவன் அபுலர்ருல் கப்பாரியின் புத்திரனைக் கொன்றுவிட்டு அவர்மனைவியைச் சிறைபிடித்துக்கொண்டு போய்விட்டான். அச்சமயம் இமராகு என்பவர் புதல் வராகிய ஸல்மா என்பவர் ஹஸரத் அவர்களின் வேலைக் காரர்களில் ஒருவனேடு அங்குவர நேர்ந்தது. அவர் நேர்ந்த சம்பவங்களைக் கேள்விப்பட்டு மிக்க விசனமடைந் து இச்சங்கதிகளை ஹஸரத் அவர்களுக்குத் தெரிவிக்கும் படி அந்த வேலைக்காரனை யனுப்பினர். பிறகு அவர் எதி ரிகளிருக்கும் திக்கை நோக்கிச்சென்ருர்.

ஸல்மா என்பவர் ஆயுதப்பயிற்ச்சியில் நல்ல தேர்ச்சி யடைந்த சுத்தவீரர். மிக்க தைரியசாலி. ஆகையால் அவர் கால்நடையாகவேசென்று எதிரிகளைக்கண்டு, யானைக்கூட் டத்தில் ஆண்சிங்கம் புகுந்ததுபோல் மிக்க கோபாவேசத் தோடு அவர்கள்மேல் பாய்ந்து அம்பினுலும் ஈட்டியாலும் அனேகரைச் சங்கரித்து அனேகரைக் காயப்படுத்தினர். எதிரிகள் தாங்கமுடியாமல் கொள்ளையடித்த ஒட்டகங் களையும் சொத்துகளையும் கைவிட்டு ஓடநேர்ந்தது. ஆனல் அவரோ அப்போதும் விடாது அவர்களைத் தொடர்ந்து சென்று பின்னும் சுமார் முப்பதுபேரைக் காயப்படுத்தி அவர்கள் உடைகளையும் பிடிங்கிக்கொண்டார்கள். எதிரிகள் இன்னும் தக்கமுயற்சியெடுத்துக் கொள்ளாவிடின் இவன் யாவரையுமேகொன்று தொலைத்து விடுவானென்று அஞ்சி, யாவரும் ஏகோபித்து ஒரேமொத்தமாய் ஏககாலத்தில் அவரைத்தாக்குவதென்று தீர்மானித்தார்கள்.

அச்சமயம் ஹஸரத் அவர்கள் தமது ஆட்களோடு அங்குவந்து சேர்ந்தார்கள். அஹ்ஸம் அஸதி, அபூகதாதா, மிக்தாத்கந்தி றலியல்லாகு அன்கு என்ற மூவர்களும் ஹஸரத் அவர்களுக்குத் துணையாய் அவர்களோடுகூட வந்திருந்தார்கள். இவர்கள் வரவையுணர்ந்த எதிரிகள்மிக்க பீதியடைந்து ஓடிவிடத்தொடங்கினார்கள். ஆனால் மேற்கண்ட மூவர்களும் எதிரிகளைவிடாது தொடர்ந்து சென்றார்கள். அவர்களில் அஹ்ஸம் அஸ்தி என்பவர்முன்னே வேகமாய்ச் சென்று எதிரிகளின்கூட்டத்தில் புகுந்து அனேகரைக்கொன்றார். அதன்மேல் அவர்கள்கூட்டமாய் அவர்மேல்விழுந்துத்தாக்கி அவ்வரைக்கொன்று விட்டார்கள். சற்று நேரத்திற்குள் பின்னால்சென்ற இருவரும் எதிரிகளைச்சந்தித்து அஹ்ஸம்அஸ்தி என்பவர் கொல்லப்பட்டதைக் கேட்டதும் மிக்ககோபாவேசமடைந்து எதிரிகளைத்தாக்கி தங்கள் தோழரைக்கொன்றவனைச் சங்கரித்து எதிரிகளில் அனேகரைக் கொன்று சில குதிரைகளையும் கைப்பற்றிக்கொண்டார்கள். எதிரிகள் மிக்க கலவரமடைந்து சிதைந்து ஓட்டமெடுத்தார்கள். அச்சமயம் பொழுதமரும்வேளை நெருங்கிவிட்டதால் அவர்கள் இருவரும் ஹஸரத் அவர்களிடம் திரும்பிவந்து விட்டார்கள். ஹஸரத் அவர்கள் தங்கள் ஆட்களோடு அங்கிருந்த பனீகர்த் என்ற ஏரியின்கரைமேல் பாளையமிறங்கி யிருந்தார்கள். அன்று இரவு அங்கேயே யாவரும் தங்கியிருந்தார்கள். மறுநாட் காலை ஸல்மா என்பவர் ஹஸரத் அவர்களைநோக்கித் தம்மோடு நூறு பேரை யனுப்பினால் தாம்சென்று எதிரிகளை யடியோடழித்துவிட்டு வருவதாய்க்கூறினார். ஹஸரத் அவர்கள் அவரைநோக்கி "இம்ராஅகுவின் குமாரராகிய ஸல்மாவே! உம்மோடு யுத்தம்புரியும் எதிரிகள் தோற்றுக்களைத்து உம்மிடம் சிக்கிக்கொண்டால் அதன் பின்னர் அவர்களைக் குரூரமாய் நடத்தலாகாது" என்றார்கள்.

அச்சமயம்தான் சந்திரக் கிரஹணத்திற்காக முதல் முதல் தொழுகை தொழப்பட்டது. அப்போது ஹஸரத் அவர்கள் குதிரைவீரர்களில் அபூகதாதா என்பவரையும், கால்நடைவீரர்களில் ஸல்மாவையும் நல்ல தேர்ச்சியடைந்த சுத்தவீரர்களென்று புகழ்ந்தார்கள். இதன்பிறகு அபூஸர்ருல் கப்பாரியின் மனைவியும் சிறையிலிருந்து மீட்கப்பட்டு ஹஸரத் அவர்களுடைய கஸ்பாஎன்ற ஒட்டகத்தின் மேல் ஏறிக்கொண்டு வந்துவிட்டார்கள். அதன்பிறகு இஸ்லாமியர்களுக்குமிக்க விரோதிகளாயிருந்த பனீயஸத், பனீஸலீம்என்ற இரண்டு கூட்டத்தாரும் தகுந்தபடி தண்டிக்கப்பட்டார்கள்.

5-வது ஐஸ்என்ற விடத்தில் நடந்த சண்டை.

மக்காவாசிகள் வர்த்தகத்திற்காக வெளிநாடுகளுக்குச் செல்வதும், அதுமுடிந்து மக்காவிற்குத் திரும்பிவந்ததும் இஸ்லாமானவர்களை யெவ்விதமாய் எதிர்த்து அவர்களுக்குத்தீங்கு செய்யலாமென்று யோசனைசெய்வதுமே வேலையாயிருந்தார்கள். ஆதலால் அவர்கள் வர்த்தகத்திலிருந்து திரும்பிவரும்போதே யவர்களைத்தாக்கிப் பின்னால் அவர்கள் நம்மவர்களுக்குத் தீங்குசெய்ய வொட்டாமல் தடுத்துவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதனால் அவர்கள் திரும்பிவரும் சமயத்தில் ஹஸரத் அவர்கள் மதீனாவிற்குச் சற்றுதூரத்திலுள்ள ஐஸ் என்ற விடத்தில், தமது வீரர்களோடுசென்று, தங்கியிருந்து அவர்களைத் தாக்கினார்கள். எதிரிகள் ஆற்றல் இல்லாதவர்களாய் ஏராளமான சாமான்களையும் அனேகம் ஆட்களையும் இஸ்லாமியர்கையில் சிக்கவைத்து ஓட்டம் பிடித்தார்கள்.

அவ்வாறு அகப்பட்ட சிறைகளில், அபுல்ஆஸ் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஹஸரத் அவர்களின் சுற்றத்தார். இவர் முன்னமே பதருயுத்தத்திலும் எதிரிகள் பட்சத்தில் சேர்ந்திருந்து சிறையாக இஸ்லாமியரிடம் சிக்கிக்கொண்டவர். அப்போது அவர்மனைவி தன் நகைகளை யனுப்பி அவனை விடுதலைசெய்யும்படி ஹஸரத் அவர்களைப் பிரார்த்தித்துக்கொண்டாள். ஹஸரத் அவர்கள் அபுல் ஆஸ் மக்காவிற்குச்சென்றதும் தன் மனைவியை மதீனாவிற்கு அனுப்பிவிட வேண்டுமென்ற நிபந்தனையின் மேல் அவனை விடுதலைசெய்தார். அவன் அப்படிச்செய்யாமல் மறுபடி எதிரிகளோடுசேர்ந்து இஸ்லாமியரோடு யுத்தம் புரிந்து மறுபடி சிறையாய்ச்சிக்கிக்கொண்டு மறுபடி மீட்கப்பட்டான். அப்போது ஹஸரத் அவர்களுடைய கருணையும் மற்ற உயர்ந்தகுணங்களும் அவன்மனதில் உறுத்தின. அதன்மேல் அவன் உடனே ஹஸரத் அவர்களைப் பணிந்து இஸ்லாம்மார்க்கத்தில் சேர்ந்துகொண்டு ஹஸரத் அவர்களிடமே மதீனாவில் தங்கிவிட்டார்.

6-வது தரப்என்ற விடத்தில் நேர்ந்த சம்பவம்.

மதீனாவிற்கு முப்பத்தாறு மைல் தூரத்தில் தரப் என்ற ஒரு ஏரியிருந்தது. அவ்விடத்தில் பனிஸஃலுபா என்ற கூட்டத்தார் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முன்புநடந்த வில்குஸ்ஸா யுத்தத்தில் அனேகம் இஸ்லாமியரை அக்கிரமமாய்க் கொன்றவர்கள். ஆதலின் ஹஸரத் அவர்கள் அந்தப்பகைவரைத் தண்டிப்பதற்காக ஸைத்பின் ஹாரிஸ் என்பவரை யனுப்பிவித்தார்கள். அவர்கள் முன்னாடியே யிச்சங்கதியை யறிந்துகொண்டார்க

ளர்தலினல் தங்கள் ஆடு மாடுகள் சாமான்கள் முதலிய வற்றையும் விட்டுவிட்டு அதைவிட்டு ஓட்டம்பிடித்தார்கள். இஸ்லாமியர்யாவும் கைப்பற்றிக்கொண்டு திரும்பினர்கள்.

7-வது ஹிஸ்மியில் நடந்த சண்டை.

மதீனவிற்குத் தென்மேற்கில் சுமார் நான்கு காத தூரத்தில் ஹிஸ்மி என்ற ஒருஸ்தலமிருக்கிறது. தஹீயா பின்ஹனீபா கல்பி ரலி யல்லாகு அன்கு என்பவர் மதீன விலிருந்து ஈஜிப்ட் தேசத்திற் குத்தானுதிபதியாய்ச் சென் றிருந்து திரும்பிவந்தபோது ஹிஸ்மியில் தங்கினர். அங்கி ருந்த ஹ—னைத்பின் ஹவுஸ் என்பவனும் அவன் மகனும் அவரைத்தாக்கி அவருடைய சாமான்கள் யாவற்றையும் கொள்ளை யடித்துக்கொண்டார்கள். அவர் மதீனவிற்கு வந்து அச்சங்கதியை ஹஸரத் அவர்களுக்கு அறிவித்தார். ஹஸரத் அவர்கள் ஸைத்பின் ஹாரிஸ் என்பரையழைத்து கொள்ளையடித்தவர்களைத் தண்டிக்கும்படி யனுப்பினர்கள். இவர் அங்கு சேர்வதற்குள் பனுநவஸிப் ரலி யல்லாகு அன்கு என்பவர் அக்கொள்ளைச் சங்கதியைக்கேள்விப் பட்டு அங்குசென்று ஹ—னைத் என்பவனைத் தாக்கி அவன் கொள்ளையடித்த சாமான்களைக் கைப்பற்றி மதீனவிற் கனுப்பிவிட்டார்.

ஸைத்பின் ஹாரிஸ் என்பவர் இச்சங்கதியைச் சற்று மறியாமல் ஹிஸ்மிக்குச் சென்றதும் ஹ—னைத் என்பவனை யும் அவன் புத்திரனையும் கொன்று அவர்களுடைய சாமான்களைச் சூறையாடி அங்கிருந்தவர்களிற் சிலரைச் சிறையாக்கிக் கொண்டார். இச்சங்கதி ஹஸரத் அவர் களுக்குத் தெரிந்ததும் ஹஸரத் அலி கர்றமல்லா ஹ— வஜ்ஹஹ— வையனுப்பியவர்களை விடுதலை

செய்துவிட்டு அவர்களுடைய சாமான்களையும் கொடுத்து வரும்படி கட்டளையிட்டார்கள்.

8-வது வாதில் குராவில்நடந்த சச்சரவு.

மதீனாவிற்கருகில் மேற்கே ஒருமைதானமுண்டு. அது பராஸா என்ற பெருங்கூட்டத்தாருடைய வாசஸ்தலமாயிருந்தது. ஸைத்பின் ஹாரிஸ் என்பவர் ஏராளமான சாமான்களோடு வர்த்தகவிஷயமாய் அவ்வழியே சென்று கொண்டிருக்கையில் அக்கூட்டத்தார் அவரை மறித்து அவருடைய பொருள்களை யெல்லாம் கொள்ளைகொண்டு அவரையும் காயப்படுத்தி விட்டார்கள். அவர் உடனே மதீனாவிற்குத் திரும்பிவந்து இன்னும்சில இஸ்லாமியர்களைத் துணைகூட்டிக்கொண்டு மறுபடிசென்று அவர்களை யெதிர்த்தார். அப்போது எதிரிகளில் அனேகர் கொல்லப்பட்டுச் சிலர் சிறையாக்கவும் பட்டார்கள்.

9-வது தௌமதுல் ஜந்துல் என்றவிடத்தில் நடந்த விஷயங்கள்.

தௌமதுல் ஜந்துல் என்றவிடத்தில் கிருஸ்தவர்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்களால் நேரிடத்தக்க பீதியைத்தடுப்பதற்காக ஹஸரத் அவர்கள் ஒருமுறை அவர்களைத் தாக்கினார்களென்றும், அப்போதவர்கள் சகிக்கமுடியாது ஓடிவிட்டார்களென்றும் முன்னமே கூறியிருக்கிறோம். மறுபடியவர்கள் இஸ்லாமியர்களுக்குத் தொந்திரவை கொடுக்க ஆரம்பித்தார்கள். அதனால் ஹஸரத் அவர்கள் அப்துல்ரஹ்மான் பின் ஔப் ரஸியல்லாஹு அன்கு என்பவருக்குச் சேனாதிபதி பட்டந்தரித்து, தமது மகிமைபொருந்திய திருக்கரத்தினாலேயே அவருக்குத்தலையணிசூடிப் போதுமான சேனையையு மளித்து அவரை நோக்கி:—

ஆண்டவனுடைய புகழும் அவனுடைய சத்தியமான உத்தம இஸ்லாம் மார்க்கமும் எங்கும் பரவவேண்டும் என்பதற்காகவே யுத்தம்புரிய வேண்டியதன்றி நமது பிரியத்திற்காக வென்று கருதலாகாது; பொய், சூது மோசம் முதலிய வழிகளில் பிரவேசிக்கலாகாது. ஸ்திரீ கள், சிறுவர்கள், வயோதிகர்கள், இவர்களைக் கொல்லலா காது. எதிரிகள் உமது கைவசமாய் விட்டால் அவர்களு டைய தலைவன் யாரோ அவன் புத்திரியை நீர் மணம் செய்துக் கொள்ளலாம்'' என்று கூறினார்கள்.

அராபியருக்குள் பிரஸ்பர அன்பையும் ஒற்றுமை யையும் உண்டாக்குவதற்கும், மற்ற கூட்டத்தாரிடம் சினேகம் உண்டாக்கிக் கொள்வதற்கும், சாதனமான மார் க்கங்கள் இரண்டேயிருந்தன. ஒன்று சத்தியம் தவறாது நடந்து கொள்ளுதலும், மற்றொன்று அவர்களோடு உறவு கலந்து கொள்வது மேயாகும். ஹஸரத் அவர்கள் இயற் கையாகவே மிக்க உதாரகுணமுடையவர்களாதலால், எப் போதும் இத்தகைய மார்க்கங்களையே அவர்கள் கையா ண்டு வந்தார்கள். அன்னாட்டார்க்குள் எப்போதும் ஒற்று மையும், பரஸ்பர அன்பும், சற்றும் சச்சரவின்றிய பூரண சமாதானமும் சந்தோஷமுமே எப்போதும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே ஹஸரத் அவர்களுடைய விருப்பம். அவர்கள் தங்களாலியன்ற வரையில் அந்நோக்கத்திற்கு இடையூறு நேராவண்ணம் கவனித்து வந்ததோடு, சச்சர வையுண்டாக்கும் வார்த்தைகள் இஸ்லாமியர்களுக்குள் வழ ாவண்ணம் தடுத்துவந்தார்கள். அப்படித் தடுக்கமுடியா தசச்சரவு நேர்ந்து விட்டாலும் மறுபடியவ்வாறு சம்ப வியாமற் றடுக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டே, "எதிரிகள் கைவசப்பட்டால் அவர்கள் தலைவனுடைய புத் திரியை நீமணம்புரிந்து கொள்'' என்று ஹஸரத் அவர்

கள் அப்துல் ரஹ்மான் பின் ஔப் றலியல்லாகு அன்ஹு வுக்குக் கட்டளையிட்டார்கள். இன்னேக்கத்தைக் கொண்டே ஹஸரத் அவர்கள் தமக்கு அதிக வயதான காலத்திலும், எதிரிகளின் தலைவர்களுடைய புத்திரிகளைத்தாம் மணம் செய்துகொண்டார்கள்.

அப்துல் றஹ்மான் பின் ஔப் றலியல்லாகு அன்கு கிருஸ்துவர்களிடம் தமது சைனியத்தோடு சென்றதும், இஸ்லாம் மார்க்கத்தின் சத்தியங்களையும், மகிமைகளையும் பற்றி அன்போடும் சாந்தத்தோடும் பிரசங்கங்களின் வாயிலாக அவர்களுக்குப் போதிக்கத்தொடங்கினர். மனதைக் கவரும் இனிமையான அவருடைய வாக்கியங்களைக்கேட்ட கிருஸ்துவர்கள் தலைவனுகிய அஸ்பஹாபின் உம்ருகல்பி என்பவர் மிக்க சந்தோஷமடைந்து இஸ்லாம் மார்க்கத்தில் ஈமான்கொண்டு தன்கூட்டத்தார்களோடு உடனே இஸ்லாம் மார்க்கத்தை தழுவிக்கொண்டார். அப்துல்ரஹ்மான்பின் ஔப் றலியல்லாகு அன்ஹு அவர்கள் ஹஸரத் அவர்கள் கட்டளைப்படி அத்தலைவன் புத்திரியை மணம் செய்து கொண்டார்கள்

10-வது பதக் என்றவிடத்தில் நடந்தசண்டை.

மதீனவிலிருந்து ஹட்ஜாஸுக்குச் செல்லும் பாதையில் இரண்டுகாத தூரத்தில் பதக் என்ற ஒருஸ்தலம் உண்டு அங்கு ப்னூஸஅத் என்ற யூதக் கூட்டத்தார் வசித்து வந்தார்கள். இவர்கள் கைபரில் வசித்து வந்த யூதர்களுக்கு உதவி செய்வதற்காக ஏற்பாடுகள் செய்துக்கொண்டிருக்கிருர்கள் என்றசங்கதி ஹஸரத் அவர்களுக்குத் தெரியவந்தது. ஹஸரத் அவர்கள் அலிகர்றமல்லாஹு வஜ்ஹஹுவைப் போதுமான சேனையோடு அவர்களுடைய முய

ர்ச்சியைத் தடுக்கும்படி யனுப்பினர்கள். அவர் சென்று யுத்தத்தில் பலரைமடித்து எதிரிகளின் இருநூறு ஒட்டகங்களையும், இரண்டாயிரம் ஆடுகளையும் கைப்பற்றிக்கொண்டு மதீனாவிற்குத் திரும்பினர்கள்.

11-வது குருஸ் என்ற ஸ்தலத்தில் நடந்த சம்பவம்.

மதீனாவிற்குச் சற்று தூரத்தில் அறைனு, உக்கல் என்ற இரண்டு ஸ்தலங்கள் இருந்தன. அங்கிருந்த ஓர் சிறு கூட்டத்தார் ஹஸரத் அவர்களிடம் வந்து பணிந்து இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் மிக்க ஏழமையும் வியாதியுமுடையவர்கள். ஏனெனில் அவர்கள் வசிக்கும இடத்தில் சுத்தமான ஜலமும் காற்றும் கிடையாது. அவர்கள் விவசாயம் செய்வோர் களல்ல ஆடுமாடு ஒட்டகங்களையே மேய்த்துக் காலங் கழிப்பவர்கள். அவர்கள் ஹஸரத் அவர்களிடம் தங்கள் குறைகளையெல்லாம் கூறி தங்களை யாசீர்வதித்துத் தங்களுக்கு ஏதேனும் ஔஷதம் தரும்படிக்கும் தங்களுக்கிருக்கும் வியாதிகளைச் சொஸ்தம் செய்யும்படிக்கும் பிராத்தித்துக் கொண்டார்கள். ஹஸரத் அவர்கள் அவ்வாறே யவர்களுக்கு ஔஷதம் கொடுத்து சுகமுண்டாக்கியதோடு சில ஒட்டகங்களையுமளித்து அவர்களோடு சில இஸ்லாமியரையும் கூட்டி யருகிலுள்ள வனங்களில்போய் சஞ்சரிக்கும்படி யனுப்பினர்கள்.

ஆனல் அயோக்கியருக் குபகாரஞ்செய்தால் பதிலுக்கு அபகாரமேசெய்வார்கள் என்பதுபோலும் தீயில் மடியவிருக்கும் தேளைத்தூக்கிக் காப்பாற்றினல் தூக்கியவனையே கொட்டுவது போலும் அந்த நன்றிகெட்டவர்

கள் தங்களுக்குத் துணையாகவந்த இஸ்லாமியர்கள் கண் களையெல்லாம் கெடுத்துவிட்டு அவர்கள் கைகால்களையும் வாங்கி விட்டார்கள். அதனால் அவர்களனைவரும் மடிந் தார்கள். ஹஸரத் அவர்கள் இச்சங்கதியைக் கேள்விப் பட்டு குருஸ்பின் ஜாபிர்பிகரி றலியல்லாகு அன்ஹு வசம் சில ஆட்களைக்கூட்டி அத்துஷ்டரைத் தண்டிக்கும்படி யேவி அனுப்பினார்கள். அவர்கள்சென்று அவர்களைத்தக் கப்படி தண்டித்து இனி யொரு கூட்டமாயிராவண்ணம் செய்துவிட்டுத் திரும்பினார்கள்.

12-வது மழைக்காகத் தொழுதல்.

அக்காலத்தில் மதீனாவில் மழைபெய்யாததால் பஞ் சம்நேர்ந்து ஜனங்கள் மிக்க சங்கடப்பட வேண்டியதா யிற்று. அதன்மேல் ஜனங்கள் ஹஸரத் அவர்களிடம் வந்து மழைபெய்யும்படி தாங்கள் ஆண்டவனை வேண் டிக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஹஸ ரத்தவர்கள் அவ்வாறே இரண்டுவேளை தொழுதபின் பிரா ர்த்தனை செய்தார்கள். அவர்களுடைய வேண்டுகோ ளுக்கு ஆண்டவன் இரக்கங்கொண்டபடியால் உடனே நல்ல மழைபெய்யப் பஞ்சம்நீங்கி ஜனங்கள் க்ஷேமமடைந் தார்கள்.

13-வது ஹுதைபியாவில் நடந்த சண்டை.

இதேவருடம் ஹஸரத் அவர்கள் உம்ராதொழுகைக் காக ஓர்பெருங்கூட்டத்தாரோடு மக்காவிற்குப் புறப்பட் டார்கள். குர்பானிக்காக வேண்டிய ஒட்டகங்களையும் கூடவே கொண்டுபோனார்கள். அவர்களோடு சென்றவர் கள் கணக்கிலடங்காதவர்களா யிருந்தார்கள். ஆயினும்

அவர்களில் ஆயிரத்தைந்நூறு பேர் அடங்கிய ஒரு பிரத்தியேகக்கூட்டம் இருந்தது. அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கத்திமட்டு மிருந்ததேயன்றி வேறெவ்வித ஆயுதமுமில்லை. இக்காலத்தில் வழிப்பிரயாணம் செல்வோர்கள் முதலியோர் எப்படி கையில்ஒருகோல்கொண்டு போகிறார்களோ அவ்வாறே அக்காலத்தில் ஜனங்கள் கையில் கத்திகொண்டு போவது வழக்கம்.

இவர்கள் ஸுல்ஹுலைபா என்ற ஸ்தலம்போய்ச்சேர்ந்தார்கள். உம்ரா அல்லது ஹஜ்ஜுத்தொழுகைக்குச் செல்வோர் அந்த ஸ்தலத்திலிருந்து அதற்காக ஏற்பட்டிருக்கும் விதிநிஷேதங்களைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும். ஹஸரத் அவர்கள் வருகிற சங்கதியை மக்காவாசிகள் அறிந்ததும் மிக்க க்ஷாத்திரங்கொண்டு எப்படியானும் ஆகட்டும், இஸ்லாமியர்களை மக்காவிற்குள் வரும்படி விடாது தடுப்பதே சரியென்று தீர்மானஞ்செய்துக் கொண்டார்கள். இதற்காக அவர்கள் மக்காவின் சுற்றுப் பக்கங்களிலுள்ள ஜனங்களையெல்லாம் தூண்டிப் பெருங் கூட்டமாய்ச் சேர்த்துக்கொண்டு, பெருஞ்சைனியத்தோடு மக்காவைவிட்டுப் புறப்பட்டு பலதா என்ற ஸ்தலத்திற்குச் சென்று அங்கு பாளையமிறங்கினார்கள்.

இச்சமாசாரம் ஹஸரத்அவர்களுக்கு எட்டியது. அவர்கள் உடனே தமது தோழர்களையழைத்து அவர்களோடு ஆலோசனை செய்த பின்னர், மக்காவிற்குச்செல்லும் சாதாரணமான பாதையைவிட்டு ஒருபுதுவழியாய்ச் செல்வதென்று தீர்மானம்செய்துகொண்டார்கள். அவர்கள் அவ்வாறே மிக்க கஷ்டமான ஒருவழியேசென்று எதிரிகளைத் தாக்கினார்கள். சற்றுநேரம் போர்நடந்தபின் எதிரிகள் சமாளிக்கமுடியாமல் ஓட்டம் பிடித்தார்கள். ஹஸரத் அவர்கள் எதிரிகளைப் பின்தொடர்ந்து சென்று, ஹுதை

பியாவைக்கடந்தபிறகு, ஸினிய்யதுல் முரா என்ற ஸ்தலத்தைச் சேர்ந்தார்கள்.

அங்குசேர்ந்ததே, ஹஸரத் அவர்களுடைய வாகனமாகிய கஸ்வாஎன்ற ஒட்டகம் ஒரு அடிகூட முன் செல்லாமல் படுத்துக்கொண்டது. எத்தனையோபேர் அதை எவ்வளவோ சாமர்த்தியமாய் எழுப்பமுயன்றும் முடியவில்லை. அந்த ஒட்டகமோ எப்படிப்பட்ட குழப்பத்திலும், யுத்தத்திலும், சற்றேனும் சலிக்காமல் சோர்வடையாது செல்லத்தக்கது. அத்தகைய ஒட்டகம் ஒரேபிடிவாதமாய் அந்தவிடத்தை விட்டு நகரமாட்டேன் என்றதைக்கண்டதே, ஹஸரத் அவர்கள் “ஒஹோ! நாம் கஃபாவிற்குச் சென்றால் குழப்பம் நேரிடும்போலிருக்கிறது. இது ஆண்டவனுக்குச் சம்மதியானவிஷயமாய்த் தோன்றவில்லை” என்று சிந்தித்தார்கள். அதன்மேல் ஹஸரத் அவர்கள் தங்கள் ஆட்களோடு அங்கிருந்து பின்திரும்பி ஹுதைபியாவிற்கு வந்து அங்கு தங்கினார்கள்.

அதேதினம் இஸ்லாமியர்களுக்குப் பாதுகாவலாயிருந்த முஹம்மத்பின் முஸ்லிமா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எதிரிகளின் வேவுகாரர்களில் ஐம்பதுபேர்களைப் பிடித்துவந்து ஹஸரத் அவர்களிடம் விட்டார்கள். ஹஸரத் அவர்கள் அந்த வேவுகாரர்கள் குறித்தவிடத்தை விட்டுச்செல்ல லாகாதென்று கட்டளையிட்டார்கள். ஹுதைபியாயில் ஜலாதாரத்திற்கு ஒரு கிணறு இருந்தது. அதிலிருந்தஜலம் அதிகமாய்ச் செலவழிந்து விட்டதால் ஜலம் இல்லாமல் ஜனங்களுக்கு மிக்க கஷ்டம் நேர்ந்தது. அதையறிந்த ஹஸரத் அவர்கள் வில்லில் ஒருஅம்பைத்தொடுத்து கிணற்றில் எய்தார்கள். உடனே ஜலம்சுரந்து பொங்கிக் கிணறு நிரம்பிவிட்டதால் ஜனங்கள் கஷ்டம்நீங்கி மிக்க சந்தோஷமடைந்தார்கள்.

ஹஸரத் அவர்கள் தாம் கஃபாவிற்குச்சென்றால் பரிசுத்தமான அந்த ஸ்தலத்தில் குழப்ப முண்டாகுமென்று கருதி ஹுதைபியாவிற்குத் திரும்பிவிட்டதை மக்காவாசிகள் கேட்டு மிக்க அகங்காரமும் தைரியமுங்கொண்டு, புதைல் பின் தர்க்கா என்பவனை யனுப்பிக் கீழ்க்கண்டவாறு ஹஸரத் அவர்களிடம் கூறும்படி செய்தார்கள்:— "இந்த நாட்டிலுள்ள அராபிய ரனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரேமனதாயிருக்கிறோம். இது விஷயத்தில் யாவரும் ஏகோபித்து ஒரேதீர்மானங் கொண்டிருக்கிறோம். அதாவது உங்களை மக்காவிற்குள் வரவிடமாட்டோம். அப்படி நீர்வந்தால் சண்டையிடுவோமென்பது உண்மை".

இச்சங்கதியை ஹஸரத் அவர்கள் கேள்விப்பட்டதும் அத்தூதனை நோக்கி, "நாம் சண்டையிடவரவில்லை. உம்ரா தொழுகவே வருகிறோம். இப்போது மக்காவாசிகள் கலகம் விளைக்காமலிருந்தால் கொஞ்சகாலம் நமக்குள் ஒரு விதச்சச்சரவும் நேரிடாது. அப்படிச்செய்யாவிட்டால் அது அவர்களுக்கே கெடுதியைவிளைவிக்கும். அப்படிக்கின்றி அவர்கள் நம்மோடு சண்டையிட்டு நம்மைச் ஜெயித்துவிட்டால் அவர்களுடைய கோரிக்கை யீடேறிச் சந்தோஷமடைவார்கள். அப்படிக்கின்றி நாம் ஜெயித்து அவர்கள் நம்வசமாய்விட்டால் அப்போதும் நமக்குள் சண்டை சச்சரவுநேராமல் கொஞ்சகாலமேனும் சமாதானம் ஏற்படும். இவையிரண்டிற்கும் இவர்கள் ஒப்பாவிடின் நாம் நமது உயிருள்ளமட்டும் சண்டை தொடுத்துக்கொண்டேயிருப்போம் என்பது சத்தியம்" என்று கூறியனுப்பினார்கள்.

புதைல்பின் தர்க்கா, ஹஸரத் அவர்கள் மொழிந்த இச்சமாசாரத்தைக் குரைஷியரிடம்கூறி அவர்கள் சண்டைக்கு வரவில்லை. கஃபாவில் உம்ரா தொழுகைக்காக

வந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களைத் தடுக்காமல் நகருக்குள் விட்டுவிடுவதே நியாயமெனத் தோன்றுகிறது'' என்றான்.

குரைஷியர் அவன் இஸ்லாமியர்களுடன் சேர்ந்து கொண்டானென்று எண்ணி அவன்சொல்லை யேற்றுக் கொள்ளாமல் தங்களுக்கு மிக்க நம்பிக்கையுடையவனான உருவாபின்மசூஊத் என்பவனை ஹஸரத் அவர்களிடம் ஏவினார்கள். அவன்சென்று அவர்களிடம் கடூரமான மொழிகளைப்பகர்ந்தான். ஹஸரத் அவர்கள் மறுமொழி யாத சாந்தமும் மரியாதையுமான வார்த்தைகளையே கூறி யனுப்பினார்கள்.

அம்மனிதன் அங்கிருந்து குரைஷியரிடம் சென்று பின்வருமாறு கூறினான்:—

“நான் பர்ஷியா, ரூம், ஈஜிப்ட்முதலிய தேசங்களின் அரண்மனைகளையும் தர்பார்களையும் கண்டிருக்கிறேன். ஆனால் முகம்மத் நபியின் தர்பாரைப்போல் நான் எங்கும் கண்டதேயில்லை. அவர் எச்சல் உமிழ்ந்தால் அதைக் கரத் தில் ஏந்திக் கொள்ளுகிறார்கள். அவர் கண்ணால் சமிக்கை செய்தால் அதை யறிந்து நடக்க ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் ஒரு மிக்க அற்பவேலையைக் கூறினால் பெரிய அந்தஸ்தி லுள்ளவர்களெல்லாம் அதை மேல்விழுந்து செய்ய ஆவலோடு காத்துக் கொண்டிருக்கி றார்கள். அவர்முன்நின்று அவர்முகத்தை நிமிர்ந்து பார்க் கும் தீரன்கிடையாது. அவருக்கு நடக்கும் மரியாதையை யும் வணக்க ஒழுக்கங்களையும் எங்கும் காணமுடியாது. இவ்வள விற்கும் அவர் வார்த்தைகளோ மிக்க சாந்த மானவை. ஆகையால் நான் கூறுவதைக் கவனத்தில் வையுங்கள். அவர்களாவது அடியோடொழிய வேண்டும்.

அல்லது நீங்களாவது அடியோடு தோல்வியடைய வேண்டும். அது வரையில் அவர்கள் இடம் போகிறதில்லை'' என்றான்.

குரைஷியர்கள் இதற்குச் சற்றேனும் சம்மதிக்கவில்லை. அவர்களைக் கஃபாவிற்குவர விடமாட்டோம். இவ்வருடம் திரும்பிப்போய் அடுத்தவருடம் வேண்டுமாயின் வந்து அவர்கள் என்னவோ தொழுது செல்லட்டும்'' என்றார்கள். அதன் பிறகு குலேஸ் என்பவன் ஹஸரத் அவர்கள் இருக்குமிடத்திற்கு வந்தான், ஆனாலவன் ஹஸரத் அவர்கள் குருபானி செய்வதற்காக கொண்டுபோயிருந்த ஒட்டகங்களைச் சிலர் மேய்த்துக்கொண்டும் லெப்பைக், என்று சொல்லிக்கொண் டிருப்பதையும் கண்டு திரும்பிப்போய் குரைஷியரை நோக்கி "அவர்கள் ஹஜ் செய்யவே வந்திருக்கிறார்கள், ஆதலால் அவர்களைத் தடை செய்வது சரியல்ல'' என்று கூறினான். இதைக் கேட்ட குரைஷியர் "போ போ நீ சாமான்னிய மனிதன் உனக்கு இந்த விஷயங்களெல்லாம் ஒன்றுமே தெரியாது. உன்வேலையைப்பார்,, என்று கோபத்தோடு அலட்சியமாய்க் கூறினார்கள். குலேஸ் என்பவன் கோபமடைந்து அப்படியானால் இவ்விஷயத்தில் நான் உங்களோடுசம்பந்தப்படமாட்டேன், நீங்கள் நீதிதவறி ஹஜ்செய்யவருகிறவர்களைத் தடுக்கிறீர்கள், அப்படிச் செய்வதானால் நான் என் கூட்டத்தாரோடு உங்களைவிட்டு நீங்கி விடுவேன்,, என்றான்.

இதைக்கேட்ட குரைஷியர் மனக்கலக்கமடைந்து "பொறு பொறு நீஅவசரப்பட்டு அப்படிக் கோபித்துக் கொள்ளலாமா, நிதானிப்போம், நீகூறுவதைப்பற்றியே யோசிக்கலாம்...,,என்று அவனுக்குச் சமாதானங் கூறினார்கள்.

குரைஷியர் இவ்வாறு கலவரத்தி லிருந்தார்களேயன்றி ஒரு முடிவிற்கும் வரவில்லை. ஆகையால் ஹஸரத் அவர்கள் குரைஷியர்களுடைய முடிவான அபிப்பிராயத்தை யறிய வேண்டு மென்று கிராஸ்பின் உமீயா றலியல்லா அன்ஹு வை குரைஷியரிடம்சென்று அதைப்பற்றி தெரிந்து வரும் படி யனுப்பினார்கள். அவர் மக்காவிற்குச்சென்றதே குரை ஷியர் அவரைச் சிறைப்படுத்திக் கொண்டதோடு கொன்று விடவும் சிந்தித்தார்கள். ஆனால் மக்காவில் அவருடைய சுற்றத்தார் சிலர் இருந்தபடியால் குரைஷியர் அவருக் குத் தீங்கு செய்யக் கூடவில்லை. கடைசியில் அவர் விடு தலை பெற்று, கருதிச்சென்ற விஷயத்தைப்பற்றி ஒரு விவகாரமும் செய்வதற்கு வசதிப்படாமலே திரும்பி வந்து விட்டார்.

ஹஸரத் அவர்கள் அதே காரியத்திற்காக உஸ்மானி ப்னி அப்பான் றலியல்லாஹு அன்ஹுவை குரைஷியர்க ளிடம் அனுப்பினார்கள். அவர் குரைஷியரிடம் சென்ற போது அவர்கள் அவரை மிக்க மரியாதையோடு ஏற்றுக் கொண்டு அவர்மட்டும் கஃபாவிற்குச் சென்று தொழுது வரத் தாங்கள் ஒப்புக்கொள்வதாய்க் கூறினார்கள். அதைக் கேட்ட குரைஷியர் மிக்ககோபங்கொண்டு அவரையும் அவ ர்கூடவந்த பரிவாரங்களையும் சிறைப்படுத்திக் கொண்டார் கள். சிலநாட்கள்வரையில் சென்றவர்கள் திரும்பி வராமலி ருந்ததாலும் அவர்களைப்பற்றிய சங்கதியும் ஒன்றும் தெரி யாததாலும் அவர்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டுமென் று இஸ்லாமியருக்குள் பலத்த வதந்தியுண்டாய்விட்டது.

இதையறிந்த ஹஸரத் அவர்கள் மிக்க மனவருத்தம் அடைந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கையில் தமது தோழமார்களை யழைத்து குரைஷியர் உஸ்மானிப்னி அப் பான் றலியல்லாஹு அன்ஹுவையும் அவர் கூடச்சென்ற

இஸ்லாமியர்களையும் அக்கிரமமாய்க் கொன்று விட்ட சங்கதி உண்மையாயிருக்கும் பட்சத்தில், அதற்காக நாம் பழி வாங்க வேண்டியது அவசியமாகும். அது விஷயத்திற்காக நீங்கள் அனைவரும் நமக்குச் சத்தியமான வாக்குறுதி கூற வேண்டும். அதாவது, அதற்காக நாம் குரைஷியர் மேல் யுத்தத்திற்குப் புறப்படும்போது ஒருவரும் பின்னடைய மாட்டோம் என்று வாக்களிக்கவேண்டும். அவ்வாறே ஒவ்வொருவரும் ஹஸரத் அவர்கள் திருக்கரங்களைப் பற்றிக் கொண்டு சத்தியவாக்களித்தார்கள். இக்கட்டுப்பாட்டிற்கு உட்படாதவர் ஒருவருமேயில்லை. இச்சத்தியவாக்குத்தத் தம் ஆண்டவன் திருவுளத்திற்குச் சம்மதமானதாயிருந்தது. ஆகையால் இதற்கே "பைஅத்துர்ரில்வான்" என்று குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

இஸ்லாமியர்கள் இவ்வாறு வாக்குறுதி செய்துகொண்டு க்ஷாத்திரங் கொண்டிருப்பதைக் குரைஷியர் கேள்விப்பட்டதும் சண்டைகட்டாயம் உண்டாவதுநிச்சயமென்று உணர்ந்தார்கள். அவர்கள் ஆலோசனை செய்து முன்போல் இஸ்லாமியரோடு யுத்தம்செய்ய நம்மால் முடியாது. அப்படிச்செய்தால் நாம் சீக்கிரம் தோல்வியடைவோம்" என்று உணர்ந்து தங்கள் ஆட்களில் ஸுஹேல் பின்உமர் என்பவரை, இருவர் துணையோடு ஹஸரத்அவர்களிடம் சென்று சமாதான ஏற்பாடுசெய்து கொண்டுவரும்படி யனுப்பினார்கள். ஸுஹேல் ஹஸரத் அவர்களிடம் சென்று பேசிய போது சமாதானமாக வேண்டியதைப்பற்றி கீழ்க்கண்ட நிபந்தனைகளைக் கூறினார்:—

1-வது நிபந்தனை:— ஹுதைபியாவில் நடந்த யுத்தத்தில் முஹம்மத் பின்முஸ்லிமா ரலியல்லாஹு அன்ஹு வால் சிறையாக்கப்பட்ட ஜனங்களை விட்டு விடவேண்டும், என்றபோது ஹஸரத்தவர்கள் "உஸ்மான் பின் அப்பானை

யும் அவர் கூடவந்தவர்களையும் நீங்கள் விட்டுவிட்டால் உங்கள் ஆட்களை விட்டு விடுகிறோம்'' என்றார்கள். ஸுஹேல் அவ்வாறே யொப்புக்கொண்டார்.

2-வது நிபந்தனை—இந்த வருடம் நீங்கள் மக்காவிற்குள் வராமல் திரும்பிப்போய்விட வேண்டும். வேண்டுமாயின் அடுத்த வருடம் வந்து ஹஜ்ஜு நிறைவேற்றிக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் மூன்று நாட்களுக்குமேல் மக்காவிலிருக்கலாகாது. உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு கத்திதவிரவேறு ஆயிதம் இருக்கலாகாது.

3-வது நிபந்தனை—அதற்குப்பின் பத்து வருடகாலம் நமக்குள் சண்டை நேரிடாது பூரண சமாதானம் நிலைபெற்றிருக்கவேண்டும். இருகட்சிகளைச் சேர்ந்தவர்களில் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவு செய்யலாகாது. நாம் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யக்கூடாது.

4-வது நிபந்தனை—எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் யாரேனும் உங்களிடம் வந்துவிட்டால் அவர்களைத்திருப்பி யனுப்பிவிடவேண்டும். உங்களைச் சேர்ந்தவர்கள் யாரேனும் எங்களிடம் வந்தால் நாங்கள் அவர்களைத் திருப்பி யனுப்பமாட்டோம்.

ஹஸரத் அவர்கள் யாவும் கேட்டபின் அவ்வாறே சம்மதித்ததாய்க் கூறினார்கள். அப்போது அருகிலிருந்த ஹஸரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஸரத் அவர்களை நோக்கி“ இவர்கள் கூறும் நிபந்தனைகளெல்லாம் நியாயமற்றவைகளாகவே யிருக்கின்றன. சமாதான நிபந்தனைகள் இருகட்சிகளுக்கும் சமமான சௌகரியங்களை யளிப்பதாக விருக்கவேண்டும். இந்த நிபந்தனைகள் ஒரு கட்சியாருக்கே அனுகூலத்தையும் பலத்தையு மளிக்கத் தக்கதாயிருக்கிறது. முதல் நிபந்தனை அவர்களுடைய அக்

கிரமமான பிடிவாதத்தையே சாதிக்கிரதாக விருக்கிறது. நாம் எவ்வளவு செலவுசெய்து கஷ்ட மெடுத்துக் கொண்டு எவ்வளவு தூரம் வந்திருக்கிறோ மென்பதை யவர்கள் சற்றும் கவனிக்கவேயில்லை. ஒவ்வொரு நிபந்தனையும் அவ்வாறே நமக்குப்பிரதி கூலமாகவும் அவர்களுக்கு அனுகூலமாகவுமேயிருக்கின்றன. இத்தகைய அநீதமானநிபந்தனைகளையா ஒப்புக்கொள்கிறீர்கள்'' என்றார்.

ஹஸரத் அவர்கள், இருக்கட்டும் அவர்களிடமிருந்து நம்மிடம்யாரேனும் வருவதாயின் அவர்கள் இஸ்லாம்மார்க்கத்தில் சேர்வதற்கே வருவார்கள். சேர்ந்தபின் அவர்களை நாம் அவர்கள் பிரியப்படி போகும்படி யனுப்பிவிடுவோம். ஆண்டவன் அவர்களைக்காப்பாற்றிக் கொள்வான். நம்மிடத்திலிருந்து யாராவது அவர்களிடம் செல்வதாயின் அவர்கள் நம்மார்க்கத்தை விட்டுவிட்டுச் செல்வோராகவே யிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களால் நமக்கு ஒரு பயனு மில்லை.

சமாதான ஏற்பாட்டைச் செய்யவந்த குரைஷியர் மூவரில் ஸுஹேல் என்பவன் ஒருவன். இவன் புத்திரனாகிய அபூஜந்தல் என்பவர் கொஞ்ச காலத்திற்கு முன்பு இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக் கொண்டார். ஆயினும் இது காறும் அவர் தன் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே யிருந்து வந்தார். ஆனல் இப்போது ஹஸரத் அவர்களிடம் வந்து விட்டார். குரைஷியர் சமாதான உடன்படிக்கையில் கண்ட நான்காவது நிபந்தனைப்படி அவரை நீங்கள் எங்களிடம் திருப்பி யனுப்பிவிடவேண்டும் என்று ஹஸரத் அவர்களைக் கேட்டார்கள். ஹஸரத் அவர்கள் அவர் உடன்படிக்கை ஏற்படுமுன்பே வந்துவிட்டவராதலால் நீங்கள் அவரை யனுப்பும்படி கேட்க நியாயமில்லை யென்று கூறியும் அவர்கள் முரட்டுத்

தினமாக அப்படிச் செய்யாவிட்டால் சமாதானத்திற்கு ஒப்பமாட்டோம் என்றார்கள். அதன்மேல் ஹஸரத் அவர்கள் அவருக்கு அவர்கள் ஒரு தீங்கும் செய்யலாகாதென்ற நிபந்தனையின் பேரில் அதற்கும் சம்மதித்தார்கள். அதன் பிறகு அவர்கள் தங்கள் கூட்டத்தைச் சேர்ந்த அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு என்பவரே உடன் படிக்கைப் பத்திரத்தை யெழுத வேண்டுமென்றார்கள். ஹஸரத்தவர்கள் அதற்கும் ஒப்புக்கொண்டார்கள்.

அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவ்விடத்திற்கு வந்து பத்திரம் எழுதத் தொடங்கியபோது ஹஸரத் அவர்கள், அவரைநோக்கி முதலில் "பிஸ்மில்லாஹிர்றஹ்மாநிர்றஹீம்" என்று எழுதும் என்றார்கள். அப்போது ஸுஹேல் ,,அர்றஹ்மா நிர்றஹீம்" என்றவார்த்தைகள் நமக்கு வழக்கமில்லை. நமக்கு எப்போதும் வழக்கமானபடி பிஸ்மிக என்று எழுதவேண்டும் என்றான். ஹஸரத் அவர்கள் சரி அப்படியேஎழுது என்றுகூற அலிரலியல்லாகு அன்கு அவ்வாறே எழுதியபின் ஹஸரத் அவர்கள் அல்லாஹும்ம என்று அதன்பக்கத்தில் எழுதுஎன்றார்கள். அதுவும் எழுதியானபின் (ஹாஸா மாகாலாபிஹி முஹம்மதுர் றசூலுல்லா) என்று எழுதும் என்றார்கள். அதற்கு ஸுஹேல் முஹம்மதுவை றசூல் என்று நாங்கள் ஒப்புக்கொள்ள வில்லை. அப்படி ஒப்புக்கொண்டிருந்தால் அவர்கள் கஃபாவிற்குச் செல்வதை ஏன் தடுக்கிறோம் என்றான். இதற்குள் அலி றலியல்லாஹு அன்ஹு ஹஸரத் அவர்கள்கூறியபடி எழுதிவிட்டார். ஸுஹேல் முஹம்மத்பின் அப்துல்லா வென்று எழுதவேண்டும் என்றான். ஹஸரத் அவர்கள் நான் றஸூலாகவிருப்பதோடு அப்துல்லாவின் மகனாகவும் இருக்கிறேன் அதனால் அப்படியேயெழுதும் என்றார்கள். அவ்வாறே யெழுதியபின் ஸுஹேல் றஸூலுல்லா என்ற வார்த்தை

ஸ்யை யடித்துவிடவேண்டு மென்ருன். அதற்கு அலி எழுதி யிருப்பதை யடிப்பது அவமரியாதை யாதலால் அடிக்க மாட்டே னென்ருர். அதன்மேல் ஹஸரத் அவர்களே யதை யடித்து விட்டார்கள்.

அதன்பின் நான்கு நிபந்தனைகளும் எழுதப்பட்டு இருகட்சித்தலைவர்களின் கையொப்பங்களும் முத்திரை களும் வைக்கப்பட்ட பின் பத்திரம் முடிவுபெற்றது. ஹஸ ரத் தவர்கள் நம்மவர்களுக்குச் சற்றும் அனுகூலமல்லாத இத்தகைய உடன் படிக்கைக்கு ஒப்புக்கொண்டாரே யென்று இஸ்லாமியர்களனைவரும் துயரமும் அதிருப்தி யும் அடைந்தார்கள். ஆயினும் அறிவிலும் அதிகாரத்தி லும் ஹஸரத் அவர்களுக்கு மேற்பட்டிராத நாம் அதிற் குற்றங்கூறத்தகாதென்று தங்கள் துயரத்தைத் தங்கள் மனதிலேயே யடக்கிக்கொண்டார்கள். இவ்வாறு குழப்ப மின்றி சாந்தமாகவே ஹஸரத் அவர்கள் சமாதான உடன் படிக்கை செய்து கொண்டார்கள். அதனால் இஸ்லாமியர் அச்சமயம் அதிருப்தியும் துயரமுமடைந்திருந்தார் களாயி னும், பின்னால் அவர்களடையும் வெற்றியும் சந்தோஷமும் சீக்கிரம் கூறப்படும்.

சமாதான ஏற்பாடு முடிந்த பிறகு இஸ்லாமான வர்கள் தாங்கள் செய்ய வெண்ணிவந்த ஹஜ்ஜு சடங்கு களை யெல்லாம் அவ்விடத்திலேயே நிறைவேற்றிக்கொண்டு அங்கிருந்து மதீனாவிற்குத் திரும்பினார்கள். வரும் வழி யில் (இன்னா பதஹ்னா) என்ற சூரா ஆண்டவனிட மிரு ந்தும் இறங்கியது. அதில் ஆண்டவன் இஸ்லாமியர்கள் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் அடையவேண்டிய பயன்களைப் பற்றியும், அவர்களது க்ஷேமாபி விர்த்தியின் பொருட்டும் எதிரிகளிடம ஜெயமடையும் பொருட்டும் அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய மார்க்கத்தைப்பற்றி யும் கண்டிப்பான கட்டளையளித்திருக்கிருன். இவ்வாறு

ஆண்டவன் தங்களிடம் கிருபாநோக்கங்கொண்டு நன்மார்க்கங்களை யருளியதால் இஸ்லாமானவர்கள் தங்கள் வியாகூலத்தை மறந்து மிக்க சந்தோஷமடைந்தவர் களாஞர்கள்.

மேலே கூறப்பட்ட சமாதான உடன்படிக்கையில் கண்ட நான்காவது நிபந்தனை, அதையேற்படுத்திய குறைஷியருடைய அக்கிரமத்திற்குத்தக்கபடி அவர்களுக்கே தீங்காய் முடிந்தது. அதன் விவரம் பின் வருமாறு:—

குறைஷியர் கூட்டத்தைச் சேர்ந்த அபூபஸீர் என்பவர் மக்காவிலிருந்து ஹஸரத் அவர்களிடம் வந்து வணங்கி இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து கொண்டார். உடன் படிக்கையில் நான்காவது நிபந்தனையின்படி குறைஷியர்களில் யாராவது ஹஸரத் அவர்கள் கூட்டத்தில் வந்து சேர்ந்து விட்டால் இஸ்லாமியர்கள் அவர்களைத் திருப்பி யனுப்பி விடவேண்டும். அதன்படி மக்காவிலிருந்து இருவர் அவரை யழைத்துச் செல்ல வந்தார்கள். அபூபஸீர் ரலியல்லாஹு அன்ஹு அந்த இருவரோடு கூட மக்காவிற்குத் திரும்பினார்கள்.

இவர்கள் மூவரும் சென்று கொண்டிருக்கையில் மார்க்கத்தில் ஏதோ சச்சரவுநேர்ந்து அபூபஸீர் ரலியல்லாஹு அன்ஹு தன் கூடவரும் இருவரில் ஒருவனிடமிருந்த உடைவாளைப் பிடுங்கிக்கொண்டு ஒருவனைக் கொன்றுவிட்டார். மற்றொருவன் அதைக்கண்டு மதீனாவிற்குத் திரும்பியோடி ஹஸரத்அவர்களிடம் சங்கதியைக்கூறினன். அதற்குள் அபூபஸீர் ரலியல்லாஹு அன்ஹுவும்திரும்பி ஹஸரத்திடம் வந்து சேர்ந்தார். அவர் அங்கு நடக்கும் விஷயங்களைக் கவனித்தபோது, ஹஸரத் அவர்கள் தன்னை மறுபடி மக்கா விற்கு அனுப்புவார்கள் போல் தோன்றியது.

ஆகையாலவர் மஸ்ஜிதுக்குச் செல்பவர்போல் அதனுள் நுழைந்து வேறு வழியாய் வெளிப்பட்டு நேராய்க் கடலோரம் சென்று அம்மார்க்கமே நெடுந்தூரம் ஓடி அங்கிருந்த அயிஸ் என்ற ஒருஸ்தலத்தில் தங்கினுர்கள். மக்காவிலிருந்து வந்திருந்தவன் இவர் வரமாட்டாரென்று உணர்ந்து மக்காவிற்குத் திரும்பிச் சென்றுன்.

மக்காவாசிகளாகிய குரைஷியர்கள் சமாதான உடன்படிக்கையில் மேற்கூறப்பட்ட நான்காவது நிபந்தனையைச் சேர்த்ததன் காரணம் என்னவெனில், இஸ்லாம் மதத்தில் பிரவேசித்தவர்களை மதீனுவிற்குப்போய்விட வொட்டாது நம்மிடத்திலேயே வைத்துக்கொண்டு அவர் களுக்குத் தொந்திரைகளை யுண்டாக்கினுல் அவர்கள் பேசாமல் நமது மதத்திற்கே திரும்பி விடுவார்கள், மேலும் இனி மேலும் ஒருவராவது நமது மதத்தை விட்டு அம்மதத்திற்குச் செல்லமாட்டார்கள் என்ற எண்ணமேயாகும்.

அந்தோ சத்தியமதத்தின் பிரகாசத்தை அக்கிரமஸ்தர்களுடைய துர் எண்ணமாகிய தூசுகளால் மறைத்துவிடக்கூடுமோ? ஆகையால் மக்காவாசிகளின் கெட்ட எண்ணம் ஈடேறவில்லை. மக்காவிலிருக்கும் ஜனங்கள் ஒவ்வொருவராய் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து கொண்டேயிருந்தார்கள். குரைஷியர்கள் தங்கள் நிபந்தனையின் மேல் வைத்த நம்பிக்கையால் மக்காவிலிருந்த இஸ்லாமியர்களை முன்னிலும அதிகமாய்க் குரூரமாகவும் கொடுமையாகவும் நடத்தத் தொடங்கினுர்கள். ஏழைகளாகிய இஸ்லாமியர்கள் குரைஷியர் செய்யும் கொடுமைகளைச் சகிக்க முடியாமல் ஒவ்வொருவராய் அபூபஸீர் ரலியல்லாஹு அன்ஹு இருக்கும் அயிஸ் என்ற விடத்திற்குப்போய்ச் சேரத்தொடங்கினுர்கள். சமாதான உடன் படிக்கை ஏற்பட்டதினம் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து மறுபடி

மக்காவிற்குத் திரும்பிச் சென்ற அபூஜ ந்துல் என்பவரும் அங்கு போய்ச் சேர்ந்து விட்டார். அதன்மேல் இஸ்லாமியர்கள் அனேகர் அங்கு செல்லத் தொடங்கி கொஞ்ச காலத்திற்குள் சுமார் முன்னூறு நானூறு பேர்கள் அங்கு போய்ச் சேர்ந்து விட்டார்கள்

இந்த ஏழைகளாகிய இஸ்லாமியர்கள் தங்கள் வீடு சொத்துகள் முதலியவற்றை மக்காவில் விட்டு விட்டு வந்ததால் மிக்க துக்க மடைந்திருந்தாலும் அதை யவ்வளவாய்ப்பொருட் படுத்தாமல் ஹஸரத் அவர்களைப் பிறிந்திருப்பதற்காகவே மிக்க துக்கமடைந்த வர்களா யிருந்தார்கள். குரைஷியர்கள் தங்களுக்குச் செய்த கொடுமைகளை நினைக்கும் போதெல்லாம் அவர்கள் மனம் மிக்க பதைத்துக் கோபத்தீயால் வேதனை யடைந்தது. அத்துஷ்டர்கள் செய்த அக்கிரமத்திற்குத் தக்கபடி அவர்கள் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டு, அதற்குத் தகுதியான சமயம் எப்போது வாய்க்குமோ வென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

குரைஷியர்கள் தங்கள் புத்தியும் தாங்கள் செய்யும் ஏற்பாடுமே மிக்க புத்திசாலித்தனமாய் செய்யப்பட்டவை என்று மிக்க அகங்காரங் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் செய்த நிபந்தனை தங்கள் செல்லவேண்டிய பாதையில் தாங்களே முள்களைப் போட்டுக் கொண்டது போலாயிற்று. இதுமட்டுமல்ல பலம் பொருந்திய எதிரிகளின் ஒரு கூட்டத்தைத்தாங்களே ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த எதிரிகளோ குரைஷியர் அடிக்கடி வர்த்தகம் செய்வதற்காக் ஈஜிப்ட்தேசத்திற்குப் போகவேண்டிய மார்க்கத்தில் இருக்கிறார்கள், இவர்கள் சிறு கூட்டமாய்ச் செல்லும்போது அவர்கள் இவர்களைக் கொள்ளையடிக்கலாகும். அடியோடழித்து விடவுங் கூடும்.

இச்சங்கதிகளை யுணர்ந்தபின் அவர்களுக்குப் பயம் உண்டாகி விட்டது. அதன்மேல் ஆலோசனை செய்து, ஹஸரத் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதிசமாதானஉடன் படிக்கையின் நான்காவது நிபந்தனையை இரத்து செய்து விடும்படிக்கும் அபூபஸீர் கூட்டத்தாரை அயிஸிலிருந்து மதீனாவிற்கு வரவழைத்துக் கொள்ளும் படிக்கும் வேண் டிக்கொண்டார்கள். ஹஸரத் தவர்கள் அவ்வாறே சம்ம தித்து அபூபஸீர் ரலியல்லாஹு அன்ஹுவிற்கு, யாவரை யும் அழைத்துக் கொண்டு மதீனாவிற்கு வந்து விடும்படி கடிதம் அனுப்பினார்கள். அக்கடிதம் அவரிடம் சேரும் போது அவர் மரணத்தருவாயிலிருந்தார். ஹஸரத் அவர் களது திருமுசத்தைக்கண்டதே விசுவாசத்தோடு அதைத் தன் கண்களில் ஒத்திக்கொண்டார். உடனே அவருடைய பிராணன் நீங்கிவிட்டது. அங்கிருந்த அபூஜந்தும் இவரை விதிப்படி அடக்கம் செய்து, அவர் சமாதி யருகில் அவரு டைய ஞாபகச் சின்னமாக ஒரு மஸ்ஜிதைக்கட்டி விட்டு யாவரையும் அழைத்துக்கொண்டு மதீனாவிற்கு வந்து சேர் ந்தார்கள்.

14-வது அரசர்களுக்கெல்லாம் அறிவிப்பு அனுப்பப்படல்.

இவ்வருடக் கடைசியில் ஹஸரத் அவர்கள் ரோம், பாரிஸ், ஹபஷ், ஈஜிப்ட் முதலிய அரசர்களுக் கெல்லாம் அறிக்கை பத்திரங்கள் அனுப்பினார்கள். அப்பத்திரத்தில் அடங்யிகிருந்த விஷயம் பின் வருமாறு:—

1. ஹபஷ் அரசனாகிய நஜாஷி என்பவருக்கு ஹஸ ரத் அவர்கள் எழுதிய கடிதத்தில் முன்பு மக்காவிலிருந்து ஹபஷுக்கு வந்து சேர்ந்திருப்பவர்களை மதீனாவிற்கு

அனுப்பிவிட வேண்டுமென்றும், அங்கிருக்கும் உம்மி ஹபீபா பின்தே அபுஸுபியான் என்ற மாதைத்தாம் மணம்புரிய விரும்புவதாய் அம்மாதிற்கு அறிவிக்கும் படிக்கும் எழுதியிருந்தார்கள். அவ்வரசன் ஹஸரத் அவர்களது இந்தஇரண்டு கட்டளைகளையும் அவ்வாறே நிறைவேற்றினன். அதைப்பற்றிய விவரங்கள் ஹிஜ்ரி ஏழாவது வருடத்தில் நடக்கும் விஷயங்களோடு சேர்த்துக் கூறப்படும்.

2. ரூம்தேச அரசனுகிய ஹர்க்குல்கைஸர் என்பவருக்கு ஹஸரத் அவர்கள் அனுப்பிய அறிவிப்பில் அடங்கிய சங்கதிகள் பின்வருமாறு:—

"ஹர்க்குல் கைஸர் அரசரே! நாம் உமக்கு ஒரு நல்ல விஷயத்தைக் கூறுகிறோம். அதாவது ஆண்டவனுல் அளிக்கப்பட்ட சத்திய மதமாகிய இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக்கொள்ளும். அவ்வாறு செய்தால் ஆண்டவன் உமக்கு நல்லருள் செய்வார். நீர் க்ஷேமமுறுவீர். இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடைவீர். அப்படிக்கின்றி நமது நற்போதனையை யேற்றுக் கொள்ளாவிட்டால் இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிக்கொள்ள மறுத்துவிட்ட பாபம் உம்மைச்சேரும். இதுமட்டுமல்ல நீர்சேராததால் உமது குடிஜனங்கள் அத்தனைபேரும் உத்தமமார்க்கத்தில் சேராமல் தடுக்கப்படுகிற பெரும்பாதகமும் உம்மையே சேரும். இதுவேநாம் அறிவிப்பது."

ஹஸரத் அவர்கள் இக்கடிதத்தை தஹியா கல்பிரலியல்லாஹு அன்ஹு வசமாக அந்த அரசனுக்கு அனுப்பினர்கள். அச்சமயம் ஹர்க்குல் அரசன் ஈரான் நாட்டை ஜெயித்துக்கொண்ட மகிழ்ச்சியோடு பலஸ்தீனுவிற்குச் சென்றிருந்தார். ஆகையால் தஹியாகல்பி ரலியல்லாஹு

அன்ஹா ் பஸ்ராவின் அதிகாரி உதவியால் பலஸ்தீனுவிற்குச்சென்ருர். ஹர்க்குல் அரசன் ஹஸரத் அவர்கள் கடிதத்தை வாசித்துப்பார்த்தபின் "தான் ஆண்டவனுல் அனுப்பப்பட்ட இரசூலென்றும் நபியென்று தன்னைக் கூறிக்கொள்ளும் இவருடைய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது நமது நாட்டில் இருந்தால் அவர்களை யென்முன் அழைத்து வாருங்கள்" என்று கட்டளை யிட்டார். அச்சமயம் அபூசுபியான்என்பவர் தமது கூட்டத்தாரோடு வர்த்தக விஷயமாகஈஜிப்டுக்குச்சென்றிருந்தார். ஹர்க்குல் அரசனுடைய ஆட்கள் இதையறிந்து அவரையும் அவர் கூட்டத்தாரையும் அரசரிடம் அழைத்துக் கொண்டு சென்ருர்கள்.

ஹர்க்குல் அரசன் அக்கூட்டத்தை நோக்கி"உங்களில் யாரேனும் இப்போது நபி யென்று கூறிக்கொள்ளுகிறவருக்கு நெருங்கிய சுற்றத்தாரா யிருக்கிறீர்களா என்று வினவினுர். அபூசுபியான் நான் அவருடைய சிறியதந்தையின் புத்திரன்" என்ருர். அரசன் அவரை யருகிலழைத்து தன் சமீபத்தில் இருத்திக் கொண்டு மற்றபேரை யெல்லாம் அவருக்குப் பின்னுல்நிற்கவைத்து, அவர்களைநோக்கி அபூசுபியான் என்கேள்விகளுக்குக் கூறும் விடைகளில் தவறு இருப்பின் நீங்கள் அதை யெனக்கறிவிக்க வேண்டும் என்ருர். அதன்பின் அரசனுக்கும் அபூசுபியானுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது:—

அரசன்:—தான் நபியென்று கூறுகிறவர் எப்படிப்பட்ட பரம்பரையில் ஜனித்தவர்.

அபூசுபியான்:—அவர் எங்கள் வம்சத்தில் எப்போதும் தலைமை வகித்த குடும்பத்தைச்சேர்ந்தவர்.

அரசன்:—இரசூலென்றும் நபியென்றும் கூறப்படத் தகுதியுடையவர்கள் அத்தகைய குடும்பத்தைச் சேர்ந்தவர்

களாகவே இருக்கவேண்டும். ஏனெனில் அப்போது தான் அவரை பின் தொடரும் எவருக்கும் அதுகௌரவத்தாழ்வாய்த் தோன்ருது. இருக்கட்டும்; இவருக்கு முன் இவர்கள் கூட்டத்தில் யாரேனும் நான்தான் நபிப்பட்டத்திற்குரியவன் என்று பிரஸ்தாபித்திருக்கிருர்களா?

அபூசுபியான்:—அப்படி ஒருவரும் கூறியதில்லை.

அரசன்:—உங்கள் முன்னேரில் யாரேனும் அரசரா யிருந்ததுண்டா?

அபூசுபியான்:—இல்லை.

அரசன்:—அப்படியாரேனும் இராஜ்ஜிய பரிபாலனம்செய்திருந்தால் அந்தப்பதவியையடைய விரும்பியே தான் நபியென்று கூறுகிருரென்று கருதலாகும். நல்லது அவரைப் பின்பற்றுவோர் ஏழைகளா? செல்வவந்தர்களா?

அபூசுபியான்:—ஏழைகள் பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி யாவருமே அவரைப் பின்பற்றுகிருர்கள்.

அரசன்:—நபிமார்களுக்கு வழிப்படுவர்களில் இத்தகைய வித்தியாசம் இராதுதான். இருக்கட்டும், அவருடையமார்க்கத்தைப் பின்பற்றுவோருடைய தொகை நாளுக்குநாள் விர்த்தியடைகிறதா? குறைகிறதா?

அபூசுபியான்:—அக்கூட்டம் தினே தினே விர்த்தியடைந்துகொண்டே போகிறது.

அரசன்:—நல்ல மார்க்கத்தில் சேருகிறவர்களின்தொகை அப்படித்தான் விர்த்தியடையும். அவருடைய மார்க்கத்தில் சேர்கிறவர்களில் யாரேனும் பிறகு அதில் எவ்வித அதிருப்தியேனுமடைந்து அதை விட்டுத் திரும்பி விடுகிருர்களா?

அபூசுபியான்:—இல்லை. அப்படி ஒருவரும் திரும்புவதில்லை.

அரசன்:—சத்தியமான நெறிமனதிற் பற்றினுல் மறுபடி அது நீங்குவதில்லை. நல்லது இவர் நபியென்று தம்மைக்கூறிக்கொண்டதற்கு முன் யாரேனும் இவரைப் பொய்யர் என்று கூறியிருக்கிறுர்களா?

அபூசுபியான்:—அதற்கு முன்பும் எவரும் அப்படிக்கூறியதில்லை. பின்புமில்லை.

அரசன்:—எவன் ஒருவன் உலக விவகாரங்களிலேயே பொய் கூறியதில்லையோ, அப்படிப்பட்டவன் ஆண்டவன் விஷயத்திலா பொய்கூறத்துணிவான். சரி, இவர் எப்போதேனும் வாக்களித்துத் தவரிவிட்டதுண்டோ?

அபூசுபியான்:—ஒருபோதுமில்லை. இப்போது எங்களுக்குள் சமாதானம் ஏற்பட்டிருக்கிறது. சத்தியவாக்கால் அது நிலைப்பட்டிருக்கிறது.

அரசன்:—நபிமாருடைய விஷயங்கள் இப்படித்தான். உலக விவகாரங்களில் உழல்வோர்கள்தான் வாக்குத்தத்தம் தவறுவார்கள். நபிமார்கள் உலக விவகாரங்களில் சம்பந்தப் படுகிறவர்களல்ல. உங்களுக்கும் அவர்களுக்கும் எப்போதேனும் சண்டைச் சச்சரவு நடந்த துண்டோ?

அபூசுபியான்:—ஆகா நடந்திருக்கிறது.

அரசன்:—அப்படியானுல் அதுஎவ்வாறு முடிவடைந்தது?

அபூசுபியான்:—சில சமயங்களில் அவர்கள் ஜெயமடைந்தார்கள். சில சமயங்களில் நாங்கள் ஜெயமடைந்தோம்.

அரசன்:—நபிமார்கள் விஷயங்கள் இப்படித்தான். முத லில் தோல்வியடைவார்கள். பிறகு ஜெயமடைவார் கள். இருக்கட்டும் அவர் உங்களுக்கிடும் கட்டளைக ளென்ன?

அபூசுபியான்:—அவர் போதிப்பவை "ஆண்டவன் தனக்கு ஒப்புவமை யில்லாதவன். அதாவது அவனுக்கு மே லானதும் சமானமானதும் இல்லையென்று உறுதியாய் நம்புங்கள். எதையும் அவனுக்குச் சமானமாய்க் கரு தாதீர்கள். அவனையன்றி வேறெதையும் ஆண்டவ னென்று வணங்காதீர்கள். இவ்விஷயத்தில் முன் னோர்களுடைய வழக்கங்களை விட்டுவிடுங்கள். தொ ழுகை, நோன்பு, தருமம், சத்தியம், நல்லொழுக்கம், ஒருவருக்கும் மனவருத்தம் அளிக்காமை, சுற்றம் தழுவுதல் அதாவது சுற்றத்தாரை யன்போடு நடத் துதல் முதலியவைகளைக்கைப்பற்றி ஒழுகுங்கள்" என்பனவேயாம்.

அரசன்:—"ஆ! நீ கூறியவையாவும் நல்ல விஷயங்களே. இவையாவும் நபிமார்களுக்குரிய இலட்சணங்களே. அவர் இத்தகைய இலட்சணங்களையுடைய ரென்பது உண்மையாயின் அவர் இப்பூவுலகத்தையே கைவசப் படுத்தியாள்வார். இவ்வாறு ஒரு நபிவருவாரென் பதை நான் அறிந்திருக்கிறேன். ஆனல் அவர் இவ் விதமாய் உங்கள் கோத்திரத்தில் உதிப்பாரென்பதை நான் அறிந்திருக்கவில்லை." என்ருர்.

அரசன் இவ்வாறு அபூசுபியானிடம் கூறியபின், ஹஸரத் அவர்களிடமிருந்து கடிதம் கொண்டுவந்திருந்த தஹ்யதுல் கல்பி ரலியல்லாஹு அன்ஹுவை அரண் மனைக்குள் அழைத்துச்சென்று அவரிடம் கீழ்க்கண்டபடி கூறினர்.

"இவ்வாறு ஒரு நபி வருவாரென்று இன்ஜீல் வேதத்தில் நான் பார்த்திருக்கிறேன். ஆயினும் நான் இவர் கூறுகிறபடி இஸ்லாம்மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளலாகாது. ஏனெனில் அப்படிச் செய்வேனாயின் உடனே ஜனங்களால் கொல்லப்படுவேன்'' என்றுகூறி அங்கிருந்த ஒரு பாதிரியாரிடம் அக்கடிதத்தைக் கொண்டுபோய்க் காட்டும்படி ஏவினார்.

தஹியதுல்கல்பி ரலியல்லாஹு அன்ஹு அவ்வாறே அக்கடிதத்தைப் பாதிரியாரிடம் கொண்டுபோய்க் காட்டியபோது அவர் இஸ்லாம்மார்க்கத்தை யொப்புக்கொண்டு கோயிலுக்குச்சென்று பகிரங்கமாய் ஜனங்களுக்கு அதைப்போதிக்கத் தொடங்கினார்கள். ஆனால் ஜனங்கள் உடனே கோபாவேசங்கொண்டு அப்பாதிரியாரைக் கோயிலிலேயே கொலைசெய்துப் போட்டார்கள்.

இதைக்கண்ட தஹியதுல்கல்பி அரசனிடம் சென்று நடந்த சங்கதியைக்கூறினார். அரசன் "அந்தோ! பரிதாபம் அப்பாதிரியார் மிக்க கல்விமான், நற்குணங்கள் நிறைந்தவர், யாவர்க்கும் அவர்மேல் அன்புண்டு அப்படிப்பட்டவர்கதியே இவ்வாறாயின் நான் இஸ்லாம்மார்க்கத்தை யொப்புக்கொண்டால் ஜனங்கள் என்னை யின்னும் அதிககோரமாகக் கொலைசெய்வார்களென்பதிற் சற்றும் சந்தேகமேயில்லை'' என்று கூறிவிட்டு பலஸ்தீனாவிலிருந்து ஹமிஸ் என்ற ஸ்தலத்திற்குச் சென்றார்.

ஹர்குல் அரசன் அங்குசென்றதும் ஒருபெரியஜனசமுகத்தைக்கூட்டி அவர்களைநோக்கி, "ஜனங்களே! நான் கூறுவதைச்சற்று கவனமாய்க்கேளுங்கள். நீங்கள் பாபத்தினின்றும் பூரணமாய் விடுபடவேண்டுமாயின் சத்தியமான மார்க்கத்தைக் கைக்கொள்ளுங்கள். உங்களுடைய

இராஜாங்கமும் நீங்களும் க்ஷேமமடைய வேண்டுமாயின் அரேபியாவில் அவதரித்திருக்கும் அந்த நபியைப்பின்பற்றுங்கள். அவர்மார்க்கத்தைத் தழுவிக்கொள்ளுங்கள்'' என்று கூறினர். இம்மொழிகளைக்கேட்டதே ஜனங்களின் முகத்தில் கோபத்தணல் வீசியது. அவர்கள் கடுமையான வார்த்தைகளைக் கூறத்தொடங்கினர்கள்.

அதைக்கண்ட அரசன் உடனே தான்கூறிய வார்த்தைகளுக்கு மாறுக "ஓ ஜனங்களே! நான் இவ்வாறு கூறியது, உங்களுக்கு நீங்கள் கைக்கொண்டிருக்கும் மார்க்கத்தில் எத்தகைய உறுதியிருக்கிறது என்பதை யறியும்பொருட்டேயன்றி வேறில்லை. இப்போது நீங்கள் நல்ல உறுதியுடையவர்களென்று உணர்ந்தேன்'' என்று தந்திரமாய்க் கூறினர்.

ஈரான்தேசத் தரசனுகிய குஸ்ருபர்வேஸான் என்பவனுக்கு அனுப்பப்பட்டகடிதம். இக்கடிதம் அப்துல்லா பின் உஸாபா ரலியல்லாஹு அன்ஹுவின் வசமாகக் கடலதிகாரியின் மூலமாய் அனுப்பப்பட்டது. அதில் அடங்கியிருந்தவிஷயம் கீழ்க்கண்டபடி:—

"ஈரான் தேசத்தையாளும் அரசரே! நான் ஆண்டவனுடைய இரசூலாயிருக்கிறேன். நபியாகவிருக்கும் என் கருத்தாவது எல்லாஜனங்களுக்கும் பின்னுல் அவர்கள் பரலோகத்தில் அனுபவிக்க வேண்டிய தண்டனையின் பயங்கரத்தை விளக்கிக் காட்டவேண்டுமென்பதே. நீயும் உன்குடிகளும் அத்தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், ஆண்டவனுடைய அருளைப்பெறவும் விரும்பினுல் நான் கூறும் ஆண்டவன்கட்டளைகளை யொப்புக்கொள்ளுங்கள். அப்படிக்கின்றேல், நீ ஆண்டவன் கோபத்திற்குள்ளாவதோடு, நீ நம்மைப் பின்பற்றமறுப்பதால் உன் குடிக

ளும் ஆண்டவன்கட்டளைகளை மறுதலிப்பார்களே அப்பாபத்தையும் நீயே பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்று எழுதியிருந்தது.

இக்கடிதத்தைக்கண்ட குஸ்ரூ அரசன் கோபதீப் தணுகி அதைக் கிழித்தெறிந்து விட்டதோடு, அரேபியாவிலுள்ள ஹெட்ஜாவில் தன்னை நபியென்று கூறிக்கொள்கிற மனிதன் யாரோ அவனைப்பிடித்து நம்மிடம் அனுப்ப வேண்டும் என்று எமன் தேசத்தரசனுக்கு கட்டளையனுப்பினுன். (எமன்தேசம் அரேபிவாவின் தென்மேற்கு மூலையிலுள்ள ஒருநாடு.)

எமன்தேசத்துச் சிற்றரசன் தன் அதிகாரியாகிய குஸ்ரூஅரசன் கட்டளையை நிறைவேற்றவெண்ணி ஹஸரத் அவர்களைப்பிடித்து வரும்படி இரண்டுபேரை மதீனுவிற்கு அனுப்பினுன். அந்த இருவரும் ஹஸரத் அவர்கள் சந்நிதானத்தின்முன்நின்று அவர்களைக்கண்டதே ஸ்மரணையற்றுப் பூமியில்விழ்ந்து விட்டார்கள். ஹஸரத் அவர்கள் அந்த இருவரையும் உடனே யெடுத்து அப்புறப்படுத்தி உபசரிக்கச் செய்யாதிருந்தால் அவர்கள் மடிந்தேபோயிருப்பார்கள்.

ஹஸரத் அவர்கள் மறுநாள் அவர்களையழைத்து "நீங்கள்சென்று உங்கள் அரசனிடம் அவனுடைய அதிகாரியாகிய குஸ்ரூஅரசனை அவன் மகன்கடந்த இரவு கொலை செய்து விட்டானென்று கூறுங்கள். அதோடு இன்னும் சிலநாட்களில் எமன் தேசத்தார் நமது பரிசுத்தமான மார்க்கத்தைப் பின்பற்றுவார்கள். உங்கள் அரசனும் அவ்வாறே பின்பற்றுவாணுயின் அவனுடைய இராஜ்ஜியம் அவன் வசம் நிலைத்திருக்கும் என்றும் கூறுங்கள்'' என்றுர்கள்.

அவர்கள் இருவரும் அவ்வாறே தங்கள் அரசனிடம் சென்று ஹஸரத் அவர்கள் மொழிந்ததைக் கூறினார்கள். அச்சமயம் ஈரான் நாட்டரசனாகிய குஸ்ரூ அரசன் அவனுடைய புத்திரனால் கொல்லப்பட்ட சங்கதியும் அங்கு எட்டியது. அதையறிந்ததே அச்சிற்றரசன் தன் குடிகளோடு இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார்.

மிஸர் தேசத்தரசனாகிய மகூகஸ் என்பவருக்கு அனுப்பப்பட்ட கடிதம். இக்கடிதம் ஹாதப்பின் அபீபல்திஆ ரலியல்லாஹு அன்ஹு வசமாக அனுப்பப்பட்டது. இக்கடிதத்தில் ஹர்குல் அரசனுக்கு அனுப்பிய சங்கதிகளே யடங்கியிருந்தன.

அக்கடிதத்தைக்கண்ட அரசன் கடிதத்தை மரியாதையாய் ஏற்றுக்கொண்டதோடு அக்கடிதம் கொண்டுவந்த ஹாதப் ரலியல்லாஹு அன்ஹு என்பவரை மிக்க மரியாதையோடு அரண்மனைக்குள் அழைத்துச் சென்று உபசரித்து நெடுநேரம் சம்பாஷித்தபின் அவரையே நோக்கி ‘ நமது வேதத்தில் இயேஸுக்கிறிஸ்து ஒரு நபி வருவாரென்று கூறினாரே, அந்தநபிக்கு இருக்கவேண்டிய குணங்களும் இலட்சணங்களும் இந்த நபிக்கு இருக்கிறது’’ என்றுகூறி ஹாதப்பின் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்வசம் ஏராளமான பரிசுகளும் ஹஸரத் அவர்களனுப்பிய கடிதத்திற்கு விடையுமளித்து அனுப்பினார். அவர் அனுப்பிய விடையின் வருமாறு:—

“தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்று அதிலடங்கிய விஷயங்களை யறிந்துகொண்டேன். தங்கள்கடிதம் கொண்டுவந்தவர் வசத்தில் சில பரிசுகளையனுப்பி யிருக்கிறேன். அவற்றை யேற்றுக்கொள்ளக் கோருகிறேன். அப்பரிசுகளின் விவரம் கீழ்வருமாறு:—

மாரியா நாட்டுப்பெண்கள் 4, துர்க்கிதேசப் பெண்கள் நான்கு, பரிசாரகன் ஒருவன், வெள்ளைக்கோவேறு கழுதை 1, உயர்தரக்கழுதைகளில் முதல்தரமானது 1, சிலவஸ்திரங்கள், தேன், ஆயிரம் மிஸ்கால் (மிஸ்கால் என்பது நாலரைமாஷா எடையுள்ள ஒரு தங்கநாணயம்) இவைகள் தங்களுக்காகவும், ஹாதப் ரலியல்லாஹு அன்ஹுவுக்கு 5-உடைகளும், நூறு மிஸ்கால்களுமேயாம்.

5. ஈஜிப்ட் அரசனுகிய ஹாரிஸ்பின் அபீஸும்ராவுக்கனுப்பியகடிதம். இக்கடிதம் ஷுஜாபின் வஹப்ரலியல்லாஹு அன்ஹு என்பவர் வசமாக அனுப்பப்பட்டது. அவர் ஈஜிப்டுக்குச் சென்றபோது அந்த அரசன் ரூம் அரசனுகிய கைஸர் அரசனுக்கு அடங்கியவனுக விருந்தான். அச்சமயம் கைஸர் அரசன் அங்கு வந்திருந்தபடியால் ஷுஜாபின் வஹப் ரலியல்லாஹு அன்ஹு ஹாரிஸ்பின் அரசனைக் காணக்கூடவில்லை.

அக்காலத்தில் அரசன் அரண்மனையிலுள்ள ஆட்களில் ஒருவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியிருந்தார். அவர் ஷுஜாஃ றலியல்லாஹு அன்ஹுவை மிக்க அன்போடு உபசரித்து சமயம் பார்த்து அவரை அரசனிடம் அழைத்துச்சென்றார். அரசன் அவர்கொடுத்த ஹஸரத் அவர்களுடைய கடிதத்தை வாசித்துப்பார்த்துக் கீழே யெறிந்துவிட்டான். அதோடு சண்டைக்கு ஆயத்தமாகும்படி தன்சேனைகளுக்குக் கட்டளையிட்டான். யுத்தத்திற்குச் செல்வதற்கு அனுமதி யளிக்கும்படி கைஸர் அரசனுக்குக் கடிதம் அனுப்பினுன். கைஸர் அரசன் "யுத்தவிஷயத்தைப்பற்றி சற்று நிதானித்து நீர் இங்குவந்தால் அதைப்பற்றி நாம் ஆலோசனைசெய்து அந்த முடிவின்படி நடந்து கொள்ளலாம்"

என்று பதில் அனுப்பினன். அதன்மேல் ஹாரிஸ்பின் அரசன் ஷுஜாஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நூறு மிஸ்கால்கள் கொடுத்து அனுப்பிவிட்டான்.

6. யமாமா தேசத்தரசனுகிய ஹொஸா என்பவனுக்கு அனுப்பப்பட்ட கடிதம். அக்கடிதம் ஸலீத்பின் ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு வசம் அனுப்பப்பட்டது. அதில் எழுதியிருந்த சமாசாரம் கீழ்க்கண்டபடி:—

"யமாமாவைப் பரிபாலனம்செய்யும் ஹொஸா அரசரே! நான் ஆண்டவனுடைய இரசூலாக இருக்கிறேன். ஆண்டவன் என்மூலமாய் அனுப்பி யிருக்கும் மதம் நாற்கால் மிருகங்கள் வசிக்கும் எல்லாவிடங்களிலும் பரவிவிடும். ஆகையால் நீயும் உமது குடிகளும் இம்மார்க்கத்தைத் தழுவிக்கொள்ளுங்கள். அவ்வாறுசெய்தால் இவ்வுலக இக்கட்டுகளி லிருந்தும், பரலோகத் தண்டனைகளிலிருந்தும் விடுப்பட்டு கேடிமமும் ஆண்டவனருளும் பெறுவீர்கள்."

இக்கடிதத்தைக்கண்ட ஹொஸா அரசன் அதைக் கொண்டுவந்தவருக்கு மிக்க மரியாதைசெய்து தக்கபரிசளித்து ஹஸரத் அவர்கள் கடிதத்திற்கு அடியிற்கண்டபடி பதில் வரைந்தனுப்பினன்:—

"தாங்கள் அழைக்கும் மார்க்கம் மிக்க மேன்மையானதே. நான் பாதிரியாகவும் வித்வானுகவும் இருக்கிறேன். அராபியாவில் பிரக்கியாதிபெற்றவ னுதலால் ஜனங்கள் எனக்கு மிக்க மரியாதைகாட்டுகிறார்கள். ஆகையால் தாங்கள் தங்கள் சொத்திலிருந்து ஏதேனும் எனக்களித்தால் நான் தங்கள் மார்க்கத்தில் சேர்ந்துகொள்கிறேன்" என்று எழுதியிருந்தது.

ஹஸரத் அவர்கள் "இம்மாதிரி உலகவிஷயத்தைக் கவனித்தல்ல மார்க்கத்தில் சேர்வது. இம்மாதிரி சேராவிட்டால் அவசியமில்லை" என்று கூறிவிட்டார்கள்.

15-வது கௌலாவின் பிராது.

கௌலா ரலியல்லாஹு அன்ஹா என்றமாது மேன்மையான குலத்திற்பிறந்த கற்புடையமாது. அம்மாதின் கணவனான அக்ஸாமே அன்ஸாரி என்பவர் வயோதிகர். அவர் மிக்க கோபமும் குரூரமான நடக்கையுமுடையவர். ஒருநாள் புருடன் மனைவிக்குள் குடும்பவிஷயமாக ஏதோ சச்சரவுநேர்ந்தது. அப்போது அக்ஸாமே அன்ஸாரி என்பவர் அடங்காக் கோபங்கொண்டு தன்மனைவியை நோக்கி "நீ இனிமேல் எனக்குத் தாயாருக்குச்சமானம்" என்றார். இஸ்லாம் மார்க்கம் ஏற்படுவதற்குமுன் இவ்வார்த்தையே தலாக்சொல்வதாகும். ஆகையால் இதைக்கேட்டதே அம்மாது வீட்டைவிட்டுப் போய்விட்டாள். அக்ஸாமே அன்ஸாரி கோபம்தணிந்தபின் தன் அவசர நடக்கையை யுணர்ந்து மறுபடி தன்மனையாளைச் சேர்த்துக்கொள்ள முயன்றார். ஆனால் அந்தம்மாள் அதற்கு உடன்படாமல் "இவ்விவகாரத்தை ஹஸரத் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறிக்கொள்வோம். அவர்கள் கட்டளைப்படி நடந்துகொள்வோம்" என்றார்கள்.

அதன்படியே இவ்விஷயத்தைப்பற்றி மதக்கோட்பாடு என்னகட்டளை யிடுகிறதென்பதை யறியவேண்டி அந்தம்மாள் ஹஸரத் அவர்களிடஞ்சென்று நடந்த சங்கதியைக் கூறியதோடு "என்கணவன் எனக்கு மிக்க தொந்திரைகள் கொடுப்பதோடு என்னைக் குரூரமாய் நடத்துகிறார். இவரோடு ஒருமித்து வாழ்வது சாத்தியமல்லாததாக விரு

க்கிறது. குழந்தைகளை யவரிடம் விட்டுவிட்டால் அநியாயமாகக் கெட்டுப்போவார்கள். என்கூட அழைத்துச் செல்லலாமெனின் அன்னுகாரமின்றி வருந்த நேரிடும்போலிருக்கிறது. அடியாள் இத்தகைய பெரிய இக்கட்டில் சிக்கிக்கொண்டிருக்கிறேன். கிருபைபுரிந்து என்னை யிதினின்று காப்பாற்றப் பிரார்த்திக்கிறேன்'' என்று வேண்டிக்கொண்டார்கள்.

இதுகாறும் இஸ்லாம்மார்க்கத்தில் தலாக் கூறுவதைப்பற்றி ஒரு கட்டளையும் கிடையாது. ஆகவே ஹஸரத் அவர்கள் தமதுசிரசை ஸஜதாவில்வைத்து இத்தகைய விவகாரத்திற்கு எவ்வகையான முடிவுகூறுவதென்பதைப்பற்றிஅறிவிக்கவேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். அப்போதுதான் அவர்சிரசை மேலே தூக்கு முன்பாக முஜாதிலா என்ற சூரா ஆண்டவனுலிறக்கப்பட்டது. அச்சூராவில் இத்தகைய சந்தர்ப்பங்களில் பிராயச்சித்தம் (கப்பாரு) செய்து மறுபடி சேர்ந்துக் கொள்ளும்படியான கட்டளை யடங்கியிருந்தது. அதன் படியே செய்து மறுபடி சேர்ந்து வாழும்படி புருடன் மனைவி யிருவர்க்கும் கட்டளையிட்டார்கள்.

அதுமுதல் கொலா ரலியல்லாஹு அன்ஹா என்பவர்களிடம் ஹஸரத் அவர்களுடைய கூட்டத்திலுள்ளவர்களனைவரும் மிக்க மரியாதையாய் நடந்துகொள்ளத் தொடங்கினர்கள். இம்மாது விருத்தாப்பிய காலமடைந்த பின்பு ஒருநாள் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மேலான அந்தஸ்தைச்சேர்ந்த சில நண்பர்களோடு கூடிச் சென்று கொண்டிருக்கையில், அந்தம்மாள் அவரிடம் ஏதோ சங்கதிகூற நேர்ந்தது. ஆகையால் உமர் ரலியல்லாஹு அன்ஹு தமது நண்பரைச்செல்லவிட்டு அந்தம்மாருளகில் நின்று அவர்கள்கூறுவதைக் கேட்டுக்கொண்ட

பின் சென்றார்கள். அப்போது அக்கூட்டத்திலிருந்த சிலர் அவரைநோக்கி "உயர்ந்த அந்தஸ்திலுள்ள சிநேகர்களை விட்டுவிட்டு யாரோ ஏழைக்கிழவியிடம் பேசுவதற்காக நின்றுவிடுவது தகுதியோ" என்றார்கள்.

அதற்கு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "இந்தம்மாளுடைய வேண்டுகோளை யாண்டவன் செவியேற்று இவர்களுடைய இக்கட்டை நிவர்த்தி செய்திருக்கிறான். இத்தகைய பக்திவாய்ந்த மூதாட்டியின் வார்த்தைகளைக்கேட்க நண்பரைவிட்டு நீங்கிநின்றது தகாத காரியமாகாது" என்றார்.

நம்மிலும் தாழ்ந்த நிலைமையி லிருப்பவர்களாயினும் அவர்களை யலட்சியம் செய்யாமல் மனதார அவர்கள் சொற்களைச் சேவியேற்க வேண்டியது ஒவ்வொருவருக்கும் கடமையாகும். இத்தகைய நற்புத்தியை நாம் கருத்தில் வைத்து ஒழுகுவோமாக.

16-வது குதிரைப்பந்தயம்.

குதிரை, ஒட்டகம் இவைகள் வேகமாய்ச்செல்லும் வண்ணம் பழக்கி அவைகளைச்சரியாகப் போஷித்துவரும் படி ஊக்கமுண்டாக்குவதற்காக ஹஸரத்தவர்கள் குதிரைப்பந்தயம் ஒட்டகப்பந்தயம் இவைகளைநடத்த ஏற்பாடு செய்தார்கள்.

17-வது உம்மேரூமான் ரலியல்லாஹு அன்ஹாவின் மரணம்.

இதேவருடம் ஹஸரத் அவர்களின் மனைவியரில் ஒருவரான ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின்

தாயாராகிய உம்மேருமான் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வபாத்தானார்கள். ஹஸரத் அவர்கள் அருகி லிருந்து செய்யவேண்டிய சடங்குகளைச்செய்து ஈமக்கடனை முடித்தார்கள்.

ஹிஜ்ரி 7-ம் வருடம்.

1-வது கைபரில் நடந்த யுத்தம்.

மதீனாவிற்கு வடமேற்கில் மூன்று நான்கு நாட்கள் பிரயாணதூரத்தில் கூட்டமான சில கோட்டைகள் இருக் கின்றன. பிரக்யாதிபெற்ற பலமான இக்கோட்டைகள் யூதர்கள் வசத்திலிருந்தன. இக்கோட்டைகள் யாவற்றிற் கும் சேர்த்து கைபர் என்றுபெயர். இவைகளில் ஒவ் வொன்றிற்கும் தனித்தனி பிரத்தியேகமான பெயர்களு முண்டு. யூதர்கள் இங்கு வசித்துக்கொண் டிருந்தார்கள். முன்பு மதீனாவிலிருந்து துறத்தப்பட்ட யூதர்களும் இங்கு தான் வசித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் இஸ்லாமியருக்குக் கொடிய விரோதிகளாக இருந்தார்கள். முன்புநடந்த அகழிச்சண்டையில், சண்டை செய்யும்படி குரைஷியரைத் தூண்டிவிட்டவர்கள் இவர் களே. அதோடு இவர்கள் குரைஷியரோடு சேர்ந்து அவர் களுக்கு உதவிசெய்துகொண்டு மிருந்தார்கள். இதுமட்டு மல்ல இவர்கள் இஸ்லாமியரின் கொடிய பகைவர்களாகிய பனீஅஸத், பனீகத்பான்என்ற கூட்டத்தாரிடம் நட்பு பொருந்தியவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் தங்க ளுக்குப் பலமான கோட்டைகளும் ஏராளமான ஆயுதங்க ளும் ஜனப்பெருக்கமும் இருக்கின்றனவென்ற அகங்காரத்

தைக்கொண்டே இஸ்லாமானவர்களின் பேரில் கொடிய விரோதம் பாராட்டிவந்தார்கள்.

இவர்கள் இவ்வருடம் எவ்விதத்தாலும் மதீனாவைத் தாக்கவேண்டுமென்று தீர்மானித்து ஆயுதங்கள் முதலிய சகல யுத்ததளவாடங்களும் சேகரித்துக்கொண்டு ஆயத்தமாயிருந்தார்கள். இச்சங்கதியை ஹஸரத் அவர்கள் அறிந்து அங்கு நடக்கும் விஷயங்களையும், அவர்கள் நிலைமையையும் அறிந்துவரும்படி அப்துல்லாபின் ரவாஹா ரலியல்லாஹு அன்ஹுவோடு சில ஆட்களைக்கூட்டி யனுப்பினார்கள்.

அப்துல்லா அவர்கள் கைபருக்குச்சென்று யூதர்களின் தலைவனாகிய உஸைர் என்பவனைக்கண்டு அவனோடு கலந்து பேசினார். அதன்பயனாக உஸைர் மதீனாவிற்கு வந்து ஹஸரத் அவர்களிடம்பேசி சமாதான ஏற்பாடு செய்து கொள்வதென்று தீர்மானித்துத்தன் ஆட்களில் சிலரைக் கூட்டிக்கொண்டு அப்துல்லாவோடு மதீனாவிற்குப் புறப்பட்டான்.

வழியில் ஏதோ ஒருவிஷயத்தில் இருகட்சிக்கும் அபிப்பிராய பேதம்நேர்ந்து வார்த்தைகள் முதிர்ந்து கடைசியில் சண்டையே யுண்டாயிற்று. இஸ்லாமானவர்களைவிட யூதர்கள் எண்ணிக்கையில் அதிகமாகவிருந்தார்கள். ஆயினும் இஸ்லாமியரே ஜெயமடைந்தார்கள். யூதர்களில் உஸைரும் அவன் நண்பன் ஒருவனும் ஆகஇருவர் தவிர ஏனையோரனைவரும் கொல்லப்பட்டும் மிக்க காயமடைந்தும் போனார்கள். இச்சங்கதியை கைபரிலுள்ள யூதர்கள் கேள்விப்பட்டதும் கோபத்தாற் கடல்போல் பொங்கி, இஸ்லாமானவர்களை உலகிலில்லாமலே அடியோடு கருவறுத்து விடவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள்,

இச்சங்கதியைக் கேள்விப்பட்ட ஹஸரத் அவர்கள் பதினான்காயிரம் வீரர்களைத் திரட்டிக்கொண்டு கைபரை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்போது இராக்காலம். இவர்கள் சென்றுகொண் டிருக்கையில் இவர்களில் ஒரு வர் ஆமிர்பின் ஸனன் ரலியல்லாஹு அன்ஹுவை நோக்கி "நமக்குப் பிரயாணக்கஷ்டம் தோன்றாமல் மன திற்குச் சந்தோஷமுண்டாகும் வண்ணம் ஏதேனுமொன்று கூறவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அதன்மேல் ஆமிர்பின்ஸனன் என்பவர் செவிக்கினிமையான சிலபாடல் களைப்பாடினர். முதல் முதல் ஆண்டவன் தன் ஸத்திய மார்க்கமாகிய இஸ்லாம் மார்க்கத்தை யளித்ததற்காக வும், நேர்வழி காட்டியதற்காகவும், நம் எதிரிகளை வெல் லும் வண்ணம் வலிமை யளித்து அருள் புரிந்ததற்காகவும் அவனைப்புகழ்ந்து பாடினர். அந்த இனிய சங்கத்தைக் கேட்ட சேனைகள் வழிநடையின் ஆயாசம் தோன்றாதவர் களாகி மனதில் சந்தோஷமடைந்து பின்னும் துரிதமாய் நடக்கத் தொடங்கினர்கள்.

இதைக்கண்ட ஹஸரத் அவர்கள் ஒட்டகப்படை, குதிரைப்படை யனைத்தும் இவ்வளவு துரிதமாகச் செல் லும் படிசெய்தது யார்? என்று வினவினர்கள். அதற்கு அச்சனங்கள் ஆமிர்பின்ஸனன் என்றதும் ஹஸரத் அவர் கள் ஆண்டவன் அவருக்கு ஆசிபுரிவானுக என்று கூறினர் கள். அதைக்கேட்ட உமர் ரலியல்லாஹு அன்கு ஹஸ ரத் அவர்களை நோக்கி அந்தோ தாங்கள் அவ்வாறு ஆசிர்வதிக்காமல் சும்மா இருந்து விட்டிருந்தால் ஆமிர்பின் ஸனன் இன்னும் கொஞ்சகாலம் நம்மோடு சினேகித்ராக விருந்து நன்மை பெறுவார். அவர் சினேகத்தால் நாமும் நன்மை பெரலாம்" என்றார்.

உமர் ரலீயல்லாஹு அன்கு அவ்வாறு கூறியது உங்களுக்கு வியப்பாக விருக்கும். அவர் கூறிய தற்குத் தக்க காரணமுண்டு. அதாவது யுத்தகாலத்தில் ஹஸரத் அவர்கள் யாரையாவது அவ்வாறு ஆசீர்வதித்தால் அவர்கள் அந்த யுத்தத்தில் வீரசொர்க்க மடைவார்கள் என்பது ஹஸரத் அவர்களுடைய தோழர்களனைவரும் அனுபவமாயறிந்த விஷயம். அதனுற்ருன் அவர் துயரத்தோடு அவ்வாறு மொழிந்தார்.

கைபருக்குப் புறப்படு முன்பே, அதற்கருகாமையிலிருந்த பனிஅசத் பனிகத்பான் என்ற கூட்டத்தார்கள், கைபர் வாசிகளின் நேசர்களாகவிருந்ததால் அவர்களை ஒரு கட்சியிலும் சேராமல் நடு நிலையிலிருந்து விடும்படி ஹஸரத் அவர்கள் அக்கூட்டத்தார்களின் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பினர்கள். அவர்கள் அதற்கு ஒப்பாமல் கைபர் வாசிகளுக்கு வேண்டிய உதவிகளைச்செய்து கொண்டும் அவர்களுக்கு ஒடந்தையாக விருந்து கொண்டு மிருந்தார்கள்.

இஸ்லாமியர்கள் ஒருநாள் காலைவேளையில் கைபர் பிரதேசத்திற்குள் நுழைந்தார்கள். அதுகாறும் எதிரிகளுக்கு இவர்கள் வருவது தெரியாது. திடீரென்று பெருஞ்சேனை வருவதைக் கண்டதும் அவர்கள் பீதியடைந்து கோட்டைகளுக்குள் புகுந்து கதவடைத்துக் கொண்டார்கள். இஸ்லாமியர் நஸாத் என்ற கோட்டையை முற்றுகையிட்டுச் சூழ்ந்து கொண்டு இரண்டு நாட்கள் சண்டை செய்தபின் கோட்டையின் கதவையுடைத்து உள்ளே நுழைந்து விட்டார்கள். எதிரிகளில் அனேகர் காயம் பட்டும் கொல்லப்பட்டும் போனர்கள். இஸ்லாமியரில் ஐம்பதுபேர் காயமடைந்தார்கள். மஹ்மூது இரலியல்லாஹு அன்ஹு

என்ற ஒருவர் மட்டும் ஷஹீதானார்கள். அக்கோட்டையிலிருந்தவர்களில் ஹபஷ் தேசத்தானாகிய அடிமை ஒருவனும் யூதரில் ஒருவனும் தங்கள் குடும்பங்கள் சகிதமாக இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார்கள்.

அந்த ஹபஷ் அடிமை இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக்கொண்டதும் ஆயுதபாணியாகி எதிரிகளைத்தாக்கி வீராவேசத்தோடு போர்புரிந்து ஷஹீதானார். ஹஸரத் அவர்கள் அச்சங்கதியைக் கேட்டபோது ஆ! அவர் ஆண்டவனுக்குச் சொல்ப ஊழியம் செய்தார். ஆனால் பெரிய பலனைப் பெற்றார் என்றார்கள்.

அதன் பிறகு இஸ்லாமியர்கள் பின்னும் இரண்டு மூன்று கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டபின் ஸஅப் கோட்டையை முற்றுகை யிட்டார்கள். அங்குநடந்த யுத்தத்தில் ஆமிர்பின்ஸனான் ரலியல்லாஹு அன்கு என்பவர் யூதர்களில் பிரசித்தி பெற்ற வீரனான மரஹப் என்பவனை யெதிர்த்து வாளையோங்கி அவனை வெட்ட வீசிய போது அவன் மேல் கத்தி தாக்காது தவரிப்போய் இவருடைய தொடையிலேயே காயம்பட்டு அதேகாயத்தால் அவர் சிலநாள் சென்று மௌத்தானார். அதையறிந்த அவர் சகோதரர் ஸல்மா ரலியல்லாகு அன்ஹு என்பவர் ஹஸரத் அவர்களிடம் சென்று தன் சகோதரர் செய்கை பயனற்றதாகியதோடு அவர் தன் வாளால் தானே மடிய நேர்ந்தது மிக்க விசனத்தை யுண்டாக்குகிற தென்று கூறினார். ஹஸரத் அவர்கள் "அவர் செய்கை வீணாகப்போகவில்லை. அவர் தாம் யுத்தத்தில் முன் சென்று சண்டையிட்ட தொன்று, இன்னும் பலவீரர்கள் தம்மைப்பின் பற்றி வந்து யுத்தம் புரியும்படி தூண்டியதொன்று ஆகிய இரண்டு செய்கைகளுக்கும் பலன்களை யடைந்தார் என்றார்கள்.

இஸ்லாமியர்கள் ஒவ்வொரு கோட்டையாகக் கைப்பற்றினும் அவர்கள் கொண்டுவந்த உணவுப்பொருள்கள் யாவும் செலவழிந்து போனபடியால் அவர்கள் பசியால் வருந்த நேர்ந்தது. இதைக்கண்ட ஹஸரத் அவர்கள் ஆண்டவனே! உனது சத்திய வேதத்திற்காக யுத்தம் புரியும் அடியார்கள் பசிவேதனையால் வருந்துகிறார்கள். கருணைக்கடலாகிய நீயே அன்ன பானதிகள் கிடைக்கும் ஒருஸ்தலம் அவர்கள் கையிற் சிக்கும்படி யருள் புரிந்து அவர்களைக் காப்பாற்றவேண்டும்'' என்று பிரார்த்தனை செய்துவிட்டு முன்ஸர்பின் குபாப் ரலியல்லாஹு அன்கு என்பவரிடம் ஒரு கொடியையளித்து ஒரு கோட்டையைச் சுட்டிக்காட்டி அக்கோட்டையைத் தாக்குங்கள் என்று கட்டளையிட்டார்கள். அவர்கள் அவ்வாறே சென்று தாக்கிக் கதவையுடைத்து உள்நுழைந்து கைப்பற்றியபோது அங்கு ஏராளமான உணவுப்பொருள்களும், யுத்த தளவாடங்கள், உடைகள் முதலானவைகளும் இருந்தன.

அதன்பிறகு இஸ்லாமியர்கள் இன்னும் சில கோட்டைகளைத் தாக்கி யுத்தம் புரிந்து ஜெயித்துக் கொண்டார்கள். கடைசியில் கமூஸ் என்ற கோட்டையைத் தாக்கினார்கள். அக்கோட்டை மற்ற எல்லாக்கோட்டைகளையும் விட மிக்க பலம்பொருந்திய கோட்டை. அதன் அகழி மிக்க ஆழமுடையது. யூதர்கள் மிக்க பலம்பொருந்திய வீரர்களைக் கொண்டு அக்கோட்டையை அதிக ஜாக்கிறதையோடு காத்து வந்தார்கள். ஆகையால் இரண்டு வாரங்கள் முற்றுகைப் போட்டிருந்தும் ஜெயமடைய முடியவில்லை. பிறகு பிரைக்யாதிபெற்ற உமர் ரலியல்லாகு அன்ஹு, அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு முதலிய கைதேர்ந்த படைத்தலைவர்களாகிய வீரர்களெல்லாம் யுத்தம் செய்து பார்த்தும் ஜெயமுண்டாக வில்லை.

கடைசியில் ஒருநாள் இரவு ஹஸரத் அவர்கள் தமது தோழமார்களை நோக்கி "ஆண்டவனுக்கும் அவனுடைய இரசூலுக்கும் மிக்க வேண்டியவருகிய ஒருவரை நாளை காலை அக்கோட்டையைப் பிடிக்கும்படி யுத்தத்திற் கனுப்புவோம் என்றூர்கள். இதைக்கேட்ட படைத்தலைவர்களனைவரும் திடுக்கிட்டு நம்மில் யாருக்கு அக்கௌரவம் வாய்க்குமோஎன்று மிக்க கலவரமும் ஆவலுமுடையவர்களானூர்கள்.

அச்சமயம் ஹஸரத் அலீகர் றமல்லாஹு வஜ்ஹஹு கண்ணேயால் பாதைபட்டுக்கொண்டு இச்சண்டையில் கலவாமல் தனியே ஒரு கூடாரத்திலிருந்தவர் அன்று மாலைதான் யுத்தம் நடக்குமிடத்திற் கருகில்வந்து தங்கி கண்ணுக்குக் கட்டு கட்டிக்கொண்டு அந்தப்போர்க்களத்தைப் பார்வையிட்டார். மறுநாள் பொழுது விடிந்ததும் படைத் தலைவர்களாகிய ஹஸரத் அவர்களின் தோழமாரனைவரும் யுத்தத்திற்குச் செல்லும் கட்டளையாருக்குக் கிடைக்குமோ வென்று மிக்க ஆவலோடு ஹஸரத் அவர்களிடம் வந்தார்கள். ஹசரத் அவர்கள் அலீ கர்றமல்லாஹு வஜ்ஹஹு எங்கே என்று வினவ, "அவர் கண்ணேயால் வருந்திக் கொண்டிருக்கிறூர் இன்று அதிகாலையில் யுத்தகளத்தில் வந்திருக்கிறூர்" என்று கூறினூர்கள். ஹஸரத் அவர்கள் அவரை யழைத்து வரும்படிக் கட்டளையிட்டார்கள்.

அலீ கர்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் முன்வந்து பணிந்து நின்றதும் ஹஸரத் அவர்கள் அவர் தேகசுகத்தைப்பற்றி வினவியபின் தமது வாயில் தம் விரலைவைத்து அதனூல் அலீ கர்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்களின் கண்களைத் தடவியதே அவர் கண்வலி நீங்கிச் சுகமடைந்தார் அதன்பின் மரணபரியந்தம் அவருக்கு அந்நோய்வர

வில்லே. அதன்பிறகு ஹஸரத் அவர்கள் தாம் யுத்தகாலத்தில் அணிந்துகொள்ளும் கவசத்தை அலீ கர்றமல்லாஹூ வஜ்ஹஹூ அவர்களுக்கு அணிவித்து, ஸூல்பகார் என்ற தமது வாளாயுதத்தைத் தமது கரத்தால் அவர் இடையிற் கட்டி ஆசிர்வதித்து அவரை நோக்கி "நீர் வென்று ஜெயமடையும்வரையில் திரும்பிவராமல் யுத்தம் புரியும் என்று கட்டளை யிட்டனுப்பினார்கள்.

இக்கட்டளையை பெற்றுக்கொண்ட அலீ கர்றமல்லா அவர்கள் தமது கொடியை யெடுத்துக்கொண்டு சில வீரர்களை அழைத்துக்கொண்டு கோட்டையி னெதிரில் சென்று எதிரிகளைப்போருக்கு வருமாறு அழைத்தார்கள். யூதர்களில் மறஹப் என்ற வீரனுடைய சகோதரனாகிய ஹாரிஸ் என்பவன் முன்பு ஆமிர் ரலியல்லாஹூ அன்ஹூ வுடன் யுத்தம் புரிந்தவன். அவன் இப்போது மிக்கஉக்கிரத்தோடு யுத்தம் புரிந்து சற்று நேரத்திற்குள் அனேகம் இஸ்லாமியர்களைக் ஷஹீதாக்கினான் இதைக்கண்ட அலீ கர்றமல்லாஹூ வஜ்ஹஹூ அவர்கள் மிக்க கோபாவேசங்கொண்டு ஹாரிஸ் என்பவன் முன்சென்று அவன் மேற்பாய்ந்து தமது வாளின் ஒரே வீச்சால் அவனைச் சங்கரித்து விட்டார்கள்.

தன் சகோதரன் கொல்லப்பட்டதை யறிந்த மரஹப் என்பவன் தீயில் விழுந்த புழுப்போல் மனம் பதைத்து, உடனே ஆயுதமணிந்து ஒரு கூட்டம் யூதவீரரோடு, மிக்க கோபாவேசத்துடன் யுத்தகளத்திற்கு வந்தான். அவன் சேனைக்கூட்டத்தில் பிரவேசித்து அலீ கர்றமல்லாஹூ வஜ்ஹஹூ அவர்களின் எதிரில்வந்து நின்று அவரை நோக்கி மிக்க அகங்காரத்தோடு,

ஓ வாலிபனே! உன் பெயரென்ன?" என்ருன். அலீ கர்ரமல்லா நான் அபூதாலிபுடைய குமாரனுன ஹைதர் என்னும் நாம முடையவன்.

மர்ஹப் என்பெயர் மரஹப் நீ யனேகரோடு போர்செய்தி ருக்கலாம். ஆனல் இப்போது ஜாக்கிரதையாய் உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்.

இவ்வாறு இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் க்ஷாத்திரமான வார்த்தைகளைப் பேசிக்கொண்ட பின் மர்ஹப் என்பவன் ஆவேசத்தோடு தன் வாளை யோங்கிக் கொண்டு அலிகர் ரமல்லாஹு வஜ்ஹஹு அவர் கள்மேல் பாய்ந்து வெட்ட முயன்ருன். ஆனல் அலிகர் ரமல்லாஹு தமது கேடயத்தால் அவன் வெட்டைத் தடுத்துக்கொண்டு, மறுபடியவன் கத்தியை யோங்கு முன் தமது வாளால் அவனைச் சேதித்து விட்டார்கள். இத ஞல் யூதர் களுடைய பலத்தின்வேர் அறுந்து விட்டதால், அவர்கள் ஓடிப்போய் கோட்டைக்குள் புகுந்து கதவை யடைத்துக்கொண்டார்கள்.

அப்போதுதான் ஹஸரத் அவர்சள் கொடுத்த ஆசீர் வாதத்தின் பலனை ஆண்டவன் அலீகர்ரமல்லா அவர்களுக் களித்தான் என்று தெறிகிறது. எதிரிகள் கோட்டைக்குள் புகுந்து கோட்டையின்கதவை யடைத்துக் கொண்டதைக் கண்டதும், அலிகர்ரமல்லா அவர்கள் ஆண்டவனையும் அவன் ரசூலையும் மனதில் துதித்து ஒரேபாய்ச்சலாய்ப்பாய் ந்து அகழியைக் கடந்து போய் கோட்டைவாயிலிருந்த பிரம்மாண்டமான கதவின் கைபிடியைப் பிடித்துக் குலு க்கி இழுத்தபோது அக்கதவு அப்படியே அவர்கையில் வந்து விட்டது. அவர் அக்கதவை அகழியின் மேல் குறு க்காகப் பாலம்போல்போட, இஸ்லாமிய வீரர்களெல்லாம்

அதன் வழியாக அகழியைக் கடந்து சென்று அவரோடு கூட மிக்க உற்சாகத்தோடு கோட்டைக்குள் சென்றார்கள்.

கோட்டையின் கதவு பிரமாண்டமானதும் பலமானதுமாக விருந்தது. அறுபது எழுபது பலசாலிகள் ஒன்று சேர்ந்து முயன்றாலும் அதை யசைக்க முடியாது. அத்தகைய கதவு அலிகர் றமல்லா அவர்கள் கரத்தால் பிடுங்கப் பட்டதைக் கண்ட அனைவரும் ஒகோ இது இவருடைய வல்லமையால் நடந்ததல்ல'' ஹஸரத்தவர்களின் ஆசீர் வாத பலத்தாலுண்டான அல்லாஹு த் தஆலாவின் வல் லமையாலேயே நடந்ததாகும் என்று கூறிக்கொண் டார்கள். ஆண்டவன் அருள் தங்களுக்குத் துணைநிற்பதை யறிந்ததால் அவர்கள் ஜெயம் நம்முடையதே என்ற பூரண நம்பிக்கை யோடு கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

யூதர்களோ, அக்கோட்டையின் பலத்தினல் அகங் காரங் கொண்டு அதற்குள் பிரவேசிக்க எதிரிகளால் முடி யாதென்று நம்பியிருந்தார்கள். இப்போது நடந்த சங் கதியை யறிந்ததே, அவர்கள் வியப்பும் பெருந்திகிலும் அடைந்தார்கள்; இடுப்பு உடைந்து விட்டதுபோல் அவர் கள் பலமும் தைரியமும் பறந்துபோய்விடச் சற்று நேரத் திற்குள் இஸ்லாமியர்களால் தோற்கடிக்கப்பட்டு இணங்கி விட்டார்கள்.

அலிகர் றமல்லா அவர்கள் “யுத்த நஷ்டத்திற்கு ஈடாக உங்களுடைய சொத்து முழுமையும் கொடுத்து விட்டால் உங்கள் பிராணன் உங்களுக் களிக்கப்படும். எவனாவது தன் சொத்தை மறைத்துவைத்தால் அச் சொத்து பறிமுதல் செய்யப்படுவதோடு அவன் பிராணனை யும் இழக்கநேரும் என்று யூதர்களுக்கு நிபந்தனைகூறினர் அந்த நிபந்தனைப்படி யுத்தம் முடிந்தது.

இந்த நிபந்தனைப்படி எல்லா யூதர்களும் தங்கள் சொத்துகளனைத்தும் கொண்டு வந்து அலிகர் றமல்லா அவர்களிடம் ஒப்பித்து விட்டார்கள் ஆனால் பனி நவீர் என்ற கூட்டத்தாரின் தலைவனாகிய கனானா என்பவன் மட்டும் தன் சொத்துக்களில் மிக்க விலையுள்ள வைகளை யெல்லாம் மறைத்து விட்டான். அலிகர் றமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் அச்சங்கதியையறிந்து சோதனைசெய்து அப்பொருள்களை யெல்லாம் கண்டு பிடித்துக் கைப்பற்றிக் கொண்டார்கள். நிபந்தனைக்கு மாறாக நடந்த பனிகனானா என்பவன் மரண தண்டனை யடைந்தான். அவன் சுற்றத்தார் அனைவரும் சிறையாக்கப்பட்டார்கள். அவர்களில் பனிகனானா வின் மனைவியாகிய ஸபீயா ரலியல்லாகு அன்ஹா இஸ்லாம் மார்க்கத்தை தழுவிக்கொண்டார்கள். பிறகு ஹஸரத் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே அம்மாதை நிக்காஹு செய்துக்கொண்டார்கள்.

இஸ்லாமியர்கள் கைபரைச் செய்யித்த தற்காகச் சந்தோஷம் கொண்டாடிக் கொண்டிருக்கையில் ஹபஷிலிருந்த முஹாஜரீன்களின் தலைவராகிய ஹபஷ, உமர்பின் உமையா ல்மீரி ரலியல்லாஹு அன்ஹு முதலியோர்கள் தங்கள் கூட்டத்தாரோடு ஹஸரத் அவர்களிடம் வந்து ஆண்டவன் ஜெயமளித்ததற்காகத் தமது சந்தோஷத்தை வெளியிட்டார்கள். கடைசியில் யாவரும் அல்லாகுத் தஆலாவின் புகழைக்கொண்டாடிப் பிரார்த்தனைசெய்தார்கள். கைபரில் கிடைத்த பொருள்கள் எல்லா முஸ்லீம்களுக்கும் பகர்ந்து கொடுக்கப்பட்டன. ஹபஷிலிருந்த முஹாஜரீன்களுக்கும் பாகம் அனுப்பப்பட்டது.

காலை (ஸுப்ஹு) தொழுகை தவறிய விஷயம்.

கைபரிலிருந்து திரும்பிவரும்போது ஒருஇரவு பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் ஹஸரத் அவர்களுக்கு நித்திறை வந்து விட்டதால் யாவரையும் தங்கி யிருந்து இளைப்பாறும்படி கட்டளையிட்டார்கள். ஆனால் பிலால் ரலி யல்லாகு அன்ஹு அவர்களை மட்டும் விழித்துக் கொண்டு எச்சரிக்கையாக விருந்து விடிந்ததும் யாவரையும் எழுப்பி விடும்படி கூறினார்கள். பிலால் ரலியல்லாகு அன்ஹு தஹஜ்ஜுத் தொழுகைக்குப்பின் சாய்ந்து உட்கார்ந்திருந்தவர் தன்னை யறியாது நித்திரை போய் விட்டதால் சூரியன் உதயமாகியவரை ஒருவரும் எழுந்திருக்கவில்லை. பிறகு ஹஸரத் அவர்கள் விழித்துப்பார்த்து சூரியன் உதித்து விட்டதைக்கண்டு பிலால் ரலியல்லாகு அன்ஹு அவர்களை யழைத்து என்ன காரணத்தால் தொழுகை வேளைக்கு எழுப்பவில்லை யென்று கேட்டார்கள் அதற்கவர்தான் தவறி நித்திரை செய்துவிட்ட உண்மையைக் கூறிவிட்டார். ஹஸரத் அவர்கள் உண்மை கூறிய பிலால் ரலியல்லாகு அன்ஹு. அவர்களை மன்னித்துவிட்டு தவறிப்போன தொழுகையைப் பிறகு செய்யும்படி ஆக்கியாபித்தார்கள். இவ்வாறு தொழுவதற்கு கஸா தொழுகை என்று பெயர்.

சில விலக்குகள்.

எந்தெந்த காரியங்கள் செய்யக்கூடாதென்று கூறப்படுகின்றனவோ அவைகளுக்கு விலக்குகள் என்று பெயர். பற்களால் தன் இரையைக்கொன்று பிய்த்துத்தின்னும், புலி, சிங்கம், பூனை, நாய் இப்படிப் பட்டவைகளைப் புசிக்க

ல்ர்க்ாது. அப்படி புசிப்பது ஹறும்வெங்காயம் பூண்டு இவற்றைச் சாப்பிட்டுப் மஸ்ஜிதுக்காவது பெரியோர் இருக்கும் சபைக்காவது செல்லலாகாது.

2-வது.

ஹுதைபியாவில் நடந்த உடன்படிக்கையின்படி இஸ்லாமியர்கள் மறுவருடம் மக்காவில் பிரவேசித்து ஹஜ்ஜு செய்யலாம். ஆகையால் முன்பு சென்றபோது வந்திருந்தவர்க ளனைவரையும் மக்காவுக்குப் புறப்படும்படி ஹஸரத் அவர்கள் கட்டளையிட்டார்கள். அவர்களையன்றி இன்னும் யாராருக்கு வரப்பிரியமோ அவர்களெல்லாம் வரலாகுமென்று கூறினர்கள். ஆகவே இரண்டாயிரம் பெயரோடு ஹஸரத் அவர்கள் மக்காவிற்குச் சென்றார்கள். இவர்கள் வந்ததைக்கண்ட மக்காவாசிக ளனைவரும் தங்கள் வாசஸ்தலங்களை விட்டுவிட்டு மலைகளுக்குப்போய் விட்டார்கள்.

இஸ்லாமியர்கள் அச்சமாவது மனக்கலக்கமாவது சற்றுமின்றி நிம்மதியோடு ஹஜ்ஜுத்தொழுகையைப் பூரணமாய் நிறைவேற்றிக் கொண்டார்கள். மக்காவிலிருக்கையில் ஹஸரத் அவர்கள் அங்கிருந்த அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹு என்பவருடைய அனுமதி பெற்று அவருடைய கொழுந்தியாள் (மனைவியின் தங்கை, ஆகிய மைமூனுபின்தே ஹாரிஸ் ரலியல்லாகு அன்ஹா அவர்களை மணம்புரிந்து கொண்டார்கள். கலியாணத்திற்குப்பின் நடக்கும ஒலிமாவென்னும் விருந்தை மக்காவிலேயே நடத்தவேண்டு மென்றும் அவ்விருந்தில் மக்காவாசிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஹஸரத் அவர்கள் நாட்டம் கொண்டார்கள். அவ்வாறே விருந்

திற்குவர் மக்காவாசிகளுக்கு விருப்பமிருக்கிறதா வென்பதை யறிந்துவரும் சில ஆட்களை யனுப்பினார்கள் மக்காவாசிகளோ உங்கள் விருந்திற்கு நாங்கள் வரவேண்டிய அவசியமில்லை நீங்கள் சீக்கிரம் நகரத்தை விட்டுப் போய்விட வேண்டு மென்பது எங்கள் கோரிக்கைஎன்று கூறினார்கள். ஆகையால் ஹஸரத் அவர்கள் விருந்தை அங்கு நடத்தாமலே தமது பரிவாரத்தோடு உடனே மக்காவை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். அச்சமயம் ஹம்ஸா ரலியல்லாகு அன்ஹுவுடைய குமாரத்தியாகிய அம்மாரா இரலியல்லாகு அன்ஹா அவர்கள் ஹஸரத் அவர்களை நோக்கி என் அருமையான சிறியதந்தையே என்று மிக்க அன்போடு உபசலித்தார்கள். அக்கன்னிகையின் நோக்கம் தன்னையும் கூட அழைத்துச் செல்லும்படி ஹஸரத் அவர்களை வேண்டிக் கொள்வதுபோல் தோன்றியது. அதனாலும், அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் அவ்வாறு செய்யும்படி வேண்டிக்கொண்டதாலும் ஹஸரத் அவர்கள் அப்பெண்ணைப் பாத்திமா ரலியல்லாகு அன்ஹா அவர்கள் ஒட்டகத்தின் மேலேயே அவர்களோடுகூட ஏறிவரும்படிச் செய்து மதீனாவிற்கு அழைத்துச் சென்றார்கள்.

மதினாவிற்கு வந்து சேர்ந்தபோது தாய் தந்தை யில்லாத அப்பெண்ணை யார்வைத்துக்கொண்டு சவரக்ஷணை செய்வது என்பதில், ஹஸரத் அவர்களுடைய தோழரில் மூன்று ஸஹாபாக்கள் ஒவ்வொருவரும் அப்பெண் தனக்கே நெறுங்கிய பாத்தியமானதால் தானே அதைச் சவரக்ஷணைசெய்து அதற்குக் கலியாணம் முதலியதும் செய்து வைக்கச் சுதந்திரம்உடையவனென்று போட்டியாகப் பேசிக்கொண்டார்கள். ஆயினும் அதைப்பற்றித் தங்களுக்குள் ஒரு முடிவிற்கு வரமுடியாமல் கடைசியில் ஹஸ

ரத் அவர்களிடம் அதைப்பற்றி மூவரும் பின் வருமாறு கூறிக்கொண்டார்கள்.

1-வது அலீ கர்றமல்லாஹு வஜ்ஹஹு ஹஸரத் அவர்களை நோக்கி அமாரா என்சிறிய தந்தையின் மகள்பாத்திமா ரலியல்லாகு அன்ஹா அவர்களுக்கு அத்தையாகவேண்டும் நானே அவளை யிங்கழைத்து வரும்படித் தங்களை வேண்டிக்கொண்டவன். ஆகையால் நானே அதைச் சவரக்ஷணை செய்துகொள்ளும்படி அனுமதி யளிக்கப் பிரார்த்திக்கிறேன்'' என்றார்.

2-வது அலீ கர்றமல்லாஹு அவர்களின் சகோதரராகிய ஜாபர் ரலியல்லாஹு அன்கு என்பவர் ''இப்பெண் எனக்கும் சிறிய தந்தையின் புத்திரியே. அதோடு இவளுடைய சிறியதாய் என் வீட்டிலிருக்கிறார். ஆகையால் அப்பெண்ணைவைத்துக்கொண்டு சவரக்ஷணை செய்ய நானே மேலான தகுதி யுடையவனாக விருக்கிறேன். ஆகையால் தயை புரிந்து அடியேனுக்கே அதைப் பாதுகாக்கும் சுதந்திரம் அளிக்கப் பிரார்த்திக்கிறேன்'' என்றார்.

3-வது ஸைத்பின் ஹாரிஸ் ரலியல்லாஹு அன்ஹு "இப்பெண்ணின் தந்தைக்குகலியாணம் நடந்தது முதல் அவரும் நானும் சொந்த சகோதரர்போல் ஒருவரையொருவர்பாவித்து நடந்து வந்தோம். சினேகித வாஞ்சையினும் அதிகமான அன்பு வேறில்லை. ஆதலால் அவர் மகளை நானே என்புத்திரியாகப்பாவித்து வளர்த்து வரும்படி அனுமதியளிக்க வேண்டுகிறேன்'' என்றார்.

ஹஸரத் அவர்கள் மூவர் வார்த்தைகளையும் கேட்டபின் "ஜாபர் வீட்டில் இப்பெண்ணின் சிறியதாயார் இருக்கிறார்கள். சிறியதாய் பெற்ற தாயாருக்குச் சமதையானவர்கள். ஆதலால் அந்த வீட்டிலேதான் அப்பெண்ணைவைத்து

சவரக்ஷணை செய்யப்படவேண்டும்'' என்று கூறியபின் அலிகர் றமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுக்கும் ஸைத் பின் ஹாரிஸ் ரலியல்லாகு அன்ஹு அவர்களுக்கும் சமாதானமான மொழிகளைக் கூறினார்கள். ஹஸரத் அவர்கள் எந்த விஷயத்திலும் செய்யும் தீர்ப்பை அவருடைய தோழர்கள் எப்போதும் சந்தோஷத்தோடே பெற்றுக் கொள்வார்களே யன்றி சற்றேனும் மனவருத்தமடைவதில்லை. ஆகையால் இவ்விஷயத்தில் மற்ற இருவருக்கும் இரண்டொரு சமாதான மொழிகளைக் கூறியபடியால் அவர்கள் மிக்க சந்தோஷமடைந்தார்கள்.

இவர்கள் இவ்வாறு பெண்களின்மேல் அன்புடையவர்களானது ஹஸரத் அவர்கள்செய்து வைத்த பயிற்சியின் பயனாகும். ஏனெனில் அதற்கு முன் அரபியர்களில் பெரும்பாலர் பெண்குழந்தை பிறந்தால் கொன்றுவிடுவது, தப்பித் தவரி ஒரு செல்வவானுடைய பெண்ணை யொருவன் மணம்புரிந்து கொண்டால் அவள் சொத்தை யழித்து விட்டபின் அவளை அனாதையாக விட்டுவிடுவதுமாய் இருந்தார்கள். ஹஸரத் அவர்கள் காலத்தில் தான் அக்கொடிய வழக்கங்களனைத்தும் தடுத்தொழிக்கப்பட்டன அத்தகைய கொடிய வழக்க முடையவர் களாயிருந்தவர்கள் இப்போது தங்கள் பெண்களைமிக்க அன்போடு ஆதரிக்கப் பிரியமுடையவர்களாகி விட்டார்கள்.

அமாரா என்கிற அப்பெண்ணை மதீனாவிற்கழைத்து வந்து விட்டது முன் செய்து கொண்டசமாதான உடன் படிக்கையின் நிபந்தனைக்கு விரோதம் என்று சிலர் கருதினார்கள். ஆனால் அறிவாளிகள் அப்படியல்ல. அந்த நிபந்தனை ஆண் பிள்ளைகளைப் பற்றியது ஆண்பிள்ளைகள் மக்காவிலிருந்து நம் கக்ஷியில் வந்து விட்டால் அவர்களைத் திருப்பி யனுப்பவேண்டு மென்பதே யன்றி பெண்களைப்பற்றி

யதல்ல. மேலும் இன்நிபந்தனை மக்காவாசிகள் அவர்களே கூறிக்கொண்டது. இது மட்டுமல்ல, அபூபவஷீர் ரலியல்லாகு அன்ஹு விஷயத்தில் இந்நிபந்தனையை யவர்களே இரத்து செய்து கொண்டார்கள். இன்றேல் அவர்கள் ஒருகாலும் இதுகாறும் சும்மா இருக்கமாட்டார்கள். முதலாவது அப்பெண் மக்காவை விட்டு வரும்படி அனுமதி யளித்தே யிரார்கள். நாம் மூன்று நாட்களுக்குமேல் மக்காவிலிருக்கக் கூடாதென்று நிர்பந்தம் செய்தவர்கள் இதற்குச் சம்மதித்தே யிரார்கள்'' என்றார்கள்.

புத்திமதிகள்

தாய் தந்தையரைப் போற்றல்.

பிள்ளைகளே! இப்போது நாம் கூறுவதை மிக்க கவனத்தோடு வாசித்து மனதில் வையுங்கள். உங்கள் தாய் தந்தையர்கள் உங்களுக்கு எப்படிப் பட்ட நன்மை செய்திருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பிறந்த உடன் என்ன நிலைமையில் இருந்தீர்களென்பது உங்களுக்குத் தெரியாது அப்போது நீங்கள் மிக்கபரிதாபமான ஸ்திதியிலிருந்தீர்கள். அப்போது நீங்கள் இருந்த விடத்தைவிட்டு நகரவும் சக்தியில்லாதவர்களாய் இருந்தீர்கள். அப்போது உங்களுக்கு வேண்டியது இன்னதென்றறிந்து தெரிவிக்க உங்களுக்குச் சக்தி யில்லை. என்ன ஆபத்து நேர்ந்தாலும் அதை யறிந்து கொள்ளவாவது அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவாவது உங்களால் முடியாது. நீங்கள் மலஜலம் கழித்துக்கொண்டால் அவற்றிலேயே புரண்டு கொண்டு கிடப்பீர்கள். உங்களை நீங்கள் சுத்திசெய்துக் கொள்ள முடியாது. பாலர்களே! அப்படிப்பட்ட ஆபத்

தான காலங்களில் உங்களைக் காப்பாற்றியது யார்? ஈ, எறும்பு முதலியவை உங்களைக் கடிக்காமல் இரவும் பகலும் உங்களைப்பாது காத்தது யார்? உங்கள் பெற்றோர்களே.

உங்கள் தாய் உங்களைப் பத்துமாதம் வயிற்றில் சுமந்து பெற்ருள். நீங்கள் தாயின் வயிற்றில் வளரும்போது தாய்உண்ட ஆகாரத்தின் சத்தே இரத்தமாய் மாறியுங்களுக்கு ஆகாரமாக உங்கள் வயிற்றில் வந்து சேர்கிறது. நீங்கள் குழந்தையாக ஜனித்தபின் உங்கள் தாயார் தங்கள் தேகத்திலுள்ள இரத்தத்தையே பாலாக உங்களுக்கு அளிக்கிருள். உங்கள் பசியறிந்து பாலூட்டுகிருள். நீங்கள் அழுதால் அவள் மனம் பதைத்துதான் சாப்பிடும் ஆகாரத்தையும் விட்டு விட்டு உங்களுக்குப்பால் கொடுத்து உங்கள் பசியை யாற்றுகிருள். பிறகு உங்களைத்தன் மார்பின்மேல் அல்லது தொட்டிலில் படுக்கவைத்து செவிக்கினிய பாட்டுபாடி யுங்களை நித்திரை செய்யச் செய்கிருள். உங்களுக்கு வியாதி வந்து விட்டால் உங்கள் தாய் தந்தையர் பிராண வேதனை யடைகிருர்கள். உங்கள் நோய் தீர்ந்து நீங்கள் சுகமடைய வேண்டுமென்று கடவுளைப்பிரார்த்தனை செய்கிருர்கள். வைத்தியர் வீட்டிற்கு உங்களைத்தூக்கிச் சென்று உங்களுக்கு ஔஷதம் வாங்கியளிக்கிருர்கள். உங்களுக் கொருஆபத்து நேர்ந்து விட்டால் அவர்கள் பிராணனே போவதுபோல் வேதனை யடைகிருர்கள்.

இனித் தந்தையைக் கவனியுங்கள் காலை முதல் மாலை வரையில் தன் வியர்வை பூமியிற் சிந்தும்படி உழைத்து பணம் சம்பாதிக்கிருர். அதை வீட்டிற்குக்கொண்டு வந்து தான் அருந்துவதைவிட மேலான அன்னபானதிகளை யுங்களுக் களிக்கிருர். உங்களுக்கு நல்ல உடைகளை வாங்கி யுடுத்துகிருர். அவர் வெளியிலிருக்கும் போதும் நீகள் உண்டு உடுத்து சுகமாக விருக்கிறீர்களா

வென்ற வெண்ணமே கொண்டிருக்கிறார். மாலை வீட்டிற்கு வந்தபோது உங்கள் முகங்களைக்கண்டு சந்தோஷமடைவதால், தன் கஷ்டம் முதலிய வற்றை மறக்கிறார் உங்களுக்கு அறிவு வந்ததும் கல்விகற்றுக் கொடுத்து, நீங்கள் பிற்காலத்தில் சுகமாகச் சீவனம் செய்யச் சக்தி யுடையவர்களாகும்படிச் செய்கிறார். தான் மரணமடையும்வரை நீங்கள் க்ஷேமமாக வாழவேண்டு மென்ற எண்ணமே கொண்டிருக்கிறார். அவர் சம்பாதனை முழுமையும் உங்களுக்காகவே செலவு செய்து இறக்கும்போது தன்னிடம் மிச்சமாக விருந்த ஆஸ்தியை யுங்களிடமே ஒப்பித்து விடுகிறார்.

உங்கள் தாய் தந்தையர்களே ஆண்டவனுக்கு இரண்டாவதாக உங்களைக் காப்பாற்றினவர்கள். இத்தகையதாய் தந்தை யரிடம் எவ்வாறு பக்தி வைத்து நடந்து கொள்ள வேண்டுமென்பதை நீக்களே சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவன் தன்னைத் தவிர வேறொன்றையும் வணங்க வேண்டாமென்று கட்டளை யிட்டிருந்தாலும்: தாய் தந்தையரிடம் பக்தியோடும் நன்றியோடும் வணக்க ஒழுக்கத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்று குர் ஆன் ஷரீபில் அடிக்கடி கட்டளை யிட்டிருக்கிறான். மேலும் தாய் தந்தையர்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் அளவுமீறி எல்லோரையும் படைத்த ஆண்டவனுடைய கட்டளைகளை மறந்து விடலாகாது. ,,ஓமனிதனே! உன் தாய் தந்தையர்கள் என்னை விடவேறொன்றை எனக்குப் பதில் கடவுளாக வணங்கும்படி உனக்குக் கடின கட்டளை யிடுவார்களாயின் அத்தகைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதே'' என்று திருவுளமானான். இன்னும் உன் தாய் தந்தையர் விருத்தாப்பிய மடைந்த காலத்தில் அவர்களை யலட்சியம் செய்யாதே. கடிந்து கூறாதே அவர்களிடம் மரி

யர்தையாக இனிமையான வார்த்தைகளால் பேசு. அவர்கள் மேல் எப்போதும் பூரணமான ஆதரவு வைத்து நடந்து கொள்வதோடு உன்னை யவர்கள் எவ்வளவு அன்போடு பாது காத்து வாலிபனாக வளர்த்தார்களோ அதுபோல் நீயும் அவர்களை ஆதரவோடு பாதுகாத்து, ஆசீர்வாதம் பெற்றுக்கொள்,, என்றும் அருளியிருக்கிறான்.

இது வரை தாய் தந்தையர் களிடம் எவ்வாறு பக்தியோடும் நன்றி யோடும் நடந்து கொள்ள வேண்டு மென்பதைப் பற்றி ஆண்டவனருளிய கட்டளைகளைக் கூறினோம். இப்போது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் தாய் தந்தையர் களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகளைப்பற்றி கூறியுள்ள சில உபதேசங்களையும் (ஹதீஸ்) கூறுகிறோம் அவை பின் வருமாறு:

ஆண்டவன் தன்னை வேண்டிக் கொண்டவர்களுடைய எத்தகைய பாபங்களையும் பொறுத்துக் கொள்வான். ஆனால் தாய் தந்தையருக்குத் துரோகஞ்செய்த பாபத்தை மட்டும் பொறுக்கமாட்டான். தாய் தந்தையர்கள் மனம் நோகும்படி செய்பவர்களுக்கு அவர்கள் மரிக்கு முன்பு இவ்வுலகிலேயே அவர்களுக்குத் தண்டனை விதிக்கப் படும்.”

தாய் தந்தையர்களை யெவ்வாறு மதிக்கவேண்டும் என்று கேட்டதற்கு இரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் “தாய்தந்தையரே உனக்கு சொர்க்கமும் நரகமும். நீ உன் பெற்றோர் உன்மேல் மிக்க சந்தோஷங் கொள்ளும்படி நடந்துகொண்டால் சொர்க்கமடைவாய் என்பதும், அப்படிக்கின்றி அவர்கள்மனம் நோகும்படி நடந்து கொண்டால் நரகமடைவாய் என்பதும் நிச்சயம்” என்று திருவுளம்பற்றினார்கள். “எவன் தன் தாய் தந்தைய

ருடைய வயோதிககாலத்தில் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைத் திருப்தியாய்ச்செய்து சொர்க்கத்திற்கு வழிதேடிக் கொள்ளவில்லையோ அவன் சுத்த நிர்ப்பாக்கிய வானவான். அதோடுஅவன் மண்ணுக்குச் சமதையான வன்'' என்றும் அருளினார்கள்.

ரசூலுல்லாவுடைய தோழரில் ஒருவராகிய மஆஸ் பின் ஜபல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வரு மாறு கூறினார்கள்:—

"நபிநாயகம் அவர்கள் பத்துகட்டளைகள் இட்டிருக் கிறார்கள். அவற்றில் ஒன்று "தாய்தந்தையர்களுக்குக் கிஞ்சித்தும் துரோகஞ் செய்யாதீர்கள். அவர்கள் கட் டளை யெதுவாயினும் அதற்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். நீயுன் மனைவி மக்களையும் சொத்தையும் அடியோடு கை விட்டுவிடுஎன்று அவர்கள் கட்டளையிடினும் நீ யப்படியே அக்கட்டளைப்படி நடந்துகொள். சொர்க்கமானது உன் தாயின் பாதத்தின் கீழ் இருக்கிறது. ஆகையால் உன் பெற்றோர்க்குச் சரியாகப்பணிவிடை செய்வாயாகில் நீ சொர்க்கத்தை யடைவாய்'' என்பதே.

ஹஸரத் அவர்களின் தோழர்களில் பிரக்யாதிபெற்ற அப்துல்லாபின் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரசூலுல்லா அவர்கள் பின்வருவாறு அருளியதாகக் கூறி னார்கள்:—

"ஆண்டவனுக்கு நம்மேல் அன்புண்டாக வேண்டு மாயின் நாம் நமது தந்தைக்கு நம்மேல் அன்பிருக்கும்படி நடந்து கொள்ளவேண்டும். நமது தந்தை நம்மை வெறுக் கும்படி நாம் நடந்துகொண்டால் ஆண்டவனும் நம்மேல் வெறுப்பேயடைவான். ஒருவன் பூரண அன்போடு தன் பெற்றோரை பார்ப்பானாயின் அவனுடைய ஒவ்வொரு

பார்வைக்கும் அவன் மக்காவிற்குச்சென்று ஹஜ்ஜு செய்த பலனையடைவான்.''

பிள்ளைகளே! இப்போது நாம் கூறியவற்றால் தாய் தந்தையர்களுக்கு நன்றியோடும் அன்போடும் பணிவிடை செய்வதால் எத்தகைய நன்மை கிடைக்குமென்பதும், அவர்களுக்குத் துரோகஞ் செய்வதாலும், அவர்கள் மனம் நோகும்படி நடந்து கொள்வதாலும் ஆண்டவனுடைய கொடியதண்டனை கிடைக்குமென்பதும் நன்றாய் அறிந்துகொள்ளலாம். ஆகையால் ஆண்டவன் கோபத்திற்கு ஆளாகாமல் ஜாக்கிரதையோடு தாய் தந்தையருக்குப் பக்தியோடு பணிவிடைசெய்ய மறவாதீர்கள்.

ஆழ்ந்த ஆலோசனையின் பயன்.

ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய தோழர்களில் ஒருவராகிய அனஸ் ரலியல்லாஹு அன்ஹு பின்வருமாறு கூறினார்கள்:—

"ஒருநாள் ஒருமனிதன் ஹஸரத் அவர்களைத்தரிசித்து'' தாங்கள் எனக்கு நற்போதனை யருளும்படி பிரார்த்திக்கிறேன்'' என்றார். அதற்கு ஹஸரத் அவர்கள் "நீ எக்காரியத்தைச் செய்யமுயன்றாலும் அப்படி முயல்வதற்குமுன் அதனால் நன்மைவிளையுமா தீமைவிளையுமா என்று தீர்க்காலோசனை செய்து அதன்பிறகு அதில்பிரவேசி'' என்று அருளினார்கள். இதற்கொரு திருட்டாந்தம் கூறுகிறோம்.

யானையை நிருத்தல்.

ஒருநாள் ஒரு பாடசாலையின் உபாத்தியாயர் தமது மாணவர்களை நோக்கி "பிள்ளைகளே! ஒரு யானையை

நிருத்து அது எவ்வளவு எடையிருக்கிறதென்று கண்டறிவது எப்படி? கூறுங்கள் பார்ப்போம்'' என்றார். பிள்ளைகள் "அய்யோ! யானையை யெப்படி நிருப்பது. அதை நிருக்க அத்தனை பெரியதராசு எங்கிருந்து அகப்படும். ஆயினும் ஒன்றுசெய்தால்நிறுக்கலாம். அதாவது ஆட்டை யறுப்பதுபோல் அதைத் துண்டு துண்டாக அறுத்து கொஞ்சங் கொஞ்சமாக நிருத்தால் நிருக்கலாம். அதற்காக யானையின் சொந்தக்காரன் அதன் கிரையமாகிய பெருந்தொகையை யிழந்துவிடுவானா? தாங்கள் கூறுவது முடியாதகாரியம்'' என்றார்கள்.

உபாத்தியாயர் "பிள்ளைகளே! புத்தியைக்கொண்டு ஆழ்ந்து சிந்திப்போனுக்கு ஆகாதகாரியம் எதுவுமில்லை. ஒருவூரில் ஒரு அரசன் மிக்கவியாதியுற்றுத் தான் பிழைப்பது அரிதுஎன்று எண்ணி மிக்க பயமடைந்திருந்தான்- கடைசியில் அவன் ஒருபெரியவர் கூறியபடி தன் வியாதி நீங்கித் தான் பூரணசுகமடைந்தால் ஒரு யானையின் எடைக்குச்சரியான ரூபாய்களைப் பகீரிகளுக்குத் தானம் செய்வதாய்ப் பிரார்த்தனை செய்துகொண்டான். கடவுள் தயவால் அவன் கொஞ்சநாட்களில் சுகமடைந்து விட்டதால் கூறியபடி பிரார்த்தனையைச் செலுத்த வேண்டியதாயிற்று அரசன் தன் சபையில் தன் பிரார்த்தனை நிறைவேற வேண்டியதைப்பற்றி கூறியபோது அங்கிருந்த அனைவரும் யானையை யெப்படி நிருப்பதென்று வழித்தார்கள். அரசன் யார் யானையின் எடைக்குச் சரியாக ரூபாயை நிருத்துக்கொடுக்கிறானோ அவனுக்கு நல்ல பரிசளிப்பதாக எங்கும் விளம்பரம் செய்வித்தான். ஒரு படகோட்டி அதைக் கேட்டு சே இதுதானா பிரமாதம் நாம் சுலபமாகச் செய்து விடலாம் என்று கருதி அரசனிடம் சென்று தான் நிறுத்துக்கொடுப்பதாகக் கூறினான்.

பிறகு அவன் அவ்வாறே நிறுத்துக் கொடுத்து அரசன் கொடுத்தப்பரிசைப் பெற்று தன் தரித்திரத்தை நீக்கிக் கொண்டான். ஏராளமான பக்கீரிகளும் மற்ற ஏழைகளும் திருப்தியான தானம் பெற்று சந்தோஷத்தோடு வாழ்த்திச் சென்றார்கள். பிள்ளைகளே! அந்தப்படகோட்டி தன் புத்தியைக் கொண்டு செய்த ஆலோசனையால் தானும் செல்வ வந்தனானான். அவனால் இன்னும் அனேகம் ஏழைகளும் நல்ல தானம் கிடைக்கப் பெற்றார்கள். இப்போது அந்தப் படகோட்டி எவ்வாறு யானையின் எடைக்குச் சரியான பணத்தை நிருத்துக்கொடுத் திருப்பான் என்பதை நீங்கள் யோசித்துக் கூறுங்கள். யானையை யவன் நிறுத்தது பெரிய கஷ்டமான வேலையல்ல நீங்கள் சிந்தித்துப் பார்க்காத்ததால் தான் அது பெரிய கஷ்டமாகத் தோன்றியது என்றார்.

இதைக் கேட்ட பிள்ளைகளனைவரும் இரவும் பகலும் அதைப்பற்றியே சிந்திக்க லானார்கள். கடைசியில் ஒரு பையன் மனதில் விஷயம் இப்படித் தானிருக்கவேண்டுமென்று புலப்பட்டது. அவன் உபாத்தியாயரை நோக்கி" நான் கூறுகிறேன் என்றான். உடனே எல்லா பிள்ளைகளும் அவனையே நோக்கிக் கொண்டிருந்தார்கள். அப்பையன் கீழ்க்கண்டவாறு கூறினான்.

அய்யா படகுக்காரன் படகை கரையோரம் கொண்டு வந்து யானையைக்கொண்டு போய்ப் படகில் ஏற்றியிருப்பான் அதன் பிறகு யானை யிருக்கும்போது படகு எவ்வளவு வரையில் ஜலத்தில் அமிழ்ந்திருந்ததோ அந்த விடத்தில் அடையாளம் வைத்துக் குறித்துக் கொண்டிருப்பான் அதன்பிறகு யானையைப் படகிலிருந்து இறக்கி விட்டு, யானை யிருக்கும்போது படகு எவ்வளவு அமிழ்ந்திருந்ததோ அவ்வளவுவரை யமிழும் மட்டும் அதில் பணத்தைக்

கொட்டச் சொல்லி யிருப்பான். அப்படிக் கொட்டப் பட்ட பணம் யானையின் இடைக்குச் சரியாக விருக்கும்'' என்றான்.

அதைக் கேட்டதே மற்றபிள்ளைகளெல்லாம் மிக்க சந் தோஷத்தால் ஆரவாரித்து அவன் புத்திசாலித் தனத்தை ப்பற்றி யவனை மெச்சிக் கொண்டார்கள். உபாத்தியாயர்'' பிள்ளைகளே! எந்த வேலையையும் ஆரம்பத்தில் மனதிற்குப் புலப்படாம விருப்பதாலேயே அது கஷ்டமென்றும் அசாத்தியமான தென்றும் எண்ணி விடாதீர்கள். ஆழ்ந்து சிந்தித்தால் அது சுலபமாகவே தோன்றும். யானையை நிறுப்பது உங்களுக்கு மிக்க கஷ்டமான வேலையாகவே தோன்றியது. படகுக்காரன் புத்தியைக்கொண்டு ஆழ்ந்து ஆலோசித்ததால் அதைச் சுலபமாய்க் கருதி அப்படியே செய்துவிட்டான். நீங்கள் கல்வி கற்பதிலும் வேறெந்த வேலை செய்வதிலும் ஆழ்ந்த சிந்தனையையும் ஊக்கத்தை யும் உபயோகித்தால் நல்ல பயனடைவீர்கள்.

இப்போது நாம் கூறியது ஒருமனிதன் ஆலோசனை யால் செய்யத்தக்கது. இப்படியே கல்விமான்கள் ஆழ்ந்த சித்தனையாலுண்டான சூக்ஷ்ம புத்தியால் பல அரியநூல் களை யெழுதியிருக்கிறார்கள். நீராவியந்திரம் தந்தி முத லிய பல ஆச்சரியமான விஷயங்களனைத்தும் ஆழ்ந்த சிந் தனையால் கண்டுபிடிக்கப்பட்ட வைகளேயாகும் இன் னொரு விஷயம் உங்களுக்குக் கூறுகிறேன். அதனால் மனி தன் மட்டுமல்ல மிருகங்களும் ஆழ்ந்த சிந்தனையால் அரிய காரியங்களைச் செய்கின்றன வென்று விளங்கும்.

உயிருள்ள பாலம்.

ஓர் பிரமாண்டமான வனாந்தரத்தில் வேட்டையாடுவ தற்காக இராணுவவுத்தியோகஸ்தர்கள் மூன்றுபேர் சென்

ரூர்கள். அவர்கள் அங்கிருந்த ஒரு ஆற்றின்கரையில் நின்று வெள்ளத்தை நோக்கிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் சற்று தூரத்திலிருக்கும் நகர வாசியாகிய ஒருவன் அன்னிய நாட்டாராகிய அந்த இராணுவ ஆட்களுக்கு வழிகாட்டியாக அவர்கள் கூடவந்திருந்தான். அவன் அவர்களை நோக்கி தூரத்திற்கையாற் சுட்டிக்காட்டி அதோ பாருங்கள் ஒரு ஆச்சரிய சம்பவம்'' என்றான்

உடனே மூவரும் அத்திசையை நோக்கியதும் பிரமித்து மிக்க வியப்போடும் அச்சத்தோடும் அவனை நோக்கினார்கள். அவர்கள் பார்த்தது என்னவெனில் சுமார் நானூறு ஐந்நூறு குரங்குகளடங்கிய ஒருபெரிய குரங்குப் படை. அதில் கிழம், ஆண், பெண், சிறிது, பெரிது யாவும் கலந்திருந்தன. அம்மனிதன் அவர்களைநோக்கி நாம் ஒரு பக்கமாய் நின்று கொண்டிருந்தால் அவை நம் ஜோலிக்கு வரமாட்டா அவைகள் அதோ ஆற்றிற் கப்பால் தெரியும் மலையிலுள்ள காய்கனிகளைத் தின்பதற்காக அங்கு செல்கின்றன'' என்றான் அதைக்கேட்ட மனிதர்கள் இப்போது ஆற்றில் வெள்ளம் போகிறதே அவை யெப்படி அக்கரை சேரும். இவ்வளவு பெரிய ஆற்றையெப்படித் தாண்டும் நீந்துச்செல்லுமாயின் வெள்ளம் அடித்துக்கொண்டு போய் விடுமே'' என்றார்கள். அதற்கு வழிகாட்டியாக வந்த மனிதன்.

“அய்யன்மீர் ஆறுமிக்க அகன்றிருப்பதால் அவை தாண்டமுடியாது. நீந்தவோதாங்கள் கூறியபடி வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகும் என்பதோடு குரங்குகளுக்கு நீரில் இறங்கப் பெரும் பயம் என்றான்.

அவர்கள்'' அப்படியின் இவை எப்படி அக்கரைபோய் சேரும்? என்று கேட்டார்கள் அதற்கு அம்மனிதன் அந்த

அதிசயத்தைச் சற்றுநேரத்திற்குள் நேராகக்காண்பீர்கள்" என்முன். அதன்மேல் நால் வரும் சற்று தூரத்திலிருந்த ஒரு பெரிய மரத்தின் பின்னல் நின்று குரங்குகளைப்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

குரங்குகளனைத்தும் ஆற்றின் கரைக்குச் சுமார் நூறு கஜதூரத்தில் வந்ததும் அங்கு தங்கிவிட்டன. அக்கூட்டத்திலிருந்து ஒருபெரிய வயது முதிர்ந்த குரங்குமட்டும்கரையோரத்தில் வந்து ஆறு எங்கு கூடியவரையில் அகலத்தில் குறைந்திருக்கிறதோ அந்த விடத்திற்குச்சென்று அங்கிருந்து நேரிலுள்ள எதிர்க்கரையையும் பின்பொரு முறை நோக்கியபின் திரும்பித்தன் இனத்தாரிருக்கும் இடத்தை நோக்கிவந்தது. அப்போது அக்கூட்டத்தி லிருந்த இன்னெரு பெரியகுரங்கு அதை யெதிர் நோக்கிவந்தது. கரையைப்பார்த்துவிட்டுச் சென்ற குரங்கு இரண்டாவது குரங்கின் செவியில் என்னமோ குசு குசு வென்று கூறியது. அக்குரங்கு திரும்பிக் கூட்டத்தருகில் சென்று என்னமோ கீச்சென்று கூறியது. உடனே அக்கூட்டத்திலிருந்த கிழக்குரங்குகளும் சிறுகுரங்குகளும் அங்கேயே யிருக்க நடுவயதுடைய பலம் பொருந்திய குரங்குகளெல்லாம் கூட்டத்தைவிட்டுப் பிரிந்து முன்னுக்கு வந்து நின்றன.

உடனே முதற்குரங்கு அவற்றிற்கு வழிசாட்டியாக முன்னேசெல்ல அவையாவும் பின்னல்சென்றன. மற்றக் குரங்குகள் அவற்றின் பின்னல் தூரத்தில்சென்றன முதற்குரங்கு தன் கூட்டத்தைத்தான் முன் பார்த்த கரையோரத்திலுள்ள ஒரு பிரமாண்டமான விருக்ஷத்தின் கீழ் அழைத்துச்சென்று அங்கு நிறுத்தியது அங்குஆறுகொஞ்சம் குறுகியிருந்த தோடு அம்மரத்திற்கு நேராக எதிர் கரையின் ஓரத்தில் ஒரு பெரிய விருக்ஷம் இருந்தது.

மரத்தின் கீழ்நின்ற குரங்குகளில் பலம்பொருந்திய ஒரு பெரிய குரங்கு அம்மரத்தின் மேலேறியது அது அம் மரத்தில் ஆற்றின் அகலம் எவ்வள விருக்குமோ அதை விட உயரத்தில் ஆற்றின் பக்கமாகச் சென்றிருந்த ஒரு பெரிய பலத்த கிளையின் முனைக்குச் சென்று தன் வாலை யதில் சுற்றிக்கொண்டு பின்கால் களால் கிளையைக் கெட்டி பாகப் பற்றிக்கொண்டு முன் கால்களையும் தலையையும் கீழே தொங்கவிட்டுச் கீச் கீச் என்று கத்தியது. உடனே மரத் தடியிலிருந்த குரங்குகளனைத்தும் ஒன்றின்பின் ஒன் ருகத் துரிதமாய் மரத்தின் மேல் ஏரின. ஒரு குரங்கு சென்று கிளையில் தொங்கும் குரங்கின் இடுப்பில் தன் வாலைச் சுற்றித்தன் பின்கால்களால் அதன் இடுப்பைப் பற்றிக்கொண்டு தன் முன்கால்களையும் சிரசையும் கீழே தொங்கவிட்டது இவ்வாறே இரண்டு மூன்று நிமிடங்களில் ஒவ்வொன்ருய்ப் பற்றிக்கொண்டு கடைசியில் நீண்டகயிறு போல் தரை மட்டும் தொங்கின. கடைசியில் இருந்த குரங்கு தரையைத்தான் முன்னங்கால் களால் தொடக் கூடியவிதமாகத் தொங்கியது.

அதன் பிறகு கீழேயிருந்த குரங்கு முன்னங்கால் களால் பூமியை யுதைத்து ஊஞ்சலாடத் தொடங்கியதும் மற்றக் குரங்குகளும் முன்னங்கால்களை நீட்டி யசையநீள மான இக்கயிறு சற்று நேரத்திற்குள் அதிகவேகமாக முன் னும் பின்னும் அசைந்தாட கயிற்றின் கீழ்முனை ஆற்றின் அக்கரைவரை போய்போய்வந்தது. கடைசியில் கீழ்க்கோ டியிலிருக்கும் குரங்கின் முன்னங்கால்களுக்கு ஆற்றின் அக் கரையிலுள்ள மரத்தின் கிளை எட்டியதும் அதைச் சட்டெ ன்று உறுதியாகப் பிடித்துக்கொண்டது. இப்போது ஆற் றின்மேல் ஒரு உயிருள்ள ஒன்றல்ல பல உயிர்களுள்ள ஒரு நீண்ட வளைவான பாலம் சங்கிலிபோல் தொங்கியது.

உடனே கரையில் கீழேயிருந்த குரங்குகளனைத்தும் துரிதமாக மரத்தின் மேலேறி இப்பாலத்தின் வழியே ஆற்றைக் கடந்து எதிர்க்கரையிலுள்ள மரத்தின் வழியாகப் பூமியிலிறங்கின. கடைசி குரங்கும் ஆற்றைக் கடந்து எதிர்க்கறைபோய்ச் சேர்ந்ததும், இம்மனிதர் இருக்கும் கரையிலுள்ள மரத்தின் கிளையைப்பற்றி யிருக்கும் குரங்கு ஒருவித சத்த மிட்டதும் யாவும் கால்களை யசைக்காமல் பேசாமலிருந்தன. மறு நிமிடம் இக்கரையில் மரக்கிளையைப் பற்றியிருக்கும் குரங்கு கிளையில் சுற்றி யிருந்த தன் வாலை எடுத்துக்கொண்டு பிறகு கிளையையே விட்டு விட்டது.

இப்போது அக்குரங்குக்கயிறு எதிர்கரையிலுள்ள மரக்கிளையில் தொங்கியது. அங்குதொங்கியதும் கண்மூடிக் கண்திறப்பதற்குள் வரிசையாய்க் கீழிருந்து ஒவ்வொன்ருய்த்தான் பற்றிருக்குரங்கை விட்டுத் தரையிற் குதித்தும் மரத்தின் கிளையிற்பாய்ந்து பிறகு கீழிறங்கியும், யாவும் அக்கரையில் கூட்டமாகக்கூடிப் பிறகு ஒழுங்காக மலையை நோக்கிச் சென்றன.

அன்பான பிள்ளைகளே! இப்போது உயிருள்ள இந்தப் பாலத்தை பற்றிக் கேட்டீர்களல்லவா மிருகங்களாக விருந்தும் அந்தக் குரங்குகள் ஆழ்ந்து சிந்திப்பதாலும், ஆலோசனைசெய் வதிஞலும், ஒன்ருேடொன்று சேர்ந்து ஒற்றுமையாய் நடப்பதாலும் எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்து முடித்தன பாருங்கள். நீங்களோ மனித ஜன்மத்தில் பிறந்தோர். எல்லா ஜன்மங்களிலும் மேலான ஜன்மம். கடவுள் உங்களுக்கு சிறந்த பகுத்தறிவை யளித்திருக்கிருர். நீங்களும் நிதானமாக ஆழ்ந்து ஆலோசித்து ஒற்றுமையோடு வேலைசெய்தால் அரிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்கலாம் மனிதர்களில் சிலர் அவ்

வற்று ஆழ்ந்து ஆலோசனை செய்வதாலும், சிந்திப்பதாலும் அசாத்திய மென்று பிறருக்குத்தோன்றும் பெரிய காரியங்களைச் செய்து முடித்துப்பிறகு அவர்களே அதைப்பார்த்து" அப்பா! எவ்வளவு பெரிய வேலையைச் செய்துவிட்டோம் என்று தங்களுக்குத் தாங்களே ஆச்சரியப்பட்டுக் கொள்கிறார்கள்.

பிள்ளைகளே! எதையும் ஆழ்ந்து ஆலோசிப்பதை யெப்போதும் பழக்கத்திற் கொண்டுவாருங்கள். பழக்கத்தால் ஆழ்ந்து யோசிப்பதில் நல்ல தேர்ச்சியடைவீர்கள். எப்போதும் எதையும் ஆழ்ந்து ஆலோசிக்கும் பழக்க முடையவர்களாயிருந்தால் இம்மையிலும் மறுமையிலும் உங்கள் காரியங்களி லெல்லாம் ஜெயமடைவீர்கள். ஆண்டவன் உங்களுக்கு அருள் செய்வனாக.

வினைக்குத் தக்க பயன்.

நீங்கள் பிறருக்கு எவ்விதம் செய்கிறீர்களோ அதே விதமான பலனை நீங்களும் அடைவீர்கள். ஒருவருக்கு நன்மைசெய்தால் உங்களுக்கு நன்மையே கிடைக்கும். தீமை செய்தால் தீமையையே அனுபவிப்பீர்கள். நீங்கள் ஒருவரைப்பார்த்து நகைத்து ஏளனம் செய்தால் பிறர் உங்களைப்பார்த்து நகைத்து ஏளனம் செய்வார்கள். பிறருக்கு சமயத்தில் உதவி செய்ய நீங்கள் பின்னடைவீர்களாயின் ஜனங்கள் உங்களுக்கு ஆபத்து நேரும்போது உதவி செய்யப் பின்வாங்குவார்கள். நீங்கள் பிறரை நிந்தித்தால் நீங்களும் பிறரால் நிந்திக்கப்படுவீர்கள் ஒருவரை மோசம் செய்தால் நீங்களும் மோசத்திற்குள்ளாவீர்கள். நீங்கள் அன்னியரிடம் மரியாதையோடு நடந்து கொண்டால் உங்களுக்கும் மரியாதையே கிடைக்கும். நீங்

கள் உலகில் கௌரவத்தோடு வாழவேண்டுமாயின் எல்லோரிடமும் மரியாதியாகவும் அன்போடும் நடந்து கொள்ளவேண்டும். ஆண்டவன் தன்பரிசுத்தமான குர்ஆனில் பின் வருமாறு திருவுளமாகிறான்:—

எவனொருவன் நன்மை செய்கிறானோ அந்த நன்மையின் பயனை அவனே யனுபவிப்பான். எவன் தீமைசெய்கிறானோ அத்தீமையின் பயனையவனே யனுப்பி விப்பான். அதற்கு அத்தாக்ஷியாக ஒரு விஷயம் கூறுகிறோம்:—

ஒரு வீதியில் ஒரு வீட்டின் தெருத்திண்ணையில் ஒரு சிறுவன் உட்கார்ந்து கொண்டிருந்தான் அவன் ஒருகையில் தின்று மீந்த இரொட்டித் துண்டையும் இன்னொருகையில் ஒரு கழியும் வைத்துக் கொண்டிருந்தான் அவன் பாடிக்கொண்டே திண்ணைமேல் உட்கார்ந்திருந்தவன் தூரத்தில் இருந்த ஒருநாயைக் கண்டான். அந்நாய் பேசாமல் உட்கார்ந்திருந்தது. சிறுவன் சு! சு! சு! என்று அதைக்கூப்பிட்டான். இவன் அன்போடு கூப்பிடுவதைப் பார்த்து அந்த நாய் எழுந்து அவனருகில் சென்று செவிகளையும் வாலையும் ஆட்டிக்கொண்டு நின்றது. சிறுவன் இடது கரத்தில் இரொட்டித் துண்டை வைத்துக்கொண்டு அந்நாயிடம் நீட்டினான். நாய் அதை வாங்கிக்கொள்ள ஆவலோடு அவனிடம் மிக்க சமீபத்தில் சென்று இரொட்டியை வாங்கிக்கொள்ளச் சிரசை நீட்டியது.

சிறுவன் உடனே சட்டென்று இரொட்டி பிடித்த கரத்தை யிழுத்துக்கொண்டு கோலால் நாயை பலமாக அடித்தான். அக்குற்ற மற்ற நாய் அலறிக் கூவிக் கொண்டே ஓடிவிட்டது. சிறுவன் தான் செய்த காரியத்திற்காக மிக்க சந்தோஷமடைந்து தோட்களைத் தட்டிக் கொண்டும் கல கல வென்று நகைத்துக் கொண்டிருந்தான்.

அவன் உட்கார்ந்திருக்கும் வீட்டின் எதிர் வாடையிலுள்ள ஒரு வீட்டின் முன்பக்க அறையில் உட்கார்ந்திருந்த வயது முதிர்ந்த பெரிய மனிதர் ஒருவர் சாளரத்தின் வழியாக அச்சிறுவன் நாயை நல்லதனமாகக் கூப்பிட்டு அதற்கு இரொட்டியைக்காட்டிக் கிட்ட வரச்செய்து பிறகு கோலால் அதைக் குரூரமா யடித்தது முதலிய எல்லா விஷயங்களையும் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் அந்த நாய் அவ்வாறு நடத்தப்பட்டதற்காக மிக்க பரிதாபமடைந்ததோடு சிறுவனுடைய துஷ்டதனத்திற்காக அவன் மேல் கோபங்கொண்டார். அவன் அந்த நாய்க்கு எப்படிச் செய்தானோ அப்படியே அவனுக்குச் செய்யவேண்டுமென்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டார்.

அதன் மேல் அவர் தமது கரத்தில் ஒரு பைசாவை வைத்துக் கொண்டு அச்சிறுவனை யழைத்து அதைச்சாளரத்தின் சந்தில் காட்டி "தம்பி இப்பைசா உனக்கு வேண்டுமா?" என்றார். பையன் ஆ! தாங்கள் கொடுத்தால் ஏன் வேண்டாமல் என்றான். பெரியவர் இந்தா என்றதும் அவன்கரத்தைச் சாளரத்திற்குள்நீட்டினான் வயோதிகர் உடனே அவன் கையைப் பற்றிக்கொண்டு அங்கிருந்த ஒரு ரூல் கழியால் கரத்தின்மேல் நன்றாக நான்கைந்து அடிகள் கொடுத்தார்.

சிறுவன் கோவென்றலறித் தேம்பித் தேம்பி யழுது பெரியவரை நோக்கி "அய்யா! நான் உமக்கு என்ன கெடுதி செய்தேன்? உம்மைக்காசு கேட்டேனா? என்னை யேன் அடித்தீர்?" என்றான். வயோதிகர்:—" நாய் உனக்கு என்ன கெடுதி செய்தது. அது உன்னை இரொட்டி கேட்டதா. நீஅதற்கு எப்படிச் செய்தாயோ அவ்வாறே யுனக்குச் செய்யப்பட்டது" என்றார்.

வாலிபர்களே நீங்கள் எப்படி பிறருக்குச் செய்கிறீர்களோ அப்படியே யுங்களுக்குச் செய்யப்படும். ஆகையால் ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் யாவரிடமும் அன்போடு நடந்து கொள்ளுங்கள்.

உள்ளதில் திருப்தியடை.

மனிதர்களில் அனேகர் கிடைத்த மட்டில் திருப்தியடைகிறதில்லை. கொஞ்சம் கிடைத்தால் இன்னும் அதிகம் வேண்டுமென்று ஆவல் கொள்கிறார்கள். கடைசியில் அக்கொஞ்சத்தையும் இழந்து விடுவதே அதன் பலனாக முடிகிறது. சில பிள்ளைகள் அன்றாடம் கொஞ்சம் கொஞ்சமாகப் பாடத்தை கற்பதில்லை. அதிகம் படித்து விடலாமென்று வாசிக்கத்தொடங்குகிறார்கள். அதனால் என்ன நடக்கிறதென்றால் முன்னே படித்தது பின்னே மறந்து கொண்டே போகக் கடைசியில் கொஞ்சம் பாடம் கூடமனதில் பதியாமல் வாசித்ததால் ஒரு பயனுமில்லாமற் போகிறது. அத்தகைய பிள்ளைகள் கடைசியில் பரீட்சையில் தேர்ச்சியடையாமல் தவறிப்போகிறார்கள்.

சில குடியானவர்களும் அதிக ஆசை யோடு நடந்து கொள்வதனால் பெருத்த நஷ்டமடைகிறார்கள். எவ்வாறெனின் தங்களிட'மிருக்கும் கொஞ்சதானியத்தை விதைத்து அதற்குச் சரியாக எருவிட்டு நீர்பாய்ச்சி களை பிடுங்கிச் சரியான விளைவு உண்டாக்கிக் கொள்வதை விட்டு ஏராளமான விதைகளை மிக்க விஸ்தீரணமான பூமியில் விதைத்து விடுகிறார்கள். பிறகு முழுமைக்கும் எரு போதாமல் தவிக்கிறார்கள். அப்போதேனும் எரு எவ்வளவிற்குப் பூரணமாகப்போதுமோ அவ்வளவு மட்டும் போடாமல் முழுமைக்கும் கொஞ்சம் கொஞ்சம் தூற்றி

விடுகிறார்கள். பிறகு முழுமைக்கும் ஜலம் கிடைப்பதில்லை கொஞ்சம் பூமிக்கு மட்டும் தாராளமான ஜலம் பாய்ச்சி அதுவரையிலாவது நல்ல விளைவு உண்டாக்கிக் கொள்ள லாம். முழுமைக்கும் அச்சலத்தைப் பாய்ச்சுகிறார்கள். கடைசியில் முழுமைக்கும் ஜலம் போதாமல் எல்லா பயி ரும் தீய்ந்துபோய் ஒரு பிடி தானியங்கூட கைக்கு வராமற் போகிறது. அந்தோ இப்படிச் செய்யாமல் கொஞ்சம் விதையைக் கொஞ்சம் பூமியில் விதைத்து அதற்குப்போது மான எரு விட்டு காலக்கிரமப்படிபோதுமான நீர்பாய்ச்சி னால் அதுவரையில் நல்ல தானியம் விளைந்திருக்குமல்லவா?

வர்த்தகர்களிலும் சிலர் இவ்வாறே பேராசையால் பெருநஷ்டமடைவார்கள். இப்படிப்பட்டவர்கள் கொஞ்சம் சரக்கை வாங்கி உடனே சொல்பலாபத்திற்கு விற்கப்பிரி யப் படுவதில் எஜமான் சரக்கை வாங்கிக் கட்டிவைத்து விட்டு அதன் விலை எப்போது ஒன்றிரண்டாக ஏறுமோ அப்போது விற்று நூறுக்கு நூறு இலாபம் சம்பாதிக்கலா மென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடைசி யில் விலை இவர்கள் வாங்கிய போதிருந்ததைவிட இன்னும் குறைந்தே போகிறது வாங்கிவைத்திருந்த பண்டங்களும் பல வழியில் சேதமடைந்து விடுகிறது. கடைசியில் அதிக இலாபம் சம்பாதிப்பதற்குப் பதிலாக முதலி லேயே ஒரு பாகத்தை யிழக்க நேர்கிறது.

இப்படிச் செய்யாமல் கொஞ்சம் பொருளை வாங்கி யுடனே சொல்ப இலாபத்திற்கு விற்று விட்டால் மறுபடி யின்னும் கொஞ்சம்வாங்கியப்படி யுடனேசொல்ப இலாப த்திற்கு விற்றுவிடலாம். இவ்வாறு செய்வதால் வர்த்தக மும் அதிகமாக நடப்பதோடு மொத்தத்தில் இலாபமும் அதிகமாகக் கிடைக்கும். திருஷ்டாந்தமாக ஒருவன் ஒரு ரூபாய்க்கு ஒன்றைவாங்கி எட்டுநாட்கள் வைத்திருந்து

பிறகு அந்தை இரட்டத்தனை விலைக்கே விற்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவன் ஒரு ரூபாய் இலாப மடைகிறான். அப்படிச் செய்யாமல் அந்த ஒரு ரூபாய் வாங்கியதையுடனே ஒரு ரூபாய் ஒரு அணாவிற்கு விற்று மறுபடி அந்த ஒரு ரூபாயிக்குத் திரும்பி அதேப் பொருளைவாங்கி முன்போலவே ஒரு அணா இலாபத்திற்கு விற்பானாயின், அந்த எட்டு நாட்களில் சுமார் இருபது முறையப்படி வாங்கி விற்றாலும் இருபதணா ஒருரூபா நான்கணா இலாபம் பெறலாகும்.

ஆகையால் பிள்ளைகளே எப்போதும் அதிக ஆசைக்கு இடங்கொடாமல் அகப்பட்டதைக்கொண்டு காரியங்களைக் கிரமாகவும் ஒழுங்காகவும் நடத்தினால் நன்மையும் க்ஷேமமும் மடையலாகும் என்பதை மறவாதீர்கள்.

புத்திமானே பலவான்.

பிள்ளைகளே எவன் சூக்ஷமமான புத்தியும் ஆழ்ந்த யோசனையும் தைரியமுமுடையவனாயிருக்கிறானோ அவனே பலவான். அவனே எப்போதும் ஜெயமடைவான். பெரிய உருவமும் தேகபலமும் இருப்பதினால் மட்டும் ஒரு பயனுமில்லை. இதை விளக்கக் பட்ட ஒரு சிறுகதை கூறுகிறோம் கேளுங்கள்:—

ஓர் ஆற்றோரத்தில் ஒரு பிரமாண்டமான ஆலா விருக்ஷமொன்றிருந்தது. அந்தமரத்தில் ஒரு ஆண்காகமும் பெண்காகமும் நெடு நாட்களாக கூண்டு கட்டி வாழ்ந்து கொண்டிருந்த அதேமரத்தின் ஒரு பெரியகிளையிலிருந்த ஒரு பொந்தில் ஒரு பெரிய கறுநாகம் வசித்துக்கொண்டிருந்தது. காகம் முட்டையிடும் போதெல்லாம் அப்பாம்பு

அதன் முட்டைகளை யெல்லாம் புசித்துக் கொண்டே யிருந்தது.

ஒரு நாள் வெளியில் தீனிபொருக்கச் சென்றிருந்த ஆண்காகம் திரும்பி வந்ததும் தன் பெண்ணின் முகம் வாட்டமடைந்திருப்பதைக் கண்டு "என் அன்பார்ந்த மனைவியே! இன்று உன்முகம் வாட்டமடைந்திருப்பானேன்?" என்று வினவியது.

அதற்குப் பெண்காகம் "என்பர்த்தாவே! இம்மரத்திலிருக்கும் கறு நாகம் என்முட்டைகளையெல்லாம் தின்று விடுகிறது, இங்கிருக்கு மட்டும் நாம் குழந்தைகளைப் பெற்று வளர்த்துக் கொஞ்சிக்குலாவும் பாக்கியமும் நமக்கு வாய்க்கப்போகிறதில்லை, கள்ளசினேகனும், கெட்ட எண்ணமுடைய வேலைக்காரனும் இருக்கும் மனையில் வசிப்பது எப்போதும் ஆபத்துக் கிடமாகும், ஆகையால் நாம் உடனே இந்த விடத்தை விட்டுப் போய் விடுவதே நலம்" என்றது,

ஆண்காகம்:—"என் அருமையான காதலியே, நீ கூறுவது உண்மையே, இக்கறி நாகம் நமக்கு மிக்க தீங்கிழைத்திருக்கிறது, ஆயினும் நாம் இதைவிட்டு ஓடவேண்டிய அவசியமில்லை. நான் இந்தநாகத்தை யடியோடழித்து விடுகிறேன்" என்றது.

பெண்காகம் இதைக்கேட்டு சற்றுகோபமும் ஆச்சரியமும் கொண்டு "நல்லகாரியம்! பலம் பொருந்திய அந்த நாகத்தை யாவது நீர் அழித்துவிடுகிறதாவது இது எங்கேனும் நடக்கிற சங்கதியோ? ஆகாதகாரியத்தை நம்பிக்கொண்டு மோசம்போவது மதியீன மல்லவோ?" என்றது. ஆண்காகம் என் அன்பான பத்தினியே! நான் அப்படி மூடத்தனமாய் என்னாலாகாத காரியத்

ஷ்தைச் சாதிப்பதாய்க் கூறமாட்டேன். நாகன் தேக பலத்திலும் விஷமுடைய குணத்தாலும் என்னிலும் பலவா னென்பது உண்மையே. ஆனல் புத்திமானே பலவான் புத்தியின் முன் தேகபலம் ஜெயமடையாது நானெ ன்ன? உன்னைக்கொண்டே அக்கறிநாகனை யழித்து விடு கிறேன். நீமட்டும் நான் கூறும் அற்பகாரியத்தைச்செய்'' என்றது, பெண்காகம் "ஆகா! என் குஞ்சுகளைப் பிறக்கு முன்னே யழிக்கும் அக்கொடிய நாகத்தை யழிக்க என்னு லாகக்கூடிய உதவி எதுவேனும் செய்யச் சித்தமாயிருக் கிறேன்'' என்றது.

ஆண்காகம்:—"ஆச்சு இன்னும் சற்று நேரத்தில் வழ க்கம்போல் இராஜகுமாரன் ஆற்றில் நீராடவருவான். எப் போதும்போல அச்சமயம் தன் நகைமுதலிய வற்றைக் களைந்து கரையிலிருக்கும் கல்லின்மேல் வைத்து விட்டு நீரில் இறங்குவான். அப்போது நீசென்று அவன்முத்து மாலையை மூக்கால் தூக்கிக்கொண்டு அவன் கண்முன்பாகப் பறந்துவந்து கறிநாகம் வசிக்கும் பொந்தில் போட்டு விட்டு எட்டவந்து உட்கார்ந்து நடக்கும் வேடிக்கையைப் பார்'' என்றது.

பெண்காகம் அவ்வாறு செய்யச்சம்மதித்தபின் இரண் டும் இராஜகுமாரன் வரவிற்கு எதிர்பார்த்திருந்தன. சற்று நேரத்திற்குள் இராஜகுமாரன் தன் இரண்டு ஆட்களோடு நீராடவந்து ஆண்காகம் கூறியபடி நகைகளையும் உடை களையும் கழற்றிக்கல்லின்மேல் வைத்துவிட்டு ஆட்களோடு நீரில் இறங்கினன்.

அச்சமயம் பெண்காகம் பறந்துபோய் நகைகளின் அருகில் குந்தியது இராஜ குமாரனும் ஆட்களும் கண்டு அதை யோட்டக்கூவினர்கள். ஆனல் பெண்காகமோ அவர்

கள் கண்முன்பாகவே முத்துமாலையைத் தூக்கிக்கொண்டு போய் ஒரு மரப்பொந்தில் போட்டது. அதைக்கண்ட ஆட்கள் உடனே ஒரு கோலெடுத்துக்கொண்டு மரத்தின் மேலேறி கோலைப்பொந்தில் விட்டுப்பார்த்தபோது நாகம் சீறி வந்தது. அவர்கள் நாகத்தைக் கொம்பாலடித்துக் கொன்று விட்டு முத்து மாலையை யெடுத்துக்கொண்டு சென்றார்கள்.

பிள்ளைகளே! பாருங்கள்! காகம் எவ்வளவு சிறிய பிராணி. அப்படியிருந்தும் விஷமுடைய கொடிய ஜந்து வாகிய அக்கறியநாகத்தைத் தந்திரத்தாலல்லவா கொன்று விட்டது. எப்போதும் புத்திபலமே பெரிது. புத்திமானே பலவான் என்பதை மறவாதீர்கள்.

குள்ளநரியும் மத்தளமும்

ஒருநாள்காலை ஒரு குள்ள நரியானது ஆகாரம் தேடு வதற்தாகத் தன் புதரிலிருந்து வெளியில் புறப்பட்டது. அது சற்று தூரம் சென்றபோது தரையில் ஒரு சிறு பட்சி உட்கார்ந்திருப்பதைக் கண்டு "ஆ? இப்போது இப்பட்சியே நமக்கு ஆகாரமாகப் போதுமானது" என்று கருதிக்கொண்டு அப்பட்சியின்மேல் பாய்ந்து அதைப் பிடிக்கப்பதுங்கிற்று. அச்சமயம் அருகிலிருந்த ஒரு மரத் தின் ஒரு கிளையில் ஒரு மத்தளங் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது. நரி இதற்கு முன்மத்தளத்தை யொரு போதும் கண்டதில்லை. ஆகையால் அதைப்பார்த்ததும் "ஓகோ! இது ஏதோ ஒருபெரிய ஜந்து இச்சிறு பட்சி நம க்குக்கால் வயிற்றுக்குக் கூடபோதாது. இப்பெரிய ஜந்து வைப்பிடித்தால் இன்றைக்கும் நாளைக்கும் கூடபோதுமான ஆகாரமாகும். புதுவித உணவாகவும் ருசியாகவுமிருக்கும்"

என்று தனக்குள் சந்தோஷத்தோடு சிந்தித்துக்கொண்டு, பதுங்கிக்கொண்டே மிக்க ஜாக்கிரதையோடு அம்மரத்தின் மேலேறி, மத்தளத்தினருகிற் சென்றதும் தட்டென்று அதன் மேல் பாய்ந்தது மத்தளம் அவ்வேகத்தால் கயிறு அறுந்து பூமியில் தடாலென்று விழுந்தது.

நரியும் பொத்தென்று அதன் மேல்குதித்து அதன் தோலைக்கிழித்து உள்ளே பார்க்க அதனுள் ஒன்றுமே யில்லை. சட்டென்று திரும்பி பட்சி யிருந்த விடத்தை நோக்கியது பட்சியோ மத்தளம் விழுந்த சத்தத்தைக் கேட்டதும் பறந்துபோய் விட்டது. அந்தோ நரிகைக்கு எட்ட விருந்த ஆகாரத்தை யிழந்து பின்வருமாறுவிசனத்தோடு சிந்திக்கலாயிற்று:—

"அந்தோ! நான் என்ன முட்டாள் வேலைசெய்து விட்டேன். கையிற்கிடைத்ததில் திருப்தியடையாமல் பேராசைப்பேயிக்கு இடங்கொடுத்த தாலல்லவோ கையில் சிக்கவிருந்த பட்சிகளையும் இழந்து ஏமாற்றமடைந்து விழிக்கலானேன். இனி பசியால் வேதனைப்பட வேண்டியதாக முடிந்ததே" என்று தன் மூடத்தனத்திற்காகத் தன்னையே நொந்துகொண்டது.

பிள்ளைகளே! நரி மத்தளத்தின்மேல் ஆசைவையாதிருந்தால் அப்பட்சி அதற்குக்கிடைத்தே யிருக்கும். பேராசைப்பட்டதால் அதை யிழந்து பசியால் வருந்த நேர்ந்தது. எப்போதும் நமக்குக் கிடைத்ததைக் கொண்டு நாம் திருப்தி யடையவேண்டுமே யன்றி, அதற்குமேலும் பேராசைப் பட்டால் உள்ளதையும் இழக்க நேரும் என்பதை மனதில் வையுங்கள். "காட்டிலிருக்கும் பலாக்கனியைவிடக் கையிலிருக்கும் களாக்களியே மேலானதாகும்" என்ற மொழியை மறவாதீர்கள்.

தொண்டானும் நாரையும்.

ஒருநாள் ஒரு தொண்டான் ஒரு ஆட்டுமந்தையிற் புகுந்து ஒரு ஆட்டைக் களவாடித் தின்றபோது அதன் தொன்டையில் ஒரு எலும்பு சிக்கிக்கொண்டது. அச்சமயம் ஒருநாரை தனக்கு எதிர்ப்பட்டது தொண்டான்:— அதைநோக்கி,

"நண்பனே! நீ எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். அதாவது என்தொண்டையில் ஒரு எலும்பு சிக்கிக்கொண்டு மிக்க நோயையளித்துக் கொண்டிருக்கிறது. உனக்கு நீண்டகழுத்திருப்பதால் நீ சுலபமாக அதை யெடுத்து விடலாம். நீ இவ்வுதவிமட்டும் செய்தால் நான் உனக்கு அருமையான ஒரு பரிசளிப்பேன்" என்றது.

நாரை பரிசுக்கு ஆசைப்பட்டு தன் சிரசைத் தொண்டானுடைய வாய்க்குள்விட்டு அதன் தொண்டையிற் சிக்கிக்கொண்டிருந்த எலும்பைப்பிடுங்கி வெளியில் எறிந்து விட்டு, "நண்பனே! எதோ நீ எனக்களிப்பதாக வாக்களித்த பரிசைக்கொடு" என்றது.

தொண்டான்:—"இதோ அளித்திருக்கிறேனே. உன் சிரசு என் வாய்க்குள் இருந்தபோது நான் அதைக்கடித்து விடாமல் விட்டு விட்டதால் உனக்கு எவ்வளவோமேலான பரிசை யளித்திருக்கிறே னல்லவா என்றது.

பிள்ளைகளே! துஷ்டருக்கு உதவிசெய்தால் நமது பிராணன் தப்பியதையே நாம் பெரும் பரிசாகக் கருத வேண்டும். சிலர் நாம் செய்யும் உதவிக்குப்பதில் தீமையே செய்வார்கள். தீயில் சிக்கியதேளை வெளியிலெடுத்து விட்டால் அப்படி யுதவிசெய்தவனையே யது கொட்டிவிடும்.

முற்காலத்தில் ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் என்றொரு நபியிருந்தார்கள். ஒருநாள் ஒரு மனிதன் அவர்

ரிடம் சென்று பணிந்து, "பெரியோரே! மிருகங்களும் பட்சிகளும் பேசும் பாஷையை யறிந்துகொள்ளும் சக்தி யெனக்குண்டாகும் வண்ணம் அருள் புரியவேண்டும்'' என்று பிரார்த்தனைசெய்தான். அதற்கு அப்பெரியவர் "மைந்தனே! ஆண்டவன் ஏதோ ஒரு நன்மையான நோக்கங்கொண்டே மிருகபக்ஷிகளின் சம்பாஷணை மனிதர்க்குத் தெரியாமலிருக்கும்படிச் செய்திருக்கிறான். ஆகையால் நீ யதை யறியவேண்டிய ஆவல் கொள்ளாமலிருப்பதே நன்மையாகும்'' என்றார்.

அம்மனிதன் அதனால் திருப்தி யடையாமல் "எவ்விதத்திலேனும் நான் அவற்றின் சம்பாஷணைகளை யுணர்ந்து களிப்படையும்படி தாங்கள் கிருபைசெய்ய வேண்டும்'' என்று அப்பெரியோரை இடைவிடாது மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அதன்மேல் அவர் ஆண்டவனைப் பிரார்த்தித்து அம்மனிதனுக்கு மிருகபட்சிகளின் பாஷையை யுணரும் சக்தியுண்டாகும்படிச் செய்தார்.

அம்மனிதன் அச்சக்தியைப் பெற்றதே முதலாவது மிருகங்கள் பட்சிகள் இவற்றின் சண்டைச் சச்சரவுகளைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே காலத்தைக் கழிக்கத் தொடங்கினான். அவன் வீட்டில் கோழிகள் அதிகமாக விருந்தன. ஒருநாயும் இருந்தது. வீட்டிலுள்ளவர்கள் போஜனம் செய்தபின்வேலைக்காரி பாத்திரங்களிலுள்ள மிச்சத்தைவெளியில் கொண்டுபோய் போடுவாள். அதிலுள்ள சாதம் முதலியவற்றைக்கோழிகளும் குஞ்சுகளும் அருந்தும். எலும்பு முதலியவற்றை நாய்தின்னும்.

ஒருநாள் கோழிகள் நாயைநோக்கி "ஓ! நண்பனே வெளியில் கொண்டு வந்து எறியப்பட்ட ஆகாரம் எங்களுக்குப் போதாமல் நாங்கள் பட்டினியாயிருப்பதை நீபார்

த்துக்கொண்டிருக்கிறாயல்லவா! இன்று உன்பாக ஆகாரத்தையும் எங்களுக்குக் கொடுத்துவிடு'' என்றன. நாய் "என் ஆகாரத்தை யுங்களுக்குக் கொடுத்து விட்டு நான் என்ன தின்பது?'' என்றது.

கோழி:—இன்றைக்கு ஒருநாளைக்குமட்டுமே நீபட்டினியாக இருக்கவேண்டும். நாளைக்கு உனக்கு ஏராளமான ஆகாரம் கிடைக்கும். உன்னால் அவ்வளவும் தின்னமுடியாது. இன்று மாலை நமது எஜமானுடைய சிகப்பு எருது திடீலென்று இறந்து விடப்போகிறது. நாளை யுனக்கு அதன் மாமிசம் எலும்புகள் யாவும் உனக்கேஏராளமாகக் கிடைக்கும் என்றது.

அதன்மேல் நாய் கோழி கோரியபடியே தன் ஆகாரத்தை அதற்கும் அதன் குஞ்சுகளுக்குமே விட்டு விட்டது. இவைகளின் சம்பாஷணையை வீட்டெஜமான் கேட்டுக்கொண்டே யிருந்தான். தன் எருது இறந்துபோகும் என்பதைக் கேட்டதால் உடனே அச்சிகப்பு எருதை யவிழ்த்துக்கொண்டு கடைக்குச் சென்று வந்தமட்டும் ஒன்றுக்குப் பாதியாய் விற்றுவிட்டான்.

மறுநாள் காலை வழக்கம்போல் வேலைக்காரி மிஞ்சிய ஆகாரத்தைக்கொண்டு வந்து வெளியில் எறிந்த போது, நாய் மிக்க கோபத்தோடு உருமிக்கொண்டு கோழியை நோக்கி "நீ என்னையேமாற்றி மோசம் செய்துவிட்டாய்'' என்றது.

கோழி:—நண்பனே நான் ஒருபோதும் பொய் கூறவில்லை. எஜமான் மிக்க சூக்ஷ்மபுத்தி யுடையவனாகவிருக்கிறான். தன்மாடு இறந்துபோகும் சங்கதியை யெப்படியோ அவன் அறிந்துகொண்டு அந்தமாட்டைக்கடை வீதியிற் கொண்டுபோய் விற்றுவிட்டான். அந்தமாடு

அதைவாங்கியவன் வீட்டிற்போய் மடிந்தது. நாளைக்கு எங்கள் முறைவருகிறது. எங்களுக்கு ஏராளமான ஆகாரம் கிடைக்கப்போகிறது. இரவிற்கு எஜமானுடைய அடிமை இறந்து போகப்போகிறான். வழக்கம் போல் நாளைக்கு ஏழை யெளியவர்களுக்குத் தானம்செய்ய ஏராளமான தானியம் கொண்டுவரப்படும். அவற்றில் சிந்திப் போவதே எங்களுக்குப் போதுமானது. எங்களால் அவ்வளவு தின்னமுடியாது. ஆகையால் இன்றைக்கு எங்கள் ஆகாரத்தையும் நீயே சந்தோஷமாகப் புசித்துவிடு -குஞ்சுகளுக்கு மட்டும் சிறிதளவு வை என்றது.

நாய் அவ்வாறேசெய்தது. அன்றும் எஜமான் இவைகள்பேசிக்கொண்டிருந்ததைக்கேட்டான். அடிமைபிறந்துவிட்டால் தனக்கு எருது இரப்பதிலும் அதிக நஷ்டம் நேரும் ஆகையால் உடனே தன் அடிமையை, அடிமைகள் விற்கப்படும் கடைவீதிக்குக்கொண்டு போய் விற்று விட்டான்.

மறுநாள் வேலைக்காரி ஆகாரத்தின் மிச்சத்தைக்கொண்டு வந்து வெளியில் எறிந்ததும் கோழிநாயைநோக்கி எஜமானுடைய புத்திசாலித்தனத்தால் ஒருநாள்நீபட்டினியாயிருந்தாய். இன்று எங்கள் முறை வந்திருக்கிறது. அடிமையிறந்துபோகும் சங்கதியையும் அவன் எப்படியோ தெரிந்துகொண்டு அவனையும் உடனே விற்றுவிட்டான். அந்த அடிமையும் தன்னை வாங்கிக்கொண்டவன் வீட்டில் போய் இறந்துபோனான். ஆயினும் நாளைக்கு நம்மிருவர்க்கும் தவறாத பெரிய விருந்திருக்கிறது. தானியங்களும் ஏராளமாக யாசகர்களுக்களிக்கக்கொண்டு வரப்படும். ஆகார வகைகளும் அதிகமாக சமைக்கப்படும். ஏனெனில் நாளைக்கு நமது எஜமானாகிய இம்மனிதனே இறந்து போகப்போகிறான்'' என்றது.

கடந்த இரண்டு தினங்களாக இவற்றின் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தது போலவே எஜமான் அன்றும் கேட்டுக்கொண்டிருந்தான். மாடும் அடிமையும் இறந்து போவார்களென்பதைக்கேட்டதும் இரண்டையும் உடனே விற்றுவிட்டு அவற்ருல் அடையவேண்டியிருந்த நஷ்டத்தினின்றும் தப்பித்துக்கொண்டான்.

இப்போது தானே இறந்துபோவதாய்க் கேட்டதே பேரிடிவிழுந்தவன் போலாயினன். அவன் மனோவேதனை சொல்லமுடியாது. என்ன செய்வான் ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் ஓடிப்போய் மிக்க நடுக்கத்தோடு நடந்த சங்கதிகளைக்கூறினன். அதற்கு அப்பெரியவர்,

"ஓ மனிதனே! நான் அப்போதே மிருகப்பட்சியவற்றின் பாஷையை அறிந்துகொள்ள விரும்புவதால் உனக்கு ஆபத்துவருமென்று கூறினேனல்லவா? எருது இறந்துபோய் அதன் நஷ்டத்தை நீ பெற்றுக்கொண்டிருந்தால் உன் அடிமை யிறந்திருக்கமாட்டான். நீ அந்த எருதால் நேரிடக்கூடிய நஷ்டத்தினின்றும் தப்பித்துக்கொண்டாய். அதனல் அதிலும் அதிகமான நஷ்டத்தையளிக்க உன் அடிமை மரணமடைய விருந்தான். அதற்காகிலும் நீ பொறுமையாக விருந்து அந்த நஷ்டத்தையேனும் ஏற்றுக்கொள்ளாமல் அடிமையை யுடனே விற்று விட்டு அதினின்றும் தப்பித்துக்கொண்டாய். ஆகையால் கடைசியில் உனக்கே மரணம் வரலாயிற்று. இதினின்றும் நீ தப்பமுடியாது" என்று கூறிவிட்டார்.

இதனல் ஆண்டவன் நமக்கு இயற்கையில் அளிக்காத சுத்துவத்தை நாம் பெறவேண்டுமென்று ஆசைப்படுவது பெருந்தவறென்றும் அப்படி ஆசைப்பட்டால் நமக்கே நாம் ஆபத்தை யுண்டாக்கிக் கொள்வோமென்றும் உணர்

ந்து, ஆண்டவனளித்த சக்திகளோடு திருப்தியடைந்திரு கவேண்டும் என்று அறிகிறோம்.

பொறாமை.

பொறாமையென்பது ஓர் மிகவும் கெட்டகுணம். இன்னொருவர் எந்த விஷயத்திலேனும் தன்னிலும் மேலான நிலைமையில் இருப்பதைக்கண்டு மனம் பொறாமல் வேதனைப்படுவதற்கே பொறாமை யென்று பெயர். பொறாமையுடையவனுடைய மனம் எப்போதும் எறிந்துகொண்டே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும். அப்பொறாமையே யவனைத் தண்டிக்கும். நம்மோடுகூடப் பாடசாலையில் வாசித்துக் கொண்டிருக்கும் அண்டைவீட்டுச் சிறுவன் பரீட்சையில் தேறிவிட்டான். நாம் தவறிவிட்டோம் என்று வைத்துக்கொள்வோம். அப்போது, "நாமும் அவனைப்போல் நன்றாகவாசித்துப் பரீட்சையில் அவனிலும் மேன்மையாகத் தேறவேண்டும்" என்று கருதுவது பொறாமையல்ல. ஆனால் "அவன்மட்டும் தேறிவிட்டானே. அந்தோ! அவனும் நம்போல் ஏன் தவறிவிடக்கூடாது" என்று மனம்வேக இடங்கொடுப்பதே கொடிய பொறாமையாகும்.

இப்பொறாமை அனேககொடிய பாவங்களைச் செய்யத்தூண்டும். பொறாமையைக்கொண்டு ஒருவருக்குத்தீங்கிழைக்கக் கருதுகிறவன் தானே அழிந்துபோவான் என்பது உண்மை. அதற்குத் திருட்டாந்தமாக நடந்த ஒரு சம்பவத்தை யீண்டு கூறுகிறோம்:—

வடக்கில் அரசாண்டு கொண்டிருந்த ஒரு அரசருடையசபையில் வண்ணக்கவி பீர்முஹம்மது என்ற ஒருவித்

னிருந்தார். அவர் அந்த இராஜசபையிலிருந்த வித்து யை களுக்கெல்லாம் தலைவராய் நவாப்பால் மிக்க செல் க்கு பெற்றிருந்தார். இவ்வாறிருக்க ஒருநாள் ஷேக் முஹம்மத் என்ற ஒருபெரிய வித்துவான் இராஜசபைக்கு வந்து தமது பண்டிதத்திரமையைக் காட்டினார். அவர் வண்ணக்கவி பீர் முஹம்மதுவைவிட மிகச்சிறந்த பண்டித ராகவிருந்தபடியால் நவாப் அன்றுமுதல் அவரையேதமது சபையிலுள்ள பண்டிதர்களுக்கெல்லாம் தலைவராகச் செய் தார்.

பீர்முஹம்மது கல்விகற்றவரேனும் பொருமை யென் றபேய் அவரைவிட்டகலவில்லை. அவர் புதுவித்துவான் மேல் மிக்க பொருமை கொண்டார். "இவன் இருக்கு மட்டும் நமக்கு இராஜசபையில் கௌரவம் கிடைக்காது. முன் போல் வருமானமும் கிடைக்காது. இவனை யெப் படியாவது ஒழித்துவிட வேண்டும்" என்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டார். பிறகு எவ்வாறு அவனை யொழிக்கலா மென்று ஆலோசனை செய்யத் தொடங் கினார். கடைசியில் ஒருயோசனை யுதித்தது. அப்படிச் செய்தால் இரகசியமாகக் காரியத்தை முடித்துவிடலா மென்றும் தன்மேல் ஒருவர்க்கும் சந்தேகமும் தோன்று தென்றும் புலப்பட்டது.

அவ்வூருக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் முனியன் என்ற ஒருவன் இருந்தான். அவன் பெரிய கள்ளன். கொலைபாதகத்திற் கஞ்சாதவன். பீர்முஹம்மது என்ற வித்துவான். ஒருநாள் இரவில் அவன் வீட்டிற்குச் சென்று புதுவித்துவானைக் கொன்றுவிட்டால் அவனுக்கு ஐந்நூறு ரூபாய் அளிப்பதாக ஏற்பாடுசெய்து வித்வான் அவனை நோக்கி "முனியா! நீ மிக்கதந்திர சாமார்த்திய

மூடையவனென்று இந்த வேலையை யுனக்குக்கூறினேன் புதுவித்துவானை நீ பகலில்வந்து அடையாளம் பார்த்துக் கொள். அவன் சாதாரணமாக எப்போதும் முக்காடிட்டுக்கொண்டே நடப்பவன். மேலும் கையில் உயரமான ஒருதடி வைத்துக்கொண்டிருப்பான். அத்தடியின் தலையில் வெள்ளியால் தாமரை மலர்போல் ஒருபூண் கட்டியிருக்கும். அந்தமலர் இரவில்கூட பிரகாசித்துக் கொண்டிருக்கும். இந்த அடையாளம் உனக்குப்போதும். இன்று மூன்ருவது நாள் அதற்கு நல்லசமயம் வாய்க்கிறது. கமால்புரத்தில் இரவில் ஒரு திருவிழா நடக்கிறது. புதுவித்துவான் அங்கு செல்லப்போகிருன். திரும்பிவரும் போது நடுஇரவுக்கு மேலாகும். அதுவே நல்லசமயம். அக்கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையிலுள்ள வேலந் தோப்பே அதற்குச் சரியானவிடம் அங்கு பாதைக்கு சற்றுதூரத்தில் ஒரு பெரிய பாழுங்கிணறுகூட இருக்கிறது. சவத்தை யதில்போட்டுவிட்டால் சங்கதியடியோடு மறைந்துவிடுமே'' என்ருர்.

முனியன் அப்படியே ஒப்புக்கொண்டு முன்பணமாக முந்நூறு ரூபாய் பெற்றுக்கொண்டான். பழையவித்துவான் இனி அச்சனியன் ஒழிந்தமாதிரியே யென்று சந்தோஷத்தோடு வீட்டிற்குச் சென்ருர்.

முனியன் மறுநாள் காலை அரண்மனைவீதியில் காத்திருந்து புதுவித்துவான் அரண்மனைக்குள் செல்லும்போது கண்டான் அவர்முகத்தை நன்ருய்ப்பார்க்கக் கூடவில்லை. ஆயினும் அவர் உயரத்தை மனதில் குறித்துக்கொண்டதோடு முக்காடும் கைக்கோலுமே போதுமான அடையாளங்களென்று மனதில் வைத்துக்கொண்டான். உடனே தன் கூட்டாளிகளாகிய கறியன், காட்டான் என்ற இருவரிடமும் சங்கதியைக்கூறி அவர்களை ஆயத்தமாக விருக்

கும்படி ஏற்பாடுசெய்து விட்டான். எங்கு களவாடச் சென்றாலும் இவர்கள் மூவரும் ஒன்றாகவே செல்வது வழக்கம்.

நகரத்திற்கும் திருவிழாநடக்கும் கிராமத்திற்கும் எட்டுமைல் தூரம். திருவிழாநடக்கும் இரவு கள்ளர் எட்டு மணிக்குப் புறப்பட்டுபோய் வேலந்தோப்பில் பாதை யோரம் செடிகள் அடர்ந்துள்ள ஒருவிடத்தில் மறைந் திருந்தார்கள். மூவரிடமும் பலமானதடிகளும் ஒரு கத் தியுமிருந்தது.

புதுவித்வான் தனக்கு அறிமுகமான ஒருவரோடு கூட ஒருவண்டியிலேறித் திருவிழாவிற்குச் சென்றார். வழி யிலேயே அவருக்குச் ஜுரம்கண்டது. வண்டியில் படுத் துக்கொண்டார். தடியைப் பக்கத்தில் வைத்துக்கொண் டார். அது எப்படியோ வைக்கோலில் நழுவி நழுவிப் பாதையில் விழுந்துவிட்டது. கடகடவென்று வண்டி செல்லும் சத்தத்தால் தடிவிழுந்தது கேட்கவில்லை. கிரா மத்திற்குச் செல்வதற்குள் வித்துவானுக்கு ஜுரம் அதிக மாய்விடவே அவரும் அவர்கூடச் சென்றவரும் திருவிழா வைக்கூடப்பாராமல் ஒருவர் வீட்டுத்திண்ணையில் சயனித் துக்கொண்டார்கள். இரவு குளிர்காற்று வீசிக்கொண் டிருந்ததால் மறுநாள் விடிந்தபிறகு தன் நகருக்குத்திரும் புவதென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

பழையவித்துவான் தான் திருவிழாவிற்குச் செல்ல லாகாதென்றே கருதியிருந்தார். ஆயினும் இரவு என்பது முனியனும் அவன் தோழர்களும் போய் வேலையை முடிக்கி றார்களோ என்னமோ எதற்கும் நாம்இரகசியமாகப் போய் பார்ப்போமென்று புறப்பட்டார். இவர் கிராமத்தில் போய்சேரும்போது மணிகிட்டமட்ட பனிரண்டாயிற்று

திருவிழாவும் முடிந்து ஜனங்கள் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். தன்னையாரேனும் அங்குகண்டால் பிறகு புது வித்துவான் கொல்லப்பட்ட சங்கதி ஒருசமயம் வெளிப்பட்டுவிடும். தன்மேல் சந்தேகமுண்டாகுமென்று எண்ணி ஒருமறைவான விடத்தில் பதுங்கிக்கொண்டிருந்தார்.

ஜனங்கள் துரிதமாகத் திரும்பினார்கள். சுமார் ஒரு மணி நேரங்கழித்து பீர் முஹம்மது "இதுகாறும் நமது போட்டிக்காரன் ஒழிந்துபோய்விட்டிருப்பான்" என்று எண்ணிக்கொண்டே நகருக்குத் திரும்பினார். நடந்துசெல்லும் பிரயாணிகள் ஒவ்வொருவர் இன்னும் சென்றுகொண்டிருப்பதால் ஒரு சமயம் தன் முகமறிந்தவர்கள் யாரேனுமிருப்பார்களென்று நெடுக முக்காடிட்டுக் கொண்டார்.

வேலந்தோப்பிற் கருகில்வரும்போது ஜலபாதையை நீக்கிக்கொள்ளப் பாதையோரம் சென்று உட்கார்ந்தார். அங்கு புது வித்துவானுடைய தடிவிழுந்து கிடப்பதைக் கண்டார். கீழேவீழ்ந்திருந்த அத்தடி பின்னால் வந்த வண்டியின் மாட்டுக்கால்களால் தள்ளப்பட்டு பாதையோரத்தில் வந்துசேர்ந்தது. பீர் முஹம்மது அதைக்கண்டதே சந்தோஷமடைந்து "சரி அவன் ஒழிந்தான். இத்தடி தவரிவிழுந்து விட்டது போலும் அல்லது இதை யெடுத்து சென்றால் இது கொலையை வெளிப்படுத்துமென்று கள்ளர் இதைப்போட்டு விட்டிருப்பார்கள். சவத்தை அக்கிணற்றில் தான் போட்டிருப்பார்கள். இக்கொலையும் அதிலேயே போட்டுவிட்டால்தான் சங்கதியடியோடு வெளிவராது" என்று சிந்தித்துக்கொண்டு அக்கோலைகையிலெடுத்துக்கொண்டு சென்றார்.

அச்சமயம் பாதையில் கண்ணுக்கெட்டியவரையில் ஒருவருமேயில்லை. இவர் சந்தோஷத்தால் தம்மைமறந்து

நடந்தார். கள்ளர் மறைந்திருக்கும் இடத்தின் ஓரமாகச் செல்லும்போது இதுகாறும் புதுவித்துவான் வரவில்லையென்று ஆவலோடு காத்திருந்தவர்கள் இவர் செல்வதைக்கண்டதே சந்தோஷமடைந்தார்கள். முனியன் அங்கேநின்றுகொண்டு உற்று நோக்கினான். உயரம் அதே உயரம் அதே உயரம், முக்காடு, கைக்கோலின்முன் பளபளவென்று ஜொலிக்கின்றது. சரிபின்னால் மெதுவாகச்சென்றதும் தன் தடியால் ஓங்கி மண்டைமேல் ஒரு அடி அடித்தான். பீர் முஹம்மது கெட்டியாகக் கூச்சலிடவும் சக்தியற்று கீ என்று கீழே குப்புறவிழுந்தார். முனியன் பின்னும் இரண்டடி போட்டுவிட்டு மற்ற இருவரையும் அழைத்து தூக்கிக்கொண்டுபோய் அக்கிணற்றில் போட்டுவிட்டு வாருங்கள் என்று தான் எட்டபோய் உட்கார்ந்து கொண்டான். கறியன், காட்டான் இருவரும் யாரேனும் வந்துவிடப்போகிறார்களென்ற திகிலால் சவத்தைப் பறபறவென்று இழுத்துக் கொண்டுபோய் கிணற்றில் எறிந்துவிட்டு வந்தார்கள்.

அதற்குள் முனியன் கைக்கோலையுடைத்துப் பூணமட்டும் எடுத்து வைத்துக்கொண்டான். கடைசியில் மூவரும் ஊர்வந்து சேர்ந்தார்கள். முனியன் மீதிபணம் இருநூறையும் கேட்பதற்காகப் பீர்முஹம்மதைக்காண அரண் மனை வாயிலிற்சென்று காத்திருந்தான். அப்போது புது வித்துவான் ஒருவண்டியில் வந்திறங்கியுள்ளே செல்வதைக்கண்டு திகிலும் ஆச்சரியமுமடைந்தான். பீர்முஹம்மதின் வீட்டில் போய்பார்த்து அங்கும் அவர் இரவுமுதல் காணவில்லையென்று கேள்விப்பட்டு கடைசியில் கிணற்றில்போய் பார்த்து உண்மையையறிந்து கொண்டார்கள்.

அந்தோ மாணவர்களே! பொருமையினுல் நேர்ந்த தீங்கை யறிந்தீர்களா? ஆகையால் பொருமைக் குணத்திற்கு எள்ளளவும் இடங்கொடாதீர்கள்.

மாணவர் கவனிக்க வேண்டிய புத்திமதிகள்.

பிள்ளைகளே! கடைசியாக உங்களுக்குக் கூறப்படும் இப்பாடத்தை நன்ருகவாசித்து இதிலுள்ள புத்திமதிகளை எப்போதும் மறவாமல் மனதில் வைத்திருந்து அவற்றின் படி நடவுங்கள். அவற்ருலடைந்த பலன் எத்தகையதென்பது இப்போது உங்களுக்கு விளங்காதெனினும் கொஞ்சகாலத்திற்குப்பின் எளிதில் விளங்கும்.

1. நீங்கள் பிரதி தினமும் கட்டளைப்படி காலக்கிரமம் தவருமல் தொழுவதோடு எப்போதும் காலையில் நித்திரையை விட்டெழும்போது முதலாவதாக ஆண்டவன் நினைப் போடெழுந்து ஆண்டவனைத் துதித்துவிட்டுப் பிறகு வேறு சிந்தனை கொள்ளுங்கள். இரவில் நித்திரைக்குச் செல்லும் போது கடைசியாக ஆண்டவனைத் துதித்து அச்சிந்தனையோடேயே நித்திரை செய்யுங்கள்.

2. ஆண்டவனுக்கு இரண்டாவதாக உங்கள் பெற்ருேரைப் பேணுங்கள். பெற்ருேரைப் பக்தியோடு பேணுகிறவன் ஆண்டவனுக்கு உகந்தவனுகிருன். என்று ரசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்திருக்கிருர்கள். தாயார் நம்மைப் பிரசவிக்கும்போது பெரிய பிராணுபத்தை யடைந்தும் பெற்றவுடனே நம்மைச் சந்தோஷத்தோடு எடுத்துப்பாலூட்டினுள். இரவும்பகலும் குழந்தையாயிருந்த நம்மை ஈ எறும்பு கடிக்க வொட்டாமல் பாதுகாத்து வந்தாள். நாம் வியாதியுற்ற காலத்தில்

நாம் சுகமடையவேண்டியதற்காகஅவள் தனக்குப்பிரியமான ருசியான ஆகாரங்களைப் புசிப்பதை விட்டுப் பத்தியங்காத்தாள். நாம் சுகமடைவதற்காக ஆண்டவனை என்னேரமும் பிரார்த்தித்தாள். அக்காலங்களில் அவள் பட்ட துயரத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குக்கூட ஈடு செய்ய நம்மால் முடியாது. தான் பட்டினியிருந்தேனும் நமக்கு வயிறார ஆகாரமளிக்க வேண்டுமென்பதே அவள் விருப்பம். நாம் எத்தகைய குற்றத்தைச் செய்யினும் அவளுக்கு நம்மேலுள்ள அன்பு குறைவதில்லை. வெறுப்புண்டாவதில்லை. நாம் வயதுவந்தவர்களாய் விட்டாலும் அவள் உயிருள்ளமட்டும் நம்மேல் அன்புவைத்து நம்மைப்போஷித்து நமது க்ஷேமத்தையே கோரிக்கொண்டிருப்பாள். தாயைப்போல் நம்மேல் அன்புடையவர்கள் இவ்வுலகில் வேறொருவருமில்லை யென்பது சத்தியம்.

நமது தந்தையோ நமக்குவேண்டிய உணவிற்கும் உடைகளுக்கும் ஆபரணங்களுக்கும் மற்ற சௌகரியங்களுக்கும் வேண்டியபொருள் சம்பாதிப்பதற்காக காலமுழுதும் கஷ்டப்பட்டார். நமக்குக் கல்வி கற்பித்தார் தாயும் தந்தையும் தங்கள் உயிரினும் நம்மையருமையாகப் பாதுகாத்தார்கள். நாம் நடக்கச்சக்தியில்லாத பருவத்திலிருக்கையில் நம்மைமார்மேலும் தோள்மேலும் சுமந்தார்கள். அவர்கள் நம்மிடம் எவ்விதமான பிறதி பலனையும் எதிர்பாராமலே நமக்கு அவ்வளவு அளவுகடந்த நன்மை புரிந்தார்கள்.

ஆகையால் நாம் எப்போதும் அவர்கள் மனம் நோகும் வண்ணம் எள்ளளவு காரியமும் செய்யாமல் எப்போதும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

3. பிள்ளைகளே! கல்வியில் எப்போதும் சிரத்தை யுடையவர்களாக விருங்கள். கல்வி கற்கும்போது கஷ்ட மாகத்தோன்றும் ஆனால் பின்னால் இந்த லோகத்திலும் மறுலோகத்திலும் இணையற்ற நன்மையை யளிக்கும். ஆண்டவனருளைப்பெற வழிகாட்டும். கல்வியில்லாத வன் கண்ணில்லாதவனாவான். கல்வியே உயர்வானஞான த்தை யளிக்கத்தக்கது. கல்விக்கு எல்லையில்லை. ஆகை யால் எப்போதும் கல்விகற்கவிருப்பமுடையவர்களாகவே யிருங்கள். கல்வியுடையோன் அரசராலும் சன்மானிக்கப் படுவான். கல்வி செல்வம், கீர்த்தி, ஆண்டவன் கிருபை யாவுமளிக்கும். ஆனால் நாம் கல்வி கற்றோம் என்ற அகங் காரமட்டும் ஒருபோதும் கொள்ளாதீர்கள். ஏனெனில் நம்மிலும் அதிகம் கல்விகற்றோர் எண்ணிறந்தோர் உளர். முழுதும் கற்றவர் ஒருவருமிலர்.

இத்தகைய கல்வியைபோதிக்கும் குருவினிடம் பக்தி விசுவாசம் வைத்து நன்றியோடு வணக்கமாகவே எப்போ தும் நடந்து கொள்ளவேண்டும். குருவினிடம் பக்திவை க்காதவனுக்கு கல்வி பயனளிக்கமாட்டாது.

4. பாடசாலை நீங்கள் கல்விகற்பதற்கு மட்டுமே ஏற்பட்ட இடமென்று கருதாதீர்கள். நல்லநடவடிக்கை களில் பழகுவதற்கும் அதுதான் இடம். ஒருவனுக்கு ஒழுக் கமே முதன்மையானது. ஒழுக்கம் கல்வியைவிடச்சிறந்தது ஒருவனுக்குக்கல்வி மட்டுமிருந்து நல்லொழுக்க மில்லா விடின் அவன் சிறப்படைய மாட்டான். கல்வியில்லாவிடி னும் நல்லொழுக்கமுடையவனாயின் அவனை யாவரும் மேன்மைப் படுத்துவாகள். ஆகையால் பிள்ளைகளே! எப்போதும் நன்னடக்கை நல்லொழுக்கத்தையே விரும்பு ங்கள். தீயஒழுக்கங்களில் பழகாதீர்கள். நல்லொழுக்கமா

வது, பொய்சொல்லா திருத்தல், பொருமை, வஞ்சகம் களவு, சூது, கோட்சொல்லுதல் முதலிய துர்க்குணங்களை விட்டொழிந்து எப்போதும் மெய்யைக்கூறுதல், சாந்தம் பிரஉயிர்களிடம் இரக்கம், இவற்றை யுடைத்தாயிருத்தல் வேண்டும். பிறர் துன்பப்படுவதைக்கண்டால் மனமிரங்கி நம்மால் கூடியவரையில் அவர்கள் துன்பத்தை நீக்க உதவி செய்யவேண்டும். தருமம் செய்ய எப்போதும் பிரிய முடையவர்களாக இருக்கவேண்டும். ஏழைகளிடம் தயை காட்டவேண்டும். அவர்களிடம் அன்போடுபேசவேண்டும் குரு, கற்ரூேர், பெரியோர், ஆண்டவனடியார் இவர்களைக் கண்டபோது வணக்கத்தோடு மரியாதை செய்ய வேண்டும்.

5. கல்வியில் தாய்பாஷையையும் நமது மதநூல்களை யும் கற்கவேண்டியதே முதலில் நாம் கற்கவேண்டிய கல்வி யாகும். இதற்குப்பிறகேமற்ற எந்தக்கல்வியையும் கற்க வேண்டும்.

6. சகவாசத்தால் நன்னடக்கையும் துர்நடக்கையும் பழக்கமாகும். ஆகையால் துர்நடக்கையுடையவர்களோடு பழக்கம் செய்யலாகாது. ஒருவரோடு சினேகம் செய்வ தற்கு முன்பு அவர்களுடைய நடக்கை, குணம் முதலிய வைகளை நன்ருகத் தெரிந்து கொண்டபிறகே அவர்க ளோடு சினேகம் செய்யவேண்டும்.

7. நீங்கள் கல்விகற்று முடிந்தபின் உலகத்தில் ஏதே னும் ஒரு தொழில் செய்யவேண்டியது கடமையல்லவா? எப்போதும் சுயாதீனத்தோடு செய்யத்தக்க வர்த்தகம், கைத்தொழில் இத்தகைய தொழில்களே கௌரவம் பொ ருந்திய தொழில்களென்றும், துரைத்தனத்தாரிடமேனும் வேருெருவ ரிடமேனும் சம்பளத்திற்கு வேலைசெய்வதும்

TB 031.6/60 N21

அதமத்தொழிலென்றும் கருதுங்கள். உலகில் வர்த்தகம் செய்வோரே மிக்க செல்வவந்தராக இருப்பதைப் பிரத்தியக்ஷமாகக் காணலாம்.

8. நீங்கள் மணம்புரிந்து வாழும்போது வயது முதிர்ந்த உங்கள் தாய் தந்தையரை யலட்சியம் செய்யாதீர்கள். அவர்கள் மனம்நோகும்படி செய்துகொண்டால் ஆண்டவனுடைய கொடியகோபத்திற் குள்ளாவீர்கள். நீங்கள் செய்யும் மற்ற எவ்வகைத்தான தருமங்களாலும் உங்களுக்கு நல்ல பயன் கிட்டாது. உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் ஒருபோதும் க்ஷேமமுண்டாகாது. அப்படிக்கின்றி உங்கள் பெற்றோரை உபசாரத்தோடும், அன்போடும் போஷித்து அவர்களுக்கு ஒருகுறையும் நேராவண்ணம் பாதுகாத்து வருவீர்களாயின் அவர்கள் மனதில் உண்டாகும் சந்தோஷம் உங்களுக்கு எல்லா நன்மைகளையு மளிக்கும். ஆண்டவனும் உங்களுக்குப் பூரணகிருபை செய்வான்.

9. உங்கள் முன்னோருடைய ஆசார ஒழுக்கங்களைச் கௌரவப்படுத்தி அதன் வழிநடவுங்கள். அவற்றை யலட்சியம்செய்து அன்னிய ஆசாரங்களைப்பின் பற்றாதீர்கள். டம்பா சாரத்தையும் வீண்பெருமையையும் மதிக்காதீர்கள்.

10. எக்காரியத்தைச்செய்வதாயினும் உங்கள் மனச்சாக்ஷியோடு சிந்தித்து மனச்சாக்ஷி செய்யத் தகுந்தது பாபமில்லாதது என்று கூறுவதை மட்டுமே செய்யுங்கள். அல்லாஹுத் தஆலா உங்களுக்கு எப்போதும் நேர்வழி காட்டியருள்புரிவானாக.

நான்காவது வாசகம், முற்றிற்று.

17/019

SHAHUL HAMEEDIA PRESS, T RIPLICANE, MADRAS.

2358

விளம்பரம்.

		ரூ.	அ.	பை.
முஹம்மதிய பாலர் பாடம்	...	0	2	6
ஷை 1-வது வாசக புஸ்தகம்	...	0	2	6
ஷை 2-வது வாசக புஸ்தகம்	...	0	3	6
ஷை 3-வது வாசக புஸ்தகம்	...	0	9	0
ஷை 4-வது வாசக புஸ்தகம்	...	0	12	0

வியாபாரிகளுக்கும் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும் கமிஷன் கொடுக்கப்படும்.

இன்னும் தமிழ், உருதூ, பாரிஸீ, அரபீ, இங்கிலீஷ் எல்லா பாஷைகளிலுமுள்ள பல புஸ்தகங்களும் பென், பேனு, புட்ரூல், நோட்புக், டிராய்ங்புக், காப்பிபுக் முதலிய பல சாமான்களும் நமது புஸ்தகசாலையில் அகப்படும்.

கேட்லாக் தேவையானவர்கள் போஸ்ட்டு செலவிற்காக ஒரு அணு ஸ்டாம்பு முன்னம் அனுப்பினல் அனுப்பப்படும்.

இங்ஙனம்:

எம். எ. ஷாஹுல் ஹமீது அண்ட் சன்ஸ்,

ஹமீதிய்யா பில்டிங்க்ஸ், நெ. 10, ஹைரோட்,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

பிராஞ்ச் ஆபீஸ்:—நெ. 93, பள்ளப்பன் தெருவு,

திருவல்லிக்கேணி, மதராஸ்

Printed at the Shahul Hameedia Press, Triplicane Madras—1921